ஸ்ரீ

கிருஷ்ணசகாயம்.

ஐந்தாம்வேதமாகிய

ஸ்ரீ மகாபாரதத்தில்

சொர்க்காரோகணபர்வசம்பிரதாயமான

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை.

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

புரசைப்பாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ ௵.

உ

ஸ்ரீராமஜெயம்.

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை.

விநாயகர்துதி.

நேரிசைவெண்பா.

தக்கபுகழ்செறியுந் தருமரவர்வைகுந்தம்
புக்குபெருங்காதை புகலவே - மிக்க
வியமுகத்தான்பாரதத்தை மேரிடுகூத்தாடுங்
கயமுகத்தான்பங்கயத்தாள் காப்பு.

வெண்செந்துறை.

கரிமுகப்பிள்ளையரோ கணபதியேமுன்னடவாய்
அரியதவத்துதித்த ஐங்கரனே முன்னடவாய்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறாமல் நல்லோசைதாருமையா
பாவுவழுவாமல் பரிந்தெனக்குமுன்னடவாய்
குரலில்குடியிருந்து குரலோசைதாருமையா
மறலியணுகாமல் வரமீய்ந்துகாருமையா
வெப்பாலைக்கீழிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
சப்பாணிப்பிள்ளையரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவேன் பொன்னின்கணபதியே
தப்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்யான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
குற்றங்கள்வாராமல் குறையொன்றும்நேராமல்
கற்றமட்டும்யான்படிக்கக் கணபதியேமுன்னடவாய்

சுப்பிரமணியர்துதி.

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனாபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்
புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிவேலரேயுன் சீர்பாதம்யான்மறவேன்
கருத்துடனேபாடக் கட்டழகர்ஐவர்கதை
பஞ்சவர்கள்தன்கதையைப் பற்பலருந்தான்படிக்க
அஞ்சலொன்றில்லாமல் அடியேனும்யான்படிக்க

மகாவிந்தமென்னும் வைகுந்த அம்மானை.

பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
மபிரானான சிவ சண்முகனேமுன்னடவாய்

சரஸ்வதிதுதி.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரோ
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே
மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சிற்குடியிருப்பாய்
பஞ்சவர்களவர்களும் பட்சமுடன்வைகுந்தம்
தஞ்சமுடனெல்லோருந் தக்ஷணமேசேர்ந்தகதை
அல்லல்மிகநீங்கி ஐவர்களுஞ்சேர்ந்தகதை
புல்லனென்வாயால் புகழ்ச்சியாய்ப்பாடுதற்கு
வல்லமகமாயி வாக்கிற்குடியிருந்து
நல்லதோர்வாக்கருள்வாய் நாவிற்சரஸ்வதியே
நித்தமுமெந்தன் நினைவிற்குடியிருந்து
பத்தியாயான்பாடப் பார்வதியேமுன்னடவாய்

ஈஸ்வரர்துதி.

ஆதிபரஞ்சுடரோ அரியசிவனாரோ
சோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கபதியரசே தூண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்குந்நிறைபொருளே
துள்ளுமொருதேறுந் தோன்றாதமெய்ப்பொருளே
மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
பாண்டவர்கள்தன்கதையைப் பகவானேயான்பாட
ஆண்டவனேநீருமெந்தன் அடியேனுடநாவில்
இடறுகள்வாராமல் இன்பமாயான்பாட
அடவாகவென்னாவில் ஐயனேநீவருவாய்
இகழ்ச்சிகள்வாராமல் இடும்பொன்றுநேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகதேவாமுன்னடவாய்

மகாவிஷ்ணுதோத்திரம்.

அண்டமளந்தவரோ ஆதிநாராயணரோ
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரோ
கஞ்சன்வலதழித்த கார்மேகாமுன்னடவாய்
செஞ்சொலசோதையுட தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைப்பெண்ணாக்கிவைத்த சர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணெய்திருடியே மிகவிடைச்சிகையாலே
வண்ணமுடனுதையுண்ட மாயவனேமுன்னடவாய்
பாண்டவர்க்குத்தூதுபோன பகவானேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா

கதையின்வரலாறு.

காரணைமாமுகனே கணபதியேகாப்பாக
சீரானமாமுகனே செல்வனேமுன்னடவாய்
எந்தன்குருவாழ்க ஏரம்பாமுன்னடவாய்
தந்திமுகத்தோனே தற்பரனேமுன்னடவாய்
அந்திமதிசூடும் அரனார்திருமகனே
வந்துதவிசெய்வாய் மாபாரதக்கதைக்கு
முந்துபரமேசுரனார் மொழிந்தவசனமிது
இப்புவியிலுள்ளோ ரெழுதிப்படிப்பதற்கு
செப்புகிறேன்லட்சுமியாள் சீதேவியுமாக
ஞானமதில்மெய்ஞ்ஞானம் நாளும்பரமபதம்
வாலசரச்சோதிநிதம் வந்திருந்துகூத்தாட
மகாபாரதக்கதையை வகுத்துரைத்தசாஸ்திரத்தில்
ஆகாதகேட்டன் அனியாயநிஷ்டூரன்
மாயாவிசெய்த வஞ்சமெல்லாம்பொறுத்து
பூபாலனைவர் பொருந்துந்துரியோதனனும்
வென்றும்புவியாண்டு விஷ்ணுபதஞ்சேர்ந்தகதை
ஒன்றுமறியாநான் உரைத்தேன்புவிமீதில்
பெரியோர்பொறுத்தருளும் பிள்ளையிவனெனவே
தெரியாதான்சொன்னமொழி செந்தமிழோர்தான்பொறுப்பீர்
பாவாணர்பாதம் பணிந்துநமஸ்கரித்து
நாவாணர்சீர்பாதம் நமஸ்கரித்துநாள்தோறும்
சொல்லுகிறேனம்மானை துதிக்கந்துணையாக
செல்லுகிறஞானமெனச் செப்புகிறேனம்மானை
வெல்லுகிறகாலமென்ன வேந்தன் துணையாயிருந்து
சீரார்புவிவாழ்க திசைகளெட்டுந்தான்வாழ்க
பாரார்புகழ்தமிழ்சேர் பாவாணர்தான்வாழ்க
திங்கள்மும்மாரி சிறந்துமிசப்பொழிய
பொங்குபுகழ்காவேரி பொய்யாமலெந்நாளும்
தேசஞ்செழித்துவரச் செங்கோல்தழைத்தோங்க
ராஜன்புவியாள நற்றவங்களுண்டாக
தேவாலயம்விளங்க திருப்பணிகளுண்டாக
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களும்வாழ்க செங்கதிரோன்றான்வாழ்க
நாராயணன்வாழ்க நான்மறையுந்தான்வாழ்க
தாரார்தவத்தோர் தபோதனருந்தான்வாழ்க
பஞ்சாட்சரமும் பாகமோரெட்டெழுத்தும்
துஞ்சாமலெந்நாளுந் துதிப்போர்மிகவாழ்க
வீறுதிருநாமமுடன் வெண்ணீறுமுண்டாக
கூறுமுபதேசம் குன்றாமலெந்நாளும்
நன்றாய்ச்சிவன்றனையும் நாராயணன்றனையும்
ஒன்றாகக்காண்போர் உலகிலமிகவாழ்க

வைகைகதியான வாள்வீணாயம்பதியான்
மெய்க்கமலம்பத்த விபூதிபஞ்சாட்சரத்தான்
எளியோர்வலியோர்க்கு ஏழையிவனெனவே
தெளிவோர்க்கடி பணிந்து சீஷரில்சீஷருமாய்
வணங்கிநமஸ்கரித்து வாழ்த்துகின்றேனம்மானை
அணங்கினுடன்சீர்பாதம் ஆருமலிப்போது
கூறுந்தமிழுடைய குருகுலத்திற்பஞ்சவர்கள்
பேருந்தவமும் பெருமைகளுமுண்டாக
சொன்னதமிழ்ப்பெருக சொன்னதுவேயம்மானை
அன்னமெனுமீனாட்சி யம்மாள்துணையெனவே
விரித்துநான்சொல்லுகிறேன் மேதினியோர்தான்கேழ்க்க
சிரித்துப்பழியாமல் சித்தமேதான்பொறுத்து
ஆளுமபெரியோ ரடியேனுரைத்ததமிழ்
கேழ்ப்பாய்வைகுந்தகதை கிருபையுடனேயிருந்து

பஞ்சவர்கள் அத்திபுரத்தை அரசுசெய்தது.

இன்னாளவும் இகத்திலிருந்தபடி
முன்னாளிற்பஞ்சவர்கள் மூர்க்கமுடனேயிருந்து
வேதமறவாமல் வேதியரும்பூசுரரும்
நாதமணிகீதம் நற்சங்குதானமுடன்
வேள்விகளோமம் மிகுந்தபுராணகதை
கேள்விசிவகதைகள் கீர்த்தனங்கள்தான்முழங்க
நீதிநடுஞாயம் நெறிமுறைமைதப்பாமல்
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருமேபோற்றிசெய்து
மந்திரிமார்சூழ்ந்திருக்க மகுடமுடிவேந்தருடன்
தந்திரிமார்வந்திருக்க தார்வேந்தர்காத்திருக்க
அந்தணரும்வேதியரும் ஆனதபோதனரும்
செந்தமிழ்சேர்வாணர்களுந் தேவரிஷிமாதர்களும்
அன்னசொன்னதானம் அறமேபெரிதாகி
மன்னர்தங்கள்செங்கோல் வாழுமனுநீதி
வழுவாதசெல்வ மனுநீதிதப்பாமல
நழுவாதசொல்லும் நாள்தோறுந்தப்பாமல்
பூமிசெழித்துவரப் புவிராஜன்வாழ்ந்திருக்க
சாமிதிருமால் சகாயமனதிலெண்ணி
சேனாதகெஜங்கள் திக்கெங்குஞ்சூழ்ந்துநிற்க
ஆனையின்மேல்முரசு அதிரப்பரிவாரம்
சங்கீதபாகம் சகலகலைமுழங்க
இங்கிதமாய்நாளு மிடையூறுவாராமல்
கோத்திரங்களெல்லாங் குபேரனைப்போல்வாழ்ந்திருக்க
பார்த்திருந்ததர்மர் பஞ்சவர்கள்தன்னுடனே
மக்கள்மனைவிசுற்ற மகிழ்ந்துசிலகாலம்
திக்கெங்கும்போற்றித் திசைகளெட்டுந்தானதிர
ஆளுகின்றாரத்திபுர மரசையாய்மணிதரித்து

அபிமன்னனுக்குப் பிள்ளைபிறந்தது.

வாழுகின்றநாளில் வாளபிமன்றன்தேவி
சுந்தரியுங்கெர்ப்பமுடன் சோற்றமுடனேயிருந்து
மைந்தனையுமீன்றாள் மாணிக்கம்போலவேதான்
குழந்தைபிறந்ததென்று கொற்றவர்கள்தான்மகிழ்ந்து
வாழ்ந்தாராமனமகிழ்ந்து வாய்த்ததென்றைவருமே
திங்களொன்றுமாகித் தேமாங்கனிபோலே
பூரித்துநாள்தோறும் பொன்போல்வளர்க்கலுற்றார்
பாரித்துப்புத்திரனும் பருவமதாய்த்தான்றேறி
அன்னைமுகம்பார்த்து ஆஊவெனக்குளறி
தத்திவிளையாடித் தாவித்தவிழ்ந்திடுவான்
வெற்றிவிசையன் மிகமகிழ்ந்துபோனுக்கு
தண்டைசிலம்பு சதங்கையுடன்தான்பூட்டி
வண்டையமும்வச்சிரமணி விதவிதமாய்த்தான்பூட்டி
பூஷணமும்பூட்டிப் பொன்னலலங்கரித்து
வாசமுள்ளவாளபிமன் மைந்தனுக்குப்பூஷணங்கள்
பூட்டியலங்கரித்து பூஷணங்களுள்ளதெல்லாம்
தேடரியவில்விசையன் சிந்தைமகிழ்ந்திருந்தான்
தும்பியமூதிடுமாஞ் சொல்லும்பயின்றிடுமாம்
அம்புலியைவாவென்று ஆனையசைந்தாடி
செங்கீரையாடிச் சிலகாலந்தானாடி
வங்காரமுத்தமொடு மருவியதோர்சப்பாணி
சிற்றில்விளையாடிச் சிறுதேருந்தானுருட்டி
முத்தியொருவயது முழுதும்பருவமதாய்
தத்தடியுமிட்டுத் தம்பிபிவனுமெனவே
பத்தடியுமிட்டுப் பருவமொருவயதாய்
தெரிந்துமிகப்பஞ்சவர்கள் சிந்தைமகிழ்ந்திருந்தார்
மூன்றுவயதாகி முலைமறந்துவீதிசுற்றி
ஊன்றுஞ்சிறுகோலும் உண்டைவில்லுந்தான்பிடித்து
நாலுவயதாகி நடையுடையும்பாவனையும்
ஐந்துவயதாகி ஆனைரதமேறி
கொஞ்சும்பரியேறிக் கொற்றவனும்வித்தைகற்று
ஆறுவயதாகி யாடைவெகுபூஷணமும்
நீறும்புனைந்து நெடியோனைநெஞ்சில்வைத்து
ஆசானடிபணிந்து அரியசிலம்பங்கற்று
ராசாதிராசனென்று நாற்றிசையுங்கொண்டாட்
வில்வித்தைசாஸ்திரமும் விதம்விதமாய்த்தான்படித்து
கல்வித்தமிழறியக் கட்டழகன்வேணுமென்று
ஏழாம்வயதில் எழுத்தறிந்துஓதுதற்கு
வாளபிமன்னன் மகனும்படித்திடவே
ஆகிகுருவிடத்தில் ஐவருமேசேதிசொல்லி

வகையையேதெனக்கு மாயோனேசெய்யுமென்றார்
தொகைவகையும்ஐவர்க்கு தோற்றமுடனேயினைந்து
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்
பால்போலும்வங்கிஷத்தில் பண்பானகோத்திரத்தில்
இன்னபடியென்று இதவாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனைத் தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானீன்றமைந்தனெனும்
ஏத்ததுளசி மகாராஜன்ஈன்றெடுத்த
செல்வியென்னும்பூமடந்தை சிறியாளைமாலையிட
நல்லவிஷயமென்று நாரணரைப்பெண்கேட்க
நாடிநடந்தார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
தேடித்துவார புரிதனிலேசென்றுபுக்கி
கண்டார்கள்மாயவன் கமலமலர்பாதமதில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினாரம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியேவாவெனவே
உன்னுடையமைந்தன் உற்றதுளசியவன்
தன்னுடையதன்மகளைத் தனஞ்சயன்பேரனுக்கு
பூமடந்தையென்னும் பொற்கொடியேயிப்போது
தாமனபிமன்னன் தன்னுடையமைந்தனுக்கு
மாலையிட்டுநன்றாய் மணஞ்செய்யுமென்றுசொல்லி
சேலையதுபஞ்சஞ் செலுத்துமென்றுஐவரையும்
மாயனுரைக்க மன்னவர்களாமெனவே
தூயதொருமுகூர்த்தஞ் சொல்லுமென்றார்வேதியரை
கேட்டுஒருதினத்தில் கிருபையுடனெல்லோரும்
தேட்டுபுகழைவர் திருமாளிடந்தனிலே
கொண்டுவந்துவைத்தார்கள் கூரையொடுபரிசம்
கண்டுமகிழ்ந்து காயாம்புமேனியனார்
பாக்கியமாமெனவே பச்சைமால்கொண்டாடி
வாக்கியமுஞ்சொல்லி மகிழ்ந்துதான்பஞ்சவர்கள்
நின்றவரைப்பார்த்து நெடியோன்மனமகிழ்ந்து
நன்றெனவேயிப்போது நாட்டுமாசாணியென்றார்
செய்யுஞ்சடங்குஞ் சிறப்பாகச்செய்யுமென்றார்
ஆயன்றிருமால் அருளினார்காணம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுபஞ்சவர்கள்
விந்தைமலர்ப்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
வந்தார்களத்திபுரம் வண்ணமணிமண்டபத்தில்
சந்தோஷமாகச் சகலரையுந்தானழைத்து
அத்திபுரத்திலுள்ள அன்னசத்தவங்கிஷமும்
சித்திவிநாயகனைத் தெரிசித்தடிபணிந்து
மூலப்பொருளே மூர்க்கமுள்ளஐயாவே
ஞாலப்பொருளே நமஸ்கரித்துதான்தொழுது -

பாலனெங்கள்மைந்தன் பரிசித்துஎங்களுக்கு
காலாலமாயிருந்து கலியாணந்தான்முடித்து
முன்னிற்கவேண்டுமையா முக்கணனார்புத்திரனே
சென்னிக்குள்நின்ற சிரோமணியேமுன்னடவாய்
என்றுதுதிசெய்து இறையோனைத்தோத்தரித்து
சென்றுநகரில் சிறப்பானபட்டணத்தில்
வான்கமுகுநாட்டி வாழைமிகப்பந்தலிட்டு
தேங்காவிளநீர் தென்கரும்புதானிரப்பி
வாழைக்கனியுடனே வாழைமரந்தானூன்றி
தாழைமடைமல்லிகைப்பூச் சரமாரியாய்நிரைத்து
பட்டாலலங்கரித்து பட்டுமேல்தட்டிகட்டி
வட்டாஞ்சூழ மாணிக்கமாலையிட்டு
கூடமலங்கரித்துக் கோபுரமும்பாவினையும்
தெருவீதியெல்லாஞ் சித்திரங்கள்தானெழுதி
சாந்துபுனுகுநல்ல சவ்வாதுகஸ்தூரி
ஏந்தும்பரிமளங்கள் யெங்குங்கமகமென
வாசமுள்ளதெல்லாம் வகைவகையாய்த்தானிரைத்து
தேசம்புகழத் தெய்வலோகம்போலே
வைகுந்தம்போலே வயிரவயிடூரியத்தால்
செய்கின்றனாவர் திருமால்மனமகிழ
மருவுமலரும் மருக்கொழுந்துவாசனையும்
நாளுமுகூர்த்தம் நல்முகூர்த்தவேளையிலே
வாழுமாசாணியது மாணிக்கத்தூணாட்டி
அன்னசுற்றமெல்லாம் அலங்காரமாய்க்கூடி
தென்னவர்கள்மன்னவர்கள் தேசத்திலுள்ளாரும்
திக்கிலுள்ளகோத்திரமும் சிறப்பாகத்தான்கூடி
முக்கியமாய்க்கல்யாண முடிக்கவேவந்தார்கள்
வந்ததொருமன்னர் மகுடமுடிவேந்தரையும்
பந்திபந்தியாகப் பாவாணர்கீதமுடன்
ஆனையொருகோடி அஸ்வமொருகோடி
சேனையொருகோடி தேருமிருகோடி
சங்கீதவீணை தவின்முரசுமல்லாரி
எங்குமுழங்க எக்காளம்பூரிகையும்
பேரிகைமத்தளமும் மேசுங்கிடுமிடியும்
வாரியொலிவிட்டதுபோல் வானமுழக்கமுடன்
திக்கிநவுரி திருச்சின்னந்தாரையுடன்
சத்திக்குமேகமென்ன தம்புருவுங்கின்னரியும்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்கள்மாதர்களும் ஜெயசோபனமுழங்க
மங்களமும்பாடி மறையோர்கள்தான்றுதிக்க
சிங்காசனத்தில் திருமாலும்வந்திருக்க
மாப்பிள்ளைக்கோலமிட்டு மாளிகையுந்தான்புகுந்து

மூப்புமார்தாதியர்கள் மொய்குழற்குப்பட்டுடுத்தி
ஆடையுடுத்தி ஆபரணந்தான்பூட்டி
வாடைபரிமளங்கள் வாசனையால்தான்பூசி
காலுக்குமிஞ்சியிட்டுக் கடுக்கன்சவளியிட்டு
கோலச்சரப்பணியுங் கொத்துமுத்துத்தாழ்வடமும்
வேடிக்கையாக விஜையனிடபேரனுக்கு
சோடித்தார்வேணதெல்லாம் சொர்ணமயமாக
நாராயணபேரன் ராஜாதிராஜனுக்கு
சீராகநால்வகையுந் தெரிந்துநல்லபூஷணங்கள்
ஆரிசித்தமேமகிழ்ந்து அன்பானபேரனுக்கு
பரிச்சித்துவேந்தனுக்குப் பலபணியுந்தான்பூட்டி
துளசிமகாராஜன் துய்யதொருபெண்கொடிக்கு
வளையல்தரித்து வர்ணமிகப்பட்டுடுத்தி
பொன்னாலலங்கரித்து பிறைபோலமையெழுதி
தேனாரும்பிச்சிமுல்லை செண்பகப்பூவாசமிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணும் மதனும்ரதிபோலே
சிப்பிட்டுமையெழுதி சித்திரம்போல்பொட்டுமிட்டு
வைத்துமகிழ்ந்து வந்துசொன்னார்மாயரிடம்
மாயவனும்ஐவருமே வந்துமந்தப்பந்தலின்கீழ்
தாயானகுந்தியம்மாள் தேவிதனையழைத்து
உன்பேரனம்மா உத்தஅபிமனிட
தன்பாலன்வீர சமர்த்தன்பரிச்சித்துவுக்கு
சுபசோபனமுடித்துத் தோகையரைநீபார்க்க
வேணுமிருமென்று விளம்பினார்பஞ்சவர்கள்
பூணுமெனவேயிருந்து பொற்கொடியாள்தான்மகிழ்ந்து
புகழ்பெரியதாயார் பொற்கோவில்சென்றுபுக்கி
திகழும்நவசரமே திவ்வியமேமாதாவே
கற்புடையமாதாவே காந்தாரித்தாயாரே
மைப்பிடைவேல்வாளபிமன் மைந்தன்பரிசித்துவுக்கு
ஆகலாதிருந்து அபிமனுடபுத்திரற்கு
செகலோகமெய்க்கச் செயயுங்கலியாணம்
மகாதேவர்தன்னருளால் வருந்திமுடிப்பதற்கு
தாயாரேநீருந் தருமருடனிருந்து
செல்வக்கலியாணஞ் செய்விக்கவேண்டுமென்றார்
சொன்னவுடன்காந்தாரி தோகையரும்ஆமெனவே
அன்னம்போல்தானடந்து ஐவருடனேகூடி
நல்லதென்றுபந்தலின்கீழ் நடுவேதான்வந்துநின்றார்
செல்வககலியாணம் திருமால்தன்பேரனுக்கு
பணமுடிக்கவேணுமென்று மாயோனெழுந்தருளி
மணவறையிற்சென்று மாப்பிள்ளையைக்கைப்பிடித்து
கெண்டிநீர்வாங்கிக் கெம்பீரமாய்ப்பேரனுக்கு
வண்டானமார்பன் மாயோன்மனமகிழ்ந்து

மணையைவலமாய்வந்து மகிழ்ந்துமணையேற்றி
இணையாகப்பெண்தனையும் இப்படியேகூட்டிவைத்து
ஹோமமணைமேற்றி நிண்ணயமாயுள்ளதெல்லாம்
செய்துமுடித்துச் சிறப்பாகப்பந்தலின்கிழ்
பைங்கொடிக்குமாப்பிள்ளைக்கும் பாங்குடனேநற்சடங்கு
சாத்திரத்திலுள்ள சடங்குமுடிந்தபின்பு
கோத்திரங்கள்சூழக் குறைவைமுழக்கமிட்டு
ஆனைரகமேறி அலங்காரமாய்வரவே
சேனைதளத்துடனே தெருவீதிதனில்வந்து
மங்கிலியந்தான்றரிக்க வரவேணுமென்றுசொல்லி
இங்கிதமாயானையின்மேல் ஏற்றினார்மாப்பிள்ளையை
கன்னியுந்தேரேறிக் கணவனுடன்தான்வரவே
இரவுட்கலாகி இந்திரன்றன்பட்டணம்போல்
அரவுயர்த்தோன்பட்டணங்காண் அடங்கலுஞ்செயசெயென
வாணமெரிய வாணத்தின்மீன்போல
சாணைவந்துநிற்பாருங் கண்டுமகிழ்வாரும்
இந்திரனென்பாரும் இறையவனென்பாரும்
சந்திரனென்பாருஞ் சரணங்கனென்பாரும்
மன்மதனென்பாரும் மார்க்கண்டனென்பாரும்
தருமர்குலத்துதித்த தார்வேந்தனென்பாரும்
பூவாணமென்னும் பூமலர்போல்தானெரிய
பாவாணர்ராகம் படித்துவரச்சங்கிதம்
பட்டணத்திலுள்ள பலபேருந்தான்பார்த்து
கட்டழகன்தான்வாரக் கட்டழகைப்பாருமென்று
விசிசுக்கின்தான்வாரான் விமனுடகன்பேரன்
ஆதிவஸ்துவான அர்ச்சுனனார்தன்பேரன்
கோட்டையும்பட்டணமுங் குதிரைதளத்துடனே
நாட்டையுஞ்சுத்தி நகரிவலமாக
வந்துமணப்பந்தலின்கிழ் மாப்பிள்ளையும்பெண்ணுடனே
மாயனருளாலே வந்தாராமணவறையில்
ஆயனுடனவர் அருகிருந்துவேதியரா
சாமததுக்குள்ளாகத் தாலிகட்டவேணுமென்று
ஓமம்வளர்க்கவென்று உத்தாரம்பண்ணினர்காண்
கும்பமுடன்மாவிலையும் குசப்புல்லும்நூலுடனே
இன்பமுடன்சோடித்து இருந்தார்கள்வேதியர்கள்
அக்கினியும்நெய்யும் ஆர்ப்பரித்துமேற்புகைய
முக்கியமாயெங்கும் மூலமுதற்பொருளாய்
வைகுந்தமூர்த்தி யவர்தான் துணையெனவே
தேங்காயுடைத்துச் சித்திவிநாயகர்க்கு

பரிச்சித்து மங்கிலியந்தரித்தது.

பாங்குடனேவைத்துப் பரிச்சித்துவேந்தனுக்கு
கங்கணமுங்கட்டி கன்னிக்குகாப்புமிட்டு

வந்தணமாய்ப்பெண்கழுத்தில் மங்கிலியந்தான்றரிக்க
அந்தணபூம்பூசிக் தானிருந்தாரம்மானை
தெய்வப்பிராமணருந் தேவர்களுஞ்சாட்சியதாய்
ஐவருமேதொட்டு அபிமனுடபுத்திரற்கு
கண்ணர்திருக்கரத்தால் கற்பித்தார்மங்கிலியம்
விண்ணவர்கள்வாழிசொல்ல விரைவாகத்தான்வணங்கி
தரித்தானேமங்கிலியம் தையனல்லாள்தன்கழுத்தில்
பரிதேருடைய பரிச்சித்துமன்னவனும்
வேதமுழங்க வெண்கவரிதான்வீச
நாதமுழங்கிவர நகரிமிகமுழங்க
செயஞ்செயமென்று சேனைகளுந்தானிரைக்க
ஆயனுடமாமுனிவர் அட்சதையுந்தான்கொடுக்க
மங்களமும்பாடி வாழ்த்திச்சரசோதி
திங்கள்முகவாணர் செயசோபனமுழங்க
சோபனமுஞ்சொல்லி துடியிடையுமாப்பிளையுந்
தாபமுடன்கைகோர்த்துத் தங்களென்னசுத்தமுடன்
பண்ணினார்கோபாலர் பரிச்சித்துவேந்தனுக்கு
நண்ணினார்கண்ணர் நடவுமென்றுகைப்பிடித்து
கணவருடன்பொற்கொடியைக் கைகோத்துதான்கொடுத்து
மணவரையிற்போமென்று மாயோனுதவிசெய்ய
அந்தநாள்சென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
நந்தகோபாலர் நரசிங்கமாமூர்த்தி
மற்றுநாள்காமு மஞ்சணீராடுமென்றார்
அத்தனார்சொற்படிக்கு மஞ்சணீர்தானாடி
மாப்பிளையும்பெண்ணும் வாழ்ந்திருந்தாரம்மானை
மூப்பிலுள்ளவங்கிஷமுங் முன்னோரும்பின்னோரும்
அல்லியுந்தாமரைபோல் அன்னசுத்தமுள்ளதெல்லாம்
துல்லியமாய்வாழ்ந்து சுகமேயிருந்தார்கள்
தர்மருந்தம்பியரும் தாரணியைஆண்டிருந்தார்
நன்மைவளர நாற்றிசையுந்தான்வாழ்க
துன்மையகலத் தேசந்தழைத்தோங்க
கர்மமகலக் காவேரிபொங்கிவர
கன்னல்விளைந்து கனகமணிதான்விளைந்து
கதலிபழுத்து கனிந்துடைத்து ஆறோட
மதுரப்பலாபழுத்து வழிந்தொழுகியேஓட
கமுகுகுலைசாய்த்து கனிந்துபழமுதிர
தேங்குடனேமாதுளையும் சேர்ந்துகலந்துநிற்க
ஓங்குபுகழ்செல்வம் ஒருநாளுங்குன்றாமல்
கடுநீதிநாயம் நாளுந்தவறாமல
வாசமுடனவர் மனுநீதிதப்பாமல்
தாரணியெல்லாமகிழ தாரணியோர்போற்றிசெய்ய
காரணியாள்மீனாட்சி கயற்கண்ணிதன்னருளால்

விருத்தம்.

ஐவருமிருந்துபாரி லனேகராட்சிமையாண்டு
செல்வாதுதருமனுாயம் தராசுபோல்நிறையாய்நின்று
கைவருங்கருமமெல்லாங் காரியமறியப்பின்பு
மெய்வரும்புதுமைகண்டு மேதினியாளும்நாளில். (௩)
சித்தசரூபனான திரன்வாளபிமன்மைந்தன்
பத்தனானதனதுபேரன் பரிச்சித்துமனைவியாளும்
எத்திசைபுகழுமேவுதா னேந்திழைகெற்பமாகி
வெற்றிசெய்மாதம்பத்தும் விளங்கவேசுமந்தாள்மாது. (௪)

கதை.

பத்தனுடபேரன் பரிச்சித்துவேந்தனுக்கு
காற்றிசையுங்கொண்டாட நாயகியாள்கெற்பமதாய்
மாதமுந்திங்களுமே வந்ததிட்டந்தானறிந்து
நீதமுடன்சங்கு நேசமதுதப்பாமல்
இதமானபூமடந்தைக் கெல்லாருந்தாமிருந்து
மூதுகுநீர்வார்க்க மொய்குழலாள்பூமடந்தை
திங்களொருபக்காகிச் செனமேசனன்தான்பிறந்தான்
கங்குலிரவுதனில் கதிரோனுதித்தாப்போல்
வயிரமுடன்முத்து வகையாகக்கோத்தாப்போல்
ஆணிக்கனகமுமாய் அழகுசனமேசனுந்தான்
சீலமுடன்பால செனமேசனன்வந்திடவே
காலந்துவாபரம்போய்க் கலியுகமும்வாரதினால்
வருகுதென்றுலோகம் வழங்குதுகாணிவ்வசனம்
பெருகுபுகழ்தருமருக்குப் பேரன்பிறந்ததினால்
வாளபின்றன்பேரன் வந்தானெனவேதான்
காளமுகில்மேனியனார் கண்ணரவர்தானறிந்து
ராசிகளும்நல்ல நட்சத்திரம்பார்க்க
வாசியெனும்வேதியனை மாயன்வரவழைத்து
பாலன்பிறந்தான் பரிச்சித்துவேந்தனுக்கு
காலபலமென்ன கருத்தென்னபாருமென்று
மாயனிதுசொல்ல மாமறையோனேதுசொலவான்
தூயவரேயிப்போது சொல்லுகிறேன்கேளுமென்றார்
செனமேசெயன்பிறந்தான் சீரும்பலாபலனும்
கோளும்பெரிய கொடுமைகலியுகமும்
வருகுதையாவென்று மறையோனெடுத்துரைக்க
பருகுங்கனிவாயன் பச்சைமால்தானிருந்து
ஆனதுவாபரமும் ஆச்சுதென்றுதானினைந்து
கானகமேசெல்லக் கரியமேகவண்ணர்
ஐவருக்குந்தூதாள் அனுப்பினார்மாயவனார்.

விருத்தம்.

காசினியளந்தமாயன் கலியுகம்வருமென்றுகப்
பேசியேகொள்வோமென்று பிரபஞ்சவிவரமெல்லாம்

ராசியமாகத்தூதாள் நாழிகைதன்னிற்சென்று
சேசிகளைவர்தன்னைச் சீக்கிரங்கொடுவாவென்றார். (௫)
உத்தொருவசனங்கேட்டு ஒருகொடியதனில்தூதன்
அத்தினைபுரியிற்சென்று ஐவரைவணங்கிக்கொண்டு
கத்தனாருளிப்பாடல் கருதியேயுரைத்தபோது
சித்தமேமகிழ்ந்துதர்மர் சீக்கிரம்பயணமென்றார். (௬)
தம்பிமார்நால்வர்தன்னைத் தருமரும்வருகவென்று
உம்பர்சேரண்ணம்பிரானற் றுலகினையளந்தமாயன்
நம்பியேயுண்மையாக ரகசியமருளிச்செய்த
இன்பமாய்வருகவென்று ரேதெனத்தெரியவேணும். (௭)
ஆயனார்தூதன்வந்தா னருளினதெல்லாஞ்சொன்னான்
மாயனாருண்மைகண்டு வணங்கிநம்வார்த்தைசொல்லி
நேயமாய்வருவோம்நீங்கள் நிமிஷத்தில்வருவோமென்று
தூயதோர்தருமராசன் தூதகமீதிலானார். (௮)

வேறு.

வீமன்விசயன்நகுலனுமாய் வேதராசன்சகாதேவன்
தாமோதரனார்தமைக்காணத் தருமருடனேபின்சொல்லார்
ராமோ முகுந்தா கேசவா ரகுராமா ஸ்ரீஹரியென்று
சோமவாரத்தினிலந்நாள் துவாரபுரிவிட்டகன்றாரே. (௯)

கதை.

வாசமுள்ளபஞ்சவர்கள் மாயன்வரச்சொல்லியொரு
நேசமுள்ளதூதனைப்போய் நிமிஷத்தில்வாவெனவே
சொல்லியனுப்பிவைக்கத் தூதனவனோடிவந்து
நலலதொருதருமரையும் நமஸ்கரித்துத்தான்வணங்கி
கண்ணர்திருமால் காயாம்புமேனியனார்
அண்ணலவரச்சொல்லி அருளினார்நுங்களையும்
அந்தமொழிகேட்டு அடியேனுமோடிவந்தேன்
விந்தமயராமல் விரைவில்வரவேணுமென்று
தூதனுரைத்தமொழி தூயதர்மர்தான்கேட்டு
போதமனமகிழ்ந்து பூரித்திருபுசமும்
தேட்டகுந்தமா தேவிமுன்போய்த்தெண்டனிட்டார்
துய்யபுகழ்மாதாவே தூதவனுமோடிவந்து
மாயவனாரைவரையும் வரச்சொன்னாரென்றுசொல்லி
ஞாயமொருசேதிசொல்ல நாங்கள்வந்தோமாதாவே
மறுத்துநான்செய்ய வகையேதுசொல்லுமென்றார்
கேடும்புகழ்குந்தியம்மன் சிந்தைமிகமகிழ்ந்து
நாடுபுகழ்மாயன் நமக்குத்துணையாமெனவே
மைந்தர்களேநீங்கள் மனதிலொன்றுமெண்ணாமல்
செந்திருவாழ்மாயன்பக்கல் செல்லுமென்றுதானுரைத்தாள்
கேட்டுமகிழ்ந்தைவர் கிருபையுடநமஸ்கரித்து
நாட்டுமதவேளைமன் புறப்பட்டாரைவருமே

பட்டவர்த்தர்கோடி பார்த்திபர்கள்தான்கோடி
வட்டமதிக்குலத்தில் மகுடவர்த்தனர்தான்கோடி
மந்திரிகளொருகோடி மற்றுமுள்ளோர்தான்கோடி
மத்தகசங்களணி வர்த்தகமுமொருகோடி
மெத்தமகாசேனையுடன் வேந்தனைவர்பேர்களுடன்
அத்திபுரந்தன்னைவிட்டு அகன்றார்காணம்மானை
மாகதத்தேரொன்று மகாமேருக்கொப்பான
துரகதங்கள்தான்பூட்டித் துருசில்வந்தான்தேர்ப்பாகன்
ஏறுபரிதேர்மீதில் ஏறினார்தருமருமே
காற்றிசையுந்தம்பியர்கள் நால்வருமேசென்றாக
ஏறியேதேர்மீதில் இருபுரமுஞ்சூழ்ந்துவர
எண்ணவொண்ணாச்சேனைகளெங்கும்நிறைந்துவர
மன்னர்மகுடர் மனுவேந்தர்சூழ்ந்துவர
வட்டக்குடையும் வயிடூரியக்குடையும்
பட்டுக்குடையும் பவளமணிக்குடையும்
கட்டுநவரத்தினமணி கவரிகுஞ்சம்வீசிவர
கூறுகின்றசித்திரக்கால் குடைகள்பலசூழ
ஏறுகின்றயானையின்மேல் எங்குமில்லாவாத்தியமும்
வீறானஒட்டகமேல் விந்தையுள்ளடம்மாவும்
சேரவேஓசையுடன் திசைகளெட்டுந்தானதிர
வெள்ளியால்தம்பட்டம் வெண்கலத்தால்தம்பட்டம்
மூடுக்கானமேளம் முரசுடனேதானுடுக்கை
எடுக்கவொண்ணாப்பேரிகையும் இராசக்கிடிமுடியும்
வட்டமிடிதாள மத்தளமுமல்லாரி
ஒட்டியமேளம் உலகெங்குந்தானதிர
கஞ்சக்கொம்புகள்சின்னங் காளமுடனெக்காளம்
பஞ்சக்கருவி பலதிசையுந்தான்முழங்க
மண்ணதிரவிண்ணதிர மலைகளெட்டுந்தானதிர
விண்ணதிரமேலே மிகுந்துகம்மல்தான்மூட
குருகுலத்திலேவர் கோபாலர்தன்னருளால்
மன்னவர்கள்மன்னவன்தான் வாழ்பாண்டுமைந்தன்வந்தான்
அன்னபரிபாலன்வந்தான் அத்திபுரிவேந்தன்வந்தான்
செய்யநெடுமால்பதத்தைச் சிந்தைதனில்கொண்டிருக்கும்
வையகந்தனில்தருமர் வந்தார்வந்தாரெனவே
நீடுதிசைகள் நிலைகள்குலைந்திடவே
மூடுபசும்பொற்காளம் முழங்குதுகாணம்மானை
தருமருடன்தம்பியருஞ் சதுரங்கசேனையுடன்
ஒருகோடிகட்டியங்கள் ஒன்றாகப்பாடிவர
பாடும்புலவர் பரிகாரர்முன்னடக்க
கடும்பரியின்மேலிருந்து கைவங்கிகொண்டுவர
வங்காளராவுத்தர் மல்லகசெட்டியுடன்
சிங்காளராவுத்தர் சீனராவுத்தருடன்

ஆரியராவுத்தருடன் ஆகோவென்றார்ப்பரிக்க
பாரியசிங்காளர் பரியேறித்தானடக்க
வீரமணியோசையிட வீரராவுத்தவர்க்கம்
மூர்க்கமதயானையுடன் முன்னணியாய்த்தானடக்க
அங்குமுரசக்கொடியும் அனுமக்கொடிதன்னுடனே
சிங்கக்கொடியுந் திசைகளெட்டுஞ்சூழ்ந்துவர
விண்ணதிரமண்ணதிர விண்ணிலுள்ளோர்தானடுங்க
எண்ணரியநீடுதிசை எட்டுந்திடுக்கிடவே
கூடிமகாசேனையுடன் கொற்றவர்கள்தன்னுடனே
நாடியேநீள்தருமர் நடந்தார்காணம்மானை
அத்திபுரத்தினுள்ளே அங்கேவந்தவர்தாமும்
மெத்தவேதான்பட்டணத்தில் வீதிகளிற்போயிருந்தார்
தெரிந்தபுகழ்தருமர் சேனைபவுந்துடனே
பரிந்துதுவாரபுரி பதிவந்தாரைவருமே
பண்ணுந்துவாரபுரி பதியைவலமாய்வந்து
மன்னர்தருமர் மகிழ்ந்துவந்தாரம்மானை
மாதாக்கள்தான்சிலபேர் மன்னர்தனக்கெதிராய்
ஆதரவாய்க்கர்ப்பூரம் ஆலத்திகொண்டுசென்று
முரசக்கொடியோனை முன்பாய்ப்பணிந்தவர்கள்
வீரக்கொடுமையினால் வீணாய்மயலானார்
கையில்வளைதான்விழவுங் காலிலசிலம்புவிழ
மெய்யிலணிகற்பணிகள் வெவ்வேறாய்த்தான்விழவும்
கூறையவிழ்ந்துவிழக் கூந்தல்குதிக்காலில்விழ
நாருமலர்கள் நடுத்தெருவில்தான்விழவும்
அன்னவனேநாங்க ளாடுமயிலாமெனவே
பொன்னனையார்பின்பிடித்துப் போறார்களெல்லோரும்
மாதர்களெல்லா மன்னவனைத்தான்தொடர்ந்து
ஆதரவாய்த்தங்களுட ஆசைபலகூறலுற்றார்
தேசமெல்லாஞ்செங்கோல் செலுத்துந்திகிரிமன்னா
ஆசைகொண்டோர்க்குன்புயமு மருளுவதுமாகாதோ
தேரும்பரியுடைய தோர்வேந்தேஎங்கள்துயர்
பரிவுடனேநீதிரும்பிப் பார்த்தருளலாகாதோ
அன்புடையீர்நல்ல அறிவுடையீர்எங்கள்துயர்
பின்திரும்பிப்பார்த்தால் பிழைகள்வருமோதான்
பொங்குநெறியுடைய புண்ணியவானென்பார்கள்
இங்கெமையேநீர்திரும்பிப் பார்த்தாலிளப்பமுண்டோ
அடங்காதமயலாய் அறிவழிந்தோமெங்களையும்
இடங்கண்டால்நீதிரும்பிப் பாருமென்றேவுந்திழையார்
கொங்கையசையநல்லக் கூந்தல்குலைந்தசைய
அங்கணனுந்தான்சிவப்பா யவர்தொடர்ந்தாரம்மானை
அறிவழிந்துபின்தொடர்ந்த அரிவையர்கள்தன்துயரம்
பரிவுடனேதானோக்கிப் பார்த்திபனும்நீள்தருமன்

சேர்ந்தேமயல்தீரச் சேயிழையார்தங்களுக்கு
பூந்துகில்கள் தாமளித்துப் போனாரே காணம்மானை
கொற்றவனுந்தானொருங்கிக் கோபுரவாசல்தனிலே
மற்றுமுள்ளமாசேனை மன்னவரையுந்தானிறுத்தி
கூறியவேலைவருந்தான் கோயில்தனிற்புகுந்தார்
சீரியமால்பதத்தில் தெண்டனிட்டாரம்மானை
கண்ணன்தருமனையும் காதலுடனேயழைத்து
வன்னமணிமார்பில் மகிழ்ந்தணைத்தாரம்மானை
தெரிந்துமற்றநால்வரையுந் திருமால்மனமகிழ்ந்து
பரிந்தேயருட்கண்ணால் பார்த்தனர்காணம்மானை
அந்தரர்கோன்மைந்தருடன் ஐவரையுங்கொண்டுசென்று
மந்திரசாலையிலே மாயோனும்போயிருந்தார்
செய்யுண்டமாலே நெடியோனேஎங்களைத்தான்
வைகுண்டமூர்த்தி வரவழைத்தகாரியமேன்
என்றுதாம்கேட்க எம்பெருமானேதுசொல்வார்
மன்னுபுவியாளும் மன்னவனேசொல்லுகிறேன்
மன்னன்தருமனைத்தான் மாயன்முகம்நோக்கி
உற்றவிசனம் உரைக்கலுற்றாரம்மானை
மண்டலத்தையாண்டு மனுநீதிதப்பாமல்
விண்டலத்தோர்கொண்டாட மேதினியில்தானிருந்து
நீதிதவறாமல் நெறிமுறைமைதப்பாமல்
சாதிவரம்பு தவறிலைகள்சேராமல்
வாழ்ந்தீரிதுவரையில் மன்னவரேயிப்போது
நான்தானொருசேதி நடத்துகிறேன்கேளுமென்றார்
நல்லதென்றுபஞ்சவர்கள் நாரணரேசொல்லுமென்றார்
வல்லதொருமாயன் வாய்திறந்தங்கேதுசொல்வார்
சொல்லுந்துவாபரமும் தொகையுஞ்சரியாச்சு
வெல்லுங்கலியுகமும் விபரீதமாய்த்தான்வரவே
பாதமுடன்பூமி பாரமதுதானேதீர்ந்தோம்
ஆசையுடனிங்கிருக்க அடவல்லவென்றுசொல்லி
மற்றுமினிநாமுமிந்த வைகுந்தவாழ்பதிக்கு
சோற்றுமிந்தமாகங்களை விட்டுவிடப்போறோம்
ஆகையினால்நீருமிந்த அவனியிட்டாதீர்ப்பதற்கு
ஏகினீரன்றனில் என்னுடனேநீங்களுந்தான்
மாதுபயிலவேந்தே வைகுந்தவாழ்பதிக்கு
போவீரோவென்று புகன்றனர்காணம்மானை
ஏசில்லாமன்னவனே இன்னமொன்றுநீகேளாய்
காசினிகாணுந்தனுக்குன் கைவசமுந்தானாகி
மற்றுமினியுகங்களுக்கு வலுமையுடன்வீரியங்கள்
உற்றுமிகமுன்னாட்போல் உதவாதுமன்னவனே
சத்தியமுமில்லாது தர்மநெறியில்லாது
அத்திருவுமில்லாமல் அசத்தியமும்வந்துவிடும்

நீடுகண்ணில்குற்றம் நிமைக்குந்தெரியாது
காடுதனிலசெய்தகுற்றம் நன்றாகயெங்களுக்கு
தெரியாதமுடியெங்கள் செய்தபிழைதீர்ந்திடவும்
பிரியாதுலகில் பேராசையற்றிடவும்
கண்ணும்பரகதியை நாங்களடைவதற்கு
அண்ணலேநீகிருபை அளித்திடென்றாரம்மானை
மாயவனார்தாமகிழ்ந்து வைகுந்தவாம்பதிக்கு
நேயமுடனாளும் நினைந்துசெல்லுமப்போது
மன்னவனேதூது வாவிடுவேனுக்கனுக்கு
பின்னவனும்பார்த்தனுடன் போனபரிசித்துவையும்
போற்றுமியலத்தி புரத்துக்கதிபதியாய்
சாற்றும்புவிக்குத் தலைவனெனவுரைக்க
வைத்துமணிரத்தினம் மகுடமுடிசூட்டி
அத்திபுரந்தன்னில் அங்கவரைநீரிருத்தி
வீறுபுகழ்குந்தியையும் வேந்தனேநீயழைத்து
கூறும்பரிசித்துவின்றன் கொலுவிலிருமென்றுசொல்லி
கலிதான்வருவதுமுன் காவலரேநீர்தாமும்
மெலியாமலேவருமே மெல்விநல்லாள்தம்முடனே
பக்தமணிவைகுந்தப் பரகதியைப்பார்க்கவென்றால்
மற்றுமகாலிங்கமே வாருமென்றாரவரையும்
மன்னவர்கள்தான்பணிந்து மாயோனைத்தானோக்கி
உன்னருளாலவேறே ஒருதுணைகளுண்டோதான்
நீதாலேநாங்கள் செய்தபிழையுள்ளதெல்லாம்
ஏதாகிலும்பொறுத்து இரட்சிக்கவேண்டுமையா
ஐயாவேசுவாமி ஆதிகேசவமுகுந்தா
மெய்யாய்வைகுந்தபதம் வேண்டியேவாரோங்காண்
என்றுபணிந்து இயல்பாகவவர்களும்

விருத்தம்.

எங்குமாய்நின்றமூர்த்தி ஈரேழுலோகமெங்கும்
அங்குமாயிருக்குமாதி லாருயிர்க்கெல்லாந்தானாய்
பொங்குபூரணமாய்நின்ற பொன்னலங்காராபோற்றி
தங்குவதில்லைநாங்கள் தாணியிலும்மைவிட்டு. (௰)
ஆவதோர்காலமெல்லா மச்சுதன்செயலினாலே
போவதோர்காலம்வந்தால் புத்திமலைக்கலாமோ
சாவதோர்காலம்வந்தால் சற்றிங்கேதரிக்கப்போமோ
காவதுவொண்டுஞ்சொல்லோம் நாரணாபோற்றிபோற்றி. (௰௧)

க ை த.

என்றுதர்மர்மாயவர்தன் னிருதாளைப்பூண்டுகொண்டு
சென்றுமகாசேனையுடன் திரும்பினாரம்மானை
மேற்றுமகாசேனையுடன் வேந்தருடன்சேர்ந்து
சாற்றும்புகழ்தருமர் தான்திரும்பிப்போனதின்பின்
ஏற்றுந்துவாரபதிதனிலேமாயவனும்

வீற்றிருந்துசெங்கோல் விசாரிக்குமந்நாளில்
சாத்திரங்கள்சொல்லும் தவமுனிவாந்தணரும்
காலங்கலியுகமும் கற்பனையும்வந்ததினால்
கோலங்குருகிக் குணபேதகமாகி
பொய்யுங்குலையும் புனைசுருட்டுமேகளவும்
செய்யும்பரிகாசஞ் சின்னமுதாசினமும்
குண்டுணியுங்கோளுங் குடிகேடுவஞ்சனையும்
தெண்டம்பரும்பிடியுந் தெண்டனையுங்கண்டிதமும்
மானபரமழிந்து வரம்புதப்பிப்போவதுவும்
தானதவங்குலைந்து சத்தியமும்பொய்யாகி
மேல்குலமேகீழ்குலமாய் கீழ்குலமேல்குலமாய்
கால்மேலுந்தலைகீழாய்க் கலியன்பிறக்குமென்றான்
நால்வேதஞ்சொல்ல நாரணருந்தான்கேட்டு
பால்பொருந்தும்வாயாற் படைத்தலைவர்மந்திரிமார்
சாத்தகியாழ்வார் சகலரையுந்தானழைத்து
ஏத்தவிசாரமென்று இனியேதுசொல்லுமென்றார்
தேவர்செயலாலே நீங்கறியோநாமடியார்
ஏவல்செய்யுந்தொண்டர் ஏதென்றெடுத்துரைப்போம்
சொற்புத்திகேட்குந் தொண்டருக்குநீர்தாமும்
கற்பித்தருளியசொல் கர்த்தனேசிக்கமையா
கேட்குமடியார்க்குக் கிருபையின்னதென்றுரைப்பீர்
தீர்க்கமுடனூழியங்கள் செப்புகிறோமென்றுரைத்தார்
ஆகரவாய்மாலும் அவர்கள்தனையாதரித்து
நீதமிக்கநாமமும் நீணிலத்திலேயிருக்க
சோசியாள்சொன்ன சொற்படியேநாமும்
வாதனைக்குள்ளாகாமல் வனத்தில்தவசிருக்க
நன்றாகத்தோணுதப்பா நம்முடையயோசனைக்கு
குன்றாமல்நீங்கள் குவலயத்திலேயிருந்து
எப்போதும்போலே யிருப்பீர்சுகமாக
அப்போதிருந்தவர்கள் அகமுமிகவுருகி
இருக்குந்தருணமதில் இன்னமொருகற்பனைதான்
பொறுக்கும்பெருமாளே பிள்ளைகள்தான்செய்தபிழை
பச்சைமாலீன்ற பதினாயிரம்புதல்வர்
இச்சையுடன்கூடி இசைந்துவிளையாடுகையில்
வீதிதனில்நின்று விளையாடும்நேரமதில
மாதுபயில்துர்வாச மாமுனிவன்தான்வரவே
சந்நாசிவேடமுமாய்த் தான்வரவேகண்டார்கள்
மின்னார்போல்வேட மிகுந்தவொருசெற்பமதாய்
ஒருகுமாரர்தன்னி லொருவனுக்கும்பெண்ணுடையாய்
நீதில்லாதவமூர்த்தி செய்தஉதாரமதில்
மாத்திரையைவைத்துநல்ல பட்டாடையுமுடுத்தி
எத்தமுக்காடிட்டு எதிர்சென்றாரம்மானை

கோலஞ்சிறந்த குழாங்களுடன் தான்கூடி
காலஞ்சிறந்துமவர் காரணங்களேமுடிய
குருமுனிவர்காலில் குமாரர்களும்போய்ப்பணிந்தார்
பெருமையுடனிவள்தான் பெண்பெறுமோ ஆண்பெறுமோ
திருமுனியேசெப்புமென்று தெண்டனிட்டாரம்மானை
குருமுனியுந்தானகைத்து குமாரர்தனைநோக்கி
வீறுகின்றஎங்கள்வம்சம் மெய்யாயழிந்திடவே
இந்தப்பெண்தன்வயிற்றில் இருப்புலக்கைத்தானுமொன்று
முந்திப்பெறுவாளெனவே மொழிந்தனர்காணம்மானை
அச்சாபமிட்டு அருள்முனிவன் போனபின்பு
இச்சாபம்போகாமல் இருப்புலக்கைத்தானுமொன்று
மாயன்குமாரர் வயிற்றில்விழுந்திடவே
ஐவர்குமாரரெல்லாங் கண்டுதுயரமதாய்
இருப்புலக்கைதன்னை எடுத்தங்கேபோயினர்காண்
கொண்டல்வண்ணர்முன்புவைத்துக் கும்பிட்டாரம்மானை
கண்டுதிருமால் கருத்தில்துயரமதாய்
மீண்டுகொல்லனையழைத்து மேன்மையானவாளரத்தால்
சல்லிப்பொடியாகத் தவிடுபொடிசெய்யுமென்றார்
அப்படியாக அரத்தால்பொடியாக்கி
சிந்துபொடியுஞ் சிறுமணல்போலானபின்பு
அரத்திட்டுராவி அதிகமிகப்பொடியாய்
உதிர்த்துச்சிறுகணுவாய் உச்சிதமாயமைத்தமென்றார்
கணுவையெடுத்துக் கடலிலேபோடுமென்றார்
அணுவாயுதிர்ந்ததெல்லாம் அலையோரந்தூவுமென்றார்
ஆமென்றெறிந்துவிட்டார் ஆயனார்சொற்படியே
விளைத்தபொடியெல்லாம் மெல்லியுங்கோரையதாய்
உருத்திமுளைத்துமகா உன்னதமாய்த்தான்முளைத்து
நின்றதுகாணங்கே நெடியோனருளாலே
உன்றுமிச்சமான உருண்டைக்கணுவதனை
மச்சம்விழுங்கி வலையில்வந்துசிக்கியதே
அச்சமில்லாவேடன் அந்தமச்சந்தான்வாங்கி
இறிக்கிழிக்கில் கிடந்தெடுத்தானிக்கணுவை
மீறிச்சுரந்தனிலே விருப்பமுடன்தான்சேர்த்து
வைத்திருந்தான்வேடன் வகையாக அம்புதனை
புத்திருமையார்த்துப் பூரித்துக்கொக்கரித்து
ஆற்றிலேசென்று அணிவகுத்தாரம்மானை
ஊற்றிலேதான்முளைத்த உயர்கோரைதான்பிடுங்கி
அடித்துவிளையாட அனைவோருஞ்சம்மதித்து
நெருங்கியடித்து நிமிஷத்தில்மாண்டுவிட்டார்
வருங்காரியமறியாமல் மதலைகளுமாண்டுவிட்டார்
விளையாடவந்திடத்தில் விதிவசமுந்தான்சூழ்ந்து
கிளையோடிறந்து கிடக்கிறாரென்றுசொல்லி

கண்டபேரோடிக் கண்ணரிடந்தாமுரைத்தார்
வந்ததொருதுறுவாசுன் மாமுனிவன்சாபத்தால்
ஆறுகவேணுமென்று அரியமுனிதானுரைத்தார்
பாராகவேநமக்குப் பலித்ததேஅச்சாபம்
ஆண்டபிரானும் அலுவலொழிந்ததென்று
செய்யுஞ்சடங்கு சீக்கிரமாய்த்தான்முடித்து
வைகுந்தஞ்சேர மனமுற்றாரம்மானை

விருத்தம்.

தம்பிமார்மகுடமன்னர் சலரும்வாருமென்று
எம்பிரானருளிச்செய்ய ஏவல்கேட்டேதோவென்று
நம்பிநாரணரோவந்தோம் நாதனேசரணமென்று
தம்பிமாரறியப்போற்றிச் சாத்தகியாழ்வார்வந்தார். (௰உ)
நின்றதோர்மன்னர்தம்பி நிருபர்தன்முகத்தைநோக்கி
நன்றலர்நந்தகோபர் நானிலம்விட்டுக்காணப்
பொன்றிடவேணுமென்று புவிதனையாண்டுநீங்கள்
தென்றலங்காரம்போலச் செகந்தனில்வாழுமென்றார்.(௰௩)
கரியமாலருளிச்செய்த காரணமேதோவென்று
தெரியவேவிவரங்கேட்கத் தேசிகரறிந்துநன்றாய்
அரியதோர்கலியன்வாரா னதால்வனத்திற்போறோம்
பெரியதோர்புவனமெந்தன் பேரணைச்செலுத்திவாழும். ()
இப்படியிறையோன்சொல்ல ஏங்கியேமுகமும்வாடி
அப்படிச்சொன்னீரா லடியரும்வாரோமென்று
செப்பிடத்திருமால்தானுந் தெரியவேவுண்மையாக
வைப்பினிலிருங்களென்று வனம்புகடந்தாரையா. (௰௫)

கதை.

வனத்தில்தவசிருக்க மாயவனார்தான்மகிழ்ந்து
சனத்துக்கிதவான தன்மங்களும்புத்திகளும்
சொல்லியுபசரித்துத் துயரமெல்லாந்தான்தீர்ந்து
மெல்லியதோர்கானகமே விரும்பிமனதிலெண்ணி
சாத்தகியாழ்வார்க்குத் தனிமுடியுந்தான்தரித்து
நாற்றிசையும்போற்ற நம்மைப்போல்தானின்று
முடிமகுடந்தான்தரித்து முறைமையாய்நீயிருந்து
நெடியமால்வாழ்த்தி நீறணிந்தார்தானவர்க்கு
மன்னரமைச்சர்களே மகுடமுடிவேந்தர்களே
வின்னமிலாதபடி மேதினியிலெல்லோர்க்கும்
சொன்னபடிகேட்டு தொழுதுவணங்கிநிற்கும்
அன்னசுற்றமெல்லாம் அச்சமின்றித்தானிருங்கள்
காலங்கலியுகமாய் காரணமுந்தோன்றுகையால்
ஞாலங்கள்தானறியும் நம்முடையரூபமெல்லாம்
பொசியாதநட்புப் பொறுமையதுபாரில்நின்று
சிறுமைவருமெங்களுக்குத் தேவரீர்போறதினால்

என்றுமயங்கி எழுந்துமன்னவர்தாமும்
நின்றுதலைகவிழ்ந்து நெடியோனைப்பின்றொடர்ந்தார்
தொடர்ந்தமூத்ததம்பியையும் துரைமக்கள்தங்களையும்
அடர்ந்துவராதபடி அமாத்தியே அச்சுதனார்
வானம்புவியளந்த மால்பாதந்தானொக்கி
கானகமேநோக்கிக் கடுகநடந்தனராம்
நாடுவிட்டுத்தேசம் நன்னகரிதானும்விட்டு
கூடுவிட்டுத்தேன்குளவி கொட்டாதபாவனைபோல்
காடுகளைகண்டார் கண்ணனார்கண்ணாலே
தேடுந்தவமீதில் சிவயோகநாட்டமதாய்
பேரழிவுகொண்டு புறப்பட்டாரம்மானை
ஊாருகாய்நின்ற உயர்ந்தமரங்களெல்லாம்
பூத்துச்சொரியும் புனமுமிகத்தழையும்
காத்துவிசரியதாய்க் காளாஞ்சிபூமியதாய்
மயில்கள்தொடர்ந்தாட வானரங்கள்கூத்தாட
குயில்களிசைந்தாடக் கொஞ்சுங்கிளிபேசிவர
புலிகளடிபணியப் பூதங்களாடிவர
கிலிகள்மிரண்டோடக் கீர்த்தனங்கள்தான்முழங்க
அரிகளடிபணிய அரியோனுந்தானடந்தார்
கரிகளடிபணியக் கரியோனுந்தானடக்க
கஸ்தூரிவாசனென்று கஸ்தூரிவந்துதொழ
வஸ்துவுக்குள்வேண்டினதோர் வஸ்தெல்லாம்வந்துதொழ
கற்பூரவாசனென்றுங் கற்பூரஞ்சூழ்ந்துவர
நற்பூமலர்களெல்லாம் நாற்றிசையும்பூத்துநிற்க
அரவுயர்த்தோன்றன்பாதம் அரவுபணிந்தாட
இரவுபகலாகி எம்பெருமாள்வந்தவிடம்
மேகநிறமேனியற்கு மேகம்பணிமாற
ஆகங்குளிர்ந்து அனேகநெடுந்தூரம்
வேந்துநெடுமால வனமெல்லாமாராய்ந்து
கோந்துலவுசெண்பகஞ்சேர் குளிர்ந்தவனச்சாலைகளும்
சந்தனமுங்கற்பகமுந் தருவும்பெருவனமும்
கந்தமலர்க்காவும் கடம்பவனச்சிறப்பும்
ஆதவனூடாடாத ஆரணியமானதிலே
மாதவனுஞ்சம்மதியாய் மனதுமிகமகிழ்ந்து
நாலுதிக்கும்பார்க்க நடுவேயொருவிருட்சம்
ஆலுதித்துநின்ற அடவிதனைப்பார்த்து
இந்தவிருட்சம் நாமெங்கேயுங்கண்டதில்லை
அந்தவிருட்சம் அதுவேநமக்குநிலை
நிற்போந்தவசு நிறைவேறவேணுமென்று
கற்பூரவாசங் கலையாசனம்விரித்து
பொற்பூவும்வாசமும்போல் பொருந்திமனமொன்றுகி
அஷ்டாங்கதாரத்தில் அமர்ந்திருந்தார்மாயவனார்

கட்டாற்றிலன்று நடுக்கடலிற்போட்டதொரு
இருப்புக்கலுப்பதிந்த எய்ய அம்புகாணெடுத்து
செருப்புச்செடிதாங்கி சீராவுந்தானெடுத்து
சிலையெடுத்துவேடன் சிற்றருவாள்கைபிடித்து
கலைமான்கணைத்துக் கனவேடன்காடுசுற்றி
மான்மரைகள்தேடி வனத்தூடேசெல்லுற்றான்
தேன்மருவுந்தாரன் திருவேங்கடப்பெருமாள்
ஆரணியந்தன்னில் ஆலமரத்தடியில்
தாரணியைவிட்டு தவசிருந்தகோலமதை
வேடனிடகண்ணுக்கு விளைந்துவந்தமானதுபோல்
அண்டாபிரானரூபம் அவன்தனக்குமான்போலே
கண்டான்முடுகிக கடுகிச்சரந்தொடுத்தான்
விட்டான்சரத்தை வேடனவன்மானெனவே
மார்புரளவாங்கி வல்வேடனெய்துவிட்டான்
சீர்மருவுமாயனுட சீபாதந்தன்னில்வந்து
பட்டுருவி அம்புப் பரிந்துமறுபுறமும்
கட்டுருவியோடத் தண்டாமரைப்பதத்தில்
மண்ணையுண்டமாயன் மயக்கம்வந்துபூமியிலே
வெண்ணெயுண்டமேனி விசனம்பொறுக்காமல்
மூச்சற்றுமேனி முகமும்வெளுப்பேறி
பேச்சயர்ந்துகாலயர்ந்து பிறக்கினையுந்தோற்றமல்
தானேயசந்து தனியேகிடக்கையிலே
மானெய்தோமென்று மகிழ்ந்துசிலைவேடன்
பதையாதமர்ந்ததென்று பாங்குடனேஓடிவந்து
வதைபட்டமர்ந்ததென்று வல்வேடன்பார்ப்பளவில்
குதையம்புபட்டுருவிக் கோபாலர்தான்கிடந்தார்
இதைவந்துபார்த்து ஏமாந்துவல்வேடன்
கதையோகதைப்பயனோ காலத்தின்வல்வினையோ
விதியோவிதிப்பயனோ பிர்மாவின்கற்பனையோ
மதியோமதிமயக்கோ மகாதேவர்கற்பனையோ
ஏதோவிதிப்பயனோ எம்பெருமாள்தன்மீதில்
தீதுவரக்காரியமேன செய்ததவக்குறையோ
மானென்றெனைமயக்கி வந்தவிதிவசமோ
தானென்றுலகளந்த தம்பிரான்மானெனவே
பொய்மான்போல்வந்த புதுமையறியாமல்
மெய்மானென்றெண்ணி விரும்பியெனெய்துவிட்டேன்
என்னெஞ்சோயென்செயலோ ஏதெனறறியேனான்
முன்செய்ததீவினையோ முகுந்தர்மேலம்புபட
வஞ்சனைகளல்ல மனதறியவந்ததல்ல
கஞ்சனைமுன்வென்ற கார்வண்ணனென்றறியேன்
பாவியுமானேனே பச்சைமாலநாரணற்கு
தீவினைகள்செய்தேனே செம்மையென்னசெய்வதினி

என்றுசிலைவேடன் ஏங்கிவிழுந்தலறி
குன்றுதவறிக் குவலயத்திலவிழ்ந்தாற்போல்
அலறி அபயமிட்டு ஐயோசிவனேயென்று
தலையிலேதானறைந்து தானழுதான்வல்வேடன்
வில்வேடன்றானழுக மெய்மகிழ்ந்துகோபாலர்
வல்லவேநீயும் மலையாதேயென்றுசொல்லி
அழுதவனைத்தேற்றி அறவணைத்துவாவெனவே
தொழுதவனும்வந்து தூரவந்துதெண்டனிட்டு
எந்தம்பிரானே எளியாற்கெளியவனே
உந்தன்மலர்ப்பாதமதில் ஊடுருவி அம்புதைக்க
எய்தேனேபாவி எழுநகரில்வீழ்வேனே
மையழகுமேனியிலே வடுவுவரக்காரியமேன்
வம்புபடாமேனியிலே வடுவரவேஎய்ததொரு
அம்புதொட்டகையை அறுத்துமுன்னேவைப்பேனான்
அன்றுலகையெல்லாம் அளந்தபாதமல்லோதான்
சென்றுதிசைநான்முகனார் தேடும்பதமலவோ
அகலிக்குமோட்சம அளித்தபாதமல்லவோதான்
புகலரியகங்கை புரிந்தபாதமல்லவோதான்
பேசுமுருவசியாள் பிறந்தபாதமல்லவோதான்
பூசுராருந்தேவர்களும் போற்றுபாதமாமலவோ
வேடனிவைசொல்ல வெகுண்டழுகமாயவனும்
தோஷமில்லையுன்பேரில் சும்மாமலையாதே
முன்னாளில்நீயும் மிகுத்தொருவாலியென
அன்னாளில்நீயிருந்தாய் அப்போதுயெய்துகொன்றேன்
முன்னாட்பழிவாங்க எய்துகொண்டாய்வில்வேடா
இந்தபுவியில் யிப்போதுவந்தோம்நாம்
நமக்குமுடிவிதுகாண் நல்வேடாசொல்லுகிறேன்
சுமக்கும்கலியுகத்தால் துன்பம்வருமென்றுசொல்லி
வைகுந்தம்சேரவென்று வந்தோம்வனத்திலேதான்
கைகொண்டெறிந்த கணைக்காலில்தைத்ததுகாண்
முடியுஞ்சரியாக முடிந்தவிதிப்பயனால்
மடியஉயிரிறந்து வைகுந்தம்போய்சேர
போறதறியாமல் புலமம்வரோநீவேடா
வாரவிதிவந்தால் மாட்டேனென்றால்விடுமோ
வந்தவிதிவந்ததென்றால் எந்தவிதமானாலுபு
இந்தமயக்கமிதை யிப்போதேவிட்டுவிடு
உன்செய்திபார்க்கில் உன்மீதில்குற்றமில்லை
என்சேதிசொல்லுகிறேன் இதவாயுதவிசெய்வாய்
நல்லதென்றுவேடன் நாரணனைத்தான்பணிந்து
சொல்லுமென்றுவாய்புதைத்துச் சோம்பிமுகம்வாடி
வாட்டமுடனின்று வல்வேடன்தான்கேட்க
நாட்டமுடன்மாயன் நம்பெருமாளேதுசொல்வார்

வாராயநீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
தாராரும்அத்திபுரம் தர்மரும்தம்பியரும்
சீராகவாழுஞ் சிறந்தநகர்தனிலே
நேராகநீயோய் நிமிஷத்திலுண்மையதாய்
தர்மர்நகுலன் சகாதேவன்கேளாமல்
மவுனவெளிதனிலே வாராமல்நீதானும்
வீமன்விசையனிடம் விளம்பிவாஎன்செய்தி
தர்மாவர்சொன்னதுவாய் சாற்றுமென்றுதானுரைத்தார்
வேறொன்றுஞ்சொல்லாமல் விபத்துவந்ததென்றுசொல்லி
கூறவென்றுசொல்லிவிட்டார் கூர்வேடன்தன்னிடத்தில
அவ்வசனங்கேட்டு அசந்துசிலைவேடன்
இவ்வசனங்கேட்டு யிராகவனைத்தெண்டனிட்டு
வழிகூடித்தானடந்தான் மனதிடைந்துதான்வேடன்
பழிபாவம்வந்ததென்று பயந்துதிசைநோக்கி
காடுகடந்து கருமலையுந்தான்கடந்து
நாடுநகரிசென்று நன்னகரினூடேபோய்
நாலுதெருவும் நடுத்தெருவுந்தான்கடந்து
கொலுவுமரண்மனையுங் கொற்றவர்கள்தானிருக்கும்
கோட்டைதனில்சென்று குருகுலத்தோர்தங்களுடன்
வீட்டையுங்கண்டு வீமன்விசையனிடம்
அச்சுதனார்சொன்னதொரு ஆந்தரியமுள்ளதெல்லாம்
உச்சிதமாய்வேடன் உரைத்தான்காண்மன்னவற்கு
அந்தமொழிதருமர் அறியாமலென்றுரைத்தான்
இந்தமொழிகேட்க என்செய்வோமென்றிவர்கள்
வேடனைத்தான்போமெனவே வீமன்விசையனுந்தான்
தாடலருந்தர்மரிரு தாள்தனிலேபணிந்து
விதியோவிதிமயக்கோ மேகவண்ணரிப்போது
அதிசயமாஎங்களுக்கு ஆளனுப்பிவைத்தகதை
ஏதோதெரியாது இதுபுதுமைதான்கேட்போம்
சூதோஅவருடைய சூட்சமோகற்பனையோ
தம்பிநகுலன் சகாதேவன்தன்னுடனே
உம்பரோயுந்தமக்கு உரையாமலிச்சேதி
அண்ணருக்குமெந்தனுக்கும் அனுப்பிவைத்தகற்பனைதான்
எண்ணமென்னசாமி இனிமேல்கருமமென்ன
என்றுவிசையன் இவ்வசனந்தான்கேட்க
மன்றுபுகழ்தர்மர் மயங்கிமனமிடைந்து
தம்பிரானைவர் சகாயந்தானிப்போது
எம்பிரான்கற்பனைக்கு என்னவென்றுசொல்லேனுன்
காரணமாய்க்காணுமிந்த கார்வண்ணர்தன்சேதி
நாரணனார்சொற்கேட்டு நடந்தோமிதுவரையில்
என்னபிழைவந்தாலும் எதுவகையானாலும்
சொன்னமொழிதப்புவரோ சோதனைகாண்தம்பியரே

எப்படியோசித்தம் எம்பெருமாள்தானினைவு
அப்படியேயல்லாது அன்றுமுதலின்றளவும்
சொற்படியேநாமும் தொண்டுபண்ணியேதிரிவோம்
விற்பிடித்தசேவகனே வீமனேயுங்களைத்தான்
வலுவுடையராகையினால் வரச்சொன்னாரிங்களையும்
மெலிவுடையராயிருந்து வீரியத்தைவாங்கிவைக்க
வரச்சொன்னீர்நீங்கள் வழிதுறையாய்ச்சேப்பதற்கு
தரச்சொல்லுதுவாரகையை நானகலநின்றுவிடும்
அகலநின்றுகாரியங்கள் ஆசாரமாய்வணங்கி
சகலகலையறிந்த தாமோதரனிடத்தில்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
செயம்போலிருவருமே தெண்டனிட்டாரம்மானை
நடந்தார்வனந்தனிலே நாரணனைத்தான்தேடி
தொடர்ந்தார்வனங்களெல்லாஞ் சோலையிலேவந்துகண்டார்
சந்தனச்சோலையிலே தனித்தாலின்கீழேதான்
அத்தருணமங்கே அழுதுபரிதாபம்
தோற்றுதுகாணென்றிருவர் துவளநடந்தோடி
மாற்றலரைவெற்றிகொள்ளு மன்னரிருபேரும்
அந்தவனந்தனிலே அருச்சுனனும்வீமனுமாய்
இந்தவனமொன்றிசைத்தோடிவந்துநின்று
வந்தார்களாலடியில் மன்னரிருபேரும்
செந்தாமரைக்கண்ணர் தியங்கிமுகம்வாடி
கண்ணருந்தான்மண்மீதில் காயத்துடன்கிடக்க
கண்டார்விழுந்தார் கதறியபயமிட்டார்
விண்டார்மனத்துயரால் விண்ணுமண்ணுந்தானதிர

விருத்தம்.

ஐயாகோராமராமா ஐவரைப்பிரிந்துகானில்
மெய்யதுபுழுதிதாவ மேனியும்நிறமும்வேறாய்
கையவும்வசமோவுந்தன் நாமமுமறந்துநாங்கள்
உய்யவோயினிமேற்பாரி லுன்னைவும்வேணுமோதான். (௰௬)
காயமும்வருமோவெங்கள் கண்ணுக்கண்ணனகண்ணா
ஞாயமுமிதுவோஐயா நாங்களுஞ்சகிக்கப்போமோ
மாயமாயெய்ததாரோ மாயனென்றறிந்திலாரோ
ஆயனேயெய்தாற்சொல்லும் அவனுயிர்கொல்வோமென்றார். ( )

வேறு.

பார்ப்பார்விழுவாரெழுந்திருப்பார்பழியோகுலையோமுடிந்துதென்பா
கேட்பார்திருமால்முகம்பார்ப்பார் கெதியோவிதியோமதியென்பார்
ஏற்பாரிதுதான்செய்தபிழை செய்தார்சொல்லுமித்துயரங்
கார்ப்பார்திருமால்தனைநாளுங் கயிலைக்கடவுளவர்தாமே. (௰...

கதை.

என்றுபுலம்பி இருவருமேதானழுது
குன்றுமலைபோலே குதித்துவிழுந்தழுது

அழுதாரண்டிருண்டி ஐயோ அபயமென்று
புழுதியின்மேல்விழுந்து புலம்பிப்பரதவித்து
பூமியதிரப் புவனமெல்லாந்தானதிர
சுவாமியுங்கண்மீதில் சரந்தொடுக்கவல்லவரார்
தேவாசுரர்களோ திக்குள்ளபாலகரோ
மூவரோ அந்த முனிவாரக்கர்களோ
யாவரோஎய்தவர்க ளடுத்தேயழித்திடுவோம்
தேவரீர்தப்பாமல் செப்புமென்றாரம்மானை
கூர்மசனிவிட்டவனைக் கொல்வோங்காண்சொல்லுமையா
அவன்கையிலம்பா லவனையழித்திடுவோம்
எங்கவிதஞ்சுவாமி இடையூறுவந்ததென்று
அங்கமுள்ளவீமன் அருச்சுனனுந்தான்கேட்க
சுந்தரஞ்சேர்மாயன் சொல்லுவார்நல்வசனம்
வீறுபுகழ்வெற்றியுள்ள வீரருகிருக்க
பாருலகிலுள்ளோரும் பராபரங்கள்மூவோரும்
ஆருமென்மேலேதான் அம்புதொடமாட்டார்கள்
கேளீரருச்சுனரே இலேசமதைவிட்டுவிடு
மீளாவலுவீமா விசாரங்கள்வேண்டாங்காண்
காலங்கள்தான்முடிந்த கற்பனையுந்தோற்றமல்
ஞாலங்கடந்து நற்றவசுதானிருக்க
சீலமுடனுங்களுக்குத் தெரியவேசேதிசொல்லி
ஏலவந்துகானகத்தில் இருப்போந்தவசெனவே
காமொன்றுதானினைக்க நடுவிருந்தான்தன்செயலால்
தாமொன்றுந்தோற்றமல் சாதகமாய்கூடனின்று
இந்தவுடலுயிரும் எப்போதுந்தானதாய்
சொந்தமெனப்பூவுலகில் சுமந்தலுத்தாய்காலமெல்லாம்
மெய்யென்றுதாமிருந்தோம் மேதினியேஉண்டெனவே
பொய்யாய்முடிந்ததுகாண் புத்தியுள்ளோர்தான்கேளீர்
மோசம்வருவதற்கு முன்னறியநம்செயலே
பாசம்பிடித்திழுத்தால் பார்க்கவிலக்கமுண்டோ
நாசம்வருங்காலம் நல்லறிவுபோய்விடுமோ
நேசம்விளையாட்டாய் நினைவுதடுமாறிவிடும்
வல்லமையாலே வாழ்வதுண்டோபூவுலகில்
நல்லவர்கள்நீங்கள் நமக்குதவியாகவந்தீர்
பயிருமொருவேலியதாய்ப் சஞ்சவர்கள்நாள்முதலாய்
உயிருமுடலதுபோல் உறவாகித்தாமிருந்தோம்
இப்போதுவந்த இடையூறுகானகத்தில்
செப்பமுடன்வேடன் கலையெடுத்துமான்துரத்தி
ஒப்பமுடன்வந்திட்டதே ஓடிவந்தமானதுபோல்
என்னுருவமான்போல இருந்தபடியாலே
விண்ணுருவவேடன் விலபிடித்துஎய்துவிட்டான்
வந்துவிழுந்தான் மண்ணும்விண்ணுந்தானதிர

விழுந்தழுதவேடனைத்தான் விரைவிலருகழைத்து
அங்கேயனுப்பிவைத்தேன் அந்தரங்கமாயுமக்கு
இங்கேநீர்வந்தீர் என்துயரந்தீர்ந்ததிப்போ
அம்புபட்டவேதனையை ஆற்றமுடியாது
வம்புபடாத்தேகம் வடுபட்டிருக்காது
ஆணிநரம்பு அறுபட்டுத்தான்போச்சு
பேணியெனைப்பார்த்து பிழைப்பிக்கவல்லீராய்
காயத்தைப்பார்த்து கிளைநரம்புதான்பார்த்து
நேயத்துடனே நோகத்தாணிறுத்தி
சோதித்துப்பாருமென்று சொன்னாரேமாயவனார்
ஆதித்தன்போலே அருச்சுனனும்வீமனுமாய்
உள்ளமுருகியொரு உடம்பெல்லாம்புண்ணாகி
கள்ளருந்தான்தார்மார்மொழி கடிந்துரைக்கமாட்டாமல்
கல்லாய்மரமாய் கருத்தசைந்துநின்றார்கள்
எல்லாவிதிவசமாய் இப்படியோநீங்களெல்லாம்
நடந்தோநகரிமெய்க்க நாமிருந்தகோலமென்ன
கிடந்தோந்தனியே கிட்டவரவேபயந்தீர்
போதாதோவிவ்வளவு புதுமைஅதிசயங்கள்
காதாரக்கேட்டோமே கண்ணாரக்கண்டோமே
இனியார்சதமக்கு இளைப்பாறவேளையிலே
தனியேயினிமாளச் சங்கரனார்கற்பனையோ
தலையாயிருக்குதுகாண் தம்பியரேயிங்கெனக்கு
வலையாயிருக்குதுகாண் வந்திருவர்கைதாரும்
கைதாருமிப்போ கலையுலைந்துபோகுதுகாண்
மெய்சோர்ந்துயிங்கேநான் விழுமுன்னேகைதாரும்
இப்படியேசொல்ல ஈடழிந்துமெய்சோர்ந்து
அப்படியேநின்றார்கள் அருச்சுனனும்வீமனுமாய்
போகுதடாசீவன் புண்ணாய்க்குலையுதடா
ஆகுதடாசீவன் அருச்சுனரேவீமரேகேள்
காயம்விழுமுன்னே கையாயுதத்தாலே
நேயமாய்த்தூக்கி நிலத்தில்வைக்கமாட்டீரோ
ஆபத்தைத்தான்காக்கும் ஐவரென்றுசொல்வார்கள்
தாபப்படுகையிலே தான்பார்த்துநிற்பீரோ
நிமிஷம்பொறுக்காது நிர்ச்சீவனாகுதடா
சமையமடாவீமரே தம்பிஅருச்சுனரே
என்றுழன்றுமாயன் இப்படியேசொல்லுகையில்
நின்றஅருச்சுனனும் நெடியதொருவீமனுமாய்
தங்கள்கெண்டாயுதமுந் தனுவையுமேநீட்டலுற்றார்
அங்கேயதுவழியாய் அவர்கள்பலம்வாங்கிவைத்தார்
தண்டெடுக்கனுவுந் தானெடுக்கமாட்டாமல்
மீண்டுமனமிடைந்து விள்ளாமலுள்ளடைந்து
ஒழுத்துப்பிலங்குறைந்து உள்ளசைந்துமெய்சோர்ந்து

மறுத்துமொன்றுபேசாமல் வனுவிழுந்துவிம்பளவில்
கறுத்ததிருமேனி காயாம்புமேகவண்ணர்
வெறுத்துப்புவியை மெய்மறந்துதாதயர்ந்து
எங்கெங்குந்தானாகி இருந்தமோரெம்பெருமாள்
பொங்குபுகழ்வைகுந்தம் புரப்புகுந்தார்மாயவனார்

விருத்தம்.

நீலம்பறந்துவிழிசொருகி நெருப்பும்பறந்துநீர்மேலாய்
கோலம்பெரியவுடல்வேர்த்துக் கோணமுடனேசிலேட்டுமமும்
ஆலம்பெரியமிடறிருகி ஆவியொடுங்கிவலிவசந்து
சீலம்பெருகும்வைகுந்தஞ் சேர்ந்தாருய்ந்தார்செகத்தைவிட்டு. (௰௯)
விட்டுப்பிரிந்ததிருமாலை வீமன்விசையன்றானெடுத்து
தெட்டுப்புவியிலுள்ளடக்கித் துயரத்துடனேவிழுந்தழுது
கட்டுப்பிரிந்தானெனவேங்கிக் கானந்தனையேவிட்டகன்று
பட்டுப்பறந்துஆயுதத்தைப் பதையாதெடுத்தார்தலைமீதில். (௨௰)
மாயனையிழந்தோமென்று மனமெல்லாமிடைந்துபுண்ணாய்
தூயதோர்தருமர்கேட்கச் சொல்லுவோம்வாருமென்று
ஆயுதந்தலைமேல்வைத்து அருச்சுனன்வீமன்றானும்
நேயமாய்க்கானம்விட்டு நிமிஷத்தில்வருவதானார். (௨௧)

கதை.

சீரானவைகுந்தந் திருமாலுஞ்சேர்ந்தபின்பு
பேரானபார்த்தன் பெரியவலுவீமனுமாய்
மன்னரிருபேரும் மாயவனார்தம்முடைய
பொன்னடியில்வீழ்ந்து புரண்டுபுரண்டழுது
மண்மேல்விழுந்தழுது மாயோனைக்காணாமல்
விண்மேல்முகம்நோக்கி மெய்சோர்ந்துநின்றழுதார்
நின்றுநின்றுதான்றுதிப்பார் நிலைதளர்ந்துதான்சோர்வார்
மன்றலருமாயோனை வாரியெடுத்தேவிசையன்
கச்சுதோபூமி கசந்துதேநாங்களுந்தான்
மைச்சுனரேயென்று வயிற்றிலறைந்தழுதான்
மெய்ச்சுடரேரூப வெளியேவெளிமயக்கே
நச்சரவில்பள்ளிகொள்ளும் நாரணரேயிப்போது
அச்சமில்லாதெங்களுக்கு அலைச்சல்வைத்துப்போனீரோ
மாயத்தாற்சூதாடி மண்ணிழந்து அன்றுமுதல்
தாயத்தார்செய்யுந் தருக்கையளித்தானே
பாயும்புரைக்கழுவில் பதறிநாம்பாயாமல்
தொடர்ந்துவரிவண்டாடி தோயகத்தில்மாயவனே
அடர்ந்துகழுவிருந்த அடையாளங்காட்டினையே
பார்த்திபர்கள்தன்சபையில் பாஞ்சாலிதன்னையங்கே
ஏற்றதுகிலுரிய எம்பெருமான்காத்தீரே
பாராகவென்னிடத்தேர்ப் பாகனாய்நின்றீரே
போராகும்நூற்றுவரைப் பொருத்திமிகவென்றீரே
தனியாமலெங்களுக்காய்த் தானிதனில்காத்தீரே

இனியாரெமைக்காப்பா ரென்றழுதானேவிசையன்
எங்கேயினிகாண்போம் எப்பிறப்பிலும்மையென்றார்
அங்கேவருவோநாம் ஐவருமேஉம்மிடத்தில்
இப்படியாய்நின்று இவர்கள்புலம்புகையில்
தப்படியுஞ்சங்குஞ் சங்கீதச்செய்கண்டி
தம்பூருவீணை சாமண்டலமுழங்க
கிம்புருவர்கின்னரமும் கீதமுடனுதமுமாய்
பூந்தேருஞ்சங்கீதமும் பூவையருமாடலசெய்ய
வாழும்பெருமாள் வைகுந்தலோகமெல்லாம்
ஆளும்பெருமாளே அச்சுதன்வாராரென்று
முழங்குதுகாண்சத்தமென்று முனிவர்மிகக்கொண்டாடி
காராருமேனியனைக் கமலமுகத்தோனை
சீராருஞ்சிங்காரத் திருவுறையுமாயோனை
வேதாவின்தந்தைதனை விண்ணவர்கள்கோமானை
சீதைக்குநாயகனைத் தெய்வசிகாமணியை
மேகவண்ணமேனியனா விடைகொள்ளவேணுமென்று
தாகமுடனோடிவந்து தாங்கள்கண்டார்மாயவனை
ஆரணியந்தன்னில் அருந்தவத்தோர்சொல்லுமொழி
பூரணமாய்நெஞ்சில் பொருந்தியிருவருக்கும்
காதாரக்கேட்டுக் கலக்கமிகத்தெளிந்து
பதாரந்தன்னில் பலமலர்கள்தான்றூவி
சேர்ந்தார்வைகுந்தஞ் செங்கண்மாலென்றறிந்து
பூந்தேனொழுகும் புறப்பவனச்சோலையிலே
நல்லடக்கமபண்ணி நமஸ்கரித்துமுக்காலும்
வல்லதொருமாயவர்க்கு வாகாகவேவிசையன்
செய்யுஞ்சடங்குஞ் செய்கருமந்தான்முடித்து
கையுங்குவித்துக் கடுகிடப்பதற்கு
வீமன்விசையன் வில்லுதண்டுதானெடுக்க
தாழும்பிலமில்லாமல் தலையிலேதான்சுமந்து
வந்தவழிநோக்கி வருகின்றவேளையிலே
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
ஆடுகளைத்தான்மேய்த்து ஆயனுந்தான்போனான்
வேடுவர்கள்கண்டு விரைந்தெடுத்தாரடுகளை
அப்போதிடையன் அருச்சுனரேவீமரென்று
இப்போதருச்சுனரே இருவர்நீர்போகையிலே
ஆடுகொள்ளைபோகையிலே அய்யா அபயமென்று
நீடுபுகழ்மாயன் நெடுங்கானகமுறைய
கொள்ளைகொண்டார்வேடனை கூகூவெனஇடையன்
துள்ளிவந்துசொன்னான் துடிவீமன்பார்த்தனிடம்
இடையனிவைசொல்ல இவர்கள்மனமிடைந்து
தடைசெய்தகேடனையுந் தான்பொருதவேணுமென்று
வீரத்துடனே வீமன்விசையனுமாய்

கோரந்துடனேவந்து கொல்லவென்றுவேடர்தனை
தாந்துபுகழ்வீமன் தான்வெகுண்டுவேடர்தன மேல்
ஏற்றரியதண்டை எடுக்கவலுமையுற்று
பாரிவிடும்பனையும் பகாசூரனறனைவுதைத்து
வீரங்குறைந்ததுவும் வேடர்மெலிவுற்றதுவும்
கண்டுசிலைவிசையன் கனக்கமிகுவெகுண்டு
விண்டலமேவேடர்தன்மேல் வில்லெடுத்தாரம்மானை
எடுக்கவில்லைதானிலத்தில ஏற்றவலுமையற்று
கடுத்தசிலைவிசையன் கலங்கினனம்மானை
காண்டாவனத்தைக் கனலுக்களித்ததுவும்
மீண்டுபொருதவென்ற மூக்கோடிதானவரை
வென்றவிசையனுக்கு வேடரெதிரானதுதான்
அன்றுகலியன் அவன்ரூபமானதுவே]
வீமன்விசையன் வேடருடன்தான்பொருந்த
நேமமுடனாயுதங்கள் இல்லாமல்நின்றதுதான்
வேடரறிந்து வெகுண்டுசினத்தெழுந்து
சாடவேவீமனையுந் தம்பிவிசையனையும
போடவெகுண்டு புறங்காட்டிப்போகலுற்றார்
ஊடெரித்துவேடர் ஒருமிக்கஆடுகளை
ஈடழித்துச்சேத்து இடையனையுந்தான்பிடித்து
பாரில்துவாரபுரி பட்டணமுங்கொள்ளையிட
காரில்புனவேடர் கருதியேவார்த்தைசொல்லி
சீரில்சிறந்த சிறைபிடிக்கவேணுமென்று
ஊரில்புகுவதற்கு உச்சாயமாயப்பேசி
போனார்கள்வேடரென்று போர்விசையன்வீமனுமாய்
கூறுமலொன்றுங் குறுகிமனம்புண்ணாகி
வீருணைவரென்று மேதினியிலாமிருந்தோம்
எண்ணமெல்லாம்போச்சே என்றுமனமுருகி
கண்ணருடபட்டணமும் காவலழிவதுவும்
என்னவென்றுசொல்வோம் எம்பிரான்கற்பனைக்கு
வின்னமொன்றுவாராமல் வின்னமேவந்ததென்றால்
ஆதிபிரானான அச்சுதற்குமோராது
பாதிபிறையணிந்த பரமனுக்குமோராது
நமக்குவலுக்குறைந்து நாணியின்றேமாமாகில்
சுமக்கும்பழிபாவம் தோஷமிகவுண்டாகும்
அண்ணருக்குஞ்சேதி அறியவுரைக்கவென்று
தருமரும்வீமன் தம்பிஅருச்சுனனும்
ஏங்கிமுகம்வாடி இடைந்துவழிகூடி
தாங்கிடந்திருவா தானேவிசாரமுடன்
அத்திபுரஞ்சென்று அண்ணரையுங்கைதொழுது
சத்தியுள்ளவீமன் தனஞ்செயனுமேதுசொல்வான்
குருகுலத்தையாளுங் கோபாலர்காத்தருளி

விருஞ்சருமஞ்சொல்லி வாரமாய்த்தானிருந்து
ஆதிநாராயணற்கு ஆபத்துவந்ததென்று
செய்திசொல்லக்கேட்டுச் செய்திதனையறியீர்
போவென்றருளிசைந்த புண்ணியரேநீர்களீர்
காடெங்குந்தேடிக் கானகமெல்லாந்திரிந்து
வனமும்வனாந்திரமு மலையும்பலதேடி
புனமும்புகுந்துபுந்தி நூந்தோனைக்காணமல்
தேடித்திரிந்துஒரு செண்பகப்பூங்காவனத்தில்
நாடித்திருமாலை நாங்கள்கண்டோமன்றுவே
அம்புபட்டுலோகம் அளந்ததொருபாதமதில்
வம்புபட்டுமேனி வாடிமெலிந்துநொந்து
மெய்க்கூடுதான்வெளிறி மேனியெல்லாம்புண்ணுகி
பொய்க்கூடுபோலே பூமியின்மேல்தான்கிடந்தார்
கண்டவுடனே சதறிவிழுந்தழுதோம்
புண்டரிகமேனியனுர் போதகமாய்த்தானமர்த்தி
என்னைஎடுத்து இருத்துமென்றூர்கோபாலர்
பின்னைவிளைவுகொண்டு பேசாமல்நாங்கள்நின்றோம்
நின்றதையும்பார்த்து கொடியோனும்பூருவத்தில
கன்றிசெய்தபேச்சும் நடத்துகின்றசொல்முறையும்
உடம்புருகச்சொன்ன உத்தரங்கள்தான்கேட்டு
குடங்கவிழ்ந்துநீட்பிரிந்த கும்பமதுபோலாகி
தேவரீர்சொன்னமொழி செய்திதனைமீருமல்
காவலர்த்துநின்றோம் காரணனைநம்பாமல்
கருத்தறிந்துமாயன் கைதரவுஞ்சொன்னூர்காண்
உருத்தரித்துநாங்கள் ஒன்றுமுறையாமல்
நின்றோம்பெருமான் நினைவுதனைநம்பாமல்
குன்றுமனது குலைமனம்புண்ணுகி
அங்கனேயறிந்து ஆயுதத்தைநீட்டுமென்றூர்
எங்களுக்குமென்ன எண்ணிஎங்களாயுதத்தை
நீட்டி இருபேரும் நின்றோமதுவழியாய்
வாட்டிவதுவை வாங்கிவைத்தார்மாயவரும்
பிலக்குறைநத்துங்கங்கள் பேசாதிருக்கையிலே
கலங்கிவிழிபிட்டி கண்ணருந்தான்மெய்சோர்ந்து
பாசங்கலங்கி பதறிஉடல்வேர்த்து
வாசங்கமழுமண்ணில் வைகுந்தஞ்சேர்ந்தனர்காண்
சென்றுமலர்ப்பாதந் தீண்டியெடுத்தவ்வனத்தில்
அடைக்கிச்சடங்குகளைத்தும அலங்காரமாகவேதான்
முடிக்குஞ்சடங்கனைத்தும் முடித்துவந்தோமன்னவே
வந்தோமவழிகூடி வாடிமனதிளைத்து
அந்தவழியிலொரு ஆயனுந்தான் ஆடுவிட்டு
மேய்த்துவருகையிலே வேடர்புகுந்தாடெடுக்க
பார்த்துநின்றபோதன்ன பார்த்தமொழிமகோநீர்

அமையமையமென்று ஆயனுக்கன்று வெனவே
உமையமெனச்சென்று ஓடிவந்துவிட்டதுடன்
தண்டிப்பொருசோளன் தாடாளர்வெட்டுடன்
மிண்டிப்பொருத வேலிவேயவந்தார்காண்
தரிபட்டுநிற்கத் தத்துவங்களில்லாமல்
அரியிட்டசாபமென்று அயிந்தாவலுக்குறைந்து
நரிபட்டுவந்தோம் நாதனுப்புறங்காட்டி
தெரிபட்டுவந்தமக்கு செய்தியெல்லாந்தானறிய
என்றிருவர்சொல்ல ஏங்கியேதருமன்தான்
குன்றுதிர்ந்துவீழ்ந்தாற்போல் குதித்துவிழுந்தது
முகத்திலறைந்தழுது முடிகுலையத்தான்விழுந்து
வயிற்றிலறைந்துகொண்டு மண்மேலேவிழுந்தழுதார்
வாழ்வேயெவரும் மதியாமணிவிளக்கே
தாழ்வேதுமெங்களுக்கு தாமறுப்பாரோதான்
வருந்தாதருக்கவமே வர்ணமணிவிளக்கே
பிரிந்தேதானிருக்க பிரபலமேநாயகமே
பூலோகநாயகனே புவனமளந்தோனே
சாலோகசாமீப சாரூபமேகசிகனே
என்னுக்குவெண்ணெய்போல் எவ்வுயிர்க்குந்தானே
வள்ளலேயும்மைவிட்டு மறந்திருக்கக்கூடுமோதான்
அழகுதிருமேனியனே ஆபத்துகாத்தோனே
களபமணிமேனியனே கண்ணனேயென்றழுதார்
துளபமணிமார்பழகா சுகந்தமணிதிண்புயனே
புளகமதமோகத்தனே பூபாலகோபாலா
தூதுசென்றெங்களுக்குச் சூதனிடமாக
தீதுகொண்டநெஞ்சன் துரியோதனன்றனையும்
பாங்குடனேகொல்லப் பகைமுடித்தாய்களுடன்
சாங்கமாய்நின்று களமுமவன்சேனையெல்லாம்
கன்னன்சகுனி முதல் காவலர்கள்நூற்றுவரும்
என்னவர்களெல்லாம் இறந்தகளங்களிலே
மடிந்துவிழமட்டும் வாகமாய்நின்றீரே
முடிந்துகோகாலம் முகில்வண்ணாயுத்தமக்கு
மாறுகொண்டஐயாநீர் வைகுந்தம்போம்போது
கூடுகின்றவெங்களையும் கொண்டுசென்றாலாகாதோ
வாலிதனைக்கொன்ற மாயவனேயும்முடைய
கோலத்திருவழகை குறித்தென்றுகாண்பேனோ
ஈரைந்துசென்னி இராவணனைவெந்தமரில்
போரஞ்சாவீரனையும் பொருந்தமிகக்கொன்றோயே
வாய்த்த அரக்கர்குல மாளவேவேரறுத்து
ஏத்ததிருக்கோலம் என்றுநான்காண்பேனோ
தொடர்ந்தஇரணியனைத் தூணிலுதைத்தாயே
அடர்ந்துகொன்றகோலமென்று ஐயாநான்காண்பேனோ

எங்கேயினிக்காண்போம் இவ்வுலகிலும்மையுந்தான்
அங்கேவைகுந்தம்வந்து அருகிருந்துகாண்போமே
என்றுசொல்லித்தரும ரிருந்தாமனமிடைந்து
நின்றுநகுலன் நெடுமாலைத்தானினைந்து
குத்திவிழுந்தழுது கோவென்றபையாயிட்டு
பத்திகலங்கிப் பதறிஉடல்வேர்த்து
விழுந்துபுரண்டழுது மெய்சோர்ந்துகைசோர்ந்து
செழுந்திருவார்மாயவரே சினேகம்பிரிந்தோமே
விந்தைமலர்ப்பாதமதை மேதினியில்காண்போமோ
அந்தமுள்ளமாலே அவனியளந்தோனே
அரிகேசவாமுகுந்தா ஐயாவுனைப்பிரிந்து
சிரியாரோபூவுலகில் தேசத்திலுள்ளோர்கள்
பரியாசம்பண்ணுமட்டும் பஞ்சவர்கள்நாங்களிரோம்
இரியோம்தரணியிலே சித்தனேஉம்மைவிட்டு
வருவோம்வைகுந்தமென்று வலுநகுலன்சொல்லியபின்
தருவானநூல்வேந்தன் சகாதேவன்தான்சிரித்து
பொய்வாழ்வைமெய்யென்று போதமனமகிழ்ந்து
மெய்வாழ்வுபோலே விரும்பினீர்மன்னவரே
தேகம்பொருளோ செகம்பொருளோஉங்களுக்கு
தாகம்பசியிளைப்புஞ் சஞ்சலங்கள்தான்பொருளோ
தேடுந்திரவியங்கள் செல்வமதுதான்பொருளோ
நாடுநகருமிந்த நற்பணிகள்தான்பொருளே
தந்தைதாய்சுற்றந் தமருங்கிளைபொருளோ
மைந்தரும்வீடு மனையாட்டிதான்பொருளோ
ஆனைகுதிரை அலங்காரந்தான்பொருளோ
சேனைமிகுபட்டணமுஞ் சிறப்புமதுதான்பொருளோ
என்னபொருளென்று இடைகிறீரெல்லோரும்
தென்னவரைமாய்கைதன்னை எதிரென்றுநம்புவரோ
காயந்தரியாது கண்பொருளுமில்லாது
நேயந்தவறாது நிலைநின்றோர்தங்களுக்கு
மேசந்தருநிழலை மெய்யென்றுநம்புவரோ
காகுத்தன்றன்செயலைக் காணாமல்கண்டுகொண்டு
பதையாதிருப்பீர்காண் பாசத்தைநம்பாமல்
காரணங்கள்தான்முடிக்கக் கரியமால்வந்துதித்து
நாராயணராய் நடத்துகின்றார்பாரதத்தை
உகத்துக்குகம்பிறந்து ஒடுங்காதபேரையெல்லாம்
செகத்தோடேயொத்திருந்து செயம்பண்ணியிப்படியாய்
எத்தனையோகோலமவர் எடுத்தஅவதாரம்
கர்த்தனார்தன்செயலைக் காண்பதரிதெனவே
வேதங்கள்நான்கும் விளம்புதுகாண்சாஸ்திரமும்
ஆதலால்மாயவனும் அளவற்றகாலமெல்லாம்
அழிவதுவுமில்லையவர் ஆதிமகாமூலம்

தெளிவறுவேலித்தகமென்று தீரன்சகாதேவன்
அப்போதுரோபதியும் அடித்துவிழுந்தலறி
மைபரவுமேனியற்று வந்தவிதிமோசமென்ன
கற்புநிலையாமலெந்தன் கற்புநிலைகிறுக்கி
துற்புத்திசெய்தோனைச் சொல்லரியபாழ்நரகில்
வைப்பித்தபுண்ணியர்தான் மாளவந்தகாரணமேன்
மெய்ப்பிக்கபஞ்சவரை மேதினியில்விட்டேகி
தப்பித்தனிவழியே தாம்போகக்காரியமேன்
தெய்வமேஞாயமிதோ செங்கண்ணெடுமாலே
ஐவர்சகாயா ஆயனோ அச்சுதனே
நாயகரோபஞ்சவர்க்கென் றுநுந்துணையிருந்து
தாயகமாயென்றுநுஞ் சாங்கமாய்நின்றோனே
கணக்கும்புகழாய்க் காசினியோர்தாமறிய
எனக்குபிழைவாராம லேழைபங்கில்நின்றோனே
என்றைக்குமேக்காணபேன் எங்கள்பெருமானே
குன்றைக்குடைபிடித்துக் கோவுகளைக்காத்தோனே
ஐயாதுணையெனக்கு ஆரினிநானிப்புவியில்
மெய்யாயென்னைமறந்து விண்ணுலகிலபோவீரோ
நானேதுணையிழந்தேன் நாரணரோ உம்மைவிட்டு
வானோர்கள்போற்றவுந்தான் வைகுந்தஞ்சேர்ந்தீரோ
இனிமொழியாளிவ்வசனங் கிலேசமாய்ச்சொல்லியபின்
மொழிகுளறிக்குந்தியம்மாள் முகத்திலறைந்துகொண்டு
என்மருகாவெண்கோவே எல்லோர்க்குமநாயகமே
தன்மருக்குக்கம்பியர்க்குஞ் சாங்கமாயென்றாளும்
இன்மைதனிலிருந்து எங்களையுங்காத்தோனே
நன்மைசெய்யக்கர்மம் நடுக்கானகந்தனிலே
மான்மறந்துபோன மகிமையென்னநாரணரே
வேண்டிவிளைசெய்த விதிவசமோயிப்படியாய்
அந்தரத்திலநீரும் அருந்தவசுபோயிருந்த
தந்திரத்தையின்னதென்று தருமரறிந்திலையோ
மந்திரவேதம் வரம்புதப்பிப்போனதுவே
சந்திரருஞ்சூரியருந் தான்ழிந்தபோனுரோ
அண்டமடுக்கும் அச்சுநிலைதான்பேர்ந்து
கொண்டல்கருவழிந்து குறைகடலுநீர்ச்சுவறி
ஆகாயம்பூமி அந்தரங்கள்தான்குலைந்து
வாகானநற்றவங்கள் மாசடைந்துபோனாலும்
இறப்பேதுனக்குப் பிறந்துமிருப்பதுவும்
விரண்டுதொழிலாய் நடத்துகின்றபுண்ணியனே
இரண்டுபலவுளையேன் விளம்பேனொருவசனம்
என்றுகுந்தாதேவி இத்தனையுந்தான்புலம்பி
சென்றுபுகுந்தாள் செய்யமணிமண்டபத்தில்
தம்பியருந்தருமருடன் தானேமனமிடைந்து

வெம்பிமுகம்வாடி வேதநாராயணர்தாம்
சொல்லரியதேசந் துவாரபுரிதனிலே
வெல்லரியவேடர்சென்று வீரியஞ்சள்செய்யாமல்
இப்போதேசென்று எம்பெருமாள்பட்டணத்தை
மெய்யாகக்காருமென்று விடைகொடுத்தார்தருமருமே
வீமன்விசையன் மிகுந்தசகாதேவன்
நாமனகுலனுடன் தத்துபரிசேனைதளம்
சிறப்பாகச்சேனையுடன் சீக்கிரத்திலன்னேரம்
புறப்பட்டார்பூமி பேரண்டந்தானடுங்க
கடந்தார்வெகுதூரங் கண்டார்பெருநகரம்
நடந்தார்துவாரபுரி நன்னகரிதானேக்கி
விரைந்துபுகுமுன்னே வேடரங்கேதான்முடுகி
நிறைந்துவளைவதார் நெடுமால்தன்பட்டிணத்தை
பச்சைமால்தேவி பதினாயிரந்தனையும்
இச்சையுடன்வேடர் எல்லாரையும்பிடிக்க
வளைந்தாரரண்மனையை மாயவனார்தேவியரை
நுழைந்தேபிடிக்கவென்று நோக்குகின்றவேளையிலே
கங்குல்வந்துமூடிக் கதிரோனும்போய்மறைந்தான்
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்
விடிந்தேயரண்மனையில் மெல்லியர்களெல்லோரும்
இடிந்துகரைந்து எம்பெருமாளென்றழுதார்

விருத்தம்.

தேவியரழுதபோதே செங்கண்மால்தனக்குத்தோற்றி
பாவியர்வேடர்தாமும் பங்கமேசெய்யாவண்ணம்
ஓவியமானபெண்க ளுருவெல்லாமாற்றிமுன்னாள்
தாவியரிஷிபோலாகித் தரணியில்வருகவென்றார். (உ௨

தப்புடன்சங்குதாளந் தாதர்போல்வேஷங்கொண்டு
இப்புவிதனிலேவேட ரேங்கியேசடையும்வாரும்
ஒப்புடன்தாதர்போலே ஒருமித்துவரவேகண்டு
மெய்ப்புடன்வந்தார்கண்டார் வேடருமலைத்துநின்றார். (உ௩

கதை.

அழுதகொருதேவியர்கள் ஆயிழைமாரெல்லோரும்
தொழுதபயமிட்டுச் சொன்னதொருதோத்திரங்கள்
அந்தமொழிகேட்டு ஆயனார்சூத்திரமாய்
ஞூங்கியிருந்த முனிவர்தபோதனர்போல்
ஆமென்றிசைத்தார் அப்போது ஆயிழையார்
ஓமென்று அவ்வுருவம் உருமாறியேயிருந்தார்
சடையுமுடியுடனே தான்வந்தார்வீதியிலே
படைகூடிக்காத்திருந்த பார்வேடரெல்லோரும்
விதிபோலசைந்து மெய்மறந்துதானிருந்தார்
சதிருடையபட்டணத்தை தான்கொள்ளையாடவென்று

நெருக்கிவரும்போது நிமிஷத்தில்தர்மர்படை
கருங்கடல்போல்சூழ்ந்து கைகலந்தாரம்மானை
துரத்திஅடித்துவிட்டுத் துன்பமறவேதிரும்பி
ஆரத்தியேசாத்தகியே ஆழ்வாருமுன்னடத்தி
வெற்றியுடன்சேனைதளம் வேந்தருடன்மந்திரிமார்
அத்திபுரந்தனக்கு அழைத்துவந்தாரம்மானை

விருத்தம்.

மாயவனுலகையாண்டு வனத்தினிலேயிறந்தானென்று
நேயமில்லாவேடர்வந்து நிலைமைகைகொள்வோமென்று
தூயதோர்தருமர்தானுஞ் சொல்லியோர்விரலைமூக்கில்
ஞாயமோசிவனேயென்று நயந்துடல்சோர்ந்திருந்தார். (௨௪)

இப்பவுஞ்சேதியென்ன வென்றுதான் தம்பிமாரை
ஒப்புடனழைத்துமுன்னே யுண்மையேதென்றுகேட்க
அப்புறமினிமேலென்ன அண்ணரேயிருந்தநாயம்
மெய்ப்புடனிவிடம்விட்டுவினாயவைகுந்தஞ்சேர்வோம். (௨௫)

இளையவர்நீங்கள்பாரி லிருந்துதான்புவனமெல்லாங்
கிளைவழியுடனுங்கூடிக் கிள்ளையேமகுடமன்னர்
பழையவரிருந்ததாயும் பாக்கியமனேகமெல்லாம்
குழைவறவிருந்துவாழ்ந்து குவலயத்திருங்களென்றார். (௨௬)

கதை.

தருமரிவைசொல்லத் தனஞ்செயனும்வீமனுமே
கருமமோவென்று கண்ணீர்மிகச்சொரிய
நகுலன்சகாதேவன் நாட்டமற்றுவாட்டமதாய்
மிருகவலையாகி விள்ளாமலுள்ளுடைந்து
எங்களையும்விட்டு இனம்பிரிந்தமான்போலே
தங்குவதுமெங்கே தரிப்பதுவுமெவ்விடங்காண்
நாங்களேயும்மைவிட்டு நானிலத்திலேயிருந்தோம்
தீங்கொன்றும்பேசாத் திருவுளமேயலலாது
இருந்துமென்னகோட்டை இருப்பதுவுமிங்கேதான்
வருந்துவோம்நாங்கள் வாடுவோமும்மைவிட்டு
என்னமொழிசொல்லி எடுத்துரைத்தீரண்ணாவே
இன்னமிதுவரையில் பிணைபிரிந்துநின்றோமோ
மாய்கையிதுவாழ்வு மாயமால்தன்னைநம்பி
சாய்கையிதுவென்று சதமென்றுதானிருந்தால்
இந்தவுயிர்தனக்கு மீட்டேற்றமெப்போதான்
பந்தமலர்ப்பாதம் பணிவோமெனவுரைத்தார்
அதுகருமமெங்களுக்கு அடீவுதானிப்போது
மதுரமொழிப்பயிலும் வாசகனே அண்ணாவே
நடக்கும்தகைதெரிந்து நாயகமே அண்ணாவே
அடக்குமுபாயம் அவனிதனிலுண்டுபுண்ணி
வைக்குமுபாயம் வழங்குமென்றார்தம்பியர்கள்

மிக்கபுகழ்தம்பியர்கள் விளம்புமொழிகேட்டு
தக்கபுகழ்குருமர் தம்பியர்மேலன்புவைத்து
சிறந்தபுகழைவர் சேவங்களுள்ளதெல்லாம்
பிறந்துமிகஅதிதி புரத்திருக்கும்நாள்தனிலே
தேசமிகவாழுமொரு தெய்வப்பிராமணரில்
முன்னாளில்வேதியன்றன் புழுதுங்குடியிருந்து
இன்றொருபார்ப்பான் பிரதேசம்விட்டுவந்து
இந்தப்பிராமணனை இருக்கவிடந்தாருமென்றான்
அந்தமனையில் அவனுக்கொருபுறத்தில்
வீட்டுக்குடியொன்று வேதியனுந்தான்கொடுக்க
கட்டுடனேவீடுமங்கே கட்டினான்வேதியனும்
பார்ப்பானுஞ்சம்மதித்துப் பதியில்குடியிருந்து
நேர்ப்பாகவவ்விடத்தில் நிலம்பிளந்துமண்ணெடுத்து
கட்டினான்வீடு கனத்தபுதையலொன்று
மண்ணிலிருந்தெடுத்தான் மறையோனுமன்னேரம்
கண்ணிலேகண்டபொருள் கருமமென்றுந்தானினைந்து
நமக்குத்தரியாது நம்மிடத்திற்சிக்காது
சுமக்கும்பழிநமக்கு துன்பம்வருமென்றேதான்
மனைநமக்குத்தந்த மனையாளன்தன்னுடைதென்று
வினையொழியவேண்டி வேதியனார்தானேகி
ஐயாவேவேதியரே அதிசயங்காண்டீரோ
துய்யமனைகட்டத் துலங்கினதோர்மண்ணிடத்தில்
கண்டேதிரவியமும் கனகமணிபொட்டகத்தில
கொண்டேயிவந்தேன் குடத்திற்பணந்தனையும்
உந்தன்பொருளிதுகாண் உற்றோர்கள்தான்புதைத்த
சொந்தமுனக்கென்று தோன்றுதுகாணென்மனதில்
உன்மனையிற்கண்டபொருள் உனக்கல்லால்வேறுமுண்டோ
தன்மனையிற்கண்டபொருள் தன்னைவிட்டுப்போகாதே
ஆனதினாலுன்பொருளை ஐயாவேவாங்குமென்றார்
வேதியனார்சொல்லவந்த வேதியனுமேதுசொல்வான்
அன்றுமக்குநானும் அன்பாகவீடுதந்தோம்
இன்றுநமக்குத்தந்த இவ்விடத்திற்கண்டபொருள்
கண்டவர்க்கேசும்மா காணுதிருந்தவர்க்கோ
உண்டவற்கோவின்பம் உறங்கினபேர்க்கென்னகும்
வேண்டாங்காண்வேதியரே வீட்டிற்கொண்டுபோவீர்
தீண்டாதபொருள்தனையும் தீண்டுவரோநல்லோர்கள்
போக்காணுஞ்சும்மா பொருள்தனையுங்கொண்டேதான்
வாங்கேகொண்டுநானும் மறையவன்மனந்தனிலும்
என்றுமறையோன் இவ்வசனஞ்சொல்லுவதை
நின்றுபிராமணனும் நீதியோவென்றுசொல்லி
பொருந்தாதகாரியத்தைப் பொருந்தவோசொல்லுகிறீர்
வருந்தாதாரென்று வருந்துவதோமானிலத்தோர்

உந்தன்மனையெனக்கு உபகாரமாய்க்கொடுத்தீர்
சொந்தமெனக்கப்படியாஞ் சொல்லுங்காணந்தணியரே
அடைமனையிற்காகத்துக் கன்னமிடங்கொடுத்தால
இடைபொருளோநானெடுக்கக் கிட்டாதோவேதியரே
எந்தவிதிப்பயனோ இவ்வூரிலும்மிடத்தில்
வந்தவிதிப்பயனோ வழக்குரைக்கவேணுமென்று
உன்சமர்த்துமென்சமர்த்தும் ஊரறியவேணுமென்று
பின்சமர்த்துப்பேசி புறப்பட்டாரந்நேரம
மறியவிருந்து மடிபிடியுஞ்சண்டையுமாய
நெறியுடையதருமனொன்று நீதிவிளங்கவென்று
ஊசலிட்டுக்கொண்டு உருபூசல்தன்னுடனே
அந்தணர்கள் தருமரிட மவர்வழக்கைச்சொல்லலுற்றார்
வந்ததான்சொல்ல வாகாகத்தான்கேட்டு
மந்திரிமாரை வாவென்றருகழைத்து
தந்திரிமாரெல்லோருஞ் சபைதாகத்தான்கூடி
ஞாயம்நடுக்கண்டு நமக்குரையுமென்றுரைத்தார்
தூயதருமர்சொல்லத் துறந்தோர்களெல்லோரும்
அடுக்கவிருந்து அவர்வருக்கைக்கேட்கலுற்றார்
தொடுத்தமறைவேதியரைத் தொடர்ந்தவரேசொல்லுமென்றார்
குடியிருக்கவந்தோன் கூறினான்தன்வழக்கை
மிடியிலடிபட்டு வேற்றூரில்தானிருந்து
இவரிடத்தில்வந்து இருக்கவிடங்கேட்டேன்
அவரெனக்குவீடுகட்ட ஆமென்றிடங்கொடுத்தார்
அவ்விடத்திலமண்ணெடுத்து அளவாய்ச்சுவரேற்றி
இவ்விடத்தில்வீடு இதமாய்முடித்திருந்தேன
மண்ணெடுத்துக்கேணியிலே மறைபொருளாய்த்தானிருந்து
கண்ணிடத்திலேதெரிந்து கற்கத்திற்பொன்னெடுத்து
எடுத்தவுடனே இவரிடத்திற்கொண்டேகி
கொடுத்தேன்பொருள்கையில் கொள்ளேனெனவுரைத்தார்
மூன்றுமிவருடைய மூதாக்கள்வைத்தபொருள்
மன்னவனேநாமெடுத்தால் மாபாவம்வந்துவிடும்
ஆதலால்மன்னவனே ஆரொருத்தர்வைத்தபொருள்
காதலுடனஞ்சா தெடுத்துமிக்கையாண்டால்
எடுத்தபுதையல்தன்னை எப்போதுமன்னவரே
அடுத்தவர்களுக்கடிமை யாம்நரகில்வீழ்த்திடுவார்
ஆகையாலிப்பொருளாம் ஆகாதேயென்றுசொல்லி
வேகமுடனேமறையோன் வெகுத்துத்தானுரைத்து
அகுதிபரதேசி அடுத்துக்குடியிருந்தால்
பகுதிபெருமபிடியாயப் பண்ணுகிறானென்றுரைத்தார்
மற்றுமங்கநீள் தருமர் மனையுடையவேதியரே
உற்றுமிகநோக்கி உன்வினையைச்சொல்லுமென்றார்
பாராருமன்னர் தருமர் பாக்கியவானேகேளீர்

ஏராக்கியமனையை இவர்க்கு இடங்கொடுத்தேன்
அங்கமனையும் அழிங்கண்ட வாழ்பொருளும்
இந்தவுலகறிய இவர்க்கென்றுநான்கொடுத்தேன்
எடுத்துரைத்தமன்னவனே இன்னமொன்றுங்கேளாய்
கொடுத்தபொருள்மீளக் கொள்ளுவார்தானுமுண்டோ
அடுத்தோர்தமக்குவினை அங்கேவினைப்பாரும்
தொடுத்தகருமமதைத் தொடர்ந்தேயளித்தவரும்
கெட்டுவிடுவார் கேடில்லைமன்னவனே
வட்டவிருநிதியம் வாங்கேனெனவுரைத்தார்
மூட்டவேவேதியனும் மொழிந்தனர்காணம்மானை
சேர்க்குபுகழ்தருமன் செரிந்துசிலமந்திரியை
ஏற்கவேகோகயிங்க இருவர்தமக்கதையும்
ஏசியோமாமறையோர் இருவோருந்தான்வெகுண்டு
மற்றுமவர்தங்களிலே வன்மைமிசப்பேசி
உற்றுமிகமூன்றாள் உரைத்தமொழிதவறி
சொன்னபடியைந்தாநாள் தோற்றமுடன்வந்துநின்று
மன்னவர்கள்தருமர்முன்னே வாகாகவந்துநின்று
அன்புடனேமாமறையோர் அரசுபலகூடி
இன்பமுடன்தர்மர் எடுத்துரையுமென்றுசொன்னார்
பெருமையுடனேக்கிப் பேர்பெரியவேந்தன்முன்னே
அருமறையோர்தன்வழக்கு அற்றுதோவென்றுரைக்க
இருமுனிவர்தாமுமிக்க செப்பலுற்றாரம்மானை
மன்னவனேஎன்மனையிற் கண்டதொருவான்பொருளை
என்னதென்றுசொல்லி எடுத்துரைத்தார்தருமர்முன்னே
எந்தன்மனையில் இவருக்கிடங்கொடுத்தேன்
சொந்தப்புதையலதனைச் சுகமுடனேகொள்ளைகொண்டு
கொந்தகமனஞ்சலித்து குறியாதவார்த்தைசொல்லி
பிடிக்கிறான் சண்டையிவன் பேசவுந்தான்ஞாயமுண்டோ
உன்செய்தியென்னவென்று உகந்துதருமர்தான்கேட்க
என்செய்தியென்னசொல்வேன் எடுத்தபுதையலைத்தான்
சொடுப்பேனென்றானும் குடத்துப்பணத்தையெல்லாம்
குடியிருந்தேனினுலே குவலயத்திலேயிவர்கள்
அடியிருப்பிற்கண்ட ஆனதொருவான்பொருளை
கொடுத்துக்குடியிருக்க வந்தேனேகொற்றவனே
அடுத்துக்குடியிருக்க வந்தேனேஐவரிடம்
கெட்டுரம்பண்ணுகிறார் நீதியோமன்னவனே
எட்டுரறிய இழுக்கிறான்சந்நியிலே
நீதியுடன்சொல்லுமையா நிருபனேயென்றுரைத்தார்
வேதியன்றனிவ்வசனம் விளம்புவதைத்தான்கேட்டு
இனியென்னஞாயம் எடுத்துரைக்கவாபோது
அனியாயமிப்போது அந்தணர்கள்தன்வழக்கு
கண்டோமதிசயந்தான கலியினுடதந்திரத்தி

விண்டோம்புவனம் வெறுத்தோங்கலியாலே
தக்கபுகழுஞ் சகாதேவாகேளடாயே
புக்கானமாகலியன் புதுமையிதுவென்றுரைத்தார்

விருத்தம்.

அந்தணர்வழக்குங்கண்டோ மடிக்கடிபிரட்டுங்கண்டோம்
இந்தமாநிலத்தில்நாமு மிருப்பதுதருமமல்ல
அந்தநாளச்சுகால மாண்டுதான்முடிந்துமுற்றும்
வந்தநாள்வந்ததானால் வழக்கென்னவழக்குநாயம். (௨௭)

பஞ்சமாபாவங்கொண்டிப் பாரினில்கலியன்வந்தால்
என்செய்வோந்தம்பிமாரே எப்படியுலகந்தன்னில்
முன்செய்தநாயம்போல முற்றுமோவினிமேல்நம்மாற்
பஞ்சவரென்றுசொன்ன பாவினைமுடியாதென்றே. (௨௮)

ஆண்டவர்கடந்தாரிந்த வதிசயம்வருமென்றெண்ணி
நீண்டவர்மொழிந்ததென்று நிச்சயநிசமுங்கண்டோ
பாண்டவர்புதல்வர்நாமும் பாரினிலிருந்தோமானால்
மூண்டதோர்கலிவிடாது முறிந்துநமக்குக்காலம். (௨௯)

வாழ்ந்ததுதுவாபரத்தில் மனுநெறிமுறைமைநீதி
தாழ்ந்ததுகலியுகத்தில் தருமமொன்பெயரும்போகுந்
சூழ்ந்ததோர்கலியுந்தப்புச் சொல்லும்வைதுந்தாஞ்சேர
ஆழ்ந்ததோர்புவியைவிட்டு அகலுவோமகலுவோமே. (௩௰)

நாரணர்நம்மைவிட்டு நடந்ததோர்காரியந்தான்
காரணர்முடிந்தகோலம் கலியுகம்வருமென்றெண்ணி
ஆரணன்தன்னையீன்ற அச்சுதன்பச்சைமால்தான்
பூரணங்கடந்தமார்க்கம் போவதுதருமமின்றே. (௩௧)

வானவரிமையோர்மற்ற மாதவமுனிவர்தேவர்
தானவரிஷிகள்வேதத் தபோதனர்புகழ்தல்செய்ய
காமினிக்கிதராக கலைமிசைமிகவும்பாட
மேனகைபணிகள்மாற வெகுசுகமவிடந்தானே. (௩௨)

வீமனேவிசையன்தம்பி மேதினிதன்னிலுங்கள்
கேடுறும்பிலமும்வாங்கி கெடியமால்போனான்றே
சாமமாம்வேடர்முன்போய்ச் சமரினிற்பிலமுங்காட்டி
காமினியுலகில்வாழ்க நமக்கிதுசகியாதென்றார். (௩௩)

கதை.

தன்மருந்தம்பி சகாதேவனைநோக்கி
வன்மமறவேதான் வகைவகையாய்ச்செப்பலுற்றார்
நீதியும்பொய்த்து நெறியுந்தவறிவிடும்
வேதமும்பொய்த்து வினைகளுமேயுண்டாகும்
மற்றுமசத்தியமாய் மைந்தா தவறிவிடும்
கொற்றவரையத்துமுன்னாட் கூறினொம்பெருமாள்
தப்பாதுசொன்னமொழி சதுர்மறையோர்தன்னிடத்தில்

இப்போதுகண்டோ மெனவுரைத்தாரம்மானை
தருமர்தனைப்பணிந்து சகாதேவனப்போது
வருங்கலியனவாசகத்தை மன்னவனேசேட்டருளீர்
அறந்தானங்குன்றும் அறுவினைகள்மேலாகும்
பறந்தான்மிகத்தாழ்ந்தும் பாண்மைகளும்பேதகமாம்
மெய்யுமழிந்துவிடும் வீரியமுங்குன்றிவிடும்
பொய்யுங்கலையும் புவிதனிலேமேலாகும்
காசினியில்மாதர்களின் கற்புமழிந்துவிடும்
பூசுரர்கள்சீரியர்கள் புல்லர்களாய்த்தானுவார்
சீரியவேந்தரிட செங்கோலுங்குன்றிவிடும்
பூரியர்கள்புல்லர்களும் புவிதனிலேயாண்டிடுவார்
வேந்தேகலியன் விசேடமிதுவென்றுசொல்லி
சேர்ந்தேசகாதேவன் தெண்டனிட்டாரம்மானை
உள்ளபடிதப்பாது உரைத்தாய்நீதம்பியரே
வள்ளலான்றுரைத்த மாற்றம்போலானதுவே
தரணிதனில்காமிருந்தால் சத்தியமுங்குன்றிவிடும்
மூரணிழக்கவேடருக்கு மூதுகிட்டார்தம்பியரும்
அவனிதனிலிங்கிருந்தால அசத்தியமும்வந்துவிடும்
புவனமுண்ணுமால்பதத்தைப் போற்றியேஐவருமே
நன்றாய்மகாவிந்தம் நடப்பதேசெய்தியென்று
குன்றாப்புகழ்தருமன் கூறினாரம்மானை
போர்தருமனுங்கான புரோகிதரைத்தானோக்கி
போராவிசையனிட பேரன்பரிசித்தனையும்
மண்ணுலகையாளுதற்கு மகுடமதுசூட்டி
எண்ணுமியல்மூகூர்த்த மிடுமென்றாரம்மானை
நெறியுடனேபோக நினைத்தினைவுள்ளதெல்லாம்
குறியுடனேசொல்லக் கோபாலர்சந்நிதிக்கு
பயணமென்றுசொல்லிப் பரிமளித்துகாலவருக்கும்
சுயசனமுள்ள சுற்றத்தாரெல்லோர்க்கும்
மன்னாமகுடமுடி வர்த்தனர்களெல்லோர்க்கும்
தென்னன்பயணமென்று செப்புமென்றாரம்மானை
சீட்டெழுதிவிட்டார்கள் திசையுள்ளமன்னவர்க்கு
எட்டெழுத்தைவாசித்து எல்லோருமேகூடி
என்னவிதிவசமோ என்றுமன்னரெல்லோரும்
மன்னர்சமூகமதில் வந்துகண்டாரம்மானை
ஆண்டவரேநீர்தான் அழைத்தபணிவிடையேன்
நீண்டபுகழ்பெற்ற நிமலனேசொல்லுமென்றார்
அப்போதுதருமர் அரசர்தனைநோக்கி
இப்போதுகொடுங்கலியன் இவ்வுலகில்வந்துவிட்டான்
இனிமேற்கலியுகத்தில் இருக்கவுமேபோகாது
தனியேவனவாசஞ் சஞ்சரிக்கமெத்தநன்று
ஆனதினாலுங்களைநாம் அருகேவரவழைத்தோம்

நானறூட நீங்கள் வரம்புதப்பிப்போகாமல்
காலமயிர்ந்து காசினிக்குள் நீங்களுமே
காலத்துக்கேற்ற கணக்கின்படியாக
தெரிந்துநடந்துகொண்டு செங்கோல்தவறாமல்
பிரிந்தொருத்தர்போகாமல் பிள்ளைசிறுபாலனிடம்
கலந்துசெகமுழுதுங் கட்டாகநீரிருந்து
துலங்குபரிசித்துவுக்குத் துரந்தரிகந்தான்தரித்து
வைக்கிறோம்நாங்கள் மகுடமுடிதரித்து
நிற்கிறோமும்மை நிகழ்ந்துபரிசித்துவையும்
வைக்கிறோம்பாரில் வணங்குகிறோமுள்ளபடி
நீங்களிருந்து நெடுகவனம்புகுந்தால்
நாங்களிருந்து நடப்பதென்னகாரியந்தான்
எல்லோரும்வாரோம் இந்திரபதிசேர்ந்தாலும்
பலபேரும்வந்து பணிவோமேயல்லாது
அரைநொடியிலும்மைவிட்டு அவதரியோம்பூவுலகில்
துரையேதுரையரசே துரந்தரிகமன்னவனே
என்றுமன்னன்சொல்லி இணைந்தலம்பியோலமிட
அன்றுதர்மராசன் அவர்களையேதானமர்த்தி
ஒன்றுக்குமஞ்சாமல் உலகளந்தோன்றன்னருளால்
கன்றுக்கிறங்குகின்ற காத்தபசுப்போலே
நம்மையனுதினமும் நாள்தோறுங்காத்தாப்போல்
செம்மையுடன்செங்கோல் செலுத்தும்பரிசித்துவுக்கு
ஆதரவாய்த்தானிருந்து அரசுநிலைத்தானிறுத்தி
போதரவாய்வாழ்ந்துப் புவிமீதில்தானிருப்பீர்
வெய்யோனுமண்ணும் விண்ணுமுள்ளகாலமட்டும்
துய்யோர்மறையோர் துதித்துப்புகழ்ந்தேற்ற
இருமென்றுதருமர் எல்லோரும்வாருமென்று
குருமுன்னிலையாகக் கொற்றவனுமன்னோரம்
மாநகரஞ்சோடித்து வாழைபலநிரைத்து
தேனொழுகும்பூங்கரும்புந் தேங்குபலாநிரைத்து
மரகதத்தோரணங்கள் வகைவகையாய்க்கட்டிவைத்தார்
எற்றபுகழ்மெத்த உலகிலதிகமென்ன
அத்திபுரந்தன்னை அலங்கரித்தாரம்மானை
முத்துநிறைப்பாலிகையில் முகந்துமுளைதெளித்து
எத்திசையென்சோதரிஷி இட்டமுகூர்த்தமதில்
தருமருடன்தம்பியருஞ் சதுர்மறையோர்தம்முடனும்
மீன்மருவுஞ்சோதி முடிவேந்தர்பார்த்திருக்க
வாழும்அபிமனுட மதலைதன்னையழைத்து
தாளறவேபூவுலகில் தருமநெறியுள்ளாக
மங்கையர்கள்கற்புமற்ற மாமறையோர்வேள்விகளும்
செங்கோல்முதலாய்ச் சிவனேடுமாலயமும்
சைவநெறியுந் தழைக்கவரசாளுமென்று

பொய்யில்லாநீள்தருமன் புகன்றனர் காணம்மானை
பார்வேந்தன்சொல்லி பரிச்சித்துத்தான்கேட்டு
தார்வேந்தன்நீரிருக்கத் தம்பிமார்தானிருக்க
தேனேருஞ்செங்கோல் தேசமெல்லாம்நன்றாக
நானாளேனென்று நகைத்தான்காணம்மானை
சிங்கத்தானாளுகின்ற தேசமெல்லாமாளுதற்கு
பங்கமன்றிநாய்தனக்கு பட்டம்பொறுக்காதோ
செறிவாகவுந்தனிட தேசமெல்லாமாளுமென்றார்
அறிவாகளன்கைதனில் ஆகாதேயென்றுரைத்தார்
பார்த்தனுடன்பேரன் பகருமொழிகேட்டு
வாய்த்தபுகழ்தருமர் மகிழ்ந்துரைப்பாரம்மானை
பன்னுபுகழ்வேந்தன் பரிச்சித்துவேகேளாய்
உன்னினைவினாலே உலகாளதாவிடுமோ
பன்னகமேல்துயிலும் பாரபரனார்தருமருக்கு
முன்னாளுரைத்த மொழிதவறிப்போகாமல்
எம்பெருமாள்தன்னுடைய ஏவல்தொழில்மறந்தால்
நம்பெருமாள்தன்னாணை நரகத்திலேவீழ்வோம்
மாசில்லாவாளபிமன் மைந்தனெனுமன்னவனே
பாசமுள்ளநல்ல பரிச்சித்துநீகேளாய்
வாழ்நெடுமால்தானுரைத்த வார்த்தைமறவாமல்
தாழ்வன்றியிந்தத் தாணிதனில்நில்லுமென்று
சூழ்ந்தபுகழ்தருமன் சொன்னார்காணம்மானை
ஆழ்ந்தபுகழ்மன்னவன்சொல் கேட்டேயகமகிழ்ந்து
ஒன்றுமுரையாமலவன் ஒப்பியேதானிருந்தான்
தேசத்தரசரையுஞ் செழுமறையோர்தங்களையும்
பாசத்துடன்தருமர் பரிந்துமிகப்பார்த்தருளி
மற்றுமந்தவாளபிமன் மதலைபரிசித்துவுக்கு
வெற்றிமுடிசூட்டுதற்கு வேள்விதனைத்துடங்கி
பத்தியாய்வேள்வியைப் பண்ணிவைத்தாரம்மானை
தாரைமுரசுடனுஞ் சங்குமிகமுழங்க
வீரமுள்ளபல்லியமும் விகிதமுடன்முழங்க
பங்கமில்லாநல்ல பரிச்சித்துராசனுக்கு
கங்கைநதியாட்டிக் கனகபட்டுத்தான்சாத்தி
எல்லவன்தன்னொளிபோல் இலங்குசிங்காதனத்தில்
வல்லபரிசித்துவையும் வாழ்த்ததருமருந்தான்
கொல்லைமுடியவிழ்த்து சூட்டினாரம்மானை
மன்னவர்கள்மந்திரிகள் மகுடவர்த்தனர்தமையும்
சின்னஞ்சிறியோர்முதலாய் தெரிவையர்கள்தங்களையும்
வாழ்விசையன்பேரனுக்கு மன்னவனுந்தானளித்து
தாழ்வன்றியிந்தத் தாணிதனையாண்டிரென்றார்
கோனிவன்தானென்று கோவிலிலேதானிருந்தான்
முத்துமுடிசூட்டி முடிமன்னர்காத்திருக்க

கொத்துக்குடைநிழற்ற கோவேந்தர்சூழ்ந்திருக்க
சத்தக்கடல்போலே சனங்கள்நெருங்கிருக்க
கட்டும்பயுரிடைய காவலர்கள்வந்துநிற்க
வெட்டும்பரிவீரர் வீரவாள்கைப்பிடித்து
தத்தும்பரியேறித் தங்களிலேவந்திருக்க
சுத்தும்ரதமேறித் துரைமக்கள்வந்திருக்க
தூறுமதவாரணமேல் துரந்தரிகர்வந்திருக்க
கூறுதமிழ்வாணர் கொண்டாடிவாழ்ந்திருக்க
தம்பூருவீணை சரமண்டலமுழங்க
கிம்புருடர்கின்னரமுங் கிதங்கள்தான்முழங்க
சங்கிதராகமுடன் தாளமுடன்மத்தளமும்
இங்கிதராகசின்னம் எக்காளம்பூரிகையும்
கவரியுடன்சயகண்டி நற்சங்குதான்முழங்க
பவரிகமாய்ப்பேரிகைகள் பலதிக்குந்தான்முழங்க
சேனைகளுஞ் சிறப்பாகத்தான்சூழ
ஆனைபரிரதமும் அணியாகத்தான்சூழ
சிங்காசனச்சிறப்புஞ் சேனைமன்னர்தன்சிறப்பும்
துங்கன்பரிசித்துடைய துரைபோலதுசிறப்பும்
கண்கள்களிகூறக் கண்டுதன்மர்தம்பிபரும்
எங்கள்பதிகாக்கு மிவனேபுவிராசன்
ஆனுலினிமேல் அச்சங்களொன்றுமில்லை
போனாலும்நம்முடைய புவியாள்வானிப்பாலன்
செலுத்துவான்செங்கோல் திருமாலருளாலே
ஆவித்துதானிருந்து ஆலோசனைகளெல்லாம்
இன்றைக்குத்தீர்ந்தோம் இனிமேற்கிலேசமென்ன
குன்றைக்குடைகவிழ்த்த கோபாலன்றன்னிடத்தில்
போகலாமென்று பூரித்துப்புத்திரர்கள்
ஏகலாம்நன்றாய் இனிமேல்மயங்காமல்
என்றுபரிசித்தவையும் இங்கேவாவென்றழைத்து
ஒன்றுபதையாமல் உலகாள்வீரென்னரசே
நாங்கள்வைகுந்தம் நடக்கவழிகாட்டி
போங்களென்றுசொல்லும் புண்ணியரேநீர்தாமும்
மனதுசலையாமல் வாழ்த்திமிகமகிழ்ந்து
என்றுமனங்குளிர்ந்து இன்பமுடன்சொல்லுமென்ன
விம்மல்மிகுத்து மெலிந்துபரிசித்துவுந்தான்
செம்மல்மலர்விழியாள் திரண்டுகண்ணீர்தானோட
ஐயரேயென்னைவிட்டு ஐவருந்தான்போனக்கால்
உய்வேனொருநாளும் உடைந்திடைந்துபோகவேதான்
விட்டுப்பிரிந்தீரானால் விளங்குவேனோநான்பாவி
மட்டுபடாச்செல்வம் வாழ்வுபலவிருந்தும்
என்னைத்தனியவைத்து ஏகினீராமாகில்
முன்னைப்பயனோ முடிந்தவிதிப்பயனோ

தந்தையரைப்பெற்றவர்கள் தரணியிலாண்டிருந்து
விந்தையாயிந்த மேதினியைவிட்டிழந்து
நடந்துசடத்தோடே நாம்போறோமென்றுசொன்னால்
தொடர்ந்துவருவேனான் தூரவழிபோனாலும்
கண்டிருக்கநானுங் காவலரேபோவேமென்றால்
விண்டிருக்கப்போமோ வித்தகரேஎன்றாலே
சடத்தையிங்கேமிட்டுவிட்டுத் தானடந்திராமாகில்
சடத்துக்குள்ளதெல்லாந் தானதர்மந்தான்முடித்து
மறந்திருப்பேன்கண்டீரே மானிலத்தோர்புத்திசொல்லி
இறந்துசடமொழிந்தால் எனக்குக்கிலேசமில்லை
உயிரோடேநாம்போறோம் உலகாளுமென்றுசொல்லி
தயிரோடேநீர்பிரிந்த தன்மைபோலாவேனே
ஊரிருக்கநானிருக்க உற்றசனந்தன்னிலுள்ள
பேரிருக்கநீர்போற பேச்சறியேனையாவே
எந்தவிதமென்று எனக்குவகைசொல்லியிப்போ
அந்தவிசன மறிந்துதர்மர்தான்கேட்டு
முந்தநடந்த முறைமைகளுந்தானுரைத்து
வந்தவரலாறும் மாயவனார்போனதுவும்
பாரதப்போர்முடியப் பண்ணிவைத்தகாரியமும்
சாரதியாய்நின்று சகாயனழித்ததுவும்
காரணங்கள்தான்முடித்து கரியமால்போனதுவும்
ஆரணனுமெங்களைத்தான் அப்போதழைத்ததுவும்
சிந்தைமகிழ்ந்து திருமாலருளினதும்
மைந்தன்மனது மலையாமல்வார்த்தைசொல்லி
கந்தமலர்க்கையால் கட்டியுறவணைத்து
முகந்துமடியில்வைத்து முதுகுதனைத்தடவி
சுகந்தமணிந்து சோபமுந்தான்தவிர்த்து
மதலைகுழந்தை மனதுவரவார்த்தைசொல்லி
அமர்த்தியிருமென்று அறவணைத்துக்கொண்டாடி
சமர்த்தன்பரிசித்துவுந்தான் சாதகமாய்நல்லதென்று
நல்லவழிசென்று நாரணரைத்தானோக்கி
சொல்லுமென்றுநல்வசனஞ் செப்பினானம்மானை
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவேந்தருக்கு
புத்தியுடன்சொல்லி புகுந்தாரரண்மனையில
தாயாரிருக்குமந்த தனிமாளிகைநோக்கி
ஆயாளிருக்குமந்த ஆசனத்துமுன்னேவந்தான்
விழுந்துநமஸ்கரித்தார் வேதியருந்தம்பியரும்
அழுந்தத்தழுவி ஐவரையுமுத்தமிட்டு
சூழவேமைந்தருடன் துயரற்றிருக்கையிலே
தாழுமொழிபேசித் தருமருந்தம்பியரும்
தாயேசரணஞ் சலிப்பொன்றுஞ்சொல்லாமல்
ஆயேநீஎங்களுக்கு அன்புடனேஇன்பமதாய்

மாயோனிடந்தனிலே வைகுந்தஞ்சேர்ந்திருக்க
நீயேகுமென்று செற்றிரிலே நீரணிந்து
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமென்று
எந்தாயேவேறென்றும் எண்ணமலன்புடனே
அனுப்புவீரென்று ஐவருந்தாங்கேட்க
தனுப்பெரியதாயாரும தயங்கிமுகம்வாடி
எனைப்பிரிந்துமக்களா என்னையுந்தானிங்குவிட்டு
நடப்பதற்கோவந்து நன்றாயுபசரித்தீர
நடப்பற்றுநாளும் நாடிஉடலதளர்ந்து
கூனிவிழிமயங்கிக் கோலூன்றியேதிரியில்
வானிரைமூழி வயதுஞ்சரியாகி
உடலுந்தளர்ந்து ஊனுஞ்செயல்குறைந்து
படருமிருமல் பாசத்திளைப்புடனே
முகமுஞ்சிறுத்து முழங்காற்பிடிப்பாகி
சுகமுஞ்சுவைமறந்து தோற்றமதுவேறாகி
உன்றுடைந்துமேனி உடலும்பசையற்று
வெள்ளுடலுமாகி மெய்யுமிகத்தளர்ந்து
ஆக்கைகுலைந்து அவதிவரும்நாளையிலே
தீக்கடனும்நீக்கடனுஞ் செய்துமுடியாமல்
போரமென்றபுண்ணியரோ புத்திரரோமித்திரரோ
வாரமென்றமக்களுடன் மண்ணில்விழுந்தழுது
தந்தையருமில்லாமல தனித்துநானுங்களையும்
சிந்தைமயங்காமல் சிறியோர்பெரியோராய்
ஆகமட்டுந்தான்வளர்த்த அன்னையல்லோவேந்தனையும்
சாகவிட்டுப்போகச் சம்மதியோஉங்களுக்கு
அந்தநாள்எங்கள் அன்னைபிதாவிடத்தில்
குந்திமாதேவியென்று குழந்தையாய்நானிருந்தேன்
சொல்லரியவேதத் தூருவாசமாமுனிவர்
வெல்லரியஅத்திபுரம் வீதியிலேவந்தளவில்
எங்களையாகண்டு இருமென்று ஆதரித்து
அங்கேதான்வந்து அமர்ந்திருக்கும்வேளையிலே
அஞ்சுவயதான ஆரணங்குளையாலே
மிஞ்சுமொருசமையல் விதமாகத்தான்முடித்து
அன்னம்படைத்தால் அமுதுகொள்வோமாயாகில்
என்னமொழிசொன்னளவில எங்களையொந்தனையும்
அவர்க்குப்பணிவிடைசெய் அம்மாவெனவுரைத்தார்
இவர்க்குமனதுவர யானுமிளையாமல்
அன்புடனேதான்சமைத்து அமுதுபடைத்துவந்தேன்
இன்பமுடன்சாப்பிட் டெழுந்திருக்கும்வேளையிலே
சந்தோஷமாகமுனி தனித்தென்னையழைத்து
மந்திரமுஞ்சொல்லி மகிழ்ந்துரைத்தாரெந்தனுக்கு
வேதமுனிசொன்ன வித்தைதனைவைத்திருந்தேன்

வேறுவினைவாராமல் வேதநாராயணரே
காருமெனவாழ்த்திக் கைநீறுந்தானணிந்து
சேருமூர்தன்பாதந் திருமாலேஐவரையும்
என்றுகுந்தாதேவி இன்பமுடன்கானனுப்ப
மன்றுபுகழ்காந்தாரி மனைநோக்கித்தானடந்தாள்
பூந்தாறிவீற்றிருக்குங் கனகமணிமாளிகையில்
சாந்தாரிவர்கள் புதியமணிமண்டபத்தில்
கண்டாரடிதொழுதார் காந்தாரியம்மனுமே
கண்டாள்காண்மைந்தரையும் கட்டியறவணைத்து
மைந்தருக்குநல்ல வார்த்தையுபசாரமுடன்
ஐந்தருபோற்றுணிருந்து ஐவரையுங்கொண்டாடி
சிந்தைகளித்துநன்றாய்த் தேன்மொழியாள்தானிருக்கும்
என்தாயேமாதவே எங்களையுமிப்போது
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமிப்போ
கலியன்பிறந்து காரணமாயிங்குவந்தான்
வைகுந்தஞ்சேர வாழ்த்திவிடைதாரும்
கைகொண்டுநீறணியுங் காந்தாரிநாயகமே
என்றுதர்மர்சொல்ல ஏங்கியேகாந்தாரி
ஒன்றுமுரையாமல் உறுதியுடன்பேசாமல்
என்னிடத்தில்நீங்கள் இதுதனக்கோவந்தீர்காண்
உன்னிடத்தில்நம்பி உற்றதுணையென்றிருந்தேன்
மாபாவிகிட்டே மைந்தரென்றுவந்தீர்காண்
பூபாலரைவர் பொதுவென்றுநானிருந்தேன்
நூற்றுவருமாண்டிருந்து நொந்திடைந்துபோனார்கள்
காத்திருந்தேனனுங் காலமுடியுமட்டும்
நீங்கள்துணையென்று நீணிலத்தில்தானிருந்தேன்
நாங்கள்பயணமென்று நன்றாகச்சொன்னீரே
முன்செய்ததீவினையோ மூதாக்கள்சொன்னதுவோ
பின்செய்ததீவினையோ பெருமான்தன்கற்பனையோ
அந்தமைந்தநூற்றுவரு மாசழிந்துபோனாலும்
இந்தமைந்தர்போலுமினி இங்கேநமக்குதவி
ஆமென்றுநம்பி ஐவரையுமுண்டெனவே
நாமொன்றுதானினைக்க நடுவின்றோர்கற்பனைதான்
தாமேமுடிந்தால் தம்பியரேயென்னசொல்வேன்
நானேதுசெய்வேன் நாயகமேதம்பியரே
நாளுஞ்சரியாச்சு நடையுடையும்வேறாச்சு
வாழும்புவியைவிட்டு வருவதுமக்காச்சு
போங்காலமெந்தனுக்குப் புத்திரருமில்லாமல்
சாங்காலம்வந்திருக்கத் தம்பியரேயென்னைவிட்டு
ஏகினீராமாகில் எந்தனுக்குவேறுதுணை
ஆகிலும்நான்காணேன் ஐவரேயென்றழுதாள்
பெற்றும்பெருமலடி பிறவிதியேபோனேனே

சற்றுமிரங்காமல் தருமரேபோவனென்றீர்
மாளக்கொடுத்து மனச்சலிப்புநீர்தீர்ந்து
ஆழக்குழிதனிலே அழுந்தவிட்டுப்போவீரோ
பக்கத்துணையில்லை பரிந்தழுகப்பிள்ளையில்லை
துக்கத்துடனிருக்கச் சொல்லிவிட்டுப்போவீரோ
ஆரிருந்தாலென்ன ஆனைகட்டிவாழ்ந்தென்ன
தாராரும்ஐவரைப்போல் சகாயமெனக்குண்டாமோ
செய்யுங்கடனும் நீக்கடனும்நீர்க்கடனும்
கையுங்கணக்குங் கடனுங்கழியாமல்
போகவருகேட்டீரே புத்திரரேமித்திரரே
ஏகவழிபார்த்து இருந்துபுலம்புவனே
யோசனைகள்சொல்லெனக்கு உற்றவிசனந்தீர்த்தாயே
வாசனைசேர்தன்மரே மகனேவுரையுமென்றாள்
அந்தமொழிகேட்டு அன்புடனேதன்மருந்தான்
வந்தமொழிசொல்லுகிறேன் மாதாவேநீர்கேளும்
என்னுடையதன்பிறவி ஏற்றமுள்ளநூற்றுவரும்
மன்னுகுருவாசாரி மகுடமன்னருள்ளோரும்
உற்றதுணைமைத்துனனும் ஊரிலுள்ளமன்னவரும்
பற்றறவேகொன்று பாராண்டேனென்பாவி
ஆண்டுமுடிந்ததுகாண் அவர்களுடனான்போக
வேண்டும்விதிகாலம் விழியும்வழிவசமாய்
காலஞ்சமைந்திருந்த கலியுகமும்வந்ததுகாண்
கோலஞ்சமைந்திருந்த கூத்துஞ்சரியாச்சு
இனிமேற்கலியுகத்தில் இருந்தேனேயாமாகில்
அனியாயமேலாகும் அகந்தைமிகவுண்டாகும்
இடும்புங்கொலைகளவு மேராளமாகிவிடும்
கெடும்புவியிலுள்ள நீதிடவாது
அந்தத்துவாபரத்தில் அநேகந்தயவுதன்மை
இந்தக்கலியுகத்தில் எய்தாதுதானதவம்
நன்றிசெய்வோமென்றால் நமக்கறிவுவேறாகும்
குன்றிவிடும்புத்தியது குறுகுங்கலிகாலம்
ஆனதினால்தாயே அடியேன்பயந்துவந்தேன்
தானதவமழிந்து தன்மமொன்றபேர்போகும்
பெருந்தவமும் புரபலமும்போகாமல்
காருமென்றுதாயேயென் கற்புநிலைபோகாமல்
உந்தனுக்குநல்ல உதவிசெய்யப்பாலகன்தான்
மைந்தனபிமன் மகன்பரிசித்துவுடன்
வேந்தர்மகுடமன்னர் வீரர்பரிவாரமுடன்
சேர்ந்ததுணைமக்கள் செகதலத்திலுள்ளோரும்
இருக்கிறாருந்தனுக்கு ஏவல்செய்யவேண்டியபேர்
உருக்கமாயெங்களைநீ ஒன்றுமுனையாமல்
வாக்குதாலேனுமம்மா மனதுநோகாதபடி

தீர்க்கருடனெங்களுக்குத் திருவாய்மொழிந்தருளி
சொல்லியனுப்பும் துரோபதியுமெங்களையும்
மெல்லியரோதாயே விடைதாருமென்றுரைத்தார்
ஐவருந்தான்கேட்க ஆனகாந்தாரியம்மாள்
மெய்வருந்திநன்ருய் விரும்பிவிடைகொடுத்தாள்
விடைவாங்கிஐவருந்தான் விழுந்துநமஸ்கரித்து
அடைவோங்காண்வைகுந்தம் அச்சுதனார்தம்மிடத்தில்
வென்றுகலியுகத்தை விட்டுவெளியில்வந்தோம்
இன்றுபிழைத்தோம் இனிமேற்கிலேசமில்லை
நமக்குப்பயமில்லை நடப்போமினிதுணிந்து
சுமக்குஞ்சுமையைவிட்டுத் துன்பமெலலாந்தான்தீர்ந்து
கேட்டவரந்தருவாய் கிருஷ்ணுவுனக்கபயம்
நாட்டமுடனுங்கள் நல்லவழியறிந்து
வாட்டமறவாறதற்கு மாய்வரோசீர்துணையாய்
தேட்டமுடன்வந்து திருவுளமேகாத்தருள்வாய்
வழிதுணையாகில்லுமையா மாயாசரணமென்று
களித்துமனமகிழ்ந்து கண்ணர்தனைநோக்கி
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துநன்ருக
தோத்திரமுஞ்சொல்லி துணிந்துநடக்கலுற்ருர்

விருத்தம்.

மாத்திரைப்பொழுதானுலு மாயனைமறந்துமாறில்
தோத்திரத்துடனேகூடித் துதிப்போம்நாம்சிந்தைதன்னில்
மாத்திரமறிந்துவுன்னைப் பரகதிசேரவாரோஞ்
சூத்திரத்துடனேவந்து துணைசெய்வாய்கரியமாலே. (௬௪)

காடிநடந்துதான்வாரோம் நகரும்பதியைவிட்டேகி
கூடிநடந்துவழியேதான் குறித்துத்திசையைத்தானேக்கி
வாடியிடைந்துமருகாமல் மனமேதானேயன்புவைத்து
தேடித்திகைத்துத்திரியாமல் செவ்வேநடத்துந்திருமாலே. (௬௫)

சித்தன்போக்குஞ்சிவன்போக்குஞ் சிவனும்போக்கும்போலாகி
மத்தன்போக்குமதன்போக்கும வானத்திருந்தமனைப்போக்கும்
கத்தன்போக்குங்காரணங்கள் கண்டார்விண்டார்கொண்டாரோ
சத்தம்போக்கோவினிப்பேசோஞ் சமயமினிவரக்கோபாலா. (௬௬)

சரணஞ்சரணங்கோபாலா சாமிசரணந்தருவாயே
காணம்பொறிகள்புலன்குணங்கள் காமக்குரோதமணுகாமல்
திரணமதுவேசட்டமாகத் திரவியதுவேபெரிதாக
மரணமழியாதுடலாகி வந்தாட்கொள்ளவருவாயே. (௬௭)

வழியில்மயக்கள்தடையிடைசள் மற்றுமுள்ளவிக்கினங்கள்
தெளியப்படுத்திவடியார்கள் திகைத்துமலைத்துநில்லாமற்
பழயவினைகளணுகாமல் பால்போலுளமும்பூரணமாய்
வெளியிலறிவும்வெளியாக்கி வெளியேவருவாய்பெருமாளே. (௬௮)

கருதிப்பொருளாய்த்திறப்படுத்தி கன்மக்கூட்டையுரித்தெறிந்து
திருத்தியறிவைநிலைநிறுத்தி திருத்தாப்புலனைவேறறுத்து
குருத்திக்கொழுந்தைமுனைகூட்டிக் குறியுங்காணுவகைப்பிடித்து
இருத்தின்பத்திவழிகூட்டி யிமைக்கும்பெரியபெருமாளே. (௩௯)

நானோர்வசனமல்லாம விரண்டுமிகவேசொல்லறியேன்
தானோர்யெனைநீயாட்கொண்டா யிகத்திலெவர்க்குந்தெரிந்தறிய
வானோரறியவழிகாட்டி வருவாய்பெரியபெருமாள்தான்
ஞானோரறியநல்வழியை நடத்தும்பெரியதிருமாலே. (௪௰)

தேசமிழந்துசெகமிழந்து சேனைதளங்கள்தானிழந்து
வாசமிழந்துமனையிழந்து மைந்தர்பெண்டிர்தனையிழந்து
பாசமொழிந்தபகையொழிந்துன் பாதமலரேபொருளாகி
நேசமிருந்தநினைவதிலே நின்றுவளர்ந்தாய்பெருமாளே. (௪௧)

ஐவருந்துணிந்தவாரோ மவிடமேகெதிகளென்று
தெய்வமேபொருளென்றெண்ணித் தெரிசனைகாணக்கண்கள்
மெய்வளர்திருமாதலபாதம் வேண்டிவைகுந்தஞ்சேர
கைதருமாலேபோற்றிக் கருணையுங்கடவுளாரே. (௪௨)

இராகவாமுகுந்தாபோற்றி ராசகோபாலாபோற்றி
ஏகமாய்நின்றாய்போற்றி எம்பெருமானேபோற்றி
லோகநாயகனேபோற்றி நான்முறைதெரிந்தாய்போற்றி
நாகமேல்துயின்றாய்போற்றி ராமனேபோற்றிபோற்றி. (௪௩)

மந்திரப்பொருளேவுன்னை வழுத்திநின்றுதித்துப்போற்றி
தந்திரத்துடனேயெந்தன் தம்பிமார்நாலுபேரும்
அந்தவார்குழலினளும் ஐவரோடாறுபேரும்
சந்திரபதிவைகுந்தர் தன்னையேநோக்கிவாரோம். (௪௪)

அரிகரிராமராமா அச்சுதாநந்தகோபா
கரியமாலுந்திபூத்தோன் கார்முகில்மேகவர்ணா
பெரியவானந்தசேஷா பிரமனைப்பெற்றமாயா
உரியவாபஞ்சவர்க்கு உகந்தவர்வாரோம்வாரோம். (௪௫)

கதை.

பஞ்சவர்கள்ஐவருமாய்ப் பத்தியுள்ளதுரோபதையும்
கஞ்சமலர்வைகுந்தம் காணவென்றுநடந்தார்
நடந்ததொருபஞ்சவரை நல்லபரிசித்துவுந்தான்
தொடர்ந்துவழிவிட்டு தொழுதுநமஸ்கரித்து
சேனைபடைத்தலைவர் செகவீரரெல்லோரும்
ஆனைபரிதேர் ஐவரையுந்தான்தொழுது
வந்தார்களத்திபுரம் மகுடமுடிமன்னரெல்லாம்
நொந்தாரிடைச்சோர் நோக்கிவனம்போனவர்மேல்
காசினியோரெல்லாம் கலங்கிமனம்வேறுபி
வாசனைசேரைவர் வனம்[illegible]என்றுசொல்லி
கோவென்றபையமிட்[illegible]றவனாக்[illegible]

பாவமோவென்று பரதவித்துநிற்பாரும்
ஐயோசிவனேயென்று ஐவரையுங்காணினைந்து
மெய்யாய்ப்புவியை விரும்பியிருப்போமே
மன்னர்மன்னரெல்லா மனங்களிலேதானினைந்து
தென்னவனைக்காணுமல் தேடிநினைப்பாரும்
ஆரிருந்தாலென்ன ஆளைகட்டிவாழ்ந்தென்ன
காராருமைவரைப்போல் காசினியில்கிட்டாது
போனவழிபார்த்துப் புலம்பியேநிற்போரும்
தானவனேயென்று தலைவிரித்துநிற்போரும்
வஞ்சனைசெய்தோமோ மாபாவியானேமோ
பஞ்சவரேயுங்களுக்குப் பாவிகளுமானேமோ
உங்களையும்விட்டு உலகிலிருப்போமோ
எங்களையும்விட்டு எழுந்தருளிப்போனீரோ
ஊரிருக்கச்சேனை யுகந்தமன்னர்தானிருக்க
சீரிருக்கநீங்கள் தேசமிழந்தீரோ
பாரிருக்கச்செல்வம் பரிகரிகள்தானிருக்க
தேரிருக்கவாழ்ந்த தேசம்விட்டுப்போவீரோ
தாரிருக்கமார்பர் தனஞ்செயனேஇங்கிலுள்ள
பேரிருக்கநீரும் பிறதேசம்போனீரோ
மாடமிருக்க மனைவிமக்கள்தானிருக்க
கூடமிருக்க குடியிழந்துபோவீரோ
தாழ்வில்லாச்செல்வஞ் சகலபொருள்தானிருக்க
வாழ்விருக்கநீயும் வனவாசம்போவீரோ
தன்மரோவீமரோ தனஞ்செயரோதம்பியரோ
நன்மைசெய்துநீங்கள் நாடிழந்துபோவீரோ
துடியிடையாள்சோர துரைமக்கள்தான்சோர
குந்தியமாள்தானிருந்து குமாரர்களைத்தானினைந்து
அந்திசந்திதேடி யழுதகுரல்கேட்டீரோ
வேதாவிதியோ விதியின்பலனெனவே
மாதாஅழுதகுரல் வைகுந்தங்கேட்கிலையோ
சாந்ததருமன் தன்கிளையுஞ்சுற்றமுடன்
காந்தாரிகூவென்று கதறினதுகேட்கிலையோ
காலங்கலியுகத்தைக் கடந்துவழிகூடி
கோலங்கொண்டுநீங்கள் கூட்டோடேபோவீரோ
கூடுகொண்டுபோன குருகுலத்துமன்னனென்று
நாடுள்ளமட்டுமிது நடக்குமென்றுபோனீரோ
மெய்கண்டஐவரென்று மேதினியோர்கொண்டாட
வைகுந்தஞ்சேர மனந்துணிந்துபோனீரோ
ஆறுதினிமேல் ஐவர்செயலுண்டெனவே
மாறுபிமானமுடன் வாழ்வோம்புவிமீதில்
என்றுமன்னர்கூடி இருந்தமதிமந்திரிமார்
சென்றுபரிசித்துமனந் தேற்றியுபசரித்து

பூலோகந்தாங்கும் புரந்தரனேயிப்போது
ஆலோசனைபேசி அழவேண்டாமென்றுசொல்லி
வழிவசமாய்நாள்தோறும் மனதைமிகத்தேற்றி
களிகூர்ந்திருமென்று காவலருங்காத்திருந்தார்
காத்திருந்தமன்னனையுங் காவலர்கள்தங்களையும்
பார்த்திருந்துசொல்வான் பரிச்சித்துவேந்தனுந்தான்
குந்தியம்மாள்பாட்டியவள் கூடென்றழுதசத்தம்
புந்திகலங்கிப் பொறிகலங்கிப்போகுதையோ
அந்தமனக்கிலேசம் அனைவரும்போயாற்றுதற்கு
வந்துகுந்தாதேவியிட மனச்சலிப்புத்தான்தீர்த்து
காந்தாரிமாளிகையில் கட்டுடனேதானடங்கு
பூந்தார்கள்மண்டபத்தில் பொற்கொடியாள்தன்சலிப்பும்
வேண்டாமெனவுரைத்து வீற்றிருந்தாரம்மானை
காண்டாவனமெரித்த கண்ணுதலோனறன்புதல்வன்
பார்வேந்தர்போற்ற பரிச்சித்துமன்னனுந்தான்
தார்வேந்தர்கொண்டாடத் தாரணியையாண்டிருந்தான்
தேசக்குறிப்புந் தெரியவெடுத்தெழுதி
வாசக்குடிதழைக்க மனுநீதிதப்பாமல்
அரசரொடுசீமை அடங்கலுமேதானெழுதி
விரகும்படிக்கு விபரமாய்க்கண்டெழுதி
மன்னரமைச்சர் மந்திரிமார்தங்களுக்கு
அன்னசொர்ன்னமாடை ஆபரணந்தானீந்து
ஆனைபரியுள்ள அடங்கலுக்கும்ப்படியே
சேனைரதகெசங்கள் செகத்திலுள்ளமன்னவற்கும்
வாசல்வழியுள்ள மனையாட்சியுள்ளவற்கும்
ரோசுபடிச்செலவு ரொக்கமாய்த்தானெழுதி
வேதியர்களந்தணர்கள் விரசைவாழ்பூசுரர்க்கு
ஆதியிலுள்ள ஐவர்கணக்கும்படியாய்
சோதிமணிமகுடர் துரைராசர்மன்னவர்க்கும்
ஓதியதபோதனர்க்கு முள்ளபடிதான்கொடுத்து
நீதிதவறாமல் நெறிமுறைமைதப்பாமல்
சாதிமுறைமை தவங்குலைந்துபோகாமல்
அகுதிபரதேசியரும் அவதியென்றுசொல்லாமல்
பகுதியுமோ ஆறிலொன்றுபடியேடுதப்பாமல்
தெய்வத்தலங்கள் சிறப்புமிகபூசைகளும்
ஐவரிருந்ததைப்போல் அவனியெங்குங்கொண்டாட
கொலுவிலிருந்தான் குவலயங்கள்போற்றிசெய்ய
வலுவாணபீமன் மகனுடையசிங்காரம்
மன்மதனேயென்று வாழ்த்துஞ்சிலபேர்கள்
தன்மரிவராமென்று சாற்றுஞ்சிலபேர்கள்
வில்லிபுடசன்போன் விசையன்காணென்பாரும்
சொல்லியபீமன் துரந்தரிகனென்பாரும்

நல்லசகாதேவன் ராசனிவனென்பாரும்
வல்லபுசழ்நகுலன் மன்னவன்காணென்பாரும்
ஐவர்குலந்தனக்கு ஆகுமிலையென்பாரும்
சைவசமையந் தழைக்கவந்தானென்பாரும்
குருகுலத்தில்வந்த குலக்கொழுந்தோனென்பாரும்
பெருகுதமிழ்வாளரும் பிரபலன்காணென்பாரும்
இராசாதிராசனிவன் இராசசிங்கமென்பாரும்
போசனிவனென்று பூரித்துநிற்பாரும்
பாராளவந்த பார்த்திபனென்பாரும்
சீராளனெவ்வகைக்குஞ் சீமான்காணென்பாரும்
மீதானசெல்வம் விளங்கவந்தானென்பாரும்
ஆகாரமாய்புவியை ஆளவந்தானென்பாரும்
வங்கிசக்கட்டும் வரமழிந்துபோகாமல்
அங்கிசங்காக்கவந்த ஆண்பிள்ளையென்பாரும்
எல்லோரும்வாழ்த்தியினி யெண்ணமில்லையென்பாரும்
பல்லோரும்வாழ்த்திப் பார்த்திபன்போல்வீற்றிருந்தான்
தேசமெங்குங்கொண்டாடச் சிங்காசனத்திருந்தார்
இராசனெனயோகம் நடத்தும்படிகேளீர்
நந்தவனந்தோப்பும் நாலுதிக்குமின்றிலங்க
சந்தனச்சோலைகளுந் தானெங்குஞ்சூழ்ந்துநிற்க
செண்பகச்சோலைகளும் செங்கழுநீரோடைகளும்
பண்பானதேனிளநீர் பலதிக்குஞ்சூழ்ந்துநிற்க
பூமரங்களெங்கும் பூத்துமிகச்சொரிய
கோங்குகமுகுபுன்னை குவிந்தெங்குஞ்சூழ்ந்துநிற்க
ஓங்குபலாமரங்கள் உலகெல்லாமுண்டாக
கன்னல்கதலி கதிர்குலைகளீன்றுநிற்க
சென்னெல்வயலுஞ் செந்தாமரைமலரும்
வில்வனஞ்சூழ வீற்றிருக்கும்லட்சுமியும்
பூங்காவனஞ்சூழப் புதியமலர்பூத்துநிற்க
பாங்கானவாவிகளும் பரியுமலர்பூத்துநிற்க
கோபலன்றன்பேரன் கொற்றவன்போல்வீற்றிருக்க
பூபாலனுமிருந்து பூலோகமாளுகையில்
மந்திரிமார்வந்து வாய்புதைத்துவார்த்தைசொல்லி
தந்திரிமார்வந்து சரணமென்றுவார்த்தைசொல்லி
மன்னரிருக்கமண்டலத்தோர்காத்திருக்க
தென்னவர்கள்தந்து திறையிட்டுக்காத்திருக்க
அரசரொடுகாவலர்கள் ஆனைபரிரதமும்
முரசொலிகளார்ப்பக் முடிமன்னர்காத்திருக்க
இடிபிடிகளார்ப்பக் கெடிமன்னர்காத்திருக்க
துடியதிரவீராணக் துலங்குதோணிடம்மாரம்
காளமொடுபேரிகையுங் கனதப்புந்தான்முழங்க
மத்தளம்பம்பை மணிகள்மிகமுழங்க

ஜெயகண்டிடக்கையொடு துத்திசுருங்கான்முழங்க
அகண்டதலம்போல அரசன்கொலுவிருந்தான்
ஆலத்திப்பெண்கள் அலங்காரமாகநிற்க
தாலத்திருவிளக்குச் சமூகத்தைச்சூழ்ந்துநிற்க
மெல்லிநல்லாரெல்லாம் விசிறிகள்வீசிநிற்க
வல்லிமருங்கிடையார் மதுரகவிபாடிநிற்க
மின்னனையபொற்கொடிமார் வெண்கவரிவீசிநிற்க
பொன்னணிசேர்மாதரெல்லாம் பூமலர்கள்தான்சொரிய
பாவாடைவீசப் பாவாணர்கொண்டாட
நாவாணர்கீதம் ராகங்கள்பாடிவர
கொத்தக்குடைநெருங்கக் குப்பைக்குழலுடனே
மத்தகெசமீதேறி மன்னன்பவனிவர
ஆலவட்டஞ்சூழ்ந்துவர பேரணிகள்முன்னடக்க
தாவட்டமின்றிலங்கத் தாணிபர்கள்முன்னடக்க
சந்திராவிடால் தளத்துடனேசேர்ந்துவர
இந்திரவிமானமது இணையாய்நெருங்கிவர
சாந்துசவ்வாதுடனே சாம்பிராணிதான்வீச
ஏந்துமுலைமாதர் இருபுரமுமாடிவர
கட்டியங்கள்கூறக் கனவிருதுதானடக்க
செட்டியிவனெனவே கெம்பீரமாகவெகு
பட்டணமுஞ்சுற்றிப் பவனிவலமாகவந்து
கட்டழகனென்று காசினியோர்கொண்டாட
பார்த்துமனமகிழ்ந்து பரிச்சித்துமன்னனுந்தான்
மாற்றலர்கள்போற்றிசெய்ய மன்னன்சிங்காசனத்தில்
வந்துகொலுவில் மகராசன்போயிருந்தான்
சந்துபயில்சாஸ்திரங்கள் தான்கேட்கவேணுமென்று
ஓதினன்தாதுவனை ஒருநொடியில்வாவெனவே
அந்தணர்கள்தன்தெருவில் ஆராய்ந்துதூதுவனும்
கொந்தலரும்வேதியனார் குடியிலிருந்தவரை
கண்டுநமஸ்கரித்துக் காவலர்கள்வேதியரை
அண்டர்பெருமாள் அழைத்துவரச்சொன்னார்காண்
என்றுசொல்லவேதியரு மேதென்றெழுந்திருந்து
நின்றுமடவாரை நிமிஷத்தில்வாவெனவே
புத்தகத்தைத்தானெடுத்துப் பூவையரேவாருமென்றார்
வித்தகப்பெண்புத்தகத்தை விரையவேகொண்டுவந்தாள்
வந்ததொருபுத்தகத்தை மறையோனுந்தான்வாங்கி
அந்தநல்லகோட்டை அத்திபுரந்தனில்வந்து
பரிசித்துவேந்தனையும் பாங்காகவந்துகண்டு
தெரிசித்துஅட்சதையுஞ் செயம்பண்ணித்தான்கொடுத்து
அரசர்க்கரசரே அரசர்பெருமானே
முரசுக்கொடியுடைய முடியொருத்தமன்னவனே
என்னைவரச்சொன்ன இயல்பேதெனக்கேட்டான்

முன்னைப்பாபனும் முடிந்திரகசியமும்
நாளும்பலனும் ராசிபலலக்கினமும்
கோளும்பகையுங் குவலயமுங்காசினியும்
ஆளும்புவியும் அரசர்க்குச்செங்கோலும்
வாழும்பொருளும் மனைப்பொருத்தமுள்ளதுவும்
பார்த்துரையுமென்று பரிச்சித்துராசனுந்தான்
வார்த்தைசொல்லக்கேட்டு மறைநூல்களாராய்ந்து
ஆராய்ந்துபார்த்து அளவிட்டுச்சாஸ்திரத்தை
நோய்மனைகுழி நீங்காத்தனைகுழி
ஓலையினைப்பார்த்து உச்சிநிலைதான்பார்த்து
பேலைவிளங்கிப் பெரியதராசுநிலை
ராசிபிரித்து நட்சேத்திரம்பிரித்து
ஆசுபலன்தாரைகள்தான் அடைவுடனேதான்பார்த்து
பலகலைகள்வைத்துப் பலசாஸ்திரம்பிரித்து
அழகுநிலைநிறுத்தி அட்டதிக்குந்தானிரைத்து
திசைகள்பதினாறுந் தெரிந்துவகைபிரித்து
இசையாகலக்கினங்கள் இதமாகத்தான்பார்த்து
சொல்லுகிறான்வேதியனுந் துரைமகனுந்தான்கேட்க
கேளுங்காண்மன்னவரே கிருபையுடன்சாஸ்திரத்தை
வாழுங்குருகுலத்தில் மன்னவரேயும்முடைய
ராசிபொருத்தம் நவக்கிரகம்தான்பார்த்தேன்
தேசிக்குதிரையொடு சேனையொடுபூமியல்ல
உடைமைமதகரிகள் உற்பத்திதானுமல்ல
திடமுடையசெம்பொன் தேடும்புதையலல்ல
மாடமொடுகூட மனையாட்டிதானுமல்ல
ஆண்டவனேயும்முடைய ஆத்துமத்திலோர்வினைதான்
சென்மச்சனியும் தேகத்திலவல்வினையும்
கன்மச்சிறுவினையுங் காலபலன்பொல்லாது
செவ்வாயின்தோஷம் தென்னவனேபோதாது
கவ்வாவியாழன் சுருதுபனிரெண்டில்வந்தான்
மாதமொருநாளில் வருகுதுதானித்தோஷம்
போதாதுனக்குப் புண்ணியரேயிப்போது
தத்துவருகுதுகாண் தந்திரமாய்நீயிருந்து
எத்துடனேதானிருந்து இதமாகத்தானொழித்து
தப்பியிருக்கச் சமர்த்துண்டேயாமாகில்
என்றுசொல்லிவேதியனு மெழுந்துமிகப்போனான்
ஒன்றுமனம்விள்ளாம லுள்ளுடைந்துபுண்ணாகி
என்செய்வோமென்று இதற்குவகையேதெனவே
முன்செய்ததீவினைதான் முடிந்துதோஷம்மளவில்
பெரியோர்கள்சாபம் பின்னேதொடர்ந்ததுகாண்
தெரியாமல்தானினைந்த தீவினையால்வந்தகுற்றம்
போகவினைவு பொருத்தமுடன்பார்க்கவென்று

வாகான மந்திரிமார் மன்னவரைத் தானழைத்து
நமக்குவருங்கருமம் நாட்டமுடன்போகாது
அந்தப்படியே அலைகடற்குள்மாளிகையும்
மந்திரிமார்தான்முடித்து வந்துசொன்னார்மன்னனிடம்
தென்னவர்கள்மந்திரிமார் சேரவரவழைத்து
நாம்போயிருந்து வருமளவும்ராச்சியத்தை
தாம்போலிருந்து சட்டஞ்செலுத்துமென்றார்
மைந்தன்சென்மேசனுக்கு மன்னருக்கும்புத்திசொல்லி
இந்தாபயணமென்று ஏகினார்காணம்மானை
கடலினடுவே கப்பலெல்லாஞ்சூழ்ந்துநிற்க
அடவுடனேகார்கடலி லாகாசப்பந்தலிட்டு
படவுஞ்சுரிப்பும் பலதிசையுங்காவலுமாய்
இடைவிடாக்காவல் எச்சரிக்கையுச்சிதமாய்
வைத்துநடுவே வகையாசவிற்றிருந்தான்
கைத்தவிடையரவு கார்க்கோடனவனும்
மூன்றாட்பழிவாங்க முகூர்த்தம்வந்ததென்றுசொல்லி
இன்றாட்பயண மிவனெங்கேயென்றெழுந்து
உமக்குத்தெரிய உரைக்கிறேன்மன்னவனே
சனிபகவான்போதாது சர்ப்பமுந்தான்தீண்டுமென்ன
இனிமேலுமாய மிருக்கும்வகைகேளும்
கார்க்கடலுக்குள்ளே கம்பமதுதானூன்றி
நீர்மேற்சவுக்கைகட்டி நிறுத்தியேகால்நாட்டி
சுத்திவரக்காவல் சூழநிரைநிரையாய்
வைத்தாளிருந்து வகைவகையாய்தப்பிவித்து
வரலாமரைகொடியில் மாளிகையுண்டாக்குமென்றார்
பரமரகசியமாய்ப் பாரிலுள்ளோர்காணாமல்
அரைநாழிக்குள்ளே ஆளனுப்பிக்கட்டுமென்றார்
நாடுநகர்தேடி நன்னகரிதான்தேடி
காடுகரைதேடிக் காவலனை எங்கென்று
உலாவித்திரிந்து ஊரெங்குந்தான்தேடி
கலாயத்துக்காயரசன் கடலிலிருப்பானென்று
ஊரில்குடியிருக்கும் உள்ளசனங்களெல்லாம்
மாரிற்பலர்கூடிப் பரமரகசியமாய்
பட்டணத்திலுள்ள பலசனங்களெல்லோரும்
திட்டமுடனெல்லோரும் செப்புமொழிகேட்டு
உரைக்கின்றவார்த்தைதனை உலகத்தில்கேட்டிருந்து
திரைகடலைநோக்கிச் சீராவுந்தானினைந்து
வருகுதுகாணுகம் வலுகோமந்தனுடனே
பெருகுகடலருகே பெருநாகம்வந்ததுகாண்
நீடியதூரம் நிலையாச்சமுத்திரத்தில்
ஓடியொளித்திருக்கு மூத்தமனைத்தீண்டுதற்கு
உபாயமென்னசெய்வோம் ஒருவழியுங்காணோமே

உபாயமிட்டகப்பலுக்குக் கார்க்கோடன்கார்கடலில்
தோணிபலவுஞ் சரிப்புடையதன்கோலம்
வாணிபங்கள்செய்யும் வளம்போலெடுப்போமோ
சுப்பாணிரூபஞ் சாதித்தெடுப்போமோ
கம்பாய்மிதந்து கார்கடலில்போவோமோ
பட்சியாய்ச்சென்று பறந்துவிழுவோமோ
கச்சிக்கரியக் காகம்போல்போவோமோ
பாம்பாய்மிதந்து பழுதைபோல்சேர்வோமோ
நாம்போகவேநினைவு நால்வகையுங்காணேமே
வேற்றுருவங்கொள்ள விபரமொன்றுங்காணமல்
மாற்றுருவங்கொண்டு மன்னவனைத்தீண்டுதற்கு
என்னவடிவெடுத்து என்சபதந்தீர்ப்போநாம்
மன்னவனைக்கொல்ல வகையென்றுங்காணேமே
தனதுபோல்நாமும் சற்பனையாய்க்கொல்வதற்கு
மூகந்துமனங்கொண்டு மூகத்தோட்றவனைத்து
மிகுத்தகனியேதெனவே விசாரித்துப்பார்க்களவில்
தின்றார்புளித்திருக்கும் தின்னவென்றார்பல்கூசும்
கண்டாற்களிகூறும் கண்மலரில்தானனையும்
தெய்வீகமானதொரு தேவகனிதானுகும்
திவ்வியமாமென்று தோற்றிநினைவுகொண்டு
எலுமிச்சம்நற்கனிதான் இன்பமெனத்தோன்றுகையால்
வலுமிச்சமென்று வடிவெடுத்தான்கார்க்கோடன்
கனிரூபங்கொண்டு கடலிற்குதித்திறங்கி
தனியேமிதந்து தடையறவேபோகலுற்றான்
கப்பல்விட்டுச்சுத்திக் காத்திருந்தகாவலர்கள்
தெப்பமெனவோர்கனிதான் தெரியுதுகாணென்பாரும்
அந்தர்வருகுதுகாண் அதிசயங்காணென்பாரும்
வந்தாலெனக்கென்று மறகட்டிநிற்பாரும்
எனக்கென்றுசொல்லி இச்சித்துநிற்பாரும்
உனக்கேன்கிடைக்குமென்று உபாயமிட்டுநிற்பாரும்
ஆர்கண்டாலென்ன அமையாதொருவருக்கும்
பார்கொண்டராசன் பரிச்சித்துவேந்தனுக்கு
தக்குமேயல்லாது தர்க்கமிட்டுநின்றாலும்
இக்குமோஉங்களுக்குத் தெய்வகனியென்பாரும்
இப்படியாய்ச்சொல்லி இசைவாய்வெகுசனங்கள்
நிற்பளவில்சமீபமதாய் நிலையாய்ச்சமுத்திரத்தில்
அலையிலடிபட்டு அசைந்தசைந்துதான்குதித்து
குலைசெய்யவாரதொரு குருமாங்கனியதுதான்
ஒதுங்கிவழிவிலகி ஒருவிடமும்போகாமல்
பிதுங்கிநெகிழாமல் பிடித்தார்பழந்தனையும்
எடுத்துக்கனிதனையும் இன்பமுற்றுஎல்லோரும்
அடுத்துக்கனிதன்னை அவனவோருந்தான்பார்த்து

யோசனைகள்பண்ணி ஒருமித்துஎல்லோரும்
இராசனுக்காமென்று நடந்தார்சமுகமதில
மன்னன்பரிசித்து மகாராசன்தன்கொலுவில்
தென்னவர்கள்காரியப்பேர் சென்றுதொழுதேற்றி
ஆண்டவனேயெங்கள் அரசர்பெருமானே
நீண்டவனேநாங்கள் நீணிலத்திற்கண்டதில்லை
கண்டரியக்காட்சிஎங்கள் கையில்வந்துசிக்கியதே
புண்டரிகமார்பா புவிராசேஉன்யோகம்
அதிசயமாய்க்கண்டெடுத்தோம் ஐயாபுதுமையிது
மதிசேருபுண்ணியனே மகாயோகமுந்தனுக்கு
வந்ததுகாணென்று வாழ்த்தியேஎல்லோரும்
சந்துபயில்மன்னன் தார்வேந்தன்தன்னிடத்தில்
கொண்டாடிக்கொண்டு கொடுத்தார்களெல்லோரும்
கண்டான்துரைராசன் கண்பிரியமாய்மகிழ்ந்து
நல்லகனியென்று நகைத்துமுகமலர்ந்து
செல்வமகன்வாங்கிச் செந்தாமரைமுகத்தில்
ஒத்தினான்கண்ணில் ஊடுறுவநாகமது
கொத்தினான்சீறிக் குதித்தான்கடல்தனிலே
பழிநமக்குவந்தென்று படவரவுதானினைந்து
வழிகூடியேநடந்து மறைந்ததுவேவாளரவம்
விதியின்பயனை விலக்கலாமென்றுசொல்லி
மதியுடனேவந்தொளித்த மன்னவனும்பட்டுவிட்டான்

விருத்தம்.

விதியின்பயனைவிலக்கவென்று விரும்பியொருவன்முன்னாளில்
அதியத்தலையைத்தான்சிரைத்து அகன்றுபிழைத்துவருவமென்று
சதியேவருவதறியாமல் தாலநிழலிற்போயிருக்க
விதிதான்மொட்டைத்தலைதனிலே விழுமாம்பனிதானே. (௪௬)

தலையில்விதித்தவிதிதனக்குத் தலைச்சிரைத்தோன்பட்டதுபோல்
அலையிலொளித்தபரிசித்தும் அமர்ந்தானரவுவிஷத்தாலே
குலையேசெய்தபழிபாவங் குலையாய்முடிந்துதெனவேங்கி
மலையாதிருந்தமன்னரெல்லா மலைந்துகுலைந்துஉலைந்தாரே. (௪௭)

ஏங்கினார்முகங்கள்வாடி யென்செய்வோமென்றுசொல்லித்
தூங்கினார்தகவிழந்து துயரமுமெத்தவாகி
வாங்கினார்கடலைவிட்டு வருகிறோமென்றுசொல்லி
ஏங்கினார்ஜெனமன்கேட்க உத்தரமெழுதுமென்றார். (௪௮)

கதை.

பட்டுக்கிடக்கின்ற பரிசித்துவேந்தனையும்
கட்டிலுக்குள்வைத்து கனகபட்டினாற்போர்த்தி
சாந்துபுழுகு சவ்வாதுசந்தனமும்
கமக்மெனவிருக்கின்ற களபமெல்லாந்தான்பூசி
போமெனவேநல்ல பொட்டகத்திற்றானிருத்தி

முன்னே எழுதிவிட்டார் முடிபொருத்தமன்னனுக்கு
பின்னேபயணமென்று பெருங்கடலைவிட்டகன்று
ஓலைதனைக்கொண்டு ஒருநொடியிற் றூதுவனும்
சேலைதலைகுலையச் செனமேசயராசன் வந்தான்
தெண்டனிட்டுத் தூதன் சென்னிகவிழ்ந்துரைப்பான்
தொண்டனுக்குவாய்தான் துணியுமோ என்றுரையே
என்றோலைதன்னை எடுத்துமுன்னே வைக்கலுற்றார்
நின்றோலைவாசித்து நிலையில்விழுந்தழுது
மண்ணதிர விண்ணதிர வயிற்றிலறைந்தழுது
கண்ணீர்களாறோடக் கதறிவலுத்தழுது
வந்ததொருதூதுவனை வகையேதெனக்கேட்க
அந்தவிவரமெல்லா மவன்வகையாச்சொல்லியபின்
கேட்டுச்செனமேசன் கிலேசமிகவுண்டாகி
நாட்டுபுகழ்மன்னனையும் நாழிகையிலிங்கேதான்
கொண்டுவரவேணுமென்று கொற்றவனுந்தானுரைத்தான்
தென்றுசிவிகையின்மேல் தென்னவனைக்கொண்டுசென்று
வந்தார்களத்திபுரம் மன்னவனைக்கொண்டேகி
சாந்தானமான சனங்கள்விழுந்தலறி
கொல்லென்றசத்தம் கூக்குரலைத்தாளமர்த்தி
நில்லென்றமர்த்தி நினையாதெல்லாம்நினைந்து
அழுதுபுலம்பியதால் ஆவதுதானொன்றுமில்லை
பழுதுசெய்துபோனதொரு பாம்புதனைவதைத்து
எந்தன்பிதாவை எழுப்புவேனல்லாது
அந்தவிஷங்கொல்வதற்கு யாகமதுக்குள்ளதெல்லாம்
எழுப்பினாற்பிள்ளை எழுப்பாதாலென்னபிள்ளை
மழுப்பியழுதால் வருமோ உயிர்தானும்
தந்தையரைவைத்து சமர்த்தாகத்தானிருத்து
விந்தையுடன்வேள்வி விதமாய்வளர்க்கலுற்றான்
சாத்திரத்திலுள்ள சகலகலைகளுமே
சூத்திரமாய்ச்சேகரித்துச் சூழத்திரைவளைத்து
வேதியரைத்தானழைத்து வேணதெல்லாங்கொடுத்து
ஓதியவேதமதி லொன்றுங்குறையாமல்
சொல்லுமுயிர்திருப்பச் சூட்டுமென்றார்வேதாந்தம்
கல்லுமுருகிவிழக் கதித்ததொருமந்திரத்தால்
உற்பத்தியாகவொரு ஓமஅனல்வளர்த்தி
சர்ப்பத்தைவெந்துவிழத் தாக்குமென்றாரம்மானை
ஆமென்றுவேதியரும் அந்தணருந்தான்கூடி
ஓமென்றுவேள்விசெய்ய ஓமத்தீய்மூட்டினரே
யாகத்தீமூண்டுதுகாண் அண்டகடாகமட்டும்
சாகத்தான்சர்ப்பந் தவிடுபொடியாக
நீறாகிவெந்து நெருப்புத்தணலாகி
வேறாகிச்சர்ப்பம் வெந்துநீறாவதற்கு

எங்கேயெனத்தேடி எழுந்ததுகாணக்கினியும்
அங்கேயாவும் அக்கினிக்குளாற்றமல்
ஈரேழுலோகமெல்லா மெங்கெங்குந்தான்தேடி
பாரெங்குந்தான்றேடி படஅரவுஆற்றமல்
மேலசைந்துநாகம் வெருவிப்பயந்தெகி
காலசைந்துதாளோடிக் கனலிலகப்பட்டிடைந்து
பார்த்தவிடமெல்லாம் பறந்தெழுந்து அக்கினியும்
ஆத்தமுடியாமல் அயிராபதத்தினிடம்
ஓடிச்சிங்காசனத்தில் ஊடேநுழைந்துகொண்டு
நாடியசீர்பாதம் நமஸ்கரித்துத்தெண்டனிட்டு
அபையமுனக்கபைய மடைக்கலங்காணென்றுசொல்லி
தேவேந்திரன்சபையில் சென்றுவிழுந்தமைபால்
ஐவருடன்பேரன் ஆணபரிசித்துவையும்
முற்பழிசெய்தானெனவே மூபன்றவனைநான்தேடி
பிற்பழிநான்கேட்டுப் பிராணனையேவாங்கிவிட்டேன்
அந்தப்பழிகேட்க அடியேனையேதொடர்ந்து
இந்தச்செனமேசன் என்மீதிலக்கினியை
ஏவிவிட்டான்தாங்க எம்மால்முடியாமல்
தாவியேவந்தடைந்தேன் சரணமெனக்காரும்
என்றரவஞ்சொல்ல இந்திரனுமப்போது
மன்றலருந்திண்புயத்தான் மன்னன்செனமேசனுக்கும்
இந்திரனுஞ்சீட்டெழுதி ஏவினன்தூதுவனை
அந்திரத்தைத்தூதுவனும் அணாநொடியிலோடிவந்து
சீட்டைக்கொடுத்துச் சேதிசொன்னன்தூதுவனும்
நம்மிடத்தில்வந்தவனை நாமேவதைகள்செய்தால்
தம்மிடத்தில்வந்தவரைத் தான்கொல்லுவாருமுண்டோ
முன்னளதவசிருந்த முனிவனமேல்நாகமதை
மன்னளாவுன்தகப்பன மாதவர்மேற்றனணிந்தார்
கோபமடங்காமலரிஷி கூறினார்சாபமதை
பூபனேசாவுக்குப் போயவரலாமென்றுசொன்னார்
அந்தமுனிசாப மருகேகுடியிருந்து
வந்தவிதிவசந்தான் வருமளவுந்தான்பார்த்து
எழுத்துமுடிவிதுகாண இம்மட்டேயல்லாமல்
கொழுத்துமறலிவந்து கூடுகின்றகாலமதில்
சமையமிதுவென்று சர்ப்பமுந்தான்தீண்டினது
அமையுமோவுன்றலே அமையாதெவராலும்
யாகத்தைத்தானமர்த்தி யகற்றுமென்றார்கோபமதை
வாகாகயாகம் வளர்த்தாயேயாமாகில்
ஏகமாய்ப்பற்றி எரியும்புவனமெல்லாம்
நாகத்துமட்டும் நடவாது அக்கினியும்
அண்டமனைத்துமுதல அகண்டமுதலக்கினியும்
விண்டலமுமவெந்து வெளியாய்முடிந்துவிடும்

உனக்குநிலையில்லை உலகத்திலெவ்வுயிர்க்கும்
எனக்குநிலையுமில்லை இந்திரனென்பாருமில்லை
செத்தாற்பிழைப்பதுண்டோ தேசத்திலுள்ளோர்கள்
மற்றுருஞ்சொல்லார் மயக்கதைவிட்டுவிடு
தந்தைதனையடக்கிச் சாத்திரங்கள்தான்முடித்து
விந்தையாய்நீயிருந்து மேதினியையாளுமென்றார்
வாசவன்தன்கைச்சீட்டு வாசகத்தைமீறாமல்
இராசன்செனமேசன் நல்லதென்றுசம்மதித்து
அறியதமர்ந்து அனைவோருந்தான்கூடி
தேறித்தெளிந்து தெய்வமேயென்றுசொல்லி
மந்திரிமாரும் மகுடமுடிவேந்தர்களும்
தந்திரமாய்க்கூடிச் சடங்குதனைமுடித்து
மாதானம்பூதானம் வஸ்திரதானமுதல்
கோதானமீய்ந்தான் கொற்றவன்றன்கையாலே
சடங்குமுடித்தான்காண் சாத்திரத்திலுள்ளபடி
அடங்காக்கிலேசமெல்லா மாறித்தெளிந்தபின்பு
மன்னரமைச்சர் மகுடமுடிவேந்தருடன்
தென்னவர்களெல்லோருஞ் செனமேசராசனுக்கு
பட்டந்தரித்துப் பாராளுமென்றுசொல்லி
திட்டப்படுத்திச் செகவேந்தர்காத்திருந்தார்
இருக்குந்தறுவாயில் ஏலவேசாபமிட்ட
வருக்கமுள்ளமாமுனிவன் மன்னன்பரிசித்துவையும்
நாகமதுதீண்டுகையால் ராசன்மடிந்திடுவான்
சாகுமுன்னேசென்று சர்ப்பத்தின்தன்விஷத்தை
திருப்பிவிஷத்தை தென்னவனைநாமெழுப்பி
விருப்பமுடன்வைப்போ மேதினியையாளுமென்று
தன்சாபந்தீர்க்கத் தவசிவருகையிலே
வம்பானசர்ப்பம் வழியிலெதிர்வருமாம்
எதிராகவந்தொரு ஏற்றதவசிதன்னை
எதிராகநோக்கித் தலமெங்கேயென்றுசொல்லி
நாகமதுகேட்க நற்றவசியேதுசொல்வான்
லோகமுழுதாலும் ரூபமதன்றன்னையொப்பாம்
இருக்கும்பரிசித்துவுக்கு என்னுடையசாபமதால்
பெருகவிஷந்தீண்டிப் பிடிக்கவருகுதென்று
தீர்த்துவிஷந்தன்னைத் திருப்பிவிடவேணுமென்று
ஏத்துத்திசைநோக்கி ஏகிவந்தோங்கண்டுரோ
என்றுமயங்கி நெடுமூச்சுக்கொண்டேகி
படவரவுதீண்டிப் பரிசித்துவேந்தனுந்தான்
சடமொழிந்துபாரில் தீக்கொளுத்திசுட்டுவிட்டார்
சாம்பல்குவிந்துச் சடங்குமுதல்செய்தார்கள்
ஏன்போறீரொன்றரவம் எதிராகச்சொல்லியபின்
மெய்யோவென்சாபம் வினையாய்முடிந்ததுவோ

அய்யோ அரசழிக்க ஆமோபுவிமீதில்
கம்மாலரசனுக்கு நாசம்வந்ததாகையினால்
சும்மாவிடலாமோ தோஷம்நமக்குவரும்
அஸ்தியடக்கி அதுசாம்பலானாலும்
சுத்தமாய்நானும் துரைமகனேயுண்டுபண்ணி
திக்கெல்லாம்போற்றித் தேசத்தையாளுமென்று
வைக்கலாமென்று மனதுகந்துவந்தேன்காண்
இல்லாதேபோனால் ஈடேற்றுமெந்தனுக்கு
பொல்லாதசாபம் பொருந்தவுரைத்துவிட்டேன்

விருத்தம்.

வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்செய்தபாவம்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்றீரவேணும்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்றீராவிட்டால்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாலழியுந்தானே. (இம்)

கதை.

தீராதேபோனால் திருவுளத்துக்கேற்றது
வாராதசிவனேயும் வரவழைத்துச்சாம்பலேயும்
உருவாய்வருத்து உயிரையுடல்பொருந்தி
குருவினிடமந்திரத்தால் கொள்ளலாங்காரியமும்
என்றுமுனிசொல்ல ஏற்றமுள்ளநாகமது
நன்றுநாமொன்றுசொல்வோம் நமக்கிசையநீர்தாமும்
ஆமென்றுகேளும் அதிசயமாயொன்றுசொல்வேன்
மாமரம்பூத்து வடிவுடனேமாங்கனியும்
பூமரமாய்நிற்கிறதைப் புதைந்தெரியத்தீண்டுகிறேன்
பங்கமாய்போகும் பச்சைமரமானதுவும்
உற்பத்தியாக உயிர்மரம்போலாக்கிவைத்தால்
செத்தவனுந்தான்பிழைப்பார் செகத்திலுள்ளோர்கொண்டாட
வித்தகனேமாமுனியே மெய்யென்றுநானறிய
சர்ப்பமிவைசொல்ல சன்னாசியாமெனமே
கற்பகமாமரத்தைக் கடியுமெனவுரைத்தார்
உரைத்தவுரைகேட்டு ஒருமித்துநாகமது
இரைங்கரவஞ்சீறி எழுந்துமிகக்கோபமதாய்
வாய்பிளந்துநாகம் மாமரத்தைக்கவ்வியதே
காய்கனிகள்தோறுங் கப்புக்கிளைதானும்
வெந்துநீறானதொரு விருட்சமெனுமாமரத்தைக்
சந்துபயில்மாமுனிதான் தழைமரம்போலாக்கிவைத்தார்
அப்போதுமாமுனியை அரவமதுகொண்டாடி
இப்போதுஉன்பழிக்கு ஈடாகப்பண்ணிவைத்தேன்
அஷ்டமாநாகமதில் நானொருத்தன்தானாகும்
இஷ்டமுடனீரும் எழுப்புவீர்மாமுனியை
எங்களதிகார மெல்லாந்தான்போய்விடுங்காண்
திங்களொளிபோல் சிரசிலிருந்தெடுத்து

பெரியவராமென்றுசொல்லிப் போரவந்தான்கொடுத்து
அரியமணிவாங்கி அருந்தவசியேகிவிட்டார்
ங்ாகமகிழ்ந்து நடந்ததுகாணம்மானை
சென்றரவம்போனபின்பு செனமேசராசனுந்தான்
அன்றலருந்தாமரைபோல் ஆதித்தன்தன்வடிவாய்
இருந்துசிலகாலம் இந்திரனைப்போலாகி
திருந்துபுகழ்கொண்ட செயவிசயன்தன்பேரன்
தேசமொருகுடைக்கீழ் செங்கோல்மனுநீதி
வாசமிகுபூவுலகில் மன்னவர்கள்போற்றிசெய்ய
தாகமுடன்மன்னவனுஞ் சகலபரிவாரமுடன்
ஏகசிங்காதனத்தில் இருந்தார்காணம்மானை

விருத்தம்.

பஞ்சவர்பேரனென்னும் பரிச்சித்தைவிஷங்கள்தீண்டி
அஞ்சினதாகையாலே சுத்தசெனமேசன்றன்னை
மிஞ்சுசிங்காதனத்தில் வைத்துவேந்தமைச்சர்தானும்
அஞ்சலென்றடிகள்போற்றி யவனியிலிருந்தாரன்னே. (ருய)

இப்படியநேககால மிருந்தனர்செங்கோல்செய்து
சொற்படிதவறுவண்மை சோர்வறநடத்திசெய்து
முற்படிஞாயம்போல முன்னவனிவனுமென்னை
அப்படியிருந்துபாரி லவனியையாளுநாளில். (ருக)

ஆகமவேதஞான மருந்தமிழ்க்கவிதைநூல்கள்
பாகமாயிருந்துகேட்டுப் பத்தியாய்ப்பெரியோர்தன்பால்
போகமேபோக்கித்தன்மை புகழுதுமதுரமோங்க
ஏகசிங்காசனத்தி லிருந்துடன்வாழுநாளில். (ருஉ)

கதை.

பார்த்தனுடன்வாழுபிமன் பாலன்பரிசித்துவுடன்
ஏற்றதொருபாலன் இராசன்செனமேசனவன்
தோற்றமுள்ளநீதி துலங்குமாம்ராச்சியத்தில்
சுத்துங்கடல்சூழக் காசினியெல்லாம்விளங்க
முத்துநவமணிபோல் மூனைத்தெழுந்தாத்தினம்போல்
வந்தமகாராசன் மன்னன்செனமேசனவன்
விந்தைமலர்போல் விதம்விதமாஞ்சிங்காரம்
தங்கியிருக்குந் தவளமணிமார்பன்
பொங்கியபூரணமாம் பூலோகநாயகமாம்
நிறைமுறைமையாறிலொன்று எள்ளளவுமீறுமல்
புரையுடையதருமனெனப் பூலோகமாளுகையில்
அத்திபுரமுற்றும் அரசாளுநாளையிலே
சத்தியவாக்கியன் தவறுதவேதமுனி
நாற்றிசையுங்கொண்டாடும் நன்னகரிதன்னில்வந்தார்
வாழ்த்தியடிபணிந்து மகுடமுடிவேந்தரெல்லாம்
தோத்திரமுஞ்செய்து தொழுதுவணங்கியபின்

திருந்துகருவாயில் இளவரசுதான்விளங்கி
உருக்கமுடன்கண்டு ஒழுக்கமாய்தெண்டனிட்டு
போற்றிச்செனமேசன் பூரித்தகமகிழ்ந்து
ஏற்றிச்சிங்காசனத்தில் இருத்தியேகைதொழுது
கனிவகைகள்சர்க்கரைதேன் கற்கண்டுசீனிமுதல்
தாழைக்கனியுஞ் சகலகனியுள்ளதெல்லாம்
வாழைப்பழமும் வருக்கைப்பலாக்கனியும்
கொண்டுவந்துவைத்து குருவேசரணமென்று
தொண்டுபண்ணிநின்று தொழுதுமிகவணங்கி
நல்லதொருவேதமுனி ராசனையுங்கொண்டாடி
வல்லதொருமாங்கனிதேன் வாரியமுதுசெய்து
தாகமதுதீர்ந்து தபோதனரும்வீற்றிருந்தார்
நாகரீகமானதொரு ராசன்செனமேசனுந்தான்
தாகமுடன்வேதமுனி தன்னிடத்தில்வந்துநின்று

விருத்தம்.

பாரதமுடியுமுன்னாட் பயின்றதோர்வேதமெல்லாம்
விரியனாகியாகி விநாயகன்கோடுகொண்டு
சீரதுசிறந்தகீர்த்திச் செகத்தினிலுதித்தவேங்கன்
போரதுமுடியவென்று புகன்றதுதேவர்தாமே. (௫௩)

குருகுலத்தோர்களெல்லாங் குருவெனவந்துதோன்றி
கருவுருவகுத்துக்காட்டிக் காசினியாளுமென்று
அருகுதானிருத்திபந்த வறிவுடன்தெளிவுசொல்லி
பெருகுசீர்புவனந்தன்னிற் பெரும்பகைமுடித்தாய்போற்றி. (௫௪)

பஞ்சவர்நூற்றுவர்க்கும் பகையதுவருவதுண்டோ
அஞ்சலென்றமர்த்திநீர்தா னறிவினால்விவரஞ்சொன்னால்
மிஞ்சரும்பகைசெய்வாரோ வேதமாமுனியேயுந்தன்
வஞ்சமேவஞ்சமல்லால் மற்றொன்றுமுடியுமோதான். (௫௫)

கதை.

எத்திசைகள்கொண்டாட எங்கள்குலத்தரசே
சத்தியவண்மை தவறாதமாமுனியே
சீராளைவருடன் சிறந்ததுரியோதனனும்
பாராளும்நாளில் பகையொன்றும்வாராமல்
தாராளமாகத் தன்மையொன்றுசேகரமாய்
மேயாளர்பூதலத்தில் பேதமொன்றும்வாராமல்
மார்க்கப்படுத்திவைக்க வாராதோதேவருக்கு
தீர்க்கமுன்னுள்ளான திருக்கரத்திலுள்ளபடி
இன்னபடியென்று ஈசர்முன்னேதானுரைத்தீர்
எழுதும்விநாயகனே என்றிறைவன்தான்கூற
தொழுதும்விநாயகனார் சொன்னதொன்றுந்தப்பாமல்
ஒருகொம்பொடித்து ஊணிவைத்தார்மேருவதில்
நிகரில்லாவேதம் நிலைகண்டுகொண்டானே

பகருமொழிகேளாதார் பாருலகிலுண்டாமோ
குருகுலத்துக்கெல்லாம் குலக்கொழுந்தாய்நீரிருந்து
அருகிருந்துபுத்திசொல்லி அரசனுமாய்நீரிருந்து
வின்னம்வாராதபடி வேதியரேசொன்னீரானால்
மன்னவருமாளாமல் வையகத்தில்தானிருப்பார்
எந்தவிதமோகிருபை ஏதொன்றறியேனே
உந்தன்வினைக மொருவருக்குந்தோற்றமல்
வஞ்சனைகள்செய்தீரோ மாமுனியேஇப்படிதான்
உன்செயலேயல்லாது உலகத்தில்வேறுமுண்டோ
தோமுர்துரோணர்மிசச் சொல்லுங்கிருபாசாரி
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவர்த்தனரும்
சுற்றமொடுராசர் துணைமக்களுள்ளோரும்
எண்ணவொண்ணுச்சேனை ஏழக்குரோணியத்தனையும்
மண்ணசையற்று மாண்டிறந்துபோனதெல்லாம்
உன்னுளிலேயல்லோ ஒருவர்மேல்குற்றமில்லை
அன்னுளிலேயவர்க்கு ஆமென்றகாரியந்தான்
தெரியவகைசொல்லிச் செப்பிநீராமாகில்
பிரியாதிருந்து பேதமற்றுவாழாரோ
இறந்தாரோ நூற்றுவர்கள் இருந்தாரோபஞ்சவர்கள்
சிறந்திருந்தபஞ்சவர்தான் சடத்தோடேஇப்போது
விந்தைகிரிவைகுந்தம் விரும்பியவர்சேர்ந்தாரோ
அந்தவகைஎனக்கு அறியவேசொல்லுமையா
சொல்லுமென்றுசேட்ட துணைமகனேசெனமேசா
சொல்லுகிறேன்கேளும் தோற்றமுடனுள்ளதெல்லாம்
மூன்னுலகிலுள்ள முன்னுள்விதிப்படியே
மீண்டொருவராலே விலக்கவல்லாருண்டோதான்
ஆனையினுலே அவர்கள்செய்ததீவினையால்
மாய்கையாய்வந்து வளர்ந்ததுகாண்செய்தவினை
என்றுமுனிதானு மெடுத்துரைக்கச்செய்தியெல்லாம்
நின்றுசெனமேசன் நினைவாகத்தான்கேட்டு
நினையாதெல்லாநினைந்து நெடுமூச்சுவிட்டேங்கி
இனையைப்பனையாக்கித் திரணமதைமேராக்கி
கைக்குக்கையில்லாமல் கால்வேறுதலைவேறாய்
மெய்க்குமெய்யில்லாமல் விசனங்கள்தான்மூட்டி
ஆட்டிவித்துப்பாவைதனை ஆட்டிவிட்டுப்பார்த்திருந்து
மூட்டிவினைசெய்த முனியேஇனிகேளும்
தருமமொன்றுமேயொழித்துத் தாரணியிலில்லாமல்
கருமமமேசெய்தவனாக் காசினியில்தருமமொன்றுல்
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்மாமுனியே
தன்மையுமற்றுச் சனமுமினமுமற்று
இன்மைதனிற்றுன்வாழ எல்லோருமாண்டிறந்து
வன்மம்பிடித்து வதைசெய்தமாபாவி

இருந்தரசையாளாம லின்னதென்றுபாராமல்
வருந்தாமல்வைகுந்தம் வானேறிப்போனதென்ன
சொல்லுமையாஎந்தனுக்குத் தோற்றமெல்லாம்நீயோதி
வெல்லும்விதியாகி விதிப்பயனுந்தானாகி
ஏற்றுமொருவிவரம் இறையோனேநான்காணேன்
தோற்றுதுகாணெந்தனுக்குத் தோஷமெல்லாம்நீயெனவே
புரையுடையதருமமொன்றும் பொய்சொல்லாமெய்யரென்றும்
நிரையுடையரானால் நீருரைத்தபுத்திதனை
கேளாரோசற்றுங் கிரிகையொன்றும்பாராரோ
வாழாரோபாரில் மைந்தரொடுசெல்வமதாய்
துன்மைசெய்தோர்மாண்டு தேசமதையிழந்தால்
நன்மைசெய்தோர்பாராண்டு நாளுமிருக்காமல்
ஏன்காணும்பாரிழந்து ஏகினார்வைகுந்தமதில்
நான்தான்புவியாள ஞாயமோஎந்தனுக்கு
பாரதப்போருண்டுபண்ணிப் பகைமுடித்துமுன்னாளில்
மேருதனில்தானெழுதி வைத்தவரும்நீர்தானே
நினைத்தபடிமுடிக்க நீர்நினைந்ததல்லாது
மனந்தனையேபுண்ணாக்கி வருத்துரைக்காமேது
புத்திதனைச்சொல்லிப் பொருந்தவுரையாமல்
சத்துருவாய்மாமுனியே சற்பனைகள்செய்தீரோ
தாராரும்வேந்தர் சமர்முடிந்ததெல்லாமுன்
பாராய்முனியேகேள் பாவமெல்லாமெந்தனுக்கு
சாராமற்சார்ந்ததுகாண் தப்பாமற்சொன்னனென்பார்
தீராதபாவமிது செய்தீரோமாமுனியே
என்றுசெனமேசன் இவ்வார்த்தைதானுரைக்க
நன்றுகாணென்று நகைத்துமுனியேதுசொல்வான்
தம்பியரேயிப்படிநீர் சமர்த்தாகப்பேசியதால்
எம்பியினிக்கேளு மிதமாகச்சொல்லுகிறேன்
வெம்பியெனையுரைத்தீர் விட்டகுறைபாராமல்
நம்பியுயிர்க்காலனையும் நமன்றனையும்பாராமல்
தலையிலெழுதிவைத்த சதுர்முகனைப்பாராமல்
குலைசெய்யும்ருத்திரனைக் கூர்ந்துநீர்சொல்லாமல்
மாய்கைபலசெய்யு மாயனையுஞ்சொல்லாமல்
தாயகமாம்நம்மைச் சலித்துமிகச்சொன்னீரோ
உள்ளவிதியெனவே ஒருமித்துச்சொல்லாமல்
சாளிபெலிகொண்ட கதையையுற்றுப்பாராமல்
பத்தியாய்நம்தலைமேல் பருஞ்சுமையைத்தானேற்றி
முத்துஞ்சுமைதலையாய் மொழிந்தீர்வகைகேளும்
சுத்திவினைவந்து சூழ்ந்ததையுஞ்சொல்லுகிறேம்
கொற்றவனேகேளுமென்று கூறினார்மாமுனியும்
மன்னுகேள்நாற்றுவர்க்கும் வாய்த்ததர்மராசருக்கும்
முன்னுவிற்புத்தி மொழிந்திலையோவென்றுரைத்தாய்

தூய்க்தவற்குப்புத்தி சொன்னேனேசொல்லிலேயோ
ஏற்குர்முழுதும் ஈடேறப்பஞ்சவரை
காட்டிலிருந்து கடனுக்குவேளைவரில்
தாட்டிகமால்வில்லி தற்காத்திரிவன்றனையும்
மீட்டெனைக்கொண்டு வெளியேற்றிவிட்டாலும்
நாட்டில்வராதேயென்று நடுங்கமொழிந்திடுவார்
தீதுசெய்தான்பாவி திரியோதனனும்
ஏதுமறியாமல் இருப்பார்கள்பஞ்சவர்கள்
பொறுத்தாரரசாண்டார் பொங்கினார்காடுறைந்தார்
ஒறுத்தார்கள்பஞ்சவர்கள் உறைந்தார்கள்நூற்றுவர்கள்
அகந்தையழிந்ததுகாண் ஐவர்மேற்குற்றமில்லை
இகந்தனிலேசூதுபண்ணி செகந்தனிலேமாண்டார்கள்
இப்படியாய்வந்ததற்கு என்னைவிபஞ்சொன்னாயே
சொற்படியேகேட்டிருந்தும் துற்புத்திவிட்டாரோ
தம்பிசெனமேசா தார்வேந்தேநீதானும்
வெம்பிமனமிடைந்து வெடுவென்றுசொன்னீரோ
கேட்டீரோஞாயம் கேடுகெட்டார்தன்விசனம்
போட்டாரோபுத்தி புலையாட்டேன்பேசுகிறீர்
இவ்வசனமாமுனிதான் எடுத்துரைக்கஞாயமதை
அவ்வசனங்கேட்டு அரசன்செனமேசனுந்தான்
வாரீர்முனியேயுன் மந்திரமுந்தந்திரமும்
பாரீர்புவிதனிலே பஞ்சவற்கும்நூற்றுவற்கும்
வின்னமதுவாராமல் விற்பனமாயுட்புகுந்து
தன்மைகள்பாராட்டித் தாக்கியேசொன்னீரோ
இத்தனைக்கும்வின்னங்கள் ஏதொன்றும்வாரதில்லை
கர்த்தனேதோற்றமல் கண்காட்சிபார்த்துவிட்டீர்
சுத்தமுந்தன்கோத்திரத்தைத் துன்பம்வந்துசூழாமல்
சித்தமதிற்சாத்திரங்கள் திரணமதுமில்லாமல்
இருந்ததபசியுனக் கின்பதுன்பம்ரண்டுமில்லை
அருந்தவசியாயிருந்து ஆர்த்தையமில்லாமல்
அவர்களுக்குக்காலபலன் அடவுமனுச்சொல்லாமல்
இவர்களுக்குக்காலபலன் விதமுடனீர்சொல்லாமல்
வருந்தினலேதும் வாராக்கருமமுண்டோ
வேந்தனிவைசொல்ல வேதமுனிசொல்லுகிறார்
யாகம்வளர்க்கவென்ற அரசனேநீநினைந்தாய்
பாகமதுயாகம் பலிக்காதுகாணுமக்கு
ஏற்பபிரமத்தி இதமாய்ப்பிடிக்குதுகாண்
மாற்றவுனக்கு வகையுண்டோயாமறில
என்னைச்சலித்தும் எவ்வளவுங்குற்றமில்லை
பின்னையுனக்குத் தெரியும்பிரமைபிறல்
உள்ளபடிசொன்னேம் உற்பனமாயுந்தனுக்கு
வள்ளலறிய வழுத்தினேமிவ்வசனம

போரேரும்புவிமீதில் பொன்னுலகந்தான் சேர
வாரேறுமினிமேலு மன்னவன்றன்னிடத்தில்
என்றுசொல்லிமாமுனியும் ஏகினார்காணம்மானை
அன்றுசெனமேசனுந்தான் அவனைநமஸ்கரித்து
அனுப்பிச்சிலகாலம் ஆண்டிருந்தான் பூலோகம்
தனுப்பிடித்தகையான் தாரார்செனமேசனுந்தான்
யாகம்வளர்க்கவென்று அவனியெல்லாந்தானறிய
சேகரமாயுள்ளதெல்லாஞ் செல்லுந்தளவாடமுதல்
வரவேணுமென்றார் மந்திரிமார்தன்னுடனே
அரைராசன்மன்னவனுஞ் சொல்லலுற்றாரம்மானை
இறையுடையமந்திரிமார் தேசத்திலுள்ளோரை
பரவசமதாகப் பார்வேந்தர்சொற்படிக்கு
அந்தப்படியாக அவனிதனிலேயிருந்து
வந்ததளவாட மற்றுமுள்ளநால்வகையும்
சீராகச்சேகரித்துத் தெய்வப்பிராமணரை
நேராகஆயிரம்பேர் நேர்பாகநன்னோராய்
வாகாகத்தானழைத்து வளர்ப்பதற்குயாகமதை
யாகமுடன்செய்ய ஆவினிடநெய்யாக
நூறுகுடம்நெய்யும் நொடிக்குள்ளேதானழைத்து
வீறுடனேயாகம் வேதியரேசெய்யுமென்றார்
சாலையதுமுடித்துச் சதிரமாய்ப்பந்தலிட்டு
ஆலயமாய்க்குகானை அந்தணருந்தானிருக்க
விலாசமாயுண்டுபண்ணி வைத்தாரொருகோடியில்
பலாவரசுமரம்பிளந்து பலவகைவகைசோடினையாய்
அரசுபலாமாவிலுப்பை ஆல்விறகுதெப்பையுடன்
புரசுமுதலுள்ளதெல்லாம் புங்குசங்குவேணதெல்லாம்
சேகரித்துவைத்துச் செனமேசன்றன்பூமி
யாகத்தடியில்வந்து அந்தணரைத்தெண்டனிட்டு
வேதியர்க்கெல்லாமிசைய வேணுமென்றஅஸ்திரமும்
நீதியுடன்தானெடுத்து நிர்வாகம்பண்ணுமென்று
அக்கினியையுண்டுபண்ணி ஆகுதிதான்கொடுத்து
மெய்க்கினியமந்திரங்கள் வேதியர்கள்தானுதிக்க
சூழவேதானிருந்து சொல்வார்கள்மந்திரங்கள்
வாழுமிமன்பேரையும் வாருமென்றுதானழைத்து
பலகைதனைப்பரப்பிப் பரிச்சித்துமைந்தனுக்கு
இலகுமணிரத்நாசன மேலிருக்கவேண்டுமென்றான்
பூசைசெய்யும்பண்ணுமென்று புகழ்ந்தார்கள்வேதியர்கள்
நேசமுடனிருந்து நேமமாயுள்ளதெல்லாம்
வாசனையாய்ச்செய்புமென்று வகுத்துரைத்தாரம்மானை
ஆசனத்தின்மேலிருந்து அட்சதையுந்தான்வாங்கி
யாகத்தைநோக்கி யன்பாகத்தானிருந்தான்
வாகாகத்தெர்ப்பையது வாங்கியேதானிருந்தான்

அழகுமணியாகம் அக்கினியுந்தான்வளர்த்தி
புகழிதமாய்த்தான்வளரும் பூவாணயெக்கியமும்
எக்கியத்துக்கேற்ற இகமானநெய்க்குடமும்
முக்கியமாய்ச்செய்து முடிந்துவளர்யாகமதில்

விருத்தம்.

முன்னாள்முனிவன்சொற்படிக்கு முடிக்கயாகமதுதனிலே
இன்னாள்மயக்கம்வருவதுவு மெய்மறையோன்போயிருந்து
சொன்னவேதம்யாகமதில தூக்கமிகவே நயன்றசந்து
தன்னாய்மயங்கிவிழாமல் சன்னையெய்வான்தார்வேந்தன். (௫௬)

ஐயோமறையோனக்கினியி லசந்துவிழுவானெனவெண்ணிக்
கையால்தெர்ப்பைதனைக்கொண்டு கழுத்திற்பிடறியதிற்றொடவே
மெய்யாய்ப்புலிதான்பாய்ந்துதென்று வெருவிப்பயந்துவேதியனும்
நெய்யிலெரியுஞ்சுடர்தனிலே நேராய்விழுந்துமடிந்தானே (௫௭)

கதை.

அருகிருந்துசாத்திரங்க ளனுட்டிக்கும்வேதியரில்
மருகிருந்துவேதம் வகுத்துரைக்கும்நேரமதில்
அசதிவந்துபார்ப்பான் அசந்துகண்ணைத்தான்மூடி
வசமாகவேதம் வழுத்தாமல்மெய்ம்மறந்து
நித்திரைதான்கொண்டு நிலத்தில்விழுவார்போல்
மித்திரமாய்ப்பார்ப்பான் மெய்மறந்துகொண்டலைந்து
உறங்கித்தலைகவிழ்ந்து உடலுமசந்தாற்போல்
சிரங்களுமற்றசந்து தேகம்விழுவதுபோல்
அந்தவுறக்கத்தில் ஆனதொருசொற்பனமும்
வந்தவழிதன்னில் வலியகடுவாய்ப்புலியும்
எதிர்க்கவழிமறுத்து இவனைவதைசெய்வதுபோல்
அதுக்கிவிமிதது அதட்டிப்பயமுறுத்தி
பிடிக்கிறதுபோலே பிராமணனுந்தான்பயந்து
நடுங்கியுடல்பதறி நஞ்சுண்டமீனதுபோல்
இருக்குந்திறமதனை இளவரசுதான்தரித்து
வருக்கமுள்ளயாகம் வளர்க்கவென்றுவந்திருந்தோம்
அதுக்குவிகாதம் அந்தணனலிப்போது
எதுக்காயிருந்தா இசைகேடுதான்முறிய
பார்த்திருக்கப்போகாது பாவம்வருமென்றுசொல்லி
ஏர்த்திருக்குந்தெர்ப்பையினால் இவனைசன்னைபண்ணவென்று
நீட்டினான்தெர்ப்பையினால் நினைவுவருமென்றுசொல்லி
காட்டிற்புலிபாய்ந்துதென்று கலங்கியுடல்பதறி
மாட்டினான்தீயில் மடிந்தானபிராமணனும்
அட்டிலகுதித்து அந்தணனுந்தீயில்விழ
கண்டுசெனமேசன் கலங்கிமுகம்வாடி
பண்டுவியாசர் பரிவாய்மொழிந்தபடி
வந்ததுகாண்பாவம் மதியைவிதிவிலக்க

தந்ததுகாண்யாகபலன் சனியன்பிடிக்கவென்று
வெந்துமனமிடைந்து பிரமையதுதான்பிடித்து
இந்துவுலவாத இருளதுபோற்றான்மூடி
மாய்கைபிடித்திருக்க மனுநீதியைமறந்து
பேயும்பிடித்ததுபோல் பிரமைகொண்டானம்மானை
மன்னன்செனமேசன் மாய்கைபிடித்திருக்க
தென்னவர்களெல்லாந் தீவினையோவென்றுசொல்லி
ஆறாத்துயரம் அருந்துயரம்வந்ததையோ
நீறாகிவெந்து நெஞ்சமெல்லாம்புண்ணாகி
என்னசெய்வோமென்று ஏங்கிப்பரதவித்து
முன்செய்ததீவினையோ முனிபிட்டசொற்படியோ
எந்தவிதமோதான் இடையூறுதான்முடிந்து
வந்தவிதமறியோம் மகாதேவர்கற்பனையோ
செய்யுமருந்துகள்தான் தேசத்திலுள்ளதெல்லாம்
வையுமென்னபண்டிதர்கள் வைத்தமருந்த'லும்
சற்றுங்குணமில்லாமல் தலைசுற்றியாநிசையில்
பித்தங்கலங்கிப் பினத்துகிறானென்றுசொல்லி
சலிக்கறாணாத்துக் கண்ணிலிட்டுமொன்றுமில்லை
பலிக்கும்நசியமிட்டுப் பார்த்தாலுமொன்றுமில்லை
தலையிற்கோடாரியிட்டுத் தயிலந்தனைத்தேய்த்து
கலையவில்லைபித்தங் காலபலனென்பாரும்
மருள்பிடித்துதென்று மந்திரங்கள்செயவாரும்
இருள்பிடித்துதென்று யந்திரங்கள்கட்டிடுவார்
செய்யாவினோதமெல்லாஞ் செய்தலுத்துமொன்றுமில்லை
ஐயோசிவனேயென்று அபயமுனக்கென்பாரும்
வெய்யோனுக்குள்ள விளங்கிடொங்கலாய் முடித்து
அதிதிபரதேசியற்கும் அன்னமிகக்கொடுத்து
நிதிதியுடன்தானதவம் நேமமுடன்கோயில்குளம்
சத்திரமடங்கள்கட்டிச் சாலையிலந்தணர்க்கு
சித்திரமாய்ப்பூசையலன் செய்வாரனுதினமும்
நால்வேதசாத்திரமும் நாளும்விளங்கிவர
பால்தயிர்கள்நெய்யும் பருப்புமரிசிமுதல்
வாகாய்மறையோற்கு மாறாமல்நித்தியமும்
பாகாயனுதினமும் படியளந்துவேதியற்கு
தானதவஞ்செய்து தவிப்பார்பரதவிப்பார்
ஞானசிவபூசை நயத்துவார்தாட்சியர்கள்
தேசத்திலுள்ள செனமுஞ்செனமேசனுக்கு
வேசத்திருந்து மெய்சோர்ந்துகைசோர்ந்து
பாருலகந்தாங்கும் பரிசித்துமைந்தனுக்கு
காருலவுமேனியமோ கண்ணோயிப்போது
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
ஏதுசெய்வோமென்று இருக்குந்தறுவாயில்

பாராசமாமுனிவன் பயனறிந்தவேதியரும்
சாராசவேத சகலகலைவல்லவனாய்
வேதவியாசமுனி மேதினியிலேநடந்து
வந்தரிஷிபாத மன்னரெல்லாந்தான்வணங்கி
இந்தவிகாரம் இவர்க்குவந்தகர்மவினை
தீர்த்தருளவேணுமையா செனமேசராசனுக்கு
காத்தருளவேணுமையா கடவுளரோதஞ்சமென்று
சிறியோனறியாத செய்தகுறையைப்பொறுத்து
வெறிபோகப்பாருமையா வேதவியாசரே
என்றுமன்னர்கூற இறையோன்மனமகிழ்ந்து
ஒன்றுமறியாமல் உரைத்தீரோமன்னவரே
காமேதுசெய்வோம் நாமோவிதிதனக்கு
சோபமதுசெய்தாலும் போமோபிரமையது
அல்லவேசொல்லுகிறேன் அந்தப்படியின்றன்
சொல்லவேகேட்டால் துயர்பிரமைதீர்ந்துவிடும்
முன்னாளிற்பஞ்சவர்கள் மூண்டுஞ்சமர்பொருதி
மின்னானபாரதப்போர் வென்றுமுடிந்தகதை
சொலவென்றிவன்கேட்டால் சுருதியறுவேதாந்தம்
மல்லென்றபோர்வீமன் வாகாய்ச்சமர்தனிலே
மத்தகெசந்தன்னை வாரிப்பிடித்தெறிந்து
சத்தமுகில்கடந்து தாண்டிவருவான்வெளியில்
போய்ச்சூழ்ந்துதென்று பூரித்தான்பாரதத்தில்
வாய்புச்சுழியில் வளைவட்டமத்தகெசம்
வாராமலங்கே மரித்துதென்றானந்திரத்தில்
சீராய்ச்செனமேசன் மெலிவுற்றுத்தான்கேட்டு
பொய்யென்றுசொன்னான் புத்திசற்றுமில்லாமல்
மெய்யெங்குக்காவி வெண்பொரியாய்க்கண்டார்கள்
இதற்குவகையேது என்னவென்றுகேட்டளவில்
அதற்குவகைதானும் அறிந்தோதெடுத்துரைக்க
புத்தியென்றுகேட்கப் பொருந்திமதியுடனே
பத்தியாய்ப்பாரதத்தைப் படிபடியாயின்னொருக்கால்
கேட்டிரோயானால் கிலேசமெல்லாந்தீர்ந்துவிடும்
நாட்டிரோமனையதில் நடுவேவிதானமதாய்
என்றுரைக்கவேபெரியோர் இன்பமாய்வந்திருந்து
அன்றுசெனமேசன் ஆமென்றுபாரதத்தை
முடியுமட்டுந்தான்கேட்டு முற்றிலுமேயாராய்ந்து
வேளையுந்தீரிலையோ வேந்தனிவன்றனக்கு
கொள்ளைபிரமை குறையறவேபோவதற்கு
ஐவரரசாண்டு அவனிவிட்டுத்தானேகி
வைகுந்தஞ்சேர்க்ககதை வாகாகத்தான்கேட்டால்
தீரும்பிரமையது தென்னவரோவென்றுரைத்தார்
பாரும்புதுமையிது பலிக்குஞ்சபெய்ப்பறவே

கரும்பட்டுத்தான்போர்த்தி கருத்துடனேதான்கேட்டால்
அரும்பட்டுவெண்மட்டாய் ஆகுமதுசவ்வாது
அப்போபிரமையது அகன்றுவிடுங்கண்டீரோ
இப்போதுகேளும் இன்பமுற்றுத்தானிருந்து
என்றுமுனிசொல்லி ஏகினர்காணம்மானை
நன்றுசாமென்று நமஸ்கரித்தாரெல்லோரும்
ஆமென்றுசம்மதித்து அறிவோம்எனவேதான்
ஓமென்றுசொல்லி உத்தசனமேசனுமே
வைகுந்த அம்மானை வாகுடனேதான்கேட்க
செய்கின்றசாத்திரங்கள் சிறப்பாகத்தான்முடித்து
அம்மானைபாடிவைத்து அந்தகதைதனையும்
செம்மானைத்தான்தரித்த சிவனருளேயுண்டெனவே
கதைதுவக்கங்கேட்கக் கருத்திலுற்றுமன்னவனும்
பதையாமல்கேட்கப் பலநினைவுமில்லாமல
நெஞ்சுமசையாமல் நினைவுதடுமாறுமல
அஞ்சுபஞ்சபூதம் அடக்கிப்பொறிபுலனை
வேரறுத்துக்காமம் வெகுளிதனைவிட்டேகி
காரூடமான கசடுதனைவிட்டொழிந்து
ஏகமனதாய் இருதயத்தைச்சொப்பனிட்டு
ஆகமுடனகேட்க ஆசனகொலுவிருந்தான்

விருத்தம்.

வேதவியாசர்முன்னுளில் விளம்பும்வசனமுள்ளபடி
தேசமுழுதுஞ்சிறப்புளதுந் தெரிந்துபார்க்கச்சமரசமாய்
பூதமளேந்தஉயிர்போலே புவனமிருந்துவகைமோசம்
நீதமிருந்துநெறியிருந்தும் நிலையாவண்ணமெளிதாச்சே. (கூஅ)

விதித்தவிதியைப்பாராமல் வேதவியாசர்தனைநோக்கி
எதுத்துச்செய்திகேட்டமல னிப்போதமக்குப்பலித்ததென்று
மதித்துநினைவிற்சனமேசன் மனதுகலங்கித்தெளிந்தறிவால்
துதித்துப்புகழ்ந்துமுனிதனையுஞ் சொன்னுன்மகிழ்ந்துசொன்னுனே()

சொல்லியகதையைக்கேட்கச் சுருக்காமாய்மனதைத்தேற்றிப்
பல்லியமாகக்கேட்டுப் பலதுயர்பிரமைபோக
அல்லிருள்நீங்கவென்று ஆனசனமேசனுங்கான்
மெல்லியபட்டுப்போர்த்தி வீற்றிருந்தரசன்கேட்டான். (சுய)

கருநிறம்பட்டுப்போர்த்தி கதைதனையுற்றுக்கேட்டால்
மருநிறம்வாங்கிவெள்ளை மதித்தவெண்பட்டதானுல்
வருமொருபிரமைநீங்கிமனத்துயர்தீருமென்று
குருமுனியுரைத்தநேசங் குணமெனகொண்டான்வேந்தன். (சுக)

கதை.

வாகுடையபஞ்சவர்கள் வைகுந்தஞ்சேர்ந்தகதை
பாகுடையசொல்லான பரிசிதனுமன்னன்மகன்
சீராய்ச்சனமேசன் சிந்தைமகிழ்ந்தன்பாய்

சோரகக்கேட்க நீலவண்ணர்காப்பாமே
ஓதுபுகழிக்கதையை உரைக்கவேதான்கேளீர்
மாதுசரஸ்பதியாள் வழுத்துகின்றசொற்படியால்
மேருவில்விநாயகனார் விரைந்தெழுதும்வேதாந்தம்
பாரிலுள்ளோர்கேட்க படிக்கிறேனம்மானை
ஐவர்சகாயன் அரிகேசவன்முகுந்தன்
சைவர்சகாயன் தாமோதரனிருக்கும்
அரியவைகுந்தம் அடைவோமெனவேதான்
உரியதொருஐவர் ஒருமித்துஒமெனவே
கடக்கிறார்தேசம்விட்டு நன்னகரிதானும்விட்டே
வடக்குமுகமாக வடமேற்கொருபுறமாய்
தன்மருடன்தம்பியரும் தாரார்துரோபதியும்
கன்மத்தைவிட்டகன்று கங்கைக்கரையில்வந்தார்
மங்கைதுரோபதியும் வாகானஐவருமாய்
சங்கையாய்த்தான்தொழுது சரஸ்வதியைத்தான்வணங்கி
தலையிற்புனல்தெளித்து தாயேசரணமென்று
அலையிற்றலைமுழுகி அனுஷ்டானந்தான்முடித்து
ஆதித்தனைப்பூசையண்ணி ஐவருந்தானங்கிருந்து
சாதித்தார்வேற்றுவருஞ் சந்நியாசிவேடமுமாய்
சாந்தகமாய்மூழ்கிச் சடைமுடியுந்தானாகி
பாந்தகமாய்வேடம் பருவமுடன்தான்முடித்து
பாராசைத்தானும்விட்டுப் பைங்கொடியாளாசையற்று
ஊராசைத்தானுமற்று உற்றமன்னராசைவிட்டு
மாதாவினாசைவிட்டு மந்திரிமாராசையற்று
மீதானகானகத்தில் விரைவாகச்சென்றார்காண்
அப்போதுமாயன் அவர்மனதைத்தேற்றுதற்கு
இப்போதெதிரே இவர்காணவேகலியன்
தன்னுடையமாதாவின் தலையிற்சுமையேற்றி
மன்னன்மனைவிதன்னை வார்புயத்தின்மேலேற்றி
வந்தவனைக்கண்டு மன்னுதன்மார்வாய்புதைத்து
இந்தவகைதம்பிரே ஏதோசகாதேவர்
கண்டோம்புதுமைஐயா கலியுகமேயானதினால்
அண்டாப்பெருஞ்சுமையை அன்னைதலைமேலேற்றி
பெண்டிர்தனைத்தோளில் பெருமையென்றுவைத்துவந்தான்
பண்டுமொழிதவறில் பழுதுவருமேநமக்கு
மாநகரைவிட்டுவந்து வகையாய்ப்பிழைத்தோமே
ஆனதம்பிமாரே அரிகேசவன்பதத்தை
நன்றாகவுச்சரித்து நம்பியேயென்பிறகே
குன்றாமனதுடனே கோபாலருண்டெனவே
தார்மேவுந்தம்பியர்க்குத் தயிரியமாய்வார்த்தைசொல்லி
ஓர்மேவுங்கானகத்திற் சென்றுபுக்காரம்மானை
கல்லுமுருகிவிடுங் கடுவிஷமும்வெந்துவிடும்

புல்லும்புகைபாலைவனம் போய்ப்புகுந்தாரைவருமே
மெல்லியர்கள்தன்பதமு மின்னனையாள்தன்பதமும்
பூவிலியமெல்லியதாள் பொருந்தாமலேதுவைப்பார்

விருத்தம்.

தேகமிழந்துவாராமற் சடத்தைமிகவேதான்சுமந்து
தாகமிருந்துதவிப்பிளைப்புஞ் சாராதுடலிற்றயவுசெய்து
பாகஞ்சிறந்தவுமைபாகர் பாதத்தினையுமிகதேடி
மேகஞ்சிறந்தமேனியனே விடைதானந்தகோபாலா. (௬௧)

ஒன்றுமறியோம்பொருளறியோ மூன்னையல்லாலுணர்வறியோம்
நன்றுமறவோந்தீதறிவோம் நந்தாமுகுந்தாநரசிங்கா
அன்றுசகாயமிகுந்திருந்து வடியார்தங்களிடர்தீர்த்தாய்
குன்றுமனங்கள்குன்றாமற் குடிகார்தந்தகோபாலா. (௬௨)

உருவாயுருவிலோருருவே யுடலிற்புகுந்துதனதாகி
வெருவாய்குளறியுளையாமல் வேறேகவனம்நினையாமல்
கருவாய்மலர்கள்பிடியாமற் காத்தாய்காத்தசிறையெதிர்முன்
வருவாயடியார்வைகுந்தம் வாவென்றருள்வாய்கோபாலா. (௬௩)

மனதுபிரமைசொல்லாது மாய்கைக்குறங்குமொழிபுலனைத்
தனதுதானென்றெண்ணாமற் றூனேதானாய்தனித்துமனம்
எனதுபயமுமில்லாம லெங்கள்தனையேயீடேற்றும்
உனதுபதியேகெதியாக வுதவுநந்தகோபாலா. (௬௪)

கதை.

கலக்கமில்லாதெங்களையுங் கண்ணுதலேகாத்தருளும்
மலக்கமதைவிலக்கி வழிகூட்டியெங்களையும்
நடத்தும்பெருமாளே நாங்களொன்றுந்தானறியோம்
சடத்துக்குள்வாழ்க்க தத்துவமேபோற்றியென்று
நடந்தார்வழிதனிலே நமோநாராயணாவெனவே
மடந்தையுடனைவருமாய் மால்பாதந்தானேக்கிச்
சோலைநிழலில்லாத சுடுவனங்களானதொரு
பாலைவனங்கடந்து பஞ்சவர்களப்பாலும்
அருமுனிவர்தான்வாழும் அதிசயங்கள்தான்பார்த்து
இருளிட்டுவந்து இரவியும்போய்மறைந்தான்
கார்மேவும்வல்லிருளில் காவலர்களைவருமே
பார்மீதிலேபளிங்குப் பாவைவழிநடந்து
கொள்ளிக்குவிள்ளாத கூரிருளில்தானலைந்து
தள்ளிநடக்கவழி சற்றுந்தெரியாமல்
மனமிடைந்துபுண்ணாகி மாயோனைத்தானினைந்து
கனலில்மெழுகதுபோல் கானகத்திலேயுழன்று
தம்பிமார்தன்றுயரம் தானறிந்துதன்மருமே
எம்பிமார்தன்மனது இனியறியவேணுமென்று
பார்த்தனுநால்வரையும் பாஞ்சாலிதன்னையுந்தான்
ஏற்றதொருவார்த்தைதனை இனிகூறக்கேளுமினி

தம்பியரைநோக்கித் தருமருந்தானேதுசொல்வார்
வெம்பிக்கலியால் வெகுண்டுபயந்துவந்தோம்
எதிர்த்துப்போர்மாட்டாமல் இளைத்தோடிப்போயினர்காண்
துதித்துலகமெல்லாந் தூஷணிப்பார்கண்டீரே
இருந்துசெயங்கொண்டு எதிர்த்துத்துரத்தாமல்
அருண்டுமிகப்பயந்து ஆரணியம்போய்ப்புகுந்தார்
என்றுலகஞ்சொல்லி ஏசாமலிப்போது
மன்றுலகில்வாழ்விசையன் மைந்தன்மகன்பேரனுக்கு
சென்றுதவியாக திரும்பியேநால்வருந்தான்
சேர்ந்துகலந்து சென்றுதவியாயிருந்து
ஏந்துஞ்செனமேசனுக்கு எதிர்த்தொருவர்வாதுசெய்யில்
கலியனும்வந்து கைகலந்துதானிருக்கில
வலியச்சலுதிவந்து வளைந்துபோர்செய்தாக்கால்
சிறுவன்வினையறியான் செருக்களத்திற்செற்றறியான்
உறுபூசல்செய்தறியான் உற்றோரொருவரில்லை
தானேதனியாத் தயங்கிமலையாமல்
தேனேயென்தம்பியரே சேர்ந்துகலந்துகொண்டு
உற்றபரிச்சித்துமகன் உகந்தசெனமேசனுக்கு
வெற்றிசெய்துநீங்கள் மிரட்டியவனைச்செயித்து
செங்கோல்தழைத்தோங்கச் செனமேசன்தான்வாழ்க
அங்கேயிருந்து அவனிதனையாளுமென்று
சீராருந்தன்மர் தெரிந்துரைத்தார்நால்வருக்கும்
நேராயிருந்துசென மேசனுக்குநீங்களுந்தான்
துணையாயிருந்து சுகமாகவாழுமென்றார்
மன்னாநீரெங்களைத்தான் மாநகரிற்போயிரென்றால்
அன்னாளேநாங்கள் அபசாரஞ்செய்ததுண்டோ
கர்த்தனிடசித்தங் கலங்கினதுயெந்தவிதம்
பெற்றபிதாவறியோம் பின்னையொன்றுந்தானறியோம்
வந்தவினைக்கெல்லா மறுப்படாதெங்களையும்
வளர்த்தஅருமையிதோ வனந்தனிலேவந்திருந்து
அழுத்தமுடனெங்களைநீர் அகலப்போமென்றுசொன்னீர்
அய்யாகுருகுலமே அண்ணரேயென்றழுதார்
மெய்யோதானீரும் விட்டுப்பிரிவீரோ
எங்களையும்விட்டு இருப்பீரோதான்தனியே
திங்கள்முகத்தோருஞ் செப்புகின்றதிவ்வாறோ
சித்தத்திற்கேறுந் தீவினைகள்செய்தோமோ
குற்றமதுசெய்தபிழைக் கொண்டுபொறுத்தருள்வாய்
செங்கோல்செலுத்துமென்று தேவரிடவாக்கதனால்
எங்கள்முகம்பார்த்துரைக்க எழுந்ததோசித்தமது
கணப்பொழுதுஉம்மைவிட்டுக் காலந்தரிப்போமோ
க்ஷணப்பொழுதுங்காணாமல தரிக்குமோவெங்களுயிர்
அண்ணரேயெங்களைத்தான் அவனிதனிற்போமெனவே

எண்ணிமனந்துணிந்து இப்போதுரைத்தீரே
தம்பியருமீதுரைக்கத் தன்மருந்தானேதுசொல்வார்
அன்புடையதம்பியரே ஆளுகின்றதேசம்விட்டு
என்பிறகேவந்தால் இளவரசுக்கியாருமில்லை
தம்பிமுகம்வாடிச் சலித்துமனம்புண்ணாகி
வெம்பியிருப்பான் வேந்தன்செனமேசனுந்தான்
அரசுநிலைநிறுத்தி அவனிதனிலேயிருந்து
விரகுடையவத்திபுரம் மேதினியைத்தாண்டு
குருகுலத்துமன்னரிட கோத்திரத்திற்றான்கூடி
மருவியிருந்து வாழுமென்றுதானுரைத்தான்
அந்தமொழிகேட்டு ஆனதம்பிநால்வருந்தான்
இந்தமொழியுரைத்தீர் எங்கோவேயண்ணாவே
மண்ணாசைபெண்ணாசை மற்றுமுள்ளபொன்னாசை
கண்ணானமைந்தரொடு காசினியிற்பேராசை
எல்லாம்வெறுத்து இப்போதுஉம்முடனே
செல்லாரும்வைகுந்தஞ் சேரவென்றுநாம்நினைந்து
வந்தோம்புவியைவிட்டு வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாய்வரவே சஞ்சலங்கள்சொல்வதென்ன
ஆண்டவனேயிப்போது அடியேனுஞ்செய்தபிழை
நீண்டபுரையுடைய நெறிசேருமன்னவே
சரணம்சரணமென்று தாளிணையைப்பூண்டுகொண்டு
அடிகள்மிகச்சுடவும் ஆவிதளர்ந்திடவும்
கட்டியமணற்சுடவுங் காலசைந்துநின்றிடவும்
மாய்கையிருள்வழியே வழிதிகைத்துநின்றிடவும்
சாய்கைவிட்டுவந்து தட்டழிந்துநின்றிடவும்
பதியிழந்துகானத்தில் பரதேசியாய்வரவும்
அதிகபவுசிழந்து அரும்பதிகொண்டேவரவும்
நீங்கள்படும்பாடுகண்டு நெஞ்சம்பொறுக்காமல்
தாங்கமுடியாமல் தானுரைத்தேன் தம்பியரே
இன்பமுடனீங்கள் என்னருகேவந்தவரை
துன்பமதுநினைந்து சொல்லுவனோநான்பாவி
நாளுந்திருமால் நமக்குதவியாயிருந்து
ஆளுங்குருசுவாமி அரியோன்பதஞ்சேர
நினைந்துவந்துநேசம் நிலைதவறுதோர்மனதாய்
மனந்துணிந்துவந்தீர்களா வைகுந்தஞ்சேரவோம்
என்றுதன்மர்சொல்ல ஏற்றதுரோபதையும்
நின்றுமனதாறி நெஞ்சமதுபுண்ணாகி
கால்களடிச்சுடவுங் கண்கள்சிவந்திடவும்
மேல்களயர்ந்துவெகு மெய்பதறிக்கைசோர்ந்து
அருமைதலைகுலைய ஐவருக்கும்பின்னேதான்
பெருமைசிறுமையதாய்ப் பெண்ணரசேயிப்போது
உரிமையுடன்நீவரவும் உத்தமமோவெங்களுக்கு

தருமரொன்றும்பேசாது தயவுசற்றுமில்லாதால்
ஆனதனாற்பெண்கொடியே அன்னையர்தானுன்மாமி
தான்வாழுமாளிகையில் தனியேயிருப்பாள்கேள்
மானனையீர்நீர்போய் மாமியுடன்சேர்ந்திருந்து
ஞானசிவபூசைகள்தான் நடத்தியனுதினமும்
குந்தியம்மாள்தன்னிடத்தில் கோதையரேசேர்ந்திருநீ
அந்தமொழிகேட்டு அருந்ததியுமேதுசொல்வாள்
மெய்யரேஎந்தனையும் வித்தகரேஇப்போது
பொய்சொல்லாவேந்தே போவென்றுசொன்னதென்ன
நான்பாவியானேனோ நாயகனேயென்றழுதாள்
தேன்பயிலுங்கோவே சித்தத்தில்கண்டதென்ன
வாகாகவென்னை வரவேண்டாமென்றுசொல்ல
ஆகாப்புலச்சியழிபுலச்சியானேனோ
சற்பனைகளான சதிகேடுசெய்தேனோ
கற்பழிந்துவேறு கண்டாசைகொண்டேனோ
ஐவர்துணையென்று அன்றுமுதலின்றளவும்
மெய்வருந்தினாலும் விட்டுப்பிரியாமல்
சித்தம்வரநடந்து சேவடியைப்பூண்டிருந்தேன்
கர்த்தனுக்கென்னால் கசடுவருவதுண்டோ
இனிமேலடியாட்கு ஈடேறப்புத்தியென்ன
பனியானபொய்யுடலைப் பாரமென்றுசொல்வேனோ
வையகத்தோர்சொல்லி வம்பாய்நகையாரோ
மெய்யகத்திற்சேர்த்து மேலும்பிரியாமல்
காத்தருளவேணும் கண்ணருடன்னருளால்
ஏத்தசினைதன்னை ஈடேறமுற்றிலுமே
சீர்பாதந்தன்னைத் தினமும்பணிந்தேத்தி
ஒருமனதாயிங்கின்று உத்தாரம்பண்ணுமையா
தன்மர்மனமகிழ்ந்து தையலையுங்கொண்டாடி
கன்மமெல்லாம்விட்டுக் கரையேறினோமினிமேல்
முத்தந்தெளிந்து மோகவலைவிட்டேகி
வந்தோமினிமேல் மலைவுகள்தான்சற்றுமில்லை
சந்தோஷமாச்சுதென்று தருமர்மனமகிழ்ந்து
அல்லிருளுந்தானீங்கி ஆதித்தன்வந்துதித்தான்
வல்லிருளும்போனபின்பு வாய்த்ததருமர்ஐவருந்தான்
எழுந்திருந்துசூரியனை இன்பமுடன்பஞ்சவர்கள்
விழுந்துநமஸ்கரித்து மெய்மலருந்தான்றாவி
தானமுடன்சந்திபண்ணித் தற்பணமுந்தான்முடித்து
ஞானமதுசிவமும் நாரணரேகஞ்சமென்று
வெடயோனைத்தெண்டனிட்டு மிக்கானஐவருந்தான்
மையிருண்டகானகத்தில் வனத்தில்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் பொல்லாதயானைமுதல்
பலிவுகண்டுதானதட்டி நடந்தார்வனங்கடந்தார்

பாத்திபனுஞ்சாடுவிட்டுப் பரிவால்வெளியில்வந்து
ஆற்றோரம்வந்து ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
சிராணகாட்டினுள்ளே தீர்த்தமதுதானாடி
தாராருமாமுனிவர் தன்னையடிபணிந்து
மாமுனியேநாங்கள் வைகுந்தஞ்சேர்வதற்கு
பூமேவுமேனியனே பொருந்திவிடைதாருமென்றார்
சேமமுடனிப்போது நிமலர்பதஞ்சேருமையா
ஆமென்றுமாமுனியும் அருளினார்நல்வசனம்
நல்லதென்றுபாறைவழி நடந்தார்கள்பஞ்சவர்கள்
வல்லதொருகானல் வழிந்தோடும்நீரதுபோல்
காடுதானிலோடுங் காவலேநீயென்றுசொல்லி
ஓடிவாரள்ளியுண்ண ஒண்டொடியுமைவருமாய்
பாலைவனக்கொடுமை பார்பிளந்துநீருகி
சாலையெனுமூங்கில்வனந் தானெரிந்துநீருக
விண்ணளவுந்தீயெரிந்து மேகநீர்வாரிடுமாம்
கண்கள்விழிக்கரிதாய்க் கனலுமகோரமதாய்
கண்டுபயந்து கடவுளோதஞ்சமென்று
விஷ்ணுவின்பாதம் மேனமேலுமூண்டெனவே
நடந்தார்மலையாமல் நாரணனோதஞ்சமென்று
தொடர்ந்துமதுரவனந் தொடுத்துமெள்ளவந்துவாம
இருந்துதவிப்பார் எழிந்திருந்தாரைவருமே
வருந்துமைவர்கானகமும் வனமுங்கடந்தேகி
ஓடிப்பதினேழு யோசனையுந்தான்கடந்து
நாடித்திசைநோக்கி நடந்துவழிகூடி
மற்றிப்பறந்தெங்கும் மரித்துநிழலாடும்
வெள்ளையுள்ளவெள்ளை வெளியாகவேதோன்றும்
அடுத்தோர்கைகாட்டுகின்ற அன்றுற்றசெய்தியது
கொடுத்துவெகுதூரஞ் சுத்தவெளியானதொரு
பளிங்குநல்லபாறையின்மேல் பாங்குடனேதானேறி
பொழிந்துபனிமழைபோல் பூமியின்மேல்தான்சொரிய
கண்டுபுதுமைதன்னைக் கண்ணிடையதம்பியரும்
ஒண்டொடிக்குங்காட்டி உயர்கானகமகடந்தார்
மேனிமிகக்குழைய மெல்லடிகள்கொப்பளிக்க
சோனைம்மழையொழியத் தொலைகானகம்புகுந்தார்
வெகுதூரந்தான்கடந்து விசாரமிகத்தீர்ந்து
ரகுராமராமவென்று ஏகினர்காணம்மானை
அங்கேவெகுதூரம் ஆறுமருவிகளும்
தங்காமலேநடந்து தாண்டிக்கரையேறி
ஓடும்நதிகடந்து உப்பாறுந்தான்கடந்து
காடும்புனல்கடந்து தகையாகவின்றளவில்
நெடுங்கானகத்தன்னில் நெருப்பாறுதான்வரவே
கடுங்கானில்வாரதொரு கடுங்கொடுமைகண்டுமைவர்

கலங்கிமனமிடைந்து காவலர்களஞ்ஞேரம்
மயங்கியேதருமர் மாயோனைத்தானினைந்து

விருத்தம்.

ஆயனேநந்தகோபா அச்சுதாபச்சைமாலே
மாயனேசமையமிப்போ வந்துநீர்காக்கவேணும்
தூயனேநெருப்புவெள்ளஞ் சூழியெரிந்தோடக்கண்டோம்
நேயனேஆறுதாண்ட நெடியவாதுணைசெய்வாயே. (௯௫)
நெருப்பாறுடையவலுவேகம் நீயேயறிவாய்நானறியேன்
கருப்பானனவேகனலதனைக் கையாலணைந்துதகையார்கள்
இருப்பாய்க்கனலைப் புனலாக்கிச்செவ்வேவழியுந்திறந்துநல்ல
தருப்போலுதவுங்கோபாலா சரணஞ்சரணஞ்சரணுமக்கே(௯௬)
அனலாய்வெந்துவருந்தீயை அடியேன்கண்டுபயந்துநொந்து
கனலேசண்ணிவிருந்தொழுதக் கடுகிமனங்களவெந்திடைந்து
தனலேபுனலாக்கொண்டருளிச் சமையம்வருவாய்கண்ணுதலே
எனலாயிரங்கியடியார்முன் னேகிவாந்தாகோபாலா. (௯௭)

கதை.

மாயன்றனைநினைந்து மனதிற்றியானமதாய்
நேயமுடனைவர் நின்றுதொழுமவ்வசனம்
அரிகரிராமராமா ஆயத்துகாக்குமாாமா
விரிகடல்துயின்றமாயா வித்தகாராமராமா
வடமலைநந்தகோபா வந்துநீர்காக்கவேணும்
கடல்தனையடைத்தமாயா காவலுன்காவலையா
மதகரிதன்னைக்காத்த மாதவாவேங்கடேசா
இதுநல்லசமயமையா எங்களைநீர்காப்பதற்கு
பச்சைமாலென்றுசொல்லப் பாவங்கள்தீர்ந்துவிடும்
அச்சுதாநந்தகோபா ஆயனேயென்றுசொன்னால்
விக்கினங்களின்றி விலகுமேயென்றுசொல்லி
அக்கினியுமன்னேர மறிவுடனேதான்விலகி
மற்றுமந்தஅக்கினிதான் வழிவிலகியப்பாலே
உத்தமருமகனுக் கொதுங்குகின்றமாமியைப்போல்
விலகிவழிவிடவும் விரைந்துஐவர்தானடந்தார்
இலகுபுகழக்கினியும் விட்டகன்றதம்மானை
அவ்வனத்தைவிட்டு அநேகநெடுந்தூரம்
இவ்வனமுமாகி இக்கோலமாய்நடந்தார்
பாவமகலாது பார்த்தவருக்கடங்காது
செவ்வேதான்நாம்நடந்தால திருமாலுதவிசெய்வார்
வரும்நமக்குஞானம் வழியேபுதுமையென்ன
தருமருந்தானினைந்து தம்பியரைதானோக்கி
தாராபுகழ்வீமா தம்பியருச்சுனனே
சீராகநானொருசொல செப்புகிறேன்கேளுமென்றார்
தம்பியரொன்றெண்ணாது தமையனுமென்றெண்ணாது
தம்பியதோரன்னசத்தம் நால்வரையுமெண்ணாது

பொற்பிள்ளையானாலும் பிரியமதையெண்ணாது
சுத்தமென்றுசத்தே துணையிதுவென்றெண்ணாது
மன்னர்மகுடமுடி வர்த்தனமென்றெண்ணாது
தென்னர்குருவாசாரி தேவரையுமெண்ணாது
தானவனென்ற தவசியையுமெண்ணாது
ஞானசிவயோகியொரு நாதரையுமெண்ணாது
வாதுசமர்பொருத வந்துவிடுமிந்தமதம்
நிதுவருமல்லாது தெளிவுவரமாட்டாது
மூர்க்கமேயுண்டாகும் மூளையலகுவாகும்
தீர்க்கமுடனுண்மையிது செய்யுந்தொழிலுண்டாகும்
ஆசாரங்கோற்றுது அன்புசற்றும்வாராது
ராசாதிராசனெனனும் லாகிரியேயுண்டாகும்
வித்தைமதம்புத்திமதம் வேகமேயுண்டாகும்
இத்தையெல்லாங்கொண்டு எகுவதுஞாயமல்ல
ஆயுதமுமாகாது அருந்தவசுவந்தவற்கு
வேயுகவிதம்பியரோ வில்லுமெடுப்பர்களோ
வல்லதொருசிலையை வாரிதியில்போடுமென்றார்
அல்லலரநாமும் அவரோதுணையெனவே
போவதுவேஞாயம் புத்தியதுவேநமக்கு
தேவரீர்சொன்னமொழி சிறியோர்கள்கேளோமோ
அண்ணரேயெங்கள்சிலை ஆழ்கடலிலேயெறிந்து
எண்ணமறவாரோ எங்கோவேயென்றுசொல்லி
தருமருரைத்தமொழி தம்பியர்கள்தான்கேட்டு
பொருதுஞ்சிலைகொடுபோய் போட்டார்கடல்தனிலே
நடந்தார்வெகுதூரம் நல்லதம்பிதன்மருமாய்
கடந்தார்வெகுதூரங் காதமிருகாதவழி
அப்பால்வெகுதூர மானபிரமகிரி
மெய்ப்பாகவேகடந்து விரைவாககாதவழி
வந்துதவிப்பார் வானுதலுமைவருமாய்
சிந்துதவுங்கண்ணரசர் தேவியுரைநாகமது
சருகாமல்வந்து சங்கரியைத்தான்றொழுது
இருகாமலங்கே ஏகினார்காணம்மானை
பூங்காவனப்புகுந்து போனார்களைவருமே
நீங்காதசெல்வம் நிறைந்தேகியேயிருந்து
அந்தவனந்தனிலே அனுகாவனமாகி
நொந்துவழிகாணாமல் நொந்திடைந்துஐவருமாய்
மறுகித்திகைத்து மாயோனைத்தஞ்சமென்று
முறையிடவேயந்திரத்தில் மொழிபிறந்தாரம்மானை
வேழமுகந்தானுடையு விக்கினங்களென்றுசொல்லி
காளைமுகில்மேனியனார் சற்பித்தாரந்திரத்தில்
அவ்வசனங்கேட்டு ஆனதன்மருளமகிழ்ந்து
இவ்வசனஞ்சொல்லி இன்னமிவர்களெல்லாம்

விக்கினங்கள்தீர்க்கும் விநாயகனேதஞ்சமென்று
கைக்கினியமாங்கனிதேன் கடலைபயருடனே
எள்பொரியுநல்ல இயலபானசர்க்கரையும்
நெல்பொரியுமப்பளமுந் தெகிட்டாதுணர்வுசெய்வீர்
வைப்பேன்பலாச்சுளையும் வாழைப்பழந்திருத்தி
அப்பமுடனேதேங்காய் அவல்கொழுக்கட்டையுடன்
சீனியதிரசமுஞ் சிறந்தநல்லபச்சரிசி
நாணியவன்தப்பாது நாதர்துணைசெய்வார்

விருத்தம்.

மூலப்பொருளேமுதற்பொருளே முக்கேவித்தால்முளைத்தெழுந்த
ஞாலப்பொருளேநடுநிலையாய் நடுவாயிருந்தநாயகமே
கோலத்துடனேயுள்ளிருந்து குருவாய்மூலக்கிழங்காகி
சாலத்திருத்தியெனையாளுந் தம்பிசமயஞ்சமயமிதே. (௬௮)
வல்லமைதமக்குநேசம் வைத்தநின்நேசம்போல
இல்லையாநெஞ்சில்நேசம் நினைவுடன்கலந்துப்பாரில்
மெல்லவேமயக்கிவிட்டப் பிரமையேமயக்கியப்பால்
செல்லவேநடத்துமையா திருவடிசரணந்தானே. (௬௯)
ஐந்துகரமுமொருமருப்புங் கண்டசெவியுஞ்சிறுகண்ணும்
தொங்கிவயிறும்புகர்முகமுந் தூலத்துடனேயிருமதமும்
தங்கிவடியுஞ்சிறுமணியுஞ் சத்தமொலிப்பமத்தாளை
சிந்தியோர்களடியார்முன் நெறியவருவாய்கணபதியே. (௭௰)

கதை.

என்றுதன்மர்தானினைந்து ஏற்றகணபதிக்கு
நன்றாகச்சொல்லி நாடிஇசைநோக்கி
நெஞ்சுதனில்வைத்து நேசத்தையுள்ளிறுத்தி
பஞ்சமலம்நீக்கிப் பாசத்தையுள்ளிறுத்தி
ஆடுக்காறும்பார்த்து அகண்டவெளிபார்த்து
நடுக்கமறுதவிர்த்து நமன்விதியைத்தள்ளிவைத்து
ரட்சித்துக்கும்பகத்தில் நினைவாகப்பூரகத்தில்
நாசித்துவாரம் நடுவனையைத்தான்திறந்து
ஆராய்ந்துதேடி ஐம்புலனையுள்ளடக்கி
சீராய்ந்துபூர்த்துத் திருக்கைமுறுக்கெடுத்து
காலற்கனலெழுப்பிக் கணபதியைப்பார்ப்பளவில்
மூலக்கிழங்காகி முத்திக்கும்வித்தாகி
மும்மண்டலமும் முடியடியுந்தானாகி
எம்மண்டலந்தனக்கு ஏகமுதலாகாசம்
அம்மண்டலந்தனக்கு ஆதியுமநாதியுமாய்
கம்மென்றநாதமணி கலகலெனத்தான்முழங்க
வந்தார்மரம்பிடுங்கி மலைகள்தகர்த்தெறிந்து
மந்தாடியேமலையைப் பாய்ந்துபிளந்தெறிந்து
கண்கள்சிவந்து கனலாய்ப்பொறிபறந்து
விண்களதிர்ந்திடவும் விநாயகனார்வந்துதித்தார்

விருத்தம்.

நடநடவிகடநடனசரணந் கருமுடலரிதிருமருகாசரணம்
வடவரையிலிடவந்தாய்சரணம் மதகளிறெனவுருகொண்டாய்சரணம்
அடவியில்விழிந்திமாருசரண மடியேன்கவலையைத்தீர்ப்பாய்சரணம்
நடமிடுசிவன்தருவந்தாய் சரணம் நாதாகணபதிசரணஞ்சரணம். (௭௧)
இடைந்தேன்மனதுபுண்ணுறி யெங்கேயெவிடமென்றசைந்து
குடைந்தேனெனதுகுடறுகும்பிக் கொலையிரல்வழுவனது
கடந்தேதொடர்ந்துமுன்சென்ற கர்த்தனேதுகணபதியே
அடைந்தேன்சரணம்வைகுந்த மடையும்படிக்குவழிகாட்டும். (௭௨)

கதை.

தன்மர்துதித்துச் சரணமென்றுபோற்றிசெய்து
மும்மதவேளானை முகமுமனமகிழ்ந்து
ஏன்பிள்ளாய்தம்பியடா இத்தூரம்நீங்களுந்தான்
தான்பிறந்தமண்ணில் தலமும்நிலமும்விட்டு
கானகத்தில்வந்தமையால் கஸ்திநமக்குண்டாகி
வானத்தோன்தாமறிய மனதுமிகப்பதறி
தடுத்தோம்நாமுங்களையும் தன்மரேயென்றுசொன்னார்
அடுத்துமிகத்தன்மர் ஐங்கரனைக்கெண்டனிட்டு
நடந்தவிபரிதமும் நாரணனார்கற்பனையும்
முடிந்தரகசியமும் முழுதுமெடுத்துரைத்து
தொடர்ந்துகலிவருமுன் தொல்லுலகைவிட்டிழந்து
அடர்ந்துவனத்தூடே அடியார்வருகையிலே
வழிமயக்கித்தேவர் வாட்டப்படுத்துகையால்
தெளியவழிகாட்டவென்று தேவர்தமைநினைந்தோம்
என்றுதன்மர்சொல்ல ஏற்றவிநாயகரும்
நன்றுகாண்தர்மரேநீர் நாரணனார்தம்மிடத்தில்
சென்றுவைகுந்தஞ் சேருதற்குநான்தாமும்
இன்றுவழிகாட்ட எழுந்தருளுமென்றுரைத்தார்
கானகத்தினூடே கணபதியுந்தானடந்தார்
வானகத்துக்கெய்தி வைகுந்தஞ்சேர்வதற்கு
நல்லவழிகாட்டி நடந்தார்விநாயகனார்
வெல்லரியதன்மர் விநாயகனைத்தான்றொழுது
தம்பியருந்தன்மருமாய் தானடந்தாரம்மானை
நம்பிவெகுதூரம் நடுக்காடுதான்கடந்து
காடுமலைசெடிகள் கல்லடர்ந்தபூமியுமாய்
இருடுநிறைகற்காடா யிக்கட்டாய்க்காதவழி
அலுத்துக்கடந்து அப்பாலும்போகையிலே
வலுத்துவெகுவுன்னிதமாய் மலைதெரியக்கண்டார்கள்
கண்டவுடன்தன்மர் கண்ணுளதம்பியரோ
கொண்டலசெரிகுழலாள் கோதைதுரோபதியும்
அசந்தாள்நடந்து ஐயோவெனவேதான்
பசந்தாள்மேனி பாதமிகநொந்துருகி

தங்கியிருந்து தவிப்பாயிப்போவமென்று
மங்கியிருள்வருமுன் மலையடுப்போமென்றுசொல்லி
மலையைத்திசைநோக்கி வந்தனர்காணம்மானை
நிலையைத்தொடுத்து நெடுகவளர்ந்தமலை
மேசம்படியும் விசாலமுள்ளதந்தமலை
மாகமுடனளவும் வளர்ந்தமலைதனிலே
காந்திருவனென்றொருவன் கண்டெதிரேவந்துநின்றான்
ஊர்ந்துவருமானிடரோ உயிர்வெறுத்துவந்தீரென்ன
மேகநாதனென்பேர் விடுவதில்லையுங்களையும்
காகமுடன்பேரூர் சாற்றுமென்றான்காந்தருவன்
அப்போதுதன்மர் அவனைமுகம்நோக்கி
இப்போதுநாங்கள் ஏற்றகுருகுலத்தில்
சந்தனராசன் தன்னுடையவங்கிசத்தில்
வந்துதித்தோம்பஞ்சவராய் வார்வேடாநீகேளும்
எந்தன்பேர்தன்மர் எனக்கிளையநாலவரிவர்
வந்தோங்கலியதனால வைகுந்தஞ்சேர்வதற்கு
இந்தவகையாக ஏகிவந்தோமென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அவனேதுசெப்பலுற்றான்
விந்தையுடனென்குலத்தில் வேந்தரையுங்கொன்றழக்கி
வந்தியனேதன்மர் வாய்த்தபழியதனை
தந்துவிட்டுப்போவெனவே தானுரைத்தான்காந்தருவன்
முன்னாளிலவானவர்க்காய் மூர்க்கமுள்ள அருச்சுனனை
மனம்பொறுத்துவிட்டேன் வலியவந்தீரிப்போது
இன்னாளிலென்பழிக்கு எதிராகவந்துவிட்டார்
மனதுவுனையும் வலுவானநாலவரையும்
கொன்றுசினந்தீர்ப்பேன் கொற்றவரேயுங்களையும்
இன்றுபோர்வாருமென்று எதிர்த்தானவனந்தனிலே
கலியைவிட்டுத்தப்பிக் காசினியைவிட்டகன்று
வலியவனந்தனிலே வைகுந்தந்தானேகி
போகையிலேநீமறித்துப் போருக்குவாருமென்று
ஆகையினாலுன்னுடனே அடர்ந்துபோர்செய்வதில்லை
என்றுதன்மர்சொல்ல ஏற்றதொருகாந்தருவன்
நன்றுதான்தன்மரேநீர் நம்மோடெதிர்க்காவிட்டால்
ஆற்றிரும்பியுங்கள் அத்திபுரஞ்சேருமென்றான்
தேனாருந்தன்மர் சிரித்தவனைத்தானோக்கி
ஏனோகெடுவாய் இவ்வசனந்தானுரைத்தாய்
நாமோவுன்சொற்கேட்டு நடப்பதுபோலேயுரைத்தாய்
பேய்கொண்டகாந்தருவா பேசாதிருபோடா
வாய்கொண்டதட்டாதே வழிவிலகிநீபோடா
மன்னாநீர்போர்புரிய மாட்டாயேயாமாகில்
என்னோடெதிர்க்கவுந்தான் இளையோரையேவுமென்று
கடுகியனுப்பியென்று காந்தருவன்தானுரைத்தான்

முடுகிப்பொருவனென்று மூடனவன் சொல்லுகையில்
தருமாசினத்தெழுந்து தம்பியரைத்தாங்கி
பொறுமையுடனது பொறுமைமிகவாகி
வார்த்தைசொல்லுந் தம்பியர்கள் வணங்கிப்பதறாமல்
கீர்த்தியல்லகவுபி கெடுகெட்டான் சொல்வதுதான்
என்றுசொல்லிப்பால் இருக்கின்றகாலவரையும்
பன்றுமிகக்காந்தருவன் படைபொருதவாருமென்றான்
சாற்றுபுகழ்பார்த்தனையுஞ் சகாதேவன்வீமனையுநனையும்
ஏற்றபரிநகுலன் இவர்களையும்வாருமென்று
போருக்கழைத்தான் புத்திசற்றுமில்லாதான்
பாருக்குளவானுன் படைக்கடல்போர்த்து
இக்கணமேவுங்களையும் எமலோகமேற்றுதற்கு
தக்கமுடன்வாருமென்று தாவிக்குதிபோட்டான்
இப்போதுநாங்களுமே யேற்பதில்லையானாலும்
தப்பாதசொல்லுடையார் தன்வார்த்தைதப்பாமல்
உன்மேலுயுத்தம் ஒருநாளுஞ்செய்வதில்லை
தன்மர்மொழிதப்பத் தருமமோவெங்களுக்கு
என்றுரிளையோர்கள் என்சொல்வான்காந்தருவன்
நன்றாகக்கேட்டிலேயோ நமன்சேதிவின்னாலங்கல
முன்னாளிலிந்திரன்மேல முடுகிச்சமர்பொருந்தவன்
மன்னனவன்பிறகே மாட்டாமற்போமபொழுது
சொன்னான்காணையா தோற்றமுடனவ்வசனம
அப்படியேநீங்கள் அவர்சொல்லைமீறாமல
சொற்படியேவந்தீர் துவண்டுபுறம்வாருமென்றால்
வேண்டாமடாகாந்தருவா வைகுந்தம்போறவரை
ஏண்டாதடைபண்ணினி சடழிந்துபோகாதே
சொல்லக்கேள்வம்பா துடுக்கதனைவிட்டுவிடு
அல்லாக்காநீங்கள் அடர்ந்துபோராடாமல்
போவதறிவமென்று புத்திகெட்டகாந்தருவன்
தாவித்துரோபதையைத் தானெடுத்துத்தோளில்வைத்து
பொண்டுசெல்லமங்கையுந்தான் கோவிந்தாவென்றழுதாள்
கண்டுமிகவீமன் கண்கள்பொறிபறக்க
ஆகாசப்பூமி அதிரவேசத்தம்பண்ணி
போகாதேயென்று புறப்பட்டான்போர்வீமன்
காந்திருவன்தன்னைக் கட்டிமிகப்பிடித்து
சேர்ந்துபொருதி சினந்துசெண்டுமார்பரிந்து
காற்றுமழையுங் கலந்துபொழிவதுபோல்
ஏற்றமலையிரண்டு மெதிர்த்துப்பொருதாப்போல்
சிங்கமுடனாளி சினந்துபொருதாப்போல
பொங்குகடலேழும் புயதூததலைவதுபோல்
வாலியுடன்சுக்ரீபன் வந்துபொருதாப்போல்
கோலியேமுன்னாளில் கோபாலசிங்கமதாய்

இரணியனைக்கொன்றதுபோல் ஏற்றவலுவீமன்
தரணிதனிலவனைச் சங்கரிக்கவேவினைத்தான்
தன்மருந்தானறிக்து தம்பி மேலானையிட்டு
மின்மருவும்வீமர் விட்டுவிடுதம்பியென்றார்
அண்ணர்மொழிகேட்டு அவன்மயினைத்தானும்விட்டு
மண்ணதிரவிண்ணதிர வாரியெடுத்தெறிந்து
குத்தினன்வீமன் கூவென்றான்காந்தருவன்
புத்திவந்துகாந்தருவன் போர்வீமனைத்தொழுது
தெண்டனிட்டுஊற்றான் திரும்பியேபாராமல்
சண்டையிட்டுகாந்தருவன் தப்பிப்பிழைத்தானெனவே
மின்னாள்துரோபதைதான் வேந்தரைவர்தன்னுடனே
சொன்னாள்மனத்துயரம் துன்பமென்னாலிங்கனுந்தான்
பாடுபட்டதெல்லாம் பாவியெந்தன்தன்னாலே
கேடுகெட்டேன்யானும் கிலேசமெல்லாம்விட்டுவிட்டேன்
என்றுசொல்லத்தன்மர் ஏந்திழைக்கும்புத்திசொல்லி
நன்றுதானென்று நடந்தாரவிடம்விட்டு
மலைகள்பருவதங்கள் வனமும்பலதான்கடந்து
குலைசெய்யுமாளிசிங்கம் கொடியபுலிகுஞ்சரமும்
வனமிருகம்வாழும் மலையும்வனாந்திரமும்
பலமிருகந்தானும் பஞ்சவர்களொன்றறிந்து
விலகுமிருகமதை விந்ததயென்றுபார்த்திருந்து
கலகமிடுமிருகங் கண்டொதுங்கிப்போகுமென்று
தங்களிலேதான்பேசிச் சந்தோஷமாய்நடந்தார்
பொங்குநதியார்கடந்து பூபாலர்பொய்கையிலே
செங்கழுநீர்த்தாமரை சேர்ந்தநீராம்பலுடன்
திங்கள்முகங்காணுக சிறந்தவனச்சோலைகளும்
வைகைநதிபாயும வாவிதடாகங்களும்
பொய்கையதுகண்டு புனலருந்தியங்கிருந்து
செய்யும்புசழாசாரி செய்யுந்தவங்கள்கண்டு
வெய்யபுசழ்தன்மர் விசேஷமிதுவென்றறிந்து
சண்டுபணிந்தைவர் களிகூர்ந்துதெண்டனிட்டு
தொண்டுபண்ணிநின்றார்கள் துரைராசர்மாமுனியை
பார்த்திபர்கள்மாமுனியைப் பணிந்தேதுகேட்கலுற்றார்
போர்த்தும்புலித்தோலுடனீர் பொய்கைதானேதெனவே
ஆடுகின்றதீர்த்தமிது ஐவரேயென்றுசொன்னார்
அப்போதுமாமுனியை ஐவருமேதானோக்கி
செப்பார்முலைமடவார் தீர்த்தமிகவாடுதற்கு
எப்பவருவாரெனக்கேட்டாரம்மானை
தப்பாதமாமுனியும் தாமவர்க்குயேதுசொல்வார்
ஓதுகின்றநீள்பரிதி உதையமெனும்வேளையிலே
காதலாலங்கவரைக் காணலாமென்றுசொன்னார்
வாலவுதயமதில் வந்தார்மடந்தையர்கள்

மேலானபொய்கைதனில் மெல்லிநல்லாள்தான்மூழ்கி
கோதையர்கள்யாவரும் குழலாத்தித்தான்முடித்து
வந்தவனைக்கண்டு மங்கையர்களெல்லோரும்
இந்தவனத்தில இவராரெனவேதான்
துங்கமுடிமன்னவரோ துடியிடையாள்தன்னுடனே
எங்குவந்தீர்நீங்கள் எவ்விமொவிடமென்றார்
பாரார்புகழுகின்ற பாண்டுமன்னன்தன்புதல்வர்
தாராருந்தன்மனென்பேர் தம்பியர்கள்நால்வருந்தான்
அருமையுடனிப்போது ஐவரையுங்கண்டோமே
தருமருடதம்பியரும் சார்ந்ததுரோபதையும்
வாய்ந்தகலியுகமு மண்ணுலகில்வந்ததினால்
ஆய்ந்தபுகழ்வைகுந்தம் அடையவென்றுசம்மதித்து
எங்களுக்குநற்காலம் இப்போதுநீங்களுக்கான்
உங்களுக்குநாங்கள் உகந்தடிமைதானாகும்
புரந்தரனார்தம்மிடத்தில் போவோமெனவுரைத்தார்
வரந்தருவாரங்கே மகுடமுடிசூட்டிவிப்பார்
நாளைமுடிசூடி நாகலோகமானதெல்லாம்
ஆளும்படிக்கு அரசாளவைத்திடுவார்
நன்றாகஉங்களுக்கு நாங்களெல்லாமிப்போது
மன்னர்சபையறிய மனையாட்டியாயிடுவோம்
சேருவோம்காணவர்முன் செல்வியுடனேவருமாய்
வாருமையாவென்று மடந்தையர்கள்தானழைக்க
மாசமுள்ளபெண்கள்நாம் பார்மீதிலாசைவிட்டு
நேசமுடனுங்கள் நெடுமால்தனைநோக்கி
போகையிலேநீங்கள்சொல்லப் புத்தியல்லமங்கையரே
தாகமுடன்சொல்லத் தகுமோதானுங்களுக்கு
என்றுதன்மர்சொல்ல ஏந்திழைமார்தான்கேட்டு
ஒன்றுமில்லையிவர்க்கு உள்ளாசைபட்டதெல்லாம்
ஒத்தாசையில்லாமல் தானுரைத்தார்பஞ்சவர்கள்
சித்தாசைகொண்டபெண்கள் திரும்புமென்றுதான்போனார்
முன்னவனைவிட்டு மடந்தையர்கள்போனபின்பு
தென்னவர்களைவருமாய்ச் சேர்ந்ததுரோபதையும்
மாமுனியைத்தான்வணங்கி வாழ்த்திவிடைதாருமென்று
பூமுனிவன்வாக்கருளிப் போமென்றுசொல்லுகையில்
தன்மரேநீங்கள் தாவும்வழிதனிலே
தென்மலைபோல்பாம்பு சீராவுந்தான்விழுங்கும்
எப்படிதான்போவீர் என்றுரைத்தார்மாமுனியும்
மெய்யுடையதன்மர் விளைந்தேதுசெப்பலுற்றார்
விதிவசத்தையாராலும் விலக்கவல்லாருண்டோதான்
சதிரானமாமுனியைத் தானனுப்பியேநடந்தார்
மின்கொடியுந்தன்மருமாய் வீமனுடன்தம்பியரும்
வன்குமூர்தமாமலையில் வந்தனர்காணம்மானை

அங்கமலைச்சாரலில் அருகேயொருபுறமாய்
சந்துசிறுதாரைவழி தானடந்துபோகையிலே
சிக்கடரும்பாதையுமாய் சிறியமலைபோலே
புக்கரவானதுதான் போர்வரைகள்போலேதான்
ஓங்கிவளர்ந்து உயர்வரையாமென்றுசொல்லி
தாங்கிடவாமல தாராளமாய்நடந்தார்
வந்தவர்களைவரையும் வனிதைதுரோபதையும்
சந்தோஷமாய்நாகம் தானேவிழுங்கியதால்
அப்போதுவீமன் அரையில்சிறுவாளதுவும்
தப்பாமல்நாகமதைத் தான்பிளந்துகிரியதாம்
மெய்ப்பானதன்மருந்தான் விதிவசமோயிதெனவே
இப்பாலவெளியில்வந்து எச்சில்பட்டோமென்றுசொல்லி
மகாதீர்த்தமாடி வருங்கரையில்நீர்தனிலே
கோதிவிழுங்குகின்ற கொடியரவம்பார்ப்பானும்
வந்துபணிந்தான் மன்னவர்கள்ஐவரையும்
இந்தமகிமையிது ஏதென்றுதன்மருந்தான்
கேட்குமப்போது கிருபையுடன்பார்ப்பானும்
தாக்குமுதல்முன்னாள் சபித்தார்கள்மாமுனிவன்
சீக்கிரமேபோனேன் சிறந்திருக்கும்சோலையிலே
பூங்காவனந்தேடிப் போனவடபதியில
மாங்குயில்போலரம்பையர்கள் வந்தார்மயக்கிவிட்டார்
பூசைசிவன்தனக்குப் புஷ்பம்வரவில்லையென்று
ராசரிஷிகோபமதாய் நாட்டமுடனெந்தனையும்
பாம்பாகவேசபித்தார் பாரமுனிகோபமதாய்
அப்போதுசாபம் அகலுவதெக்காலமென்றேன்
தப்பாதசொல்லுடைய தன்மருடனைவருமாய்
வைகுந்தஞ்சேரவென்று வருவார்வழிதனிலே
சைவர்வலுவீமன் தாழுமடிவாளரத்தால்
அப்போதுசாபம் அகலுமென்றார்மாமுனியும்
இப்போதுநானும ஈடேறஇங்குவந்தீர்
தன்மருடனைவரையும் நான்கண்டபோதெனக்கு
சென்மவிமோசனமாய்த் தேவர்சபைநான்சேர
யோறனென்றுபார்ப்பான் போயினர்காணம்மானை
நீரோதரித்தருளும் நிமலர்தனைநினைந்து
மார்க்கமுடனந்த மலைகடந்து அப்பாலும்
தீர்க்கமுடனே திருமால்தனைநினைந்து
வாரவழிதனிலே மலைகளோராயிரமும்
ஏறியிறங்கியப்பால் எண்காதமேநடந்தார்
நடந்துவரும்வழியில் நல்லதொருஅஸ்தகிரி
அடர்ந்துமோராகாசம் அந்தமட்டுந்தான்வளர்ந்து
நீண்டமலைகண்டு நினைவயர்ந்துதன்மருமே
ஆண்டவனேயிந்த அதிசயந்தானேதெனவே

தெண்டாயுதமெடுத்துத் திறல்வீமனப்போது
அண்டமதிர அடித்தான்மலைதகர
தகர்ந்தமலைவேதியனாய்த் தானின்றான்பார்ப்பானும்
பகர்ந்ததன்மரோதெனவே பார்ப்பான்றனைநோக்கி
இந்தவிசனம் ஏதென்றுதான்கேட்க
சிந்தைமகிழ்ந்து செப்பலுற்றான்வேதியனும்
முன்னளசுரருடன் மூர்க்கமுடனான்பொருதேன்
என்னோடவர்கள் எதிர்த்துப்போர்மாட்டாமல்
உதைபட்டசுரர் உயிர்குலைந்துபோகையிலே
வதைபட்டுமாளுகிறோம் வைகுந்தந்தாருமென்றார்
வகைதெரியாமல்நான் வைகுந்தந்தேனென்றேன்
பகைவருவதறியாமல் பாவிநான்சொன்னதினால்
சொல்லிவிட்டேன்வாய்வீண் சொன்னதமால்தானறிந்து
கல்லாயெனைச்சபித்தார் கண்ணருந்தானப்போது
பண்டுஉருமாறிப் பார்மலைதானாகி
விண்டியாந்தான்வளர்ந்து மேதினியிற்றனிநின்றார்
ஆயனோ அச்சுதனோ அடியேன்விமோசனந்தான்
நேயமுடனவர் நினைத்துநம்மைத்தானோக்கி
மாயவரோதஞ்சமென்று வைகுந்தஞ்சேர்வதற்கு
வருவாரிதுவழியாய் மானனையாள்தன்னுடனே
தருமருடன்தம்பியென்று தார்வீமன்றண்டாலே
உருமாறவுன்னை உடையவேதானடிப்பான்
பருவரையுந்தானாய்ப் பழையவுருவாகி
வருவாய்போவென்று மாயவனுஞ்சாபமிட்டார்
ஆனதினாலென்சாபம் ஐவரேதீர்த்துவிட்டீர்
நானினிப்பிழைத்தேன் நல்லவரேயுங்கள்தர்மம்
நான்போறேனீங்கள் நாரணனார்தம்மிடத்தில்
தான்போங்களென்று சதுர்மறையோன்றானடந்தான்
ஆமென்றுஐவர் அநேகநெடுந்தூரம்
தாமோதரனே சரணஞ்சரணமென்று
தன்மருந்தம்பியரும் தாரார்துரோபதையும்
இன்மைதனிலெல்லாம் இங்குகழித்தோமென்று
ஆதித்தனாடாத அருங்கானகம்புகுந்து
பேதித்தவன்மிருகம் பெரும்பூதநாதகணம்
ஊரும்பலசாதி உயிர்ப்பரவையாளிசிங்கம்
சாரும்பலவிருட்சந் தளதளெனச்சோலைகளும்
மனனுயிருந்தன்னுயிர்போல் வாழுகின்றதன்மரொன்று
பன்னுயிரெல்லாம்வணங்கும் பஞ்சவர்களைவரையும்
எண்பத்துநான்குயிரும் இவர்களுடனேபேசும்
பண்பெற்றுபஞ்சவர்கள் பலசலிப்புமில்லாமல்
நாற்றிசையுங்கானகமும் நல்லசுயசனமும்
வேற்றுமைகளின்றி விசாலமாயவ்வனத்தில்

வாரார்களைவருடன் வனிதைதுரோபதையும்
போரகக்கண்டெதிரே பெண்கொடியாளென்றொருத்தி
அசுவமுகமாக ஐவர்முன்னேவந்துநின்றாள்
விசுவசொரூபமுடன் மேவலரோமேவவென்று
தருமருடன்றம்பி தார்வீமனுக்கிளையன்
வரும்விசையன்றனை வந்துதழுவுகின்றாள்
புரவிமுகமானதுவும் பெண்போல்முகமாகி
இரவிமதிபோல ஏந்திழையுநிற்பளவில்
தாடலருந்தன்மர் தானேயதிசயமாய்
ஈதலருங்கன்னி இவ்வசனங்கூறுமென்றார்
காணிமுனிதேவி காணியென்பேர்முன்னாளில்
வாணிலொருமுனிவன் வந்தென்னைச்சேருகையில்
அரிந்தெந்தன்பத்தாவும் அசுவமுகமாவையென்றார்
பிரிந்தேன்முனியைவிட்டுப் பேச்சொன்றுமில்லாமல்
அய்யாயிச்சாபம் அகலுகிறதெப்போவென்றேன்
மெய்யாகநீயும் விசையனிடந்தன்னில்
சென்றுதழுவத் தீருமசுவமுகம்
என்றுமுனிசொற்படிக்கு இப்போதுதீர்ந்ததென்றாள்
பூவுலகில்வாழும் போர்வேந்தரைவருமாய்
தேவுலகில்வைகுந்தஞ் சேருவீரெனமொழிந்து
போனாள்தன்சாபம் போச்சுதென்றுதான்மகிழ்ந்து
மானாளும்போனபின்பு மன்னவர்களைவருந்தான்
கானார்வனம்நோக்கிக் கடுகிநடக்கலுற்றார்
சேனாபதிவேந்தர் திருவுளமேயுண்டெனவே
நடந்தார்வெகுதூரம் நாலாறுகாதவழி
கடந்தப்பால்வந்துநின்று கண்டார்விமலமலை
அந்தமலைகடந்து அனேகநெடுந்தூரம்
சந்தனச்சோலைகளுந் தடாகமதுதான்கடந்து
ஆலிலைமேற்றுயின்ற அச்சுதனைத்தானினைந்து
மாவியாறொன்று மாநதியும்வந்துகண்டார்
ஆறுதனைக்கண்டு ஐவருந்தானக்கரையில்
ஏறவென்றுதானும இயல்தன்மர்தானுரைக்க
விரிட்டுவீமன் விசையனையுந்தன்மனையும்
பூரித்திரண்டு புயமீதில்வைத்துமிக
ஒருகையிற்சகாதேவன் ஒருகையில்நகுலனையும்
மருவுமலர்முதுகில் மங்கையரைத்தானேற்றி
பிறவிப்பெருங்கடலைப் பெரியோர்கள்நீந்துதல்போல்
திறவிக்கரிய திறல்முனிவர்போலாகி
ஆறுதனைநீந்தி அந்தவைகுந்தமதில்
ஏறுகைபோலக்கரையில் ஏறினார்காணம்மானை
அந்தமுள்ளபோராறு ஆரணங்குபோலாகி
வந்தவளும்நிற்க மன்னவருந்தன்மருந்தான்

ஏதுகாண்பெண்கொடியே இவ்வேதமூந்தனுக்கு
ஓதுவீரொன்றுதன்மர் உண்மையாய்த்தான்கேட்க
கீதமுனிதேவிநான் நித்தியகன்னியென்பேரும்
சாதகமாய்நித்திரையில் தானனந்தல்செய்துவிட்டேன்
ஆகையினாலென்னை ஆருவாயென்றுரைத்தார்
மாய்கையிதுசாபம் வாங்குவதெக்காலமென்றேன்
அரியபுகழ்தருமருடன் ஐவர்துரோபதையும்
பெரியவர்களிந்தவழி பெண்ணேவருவார்கள்
ஆரென்றுசொல்லி ஐவர்மயங்கிநிற்பார்
ஏரோனவேவீமன் இவர்கள்தனையிடுக்கி
நீந்திவருகையிலே நீங்குமூந்தன்சாபமென்றார்
ஆய்ந்தமுனிசொற்படிக்கி அச்சாபம்நீங்கியிப்போ
பாவமகன்றதுகாண் பதிதனக்குநான்போறேன்
தேவரீர்நீங்கள் சேரும்வைகுந்தமென்றார்
காவவிளங்குயிலாள் கணவன்பதிமேவாய்ச்சேர்ந்தார்
அந்தமொழிகேட்டு அதிசயமாயுளமகிழ்ந்து
வந்தார்வெகுதூரம் மலையும்வனங்கடந்தார்
வரும்வழியிலேநிமித்தம் மதிமயக்கமாயுரைக்க
தருமராதுகேட்டுத் தானேவிசாரமதாய்
கன்னிதுரோபதைக்குக் காலம்பொல்லாதென்றறிந்து
இன்னிமித்தஞ்சொல்லுமென்று இடைந்துமனமுழன்று
வருகையிலேநல்ல வாய்த்ததுரோபதையும்
இருகைவிரித்தலறி எடுத்தடியும்வையாமல்
மெய்சோர்ந்துகைசோர்ந்து மேல்மூச்சுவேர்வையுமாய்
கைகாலசைந்து களைதாங்கிநின்றளவில்
ஐவர்திரும்பி ஆரணங்கைத்தான்பார்த்து
கைதாங்கிமெள்ளக் கருத்தென்னவெனக்கேட்க
தனக்குவருமயக்கந் தானுரைத்தாளம்மானை
உனக்குவருமயக்கம் உள்ளபடியென்னதென்று
சொல்லென்றுகேட்கத் துரோபதையும்வாய்வெருவி
நில்லென்றுதாது நெடுநாடியுள்ளசைந்து
தத்துவங்களற்றுத் தன்னினைவுதான்மாறி
பித்துகலங்கிப் பேரறிவுசிற்றறிவாய்
கண்டத்தில்சென்றுமாயக் காலனெனும்பாவி
அண்டத்தில்நின்று ஆரணங்குக்காதயர்ந்து
பிண்டத்தடுக்குலைந்துப் பிராணனெனும்வாயுவுந்தான்
விண்டத்தைநோக்கி விடையமிகப்பதறி
பொறிகலங்கியந்தப் புலனுமதிமயங்கி
நெறிகலங்கியெந்தன் நினைவுதடுமாறி
வாதமொடுங்கி வன்பித்தமதிகரித்து
சீதம்பறந்து சிலேட்டுமமுமேலாகி
மண்ணுந்தண்ணீரதிலே வந்துமிகவொடுங்கி

தண்ணீருந்தீயில் தானெடுங்கிமேலாகி
வாய்விலேயக்கினியும் வந்தெட்டிப்பார்க்குதிப்போ
காயத்துடனே கட்டுடனே ஆக்கைவிட்டு
அசதிகொடுக்குதுதானைவமோவென்றுரைத்தாள்
அசதியென்றசத்தம் ஐவருமேதான்கேட்டு
வீமன்சகாதேவன் விசையனகுலனுமாய்
தாமுமயங்கி தயங்கையிலேதன்மருந்தான்
நால்வருக்குநேசம் நடுங்காமற்புத்திசொல்லி
வேல்விழியாள் துரோபதைக்கு மெய்யேபதறாமல்
சொல்லுகிறாதன்மர் துரோபதைக்குநேசமுடன்
வில்லுக்குநல்ல விசையன்மனையாளே
மின்னே துரோபதையே விட்டுப்பிரியாத
பொன்னேநவமணியே புத்திசொல்லக்கேளுமென்று
நெடியோனேதஞ்சமென்று நெஞ்சிற்றியானமதாய்
பிடியேநினைவாகப் பிடியுமென்றுதன்மர்சொல்ல
துடியிடையாள்நல்ல துரோபதையுந்தான்மகிழ்ந்து
படியளந்தமாலே பச்சைவர்ணாதஞ்சமென்று
மகிழ்ந்துதுரோபதையும் வாழ்த்துகின்றாள்தோத்திரந்தான்
புகழ்ந்துபுவியிலுள்ளோர் புத்தியென்றுந்தான்கேட்க

விருத்தம்.

பஞ்சவர்தனக்குநானும் பாஞ்சாலிவந்துதோன்றி
பஞ்சவரைந்துபேர்க்குப் பாரியாயிருந்துபாரில்
துஞ்சவேருதுவென்று துற்சனன்றுகிலைக்கொய்து
அஞ்சலெனறருளிச்செய்த அச்சுதாசரணமென்றேன். (௭௬)
ஐவர்க்கும்பிரியாதிந்த வவனியிலிருந்துவாழ்ந்து
ஐவர்க்குந்தேவியாகி யழியாதகன்னியாகி
ஐவர்க்குமடியார்தானு மருந்தவஞ்சேரவந்தோம்
ஐவர்க்குமுனனேவாறே னரியவைகுந்தந்தாரும். (௭௭)
வந்தவனத்திலிடை வழியில் மாணமெனக்குச்சரியெனவே
இந்தவனத்திலூடெடுத்து வெளியாள்தன்பதஞ்சேர
விந்தைகிரிக்குவழிகாட்டி வேறேதுன்பமணுகாமல்
நந்தாமுகுந்தாவைகுந்தா நாதாவந்தருள்வாயே, (௭௮)
என்னையெமனணுகாம லெதிரோவந்துபதம்நல்க
பின்னைமனதுபதறாமல் பிடித்தபிடியுந்தவறாமல்
உன்னைமனதிலமறவாம லுறைவேன்வரவும்வைகுந்தம்
முன்னேவருவாய்கோபாலா முகுந்தாசரணஞ்சரணுமக்கே. (௭௯)

கதை.

என்றுதுரோபதையும் இறையோனைப்போற்றிசெய்து
ஒன்றுமறியேன்சிவனே உன்பாதமெங்களுக்கு
தந்தருளவேணும் தரணியனைப்போற்றியென்று
நந்தாமுகுந்தா நகொட்டிலென்னுடலே -

இந்தாபிரிந்துயிர்தான் எங்கோவேயுமிடத்தில்
வந்தாலுமுன்னுடைய மலர்ப்பாதந்தந்தருளும்
வைகுந்தஞ்சேருமையா மாயோனேயென்றுசொன்னான்
மெய்யென்றுஉன்பாதம் நினைவுமறவாமல்
தோத்திரங்கள்பண்ணித் தாபமறவாமல்
மாத்திரைப்போதானாலும் மனதுமறவாமல்
தில்லைநகர்காசித் திருவருணை அவந்தி
தொல்லையகல்சித்துநதி தோற்றமுடன்முத்திநதி
செய்யதிருக்காவேரி திருக்குடந்தைபொன்னரம்
ஐயனேசெகநாதம் அனந்தசயனமுதல்
திருப்பதிசிதம்பரமும் சீகாழிமாமலபுரம்
விருப்பமுடனுள்ள விசேஷதலமத்தனையும்
சிந்தைதனில்வைத்துத் தியானித்துநிற்பளவில்
அந்திரத்திலுள்ள அரம்பையர்களெல்லோரும்
தூய்யமலர்சொரியத் துந்துமிகளாடிநிற்க
வெய்யமணியதித்த விமானமதிலேதான்
ஆயாள்துரோபதைதான் அரம்பையர்கள்சூழ்ந்துவர
நேயாள்வைகுந்தம் நிறைந்திருந்தாளம்மானை
மைக்கண்துரோபதையும் வைகுந்தஞ்சேர்ந்தபின்பு
மிக்கதொருபஞ்சவர்கள் மெய்பதறியுள்ளசைந்து
வாடிமனமிடைந்து மழைகாணுப்பயிர்போலக்
கூடிப்பிரியாத கொம்பிழந்தவானரம்போல்
சோடுபிரிந்தலறுந் துயருடையவன்றிலைப்போல்
காடுதனில்நின்று கவலைபெரிதாகி
தெய்வமேயுண்டெனவே தேறியே ஐவருந்தான்
ஐவருங்கூடி அடக்கினருத்தமிமைய
மெய்களயராமல் மேனிபதராமல்
செய்யுஞ்சடங்குந் திருத்தமுடனேமுடித்து
நடந்தார்திசைநோக்கி நல்லபுகழைவருந்தான்
கடந்தார்வெகுதூரங் கானகமுமாறுகளும்
அப்பாலும்போசையிலே ஆங்கொருவிமனுந்தான்
தப்பாதசொல்லுடைய தாவேந்தேஅண்ணனே
கற்புடையமாது கானகத்திலேயடிந்த
உற்பனமேதென்று உபாவிமன்றன்கேட்க
வாசமுள்ளதன்மர் மகிழ்ந்தேதுசெப்பலுற்றார்
ஈசர்பதிவாழும் இமையமடந்தையிவள்
மாபாரதமுடிய வந்திருந்தாளவரிடம்
தீபாவியானதொரு திரியோதிரன்மடிய
பாரதமும்போரும் பகையறவேதான்முடித்து
பாரதனையாண்டு பரலோகஞ்சேரவென்று
கலியுகத்தைத்தாண்டிக் காட்டகத்தேநாம்வரவே
சலியாமல்நம்முடனே தானடந்தாளித்தாரம்

தேவர்முனிவர் திருமால்சபையறிய
பாவச்சரீரமதைப் மார்மீதிலேகிடத்தி
முன்னேநடந்துவிட்டாள் முகுந்தனிடதன்பதிக்கு
பின்னேதொடர்ந்து பிறகேவழிகூடி
நாமும்நடக்கவென்று நடந்தார்கள்வெகுதூரம்
தாமும்பின்தம்பியரும் தையலையுந்தான்பிரிந்து
கானகத்தினூடே கடுநடக்கையிலே
வானகத்தினுள்ளே மலைமுள்ளுக்குள்ளிருந்து
வந்துபதுங்கி வருவனைத்தான்பார்த்து
சிந்தைபசிதீரத் தின்னலாமென்றுசொல்லி
என்றுமனமகிழ்ந்து எதிரோதானார்ப்பரித்து
கொன்றுபசியாறக் கூர்முகமுங்கைகளுமாய்
கண்ணுமுகமுங் கனல்போல்எரியெழும்ப
விண்ணுருவப்பாய்ந்து விழுங்கவேஐவரையும்
சேர்ந்துபிடிக்கவென்று சிங்கமதுதான்சீறி
பாய்ந்துபிடித்ததுகாண் பருவீமன்றன்னையுந்தான்
சிங்கத்துவாயலகைத் திறல்வீமன்றான்பிடித்து
பங்கப்படுத்தி பகிர்ந்திரண்டுகூறாக்கி
உதைத்தானடிவயிற்றில் உருண்டோடச்சிங்கமது
பதைத்துத்திகைத்துப் பதறியுடல்நடுங்கி
வேதியர்போல்வந்து மெய்யுடையதன்மர்முன்னே
நீதிமறையோனும் நிற்பளவில்தன்மருந்தான்
ஏதுகாணவேதியரோ இப்படிநீவந்ததென்ன
தாதுவிசுவமுனி தன்பூசைக்கேமலர்கள்
நானெடுக்கப்போனேன் நடுக்கானகந்தனிலே
தேனிருக்குஞ்சோலையிலே சினந்திரண்டுசிங்கமது
ஆர்ப்பரித்துமொண்டும் அவர்கள்பெரும்போரை
தாப்பிரியமாய்ப்பார்த்துத் தாமசமாய்நின்றுவிட்டேன்
வேகித்துமாமுனியும் வேகமாயோடிவந்து
ஏகிற்றுச்சிங்கமென இச்சாபமிட்டார்காண்
ஏற்றியசாபமெனக் கெப்போதுதீருமென்றேன்
போற்றியேநான்றுதிக்கப் புகழ்முனியுமப்போது
மைமருவுங்கானகத்தில் மால்பாதந்தான்தேடி
ஐவருந்தான்ந்தவழி அவர்கள்வருவார்கள்
பொறுமையுள்ளதருமர்தம்பி போர்வீமன்கையாலே
திருமுனிவன்சொன்னார் தீர்ந்ததுகாணிச்சாபம்
ஆனதினாலிச்சாபம் ஐவரோதீர்த்துவிட்டீர்
நான்போறேனீங்கள் நாரணனார்தம்மிடத்தில்
போங்களென்றுசொல்லிப் போனார்காண்வேதியனும்
வாங்களென்றுசொல்லி மன்னவர்களைவருமாய்
இறையோனைத்தஞ்சமென்று ஏகினார்காணம்மானை
கறையேறவேணுமென்று கடிநடக்கலுற்றார்

மலைகள்பலகடந்து மாயோனைத்தானினைந்து
கலைகள்மறைகள் கரடிபுலியாளிசிங்கம்
பெரியமதவாரணங்கள் பேராறுதான்கடந்து
அரிபவனக்காரணமும் அதிசயமுந்தான்பார்த்து
மஞ்சுலவுஞ்செண்டகிரி வட்டமலையோர்புறமும்
மிஞ்சுபுசழ்பஞ்சவர்கள் விரைந்துவருகையிலே
தானதவம்பூசைசெபம் தன்னுடனேயாமகில்
ஏனமுனிவரங்கே இருந்தாரவர்தனையும்
கண்டுவணங்கியிரு கையால்மலர்சொரிந்து
தொண்டுபண்ணிநிற்கையிலே தோற்றமுடன்மாமுனிவர்
மன்னவரேயெங்கிருந்து வாரீரெனக்கேட்டார்
தென்னவர்கள்போற்றுஞ் சீராளைவருந்தான்
பாண்டுமைந்தரைவர் பாராசைவிட்டகன்று
கண்டுகலிவருமுன் கரியமால்கண்ணர்பதம்
தேடிவந்தோம்வைகுந்தஞ் சேரவென்றுநாங்களுந்தான்
நாடிவந்தோமும்முடைய நற்பாதந்தெண்டனிட்டோம்
என்றுதன்மர்சொல்ல இயல்முனிவரேதுசொல்வார்
நன்றுதான்பஞ்சவரே நாங்கள்சொல்லநீர்கேளும்
வேகமுடனித்தூரம் விரைந்தோடிவந்ததினால்
தாகம்பசியிளைப்பும் தகையாறவேணுமென்று
ஐவரையுந்தானிருத்தி அன்புடனேவார்த்தைசொல்லி
மெய்வருமூல பலாதிகள்தான்வேணுமென்று
போசனமும்பால்தயிரும் போதவுண்டாகுமென்றார்
வாசமுடனேமுனிவர் மகிழ்ந்துரைத்துஐவரையும்
பார்த்திபரேநீங்கள் பாருமென்றுதானுரைத்தார
சாத்திரிநீரொன்று தயவாகமாமுனிவர்
தேனுங்கனியுந் தெவிட்டாதபால்பழமும்
தானுஞ்சிவமுனிவர் தன்னிடத்திற்றோற்றியதாம்
அந்தக்கனிதேன்பழமும் அருந்துமென்றார்மாமுனியும்
இந்தக்கனிபால்பழமும் இப்போதழைத்ததிதம்
அதிசயந்தானென்று ஐவருந்தானுளமகிழ்ந்து
நதியிற்புனலருந்தி நமஸ்கரித்தார்மாமுனியை
இருந்துபசியாறுமென்று இயல்முனிவர்தானுரைத்தார்
விருந்துண்டிளைப்பாற்தார் வீருனஐவருந்தான்
கதிரோனும்போய்மறைந்தான் கங்குலவந்துதோன்றியதே
சதிரானமாமுனிவர் தன்மர்கதைதான்கேட்டு
வேதவிதிசாஸ்திரமும் விளக்கமாயைவருக்கும்
போதகமாய்ச்சொல்லிப் போதித்தார்மாமுனியும்
கங்குலகன்று கதிரோனும்வந்துதித்தான்
பொங்குபுகழைவருந்தான் பூரித்தெழுந்திருந்து
கதித்துப்பரிதியுடன் காலசெபந்தான்முடித்து
மதித்துமகிழ்ந்தைவர் மாமுனிவர்தன்னிடத்தில்

வந்துவணங்கி வைகுந்தஞ்சேர்வதற்கு
சந்துபாயிலவனத்தில் தான்வழியுஞ்சொல்லுமென்றார்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களுமச்சுதனைத் தேடியின்னங்காணாமல்
தள்ளுவதுஞாயமல்ல சரணஞ்சரணமையா
வேழமுகத்தோனே விக்கினங்கள்தீர்த்தோனே
கானமுகிலமேனியனார் கண்ணர்மருகோனே
கதவுதிறவுமையா கணபதியேசரணமென்று
இதமுடனேதன்மர் இருதாள்சரணமையா
மத்தகெசமுகனும் வாசல்வழிதிறந்தார்
சித்தவிநாயகனை விழுந்துநமஸ்கரித்து
வட்டமதிக்குடையோன் மாநகரில்வந்துபுக்கி
பட்டணங்களெல்லாம் பளிங்குநிறம்போலவேதான்
எங்குஞ்சிவாலயமும் எம்பெருமாளாலயமும்
பொங்குஞ்சிவமுடையோர் பூசைபண்ணுநீதிகளும்
தவமுஞ்சிவமுஞ் சந்நியாசிவேடமுமாய்
அவமும்பலமும் அரிஞானமூலமுமாய்
தெளியும்பெரியோர்கள் சிவஞானவேதமுமாய்
வழியுமணிமுழங்க மன்னவர்கள்தான்பார்த்து
மகிழ்ந்துகளிகூர்ந்து வந்தார்களைவருந்தான்
புகழ்ந்துமுனிபாதம் போற்றியடிபணிந்து
அப்பனேஎங்கள் ஆதிகுருபரனே
செப்பமுடனெங்கள் தெய்வசிகாமணியே
என்றுதன்மர்தெண்டனிட்டு இன்பமுடனேபணிய
நன்றுசாண்பஞ்சவர்கள் நாடிழந்துவந்தகதை
பாண்டுமைந்தர்தானும் பதியிழந்துவந்தவரை
வேண்டியேயிங்குவந்த விசாரமேதென்றுரைத்தார்
பொய்யானதோர்கலியன் பூமியிலேவந்ததினால்
வந்தோம்புவியிழந்து வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயனுப்புந் தாணுவேயென்றுரைத்தார்
தன்மரிவைசொல்லத் தானகேட்டுமாமுனியும்
இன்மைதனிலவைகுந்தம் எவர்சேர்ந்தாரிப்புவியில்
வேதனுடமாமுனிவர் விண்ணோருங்காணாத
சீதன்மலர்விந்தபதம் தேடிநீர்காண்பீரோ
ஆனாலுமாயன் ஐவருக்குமன்புடையோன்
தானானகோபாலர் தன்னிடத்தில்நீங்களுந்தான்
போனாலுமுங்களுக்குப் புத்திநான்சொல்லுகிறேன்
சேனாபதிக்கதிபா செப்புகிறேன்கேளுமினி
வேகம்வெகுளி வெகுண்டதொருகோபம்
தாகம்பசியிளைப்புஞ் சஞ்சலங்களில்லாமல்
இடிப்புங்குலைகளவு எதொன்றுமில்லாமல்
கடுங்காமக்கேசங் கருத்திலுற்றுப்பாராமல்

ஐம்புலனையுள்ளடக்கி ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
எம்பெருமாள்தன்னை இருதயத்திலேநினைந்து
மன்னுயிர்தன்னுயிர்போல மனதுபரிபூரணமாய்
கடந்தால்தெரியும் நந்தகோபாலருடன்
இடந்தான்தெரியுமப்போ என்றுணைதப்பாது
தாரார்துளசிமணித் தாணணியுமூர்த்திதன்னை
ஆராய்ந்துதேடி யருள்பெறுவீர்கண்டீரே
செல்லும்வழிகளிலே தீதொன்றும்வாராது
சொல்லுகிறேன்சேரும் துன்பமற்றபாதையிது
தீதானபேர்கள்வந்து செல்லாவழிகேளீர்
கேதாரம்போச்சேர்ந்தால் கிட்டவதுதூரமில்லை
பக்கவிலக்குமில்லை பலபாதைதானுமில்லை
சொர்க்கமதுபோய்ச்சேரச் சொல்லுகிறேனீர்கேளும்
சுதித்தகொருவாசல்வழி காவல்பத்திரகாளி யென்றார்
துதித்தவளைப்போற்றித் துன்பமறவேநடவும்
என்றுதூறுவியாசர் இவ்வசனந்தான்கூற
நன்றென்றுபஞ்சவர்கள் நமஸ்கரித்துமாமுனியை
நடந்தார்திசைநோக்கி நல்லதொருபஞ்சவர்கள்
அடர்ந்துவழிகூடி அம்மையுடகோயிலசென்று
பணிந்தார்களைவர் பத்திரமாகாளிதன்னை
துணிந்தார்கள்நல்ல தோத்திரமுஞ்சொல்லலுற்றார்

விருத்தம்.

வக்கிரகெந்தமுகக்கமல வடிவுமிலகுசெஞ்சடையடிமுடியும்
உக்கிரமகோரஉமைவிழிமருட்டு மோங்குநற்காமுங்கன் சூலஞ்
சக்கிரவிசயஞ்சாமுண்டி கௌரிதுற்கைமாகாளிதிரிசூலினீலி
நிக்கிரசாலுநிமலிதுகித்தேனுனையே துணைசெய்வாயே (௮௧)
காளிபகவதிகங்காளிமாரி கரியமால்தங்கைகாரிழையாளே
எளியாதமக்கிரங்கும் பரிபூரணியிடைவிடாவழிபை
வெளியிலவந்துதவுமாதாவே யென்றுவந்தோமுன்பாதம்
தருவிலெலந்தன்தாயேனின்பா தந்தந்துணைசெய்வாயே (௮௨)
துந்துமியிடாரிசெலவி கோதகிமாயருத்திரி
சிந்துரத்திலர்தமாதே திரிசூலபாலமெந்தி
வந்துமுன்தோன்றவேணு மாசற்றவடிவினாளே
பந்துவைகுந்தஞ்சேரப் பதிவிடைதாருமம்மா (௮௩)
தாதுமலர்ந்தகுழலணங்கே சமையமிதுவண்வழிகாட்ட
மாதுதனதும்தாரம்மட்டுஞ்சேரமலைவுதன்னை
ஏதுவினைகளணுகாம லெளியாரிடமேயிருந்து
தீதுவினைகள்வாராமல் செவ்வேநடத்துந்திரிபுரையே (௮௪)
நடக்குந்துயரமறிந்தனது நாட்டமதனுல்கண்டிறங்கி
அடககமுடையபொருளறிய வம்மாவுனதுசெயலாலே
நடக்கவேணும்வழிதுலையக் காணவேணும்வைகுந்தம்
வடக்குவாசல்மடக்கொடியே வருவாய்வந்துதுணைசெய்வாய். (௮௫)

துணையாயெனக்குமுன்னின்று துன்பவினைகளணுகாமல்
அணைவாய்மலைக்காதரவா யைந்துபுதல்வர்இகையாமல்
பிணைவாய்தனதுபிள்ளைகள்முன் பேசாதோடிவந்தருகே
இணையாய்வருகவம்மாநீ யிப்போசமையமாதாவே. (அ
வருவாய்கமலமாதாவே மார்க்கவழியேதீர்க்கமுடன்
குருவாகிசமாமுன்னின்று குற்றங்குறைகள்வாராமல்
திருவாய்மொழிந்துபயமறவே சிந்தைமகிழ்ந்துசெயல்பெருக
தருவாய்பெரியவைகுந்தத் தாயேசரணஞ்சரணுமக்கே. (அசு

கதை.

மாதுகவுரி மகமாயிராசகன்னி
சாதுவேமாகாளி தாயேபராபரியே
சக்கரத்திரிசூலி சாமுண்டிசங்கரியே
துர்க்கைபிடாரியம்மா துரியசடாட்சரியே
பஞ்சாட்சரத்தினுட பதியேபதிபுரையே
அஞ்சலென்றுகாக்க அடைக்கலமேயுன்மீதில்
மாதாவேதாயே வழிகாட்டவந்தருளும்
ஆதரவுமில்லையம்மா அடியேற்குவந்துதவும்
என்றுதன்மர்சொல்ல இரங்கிவந்துமாகாளி
சொல்லுவாளப்போது துரைராசமன்னவற்கு
நல்லதன்மரேயுனக்கு நல்லவழிஈதெனவே
வழிகாட்டிமாகாளி மறைந்தனள்காணம்மானை
தெளிவாகப்பஞ்சவர்கள் சென்றுவழிதான்கூடி
தாரானமாய்நடந்த சத்திபத்திகாளிதன்னை
நேராயிருதயத்தில் நெஞ்சுநடுவேநிறுத்தி
எண்பதிற்காதவழி எய்யாமலேதானடந்தார்
கண்புற்றகானகத்தில் நடக்கும்வழிதனிலே
அப்பாலொருமலைதான் அளவற்றஉன்னதமாய்
ஒப்பாருமில்லாத உயர்ந்தமலைமீதேறி
அந்தமலைப்பெருமை ஐவருந்தான்பார்ப்பளவில்
கந்தமுடனரக்கன் சயிலாசனென்றொருவன்
ஆகாசம்பூமி அளவாகவாய்பிளந்து
வாகாகத்தன்னுடைய வயிறுதனைஎக்கிநின்று
தீயெரிந்தகண்ணுஞ் சிறந்தவிழிநாசியுமாய்
பேயிருந்தவீடதுபோல் பேருடலும்நீள்வயிறும்
காட்டானைசிங்கங் கரடிபுலிபன்றியுடன்
நாட்டமுடன்காதவழி நடந்துதிரிவதுவும்
நாசிவழிசென்று நடமாடப்பட்டதெல்லாம்
ஓசனைகாதவழி யுழன்றுருண்டுதான்திரியும்
சிலேட்டுத்திலியதுபோல சிக்கியலைந்திடவும்
வீட்டும்பெருங்காற்றால் வல்லரக்கன்தன்மூச்சு
எல்லையில்லாத்தூரம் எந்தமட்டோநாமறியோம்
தொல்லையுடல்கிடக்குந் தூரம்வெகுதூரம்

கடக்கமுடியாது கடற்கரைக்குமெட்டாது
கிடக்கிறான்ராட்சதனைக் கிட்டியேசென்றாலும்
அடுக்கமுடியாது ஆர்தனக்குக்கிட்டாது
நடக்கவழிகாணோம் ராட்சதனைத்தப்பியப்பால்
போகவழிசற்றும புலனொன்றுங்காணோமே
வேகமுடன்சென்றவன்மேல் விரியங்கள்செய்தாலும்
எதிர்த்துப்பொருவான்காண் ஈடலலநாம்தாமும்
மதித்தவனுந்தின்னவென்றால் வாய்தனக்கும்பத்தோம்நாம்
கைகாலுலாவவருங் காதவிருகாதவழி
ஐவருந்தான்பத்தாது அவன்வயிற்றுக்கிப்போது
என்றுமடீங்கி இறங்கிவழிபார்ப்பளவில்
நின்றுமலைத்தைவர் நெடுமூச்சுத்தாளெறிந்து
காவலர்கள்போகவழிக் காணுமலேமலைத்து
தாவியெங்குஞ்சுற்றி தவித்துவழிஇளைத்து
உற்றதொருராட்சதனை உசிப்பினார்கிட்டவந்து
சத்தமிட்டுக்குத்தித் தட்டிஎழுப்புகையில்
என்னமோவென்று எள்ளளவுந்தோற்றமல்
வின்னமாய்ச்சும்மா மெய்யசைந்துகண்ணுறங்கி
ஏதுசெய்வோமென்று எண்ணிமனம்புண்ணாகி
தீதுவினைதானிவனுந் திருவுளமேயுண்டெனவே
சுற்றும்போயாராய்ந்து சூழவழிகாணமல்
மற்றுமினிப்போக வழியொன்றுமில்லாமல்
நின்றுதிகைத்தளவில் நெடியதொருவல்லரக்கன்
குன்றுமலைபோலவனுங் கொட்டாவிகொண்டெழுந்து
ஐவரையுங்கண்டரக்கன் ஆவிபிடிப்பளவில்
தெய்வமேயென்று சினத்தெழுந்தான்வீமனுந்தான்
மண்ணும்விண்ணுந்தானதிர மலைகள்கிடுகிடென
கண்ணும்புயவீமன் நாடிச்சினந்தெழுந்து
ஆற்பரித்துக்குத்த அரக்கனுமேதான்சினந்து
ஏற்பரித்துவீமனுடன் எதிர்த்துப்பொருதலுற்றான்
மலையும்மலையும் மற்கட்டிச்சேர்ந்தாற்போல
அலைகடலுங்காற்றும் அலறிவெகுசத்தமிட்டு
காடுசெடிநெருங்கிக் கற்காடுந்தூளாகி
ஈடுசெய்யமாட்டாமல் எடுபட்டுவல்லரக்கன்
மதியமொருசாமம் வல்லரக்கன்றான்பொருதி
அதிகபிலமெல்லாம் ஆங்காரமுள்ளடக்கி
தாக்கினான்வீமன் தலைகளுநண்டோட
நோக்கிவந்தராட்சதனும் நொருங்கியேபட்டிருண்டான்
பட்டஅரக்கன் பாரில்பிழைத்தெழுந்தான்
துட்டனவன்தேடிநம்மைத் தூக்கிப்பிடிக்கவென்று
தாராருந்தன்மர் தம்பியரைவாருமென்று
சீராகத்தானடந்தார் தெய்வமேயென்றுசொல்லி

வருத்தமுடனேங்கி வளர்ந்தவனக்காடுகளும்
திருத்தமுடன்கடந்து சென்றார்வழிகூடி
நடந்தார்வெகுதூரம் நாற்பதிங்காதவழி
கடந்தார்வெகுதூரங் கானகமுந்தான்கடந்து
வரும்வழியில்வீமன் வார்த்தையொன்றுதானினைந்து
தருமரடிபணிந்து தான்தொழுதுயேதுசொல்வான்
நடக்கும்வழிதுலைய நாதனேயெங்களுக்கு
அடக்கமுள்ளமுக்கதையை அருளுமென்றான்வீமனுந்தான்
அருளுமென்றதம்பியற்கு ஆதரவாய்வார்த்தைசொலல
பொருளுமுறையும் போதமுடன்முக்கதைதான்
சாற்றுகிறேந்தம்பியரோ தான்கேளுமென்றுரைத்தார்
போற்றுமுலகும் புவனம்பதினாலுங்
வேதாவுமாலும் மிக்கதொருருத்திரனும்
மீதானமூவர் விதித்தவிதிபாராமல்
நான்படைத்தோமென்று நான்முகனுந்தான்கூற
மான்பிடித்தருத்திரனும் வகைபலவுந்தானாகி
தூயதொருமாயவனார் தோற்றமெல்லாந்தானாகி
நேயமுடன்மூவரிலே நீபெரியோன்நான்பெரியோன்
என்றுபகையாக எதிர்த்துவழக்குரைத்து
மன்றிற்சபதமிட்டு வாய்த்ததர்க்கந்தானாகி
நன்றிலிவர்மூவருமே நடக்குமதிகாரம்
படைப்பிக்கவேதன் படியளக்கமாயோனும்
முடிப்பிக்கருத்திரனும் மூவருமேயல்லாது
ஒன்றையொன்றுமிஞ்சாது உண்மைபொருளாகுமிது
மன்றில்விளங்கி வழக்குரைக்கமூவர்களும்
பார்க்கிற்சரியெனவே பரமாகசியத்தை
ஏர்க்கவேமுன்னாள் எழுதிவைத்தார்மேருவினில்
ஆர்க்கும்பெரியோன் அவனல்லால்வேறுமுண்டோ
தீர்க்கமுடன்மூவர் செய்தொழில்மிச்சமில்லை
அவனைமறந்துரைத்த அபசாரந்தீரவென்று
சிவனுமயனுந் திருமாலுந்தான்கூடி
ஒருவர்க்கொருவர் உயர்ச்சிசொல்லதல்லவென்று
மருவித்தழுவி மகிழ்ந்தார்கள்மூவர்களும்
அண்டம்புவனம் அகண்டமெல்லாந்தான்படைத்து
அண்டங்கடந்துநின்றோன் ஆடுந்திருக்கூத்தை
கண்டறியமாட்டாதார் கருதியுரைக்கதெல்லாம்
கொண்டவினைப்பயனால் கூறினேனிவ்வார்த்தை
அவனேபெரியோன் அங்குமிங்குமொன்றாகி
எவனேவவனவன்காண் எல்லையில்லாப்பேரொளியை
மறந்துரைத்தகுற்றம் வாராமலேயிருக்க
இருந்துமனமிகுந்து இருதயத்திற்றான்றுதித்தார்
ஈதல்லால்தம்பியரோ இன்னமொருகதைதான்

மாயவரும்பிரமரும் வானோரும்வேதியரும்
நாரதமுனிரிஷிகள் நால்வகையிலுள்ளோரும்
அன்னாளில்தேவர் அமிர்தங்கடையவென்று
பொன்னாருமேருப் பொருப்பேதான் தூணாக
நாகமதுகயிறாய் நாட்டியதோர் தூண்தனக்கு
வாகனையமாமதியு மத்தாகத்தான்சேர்த்து
வானவர்களோர்புறமும் வாலியொருபுறமும்
ஆனவர்கள்பாற்கடலில் அமிர்தங்கடையுமன்று
மலைதாங்கமுன்பிடவே வாசுகியுமப்போது
நிலைதாங்கமாட்டாமல் நீள்விஷங்கள் தானகன்று
மீறியகோராலவிஷம் மிகவெகுண்டுதானெழுந்து
சீறியுலகெங்குஞ் சென்றுபறந்தப்பாலும்
அண்டமடுக்கும் அகண்டமுதற்றான்பறந்து
விண்டலமுழுமூடுருவி விரிந்தவுடலோகமெல்லாம்
பொங்கிவிஷம்பெருகி புகையெழுந்தகோரமுடன்
தங்கியமூவுலகுந் தானுமுண்டுமீள்வதுபோல்
வாரவிஷந்தன்னை வானவருங்கண்டேகி
போறவழியெங்கும் போகவழிகாணாமல்
கண்டுவிஷந்தன்னைக் கலங்கியேவானவர்கள்
அண்டுமிடமெல்லாம் ஆனகைலைசென்றுபுக்கி
தெண்டனிட்டுக்கண்டு சிவனையடிபணிந்து
தொண்டருக்குவந்த தோஷங்கள்தீர்த்தருளும்
பரனேபராபரனே பனிமதியும்வெள்ளெருக்கும்
அரவணியுஞ்செஞ்சடையார் அண்ணலேநீர்கேளும்
கடைந்தமிர்தந்தனனில் காலவிஷந்தான்பிறந்து
அடர்ந்துதிரிலோகமெல்லாம் அந்தகாலமாமெனவே
தொடர்ந்துவருநஞ்சுதனைத் துடைக்கவகைகாணாமல்
கடந்துபயந்தோடிவந்தோம் காலவிஷந்தான்பறந்து
எண்டிசையுந்தான்படைத்த இறையோனேகாவலென்று
தெண்டிரைசூழ்வையமெல்லாஞ் சிவனேயினிக்காரும்
என்றவர்கள்கூடி இறையோர்க்கபயமென்று
நின்றவர்கள்தன்னை நீள்சடையோனஞ்சலென்று
சென்றுபறந்துவந்த தீதானநஞ்சுதனை
ஒன்றுபோல்தானிரட்டி உட்கொண்டாரீசுரரும்
நஞ்சுண்டாரென்று நல்லதொருபார்ப்பதியும்
அஞ்சுவிரல்தன்னால் அழுத்தினாள்பார்ப்பதியும்
எவ்வுயிருங்காக்கவென்று ஈசுரனார்நஞ்சுண்டார்
அவ்வுயிரெல்லாம்பிழைக்கும் அவர்மடிந்துபோவரென்று
கோலவிஷம்பாயாமல குறுக்கேமிடரடியில்
தாலிபிழைக்கவென்று தடுத்தாள்கரத்தாலே
கண்டத்தில்நின்று கறுத்தகளைவிடமாய்
நின்றதுகாணந்த நெற்றிமேலுச்சியிலே

அன்றுபிழைத்தார்காண் அமரர்முனிவரெல்லாம்
திறவிமுனிவரிஷிதேவரொடுமூவரையும்
இறவாமலீசுரனு ரட்சித்தாரம்மானை
ஈதல்லால்வேறுகதை இன்னமொன்றுசொல்லுகிறேன்
ஆதலால்முன்னாள் அசுரனுமுப்புரத்தார்
இவ்வுலகிலுள்ளதொரு எண்பத்துநான்குயிரும்
அவ்வுலகுமிவ்வுலகும் அடங்கலுங்கொள்ளைகொண்டு
இடுக்கங்கள்பண்ணி இருந்தாரே அசுரருமே
துடுக்குமுப்பத்திரமுந் துன்பத்திற்காற்றாமல்
தேவர்களுமிந்திரருந் திசைநான்குமுகத்தோனும்
மூவர்களுமொன்றாய் மூர்த்தியென்றுமீசுரனை
சென்றுவணங்கிச் சிவனேயபயமென்று
இன்றுமுதல்முப்புரத்தார் இடுக்கத்துக்காற்றாமல்
வந்தோம்பராபரனே வஸ்துவேசாருமென்று
அந்தமொழிகேட்டு ஆனாருமேதுசொல்வார்
செங்கணசுரரெல்லாஞ் சிவபத்தராயிருக்கும்
அங்கவரைநம்மால் அழிக்கவேபோகாது
சிறந்தவர்கள்செய்யுஞ் சிவபூசைதன்னையிப்போ
மறந்துவிடப்பண்ணிவைத்தால் வாகாயழித்திடலாம்
என்றுசிவன்சொல்ல எம்பெருமாள்தன்பதியில்
கண்ணுமுகுந்தா கரியமுகில்மேனியனே
அண்ணுதுளபமணி ஐயனே அச்சுதனே
முப்புரத்தோரானாலும் மூவுலகங்கொள்ளைகொண்டு
இப்போதழிக்கதுகாண் என்செய்வோமாயவரே
வண்ணரோசுரர்பால் வாகாகப்போயுரைத்தோம்
திண்ணமுடன்முப்புரத்தார் சிவபத்தரென்றுசொல்லி
அவர்கள்செய்யும்பூசைதன்னை அகற்றினுலிப்போது
சிவனருமுப்புரத்தைச் செய்கிறோமென்றுசொன்னார்
ஆகையினாலும்மை அடியேன்கள்தேடிவந்தோம்
மாய்கைபலசெய்து வல்லோர்சிவபதத்தை
மறந்திருக்கப்பண்ணுமையா மாயாவிமுப்புரத்தோர்
இறந்துகெடுப்பெரிய எம்பெருமாள்பண்ணுமிப்போ
வானவரும்தேவர்களும் மயங்கிநின்றுவார்த்தைசொல்ல
ஆனபெருமாள் யாவருக்குந்தானிரங்கி
விண்ணவரோயுங்கள்பயம் வேண்டாமெனத்தீர்க்க
திண்ணமுடன்முப்புரத்தோர் தங்களுடன்கலந்து
எண்ணமாய்நாமும் இருந்தவர்கள்வாய்தனிலே
மண்ணையடிப்பதற்கு மாயமாய்த்தானிருந்து
தழுவியவர்தனையுஞ் சற்பனையேசெய்வதற்கு
வழுதறவேதான்பார்க்க வருகிறோம்போங்களென்றார்
அகமகிழ்ந்துவானவர்கள் அமரர்பதிசேர்ந்தார்
செகநாதர்வந்து திரிபுரத்தைத்தீயெரிக்க

வந்தார்காண்முப்புரத்தில் மாயோனுமாயமதாய்
விந்தையால்ப்பூசை விழுத்தாட்டவேணுமென்று
புத்தாய்சமைந்து புத்தாவடிவுகொண்டு
வித்தகனார்போயிருந்தார் விரானமுப்புரத்தில்
போயிருந்தபுத்தர்தன்னைப் பொல்லாதமுப்புரத்தில்
தீவினைகளேதென்று சென்றார்காண்புத்தனிடம்
சிறந்தசிவபூசையிங்கே செய்யுந்தலந்தனிலே
மறுத்துமொருபுத்தன் வருவானேனென்றுசொல்லி
புத்தனுடனேயெதிர்த்து புரத்திலுள்ளோரெல்லோரும்
தத்துவங்கள்பேசியிவர் தர்க்கித்தாரம்மானை
நிர்க்கநிறுத்தி நிலைநிற்கவாதுசெய்து
தர்க்கித்துப்புத்தரவர் தனுசாஸ்திரப்படியே
சமையமெனும்வேத சாஸ்திரத்திலுள்ளபடி
அமையும்படிக்கு அறிவுரைத்தார்புத்தனொன்று
வாதாடிமுப்புரத்தார் மலைத்திருந்தார்தேடி
சூதாணும்புத்தனிட சூட்சமறிவோமெனவே
புத்தரோநீரிருக்கும் பூமரத்தைநாங்களுமே
யத்தெரித்துநீறாய் அதுசாம்பலாகவேதான்
பார்க்கிறோம்நீரும் பசுமரம்போலாக்குமிப்போ
ஆக்கினிரானுல் அரனாரும்நீரெனவே
வேதமெல்லாமுமுடைய வேதமேதான்படிய
அண்டமடுக்கும் அகண்டமுதற்றான்பறந்து
விண்டலமூடுருவி விரிஞ்சனுடலோகமெல்லாம்
பொங்கிவிஷம்பெருகி புகையெழுந்தகோரமுடன்
தங்கியமூவுலகுந் தானுண்டுமீள்வதுபோல்
வாறவிஷந்தன்னை வானவருங்கண்டேகி
போறவழியெங்கும் போகவழிகாணாமல்
சண்டவிஷந்தன்னைக் கலங்கியேவானவர்கள்
அண்டமிடமெல்லாம் ஆனகைலைசென்றுபுக்கி
தெண்டனிட்டுக்கண்டு சிவனையடிபணிந்து
தொண்டருக்குவந்த தோஷங்கள்தீர்த்தருளும்
பரனேபராபரனே பனிமதியும்வெள்ளெருக்கும்
அரவணியுஞ்செஞ்சடையார் அண்ணலேநீர்கேளும்
கடைந்தமிர்தந்தன்னில் காலவிஷந்தான்பிறந்து
அடர்ந்துதிருலோகமெல்லாம் அந்தகாரமாமெனவே
தொடர்ந்துவருநஞ்சுதன்னைத் துடைக்கவகைகாணாமல்
கடந்துபயந்தோடிவந்தோங் காலவிஷந்தான்பறந்து
எண்டிசையுந்தான்படைத்த இறையோனேகாவலென்று
தெண்டிரைசூழ்வையமெல்லாஞ் சிவனேயினிக்காரும்
என்றவர்கள்கூடி இறையோர்க்கபயமென்று
நின்றவர்கள்தன்னை நீள்சடையோனஞ்சலென்று
சென்றுபறந்துவந்த தீநஞ்சுதன்னை

பாதம்பணிந்து பலகாலும்பூசைபண்ணி
ஈஸ்வரனென்று எல்லோருந்தான்பணிவோம்
வாசமுடன்முப்புரத்தார் வகுத்துரைத்தசெய்தியினால்
புத்தர்சினந்து பூமரத்தைப்பாருமென்றார்
பத்தரவேமுப்புரத்தைப் பாருமென்றாரம்மானை
பூமரமும்வெந்து பொடிசாம்பல்நீறாகி
பூமரத்தைப்புத்தனுந்தான் பூமரம்போலாக்கிவைத்தார்
கண்டுதான்முப்புரத்தார் காட்சியிதுவென்றுசொல்லி
கொண்டாடிவிட்டுப்போற்றிச் சிறந்திருந்தாரெல்லோரும்
மாயனிடமாயகை மனதறியார்மாபுரத்தார்
நேயமுடன்முப்புரத்தார் நினைவுமிகவழிந்து
ஒருத்தர்தவங்கள் உபதேசந்தான்மறந்தார்
வருத்தமன்றிஈசரிட வாசனையுந்தான்மறந்தார்
பெற்றவரமிழந்தார் பெரியதவந்தான்மறந்தார்
எதிர்த்துவந்தபுத்தனையும் ஈசனென்றுதான்பணிந்தார்
பூமரத்திலமுப்புரத்தார் புத்தனையேதெய்வமென்று
நேமமற்றுவீற்றிருந்தார் நெடுமாலுமப்போது
ஈசர்தனைநினைந்து இப்போதுமுப்புறந்தான்
பூசைதவங்குலைந்தார் போர்பொருதமாட்டார்கள்
வேளையிதுவாருமென்று மேகவண்ணர்தானினைந்தார்
காளையினிலேறுங் கடவுளருந்தாமறிந்து
முந்திமனதில் முயலகனைத்தான்வளைத்து
செங்கிடகாமேருவையுஞ் சிலையாகத்தான்வளைத்து
வாசுகியைநாணாக மால்தானும்அம்பாக
நேசமுள்ளவேதம் நெடும்பரிதேர்தானாக
ஈதுமுகன்சாரதியாய்ச் சங்கரனார்தானடந்தார்
முனைபகழிதானெடுத்து மீயிச்சிலையேற்றி
வருமளவில்மாயனுட மாயகைதனையறிந்து
திருமருவுமுப்புரத்தில் சென்றுநின்றுதான்சிவனும்
காயாம்புமேனி கண்ணருடசூட்சமதை
வாயாரச்சொல்லி வழுத்தமுடியாதெனவே
சித்தத்திற்கொண்டு சினந்துசிலைதானேந்தி
சத்தவொலிநாணசைத்தார் தராதலங்கள்தானடுங்க
கர்த்தனார்முப்புரத்தைக் கண்டுநகைசெய்தளவில்
பத்தரவேமுப்புரமும் பற்பமாய்த்தானெரிந்து
மாபாவிமுப்புரத்தார் மாண்டார்களெல்லோரும்
பூபாலனை புண்ணியஞ்சேர்தன்மருந்தான்
இக்கதையைநன்றாய் இளையோர்க்குத்தானுரைக்க
அக்கதையைச்சொல்லி அடவிகளுமாமலையும்
கடந்துமொருநூறு காதவழிதூரம்
நடந்தகதைகேட்டு நல்லதென்றுபோகையிலே
வென்றியுள்ளவீமன் விஜயவுந்தானிப்போது

அன்றியுமோர்கதைதான் அருளுமென்றுதானுரைத்தார்
மன்னவரே தம்பியரே மறுத்துமொருகதைதான்
இன்னமொன்றுசொல்லுகிறேன் இப்போதுநீர்கேளும்
ஆடகனென்றேயொருவன் அவனிதனிலேதோன்றி
நாடுதனிற்றன்பேர் நயமாய்விளங்கிடவே
பூரணியதேவனவன் மூவர்கணம்மிலுமே
வாரமன்றிவாழ்ந்திருக்கும் வல்லவனிரணியனை
தேவர்களுமிந்திரனுந் திசைநான்முகத்தோனும்
ஏவல்செய்துநாளும் இரணியனைப்போற்றிசெய்து
ஆற்றுமலையவர்கள் அச்சுதனைப்போற்றிசெய்து
குற்றனமர்பாவி கொடுமையெல்லாந்தானுரைத்து
கேசவனுமம்முடைய கிருபையினாலிரணியற்கு
வாசமுடனெந்த வகையினாலானாலும்
சாபமதுதீர்க்கத் தரணிதனில்தான்பிறந்து
மாபாவிதன்கொடுமை மண்ணுவிண்ணுந்தாமறிய
தீர்க்கிறோம்நீங்கள் சிந்தைதனிற்றான்மகிழ
கார்க்கிறோமென்று கண்ணருந்தாமுரைத்தார்
வந்துபிறந்தார்காண் மகிழ்ந்தானிரணியனும்
இந்தப்பிரகலாதன் றனையெடுத்துமுத்தமிட்டு
தந்தையருந்தாயும் தானேபிரியமதாய்
காலுக்குதண்டையிட்டுக் கனத்தசதங்கையிட்டு
மேலுக்குமாராடி விதமாய்ப்பணிபூண்டு
அஞ்சுவயதானளவில் அருமையிட்டுத்தான்போற்றி
கஞ்சனுடமைந்தன் மதலைமொழிகேட்டு
வாகாயவைகேளும் வந்துதென்றுதந்தையுந்தான்
பாகாகவேபடிக்கப் பாலனையுந்தானழைத்து
மூந்துமறைவேதியரே முகூர்த்தமிடுமென்றுசொன்னான்
மைந்தனுக்குநல்லவித்தை வருத்துமென்றுதான்மொழிந்தான்
அந்தமொழிகேட்டு அந்தணனுஞ்சம்மதித்து
இந்தவசன மிதுவேபிரியமென்று
தம்பிபிரகலாதனையே யோதிவிக்க
தும்பிமதவாரணமே துணைசெய்யவேணுமென்று
ஏடுபிடித்து இரணியநமோவெனவே
தேடுதமிழ்வேதியருஞ் செப்பினார்தம்பியற்கு
பேசாமலேயிருந்து பிரகலாததேவனுந்தான்
ஆசானைப்பார்த்து ஐயரேவேதியரே
உலகில்வளப்பம் உணராமலிப்போது
தலைகீழாய்ச்சொன்னால் சம்மதியோ ஆர்தனக்கும்
வளப்பமதுஏதெனவே மறையோனுந்தான்கேட்க
அளம்பொன்றுமில்லை அரிநமோவென்றுசொன்னால்
வேதமழிந்தாலும் விண்ணோரழிந்தாலும்
ஆதவனும்அம்புலியும் அண்டமழிந்தாலும்

ஒருகாலமுமழியார் உண்மைபொருளாகுமிது
திருமாலும்நான்முகனுஞ் செப்புமொழிவேதாந்தம்
ஓம்நமோநாராயணா வென்றுமுபதேசம்
ஞானமிதுவுலகில நற்றுணையாமெவ்வுயிர்க்கும்
மானவபிமானமென்றும் வழங்குதுகாண்லோகமெல்லாம்
என்றுசிறியோன் எடுத்துரைக்கவேதியரும்
சென்றுமறைவேதியரும் செப்புகின்றவார்த்தைதன்னை
மன்னனிரணியர்முன் வந்திருந்துவேதியரும்
தென்னவனேயுன்மதலை செப்புகின்றவார்த்தைதனை
கேட்டிலையோவென்று கிருபையுடன்சொல்லலுற்றார்
நாட்டிகமாயென்மொழியைத் தம்பியருமீறியிப்போ
இரணியநமாவென்று இன்பமுடன்சொல்லுமென்றாஸ்
பூரணியனைமூதுரையாய் மொழியேமாற்றுமதோர்
அரிநமாவென்றுசத்தம் அண்டமெல்லாங்கேட்டிருக்க
சரியாயிரணியனைத் தானெதிராய்ச்சொல்லுவரோ
என்றானுன்மைந்தன் இரணியனேயென்றுரைத்தார்
நன்றாச்செனவே நாழிகையில்மைந்தனைத்தான்
கூட்டிவரச்சொல்லிக் குழந்தைதனைப்பார்த்து
பூட்டிவித்தசொல்லதனைப் பொருந்தாமலேபார்த்து
ஏறுமாறுரைத்தாய் என்பிள்ளாய்தம்பியரே
கூறுமிரணியநமாவென்றுகூறுமென்றார்
அரிநமாவென்று அருளினான்பாலகனும்
எரிஎழவேகோபம் இரணியனுந்தான்சினந்து
சொன்னபடிசொல்லென்று சுடரைமிகக்கொளுத்தி
என்னவதைசெய்தாலும் எடுத்துரையேனந்தமொழி
முன்னமேசொன்ன மொழியல்லால்வேறுமுண்டோ
மன்னவனேஎட்டெழுத்தை மறப்பதுவும்ஞாயமதோ
ஆகாதசொல்லதனை ஆமென்றுசொல்லுவரோ
சாகாவரமுனக்குத் தந்ததினாலிந்தமதம்
வந்ததுகாணென்று மைந்தனிவையுரைக்க
சென்னியசைத்துச் சினமாயிரணியனும்
சொல்லடாவென்று சுதனைப்பிடித்தடிக்க
இல்லடாசொல்லுகிறேன் நிரந்தரமாகவெங்கும்
இருக்கிறார்கண்டாயே எள்ளுக்குளெண்ணெயைப்போல்
உருக்கமுடன்காட்டென்று உதைத்தான்மகன்றன்னை
திரும்பிமகனுந் திருமால்தனைநினைந்து
துரும்பிலுமேயிருப்பார் தூணிலுந்தானிருப்பார்
என்றுபிரகலாதனுந்தானுரைக்க
மன்றுபுகழ்ரத்னமணி வயிரத்தூண்தன்மேலே
இருப்பானோவென்று இரணியனுங்கோபமதாய்
நெருப்பாயெழுந்து நிலவரமோவென்றுரைக்க
அப்போதுபாலகன்தான் அச்சுதனைத்தானினைந்து

இப்போயித்தூணில் இருக்கிறானென்றுரைத்தான்
எண்ணமறயிங்கே என்சேதிதானறிந்தும்
வண்ணமணித்தூணில் வந்திருப்பானென்றுசொன்னாய்
எங்கேயடாவென்று எழுந்தறைந்தான் தூணதனை
கங்கைபங்கன் தூணில் நரசிங்கமாயெழுந்தார்
கண்டவுடன்மைந்தன் கடவுளிவர்தாமெனவே
தெண்டனிடவேணுமென்று செப்பினான்தந்தையிடம்
அந்தமொழிகேட்டு ஆகாதிரணியனும்
வந்தநரசிங்கமுடன் வாகாய்ப்பொருதலுற்றான்
வாய்த்ததென்றுவேளையிது மாயன்மிகநினைத்து
சாய்த்தவனைப்பற்றித் தன்மடியிலேயிருத்தி
வாசற்படிதனிலே வந்திருந்துகூர்நகத்தால்
பாசக்குடல்மார்பும் பகிர்ந்திரண்டுகூறாக்கி
குடல்பிடுங்கிமாலையிட்டுக் குடித்துதிரம்விழாமல்
அடல்கதிரோன்பாதி அஸ்தமிக்கும்வேளையிலே
கொன்றானிரணியனைக் கோயாலர்கைநகத்தால்
போனானிரணியனும் புழுநரகிலம்மானை
மாயோனைவந்து வானவர்கள்போற்றிசெய்து
நாயேங்களுக்காக நரசிங்கமாயெழுந்து
இடுக்கந்தவிர்க்கவந்த எம்பெருமாள்போற்றியென்று
நடுக்கந்தவிர்க்கவந்த நாரணமோதஞ்சமென்று
போனார்கள்வானோர்கள் பொன்னகரந்தானேகி
ஆனாலும்பஞ்சவர்கள் அநேகநெடுந்தூரம்
பாதைதலையவென்று பழங்கதைகள்தான்பேசி
தாதுபுகழ்நகுலன் சகாதேவன்வீமனுமாய்
பூண்டுகொண்டுசொல்லும் புகழ்பெரிய அண்ணாவே
மீண்டுமொருகதைதான் விள்ளுகிறாங்கேளுமென்றார்
கூறுமொருசிவனார் கோயில்திருவிளக்கு
ஆறுஞ்சுடரொளிபோல் ஆறுகிறவேளையிலே
நீண்டவிளக்கதனில் நெய்பருகவேநினைந்து
மூண்டோரெலிவிளக்கை முகத்தினால்தூண்டிடவே
அவியாமலோர்விளக்கு அழகாகநின்றெரிய
உவியாமல்தூண்டுகிற உற்றவெலிதனக்கு
பரமசிவனும் பார்வதியுந்தான்மகிழ்ந்து
வரமருளவேணும் வாவென்றெலிதனையும்
அண்ணலார்தாமும் அரசாட்சியாளுமென்றார்
மண்ணுலகையாளுமென்று வரங்கொடுத்தாரம்மானை
பூவுலகிலேபிறந்து புரந்தரன்போலோகமெல்லாம்
தேவரடிபணியத் தேசமெல்லாமோர்குடைக்கீழ்
ஆளுகிறான்லோகமெல்லாம் அயிராபதத்தனைப்போல்
வாழுகிறான்மாவெலிதான் வையகமெல்லாந்தழைக்க
ஆயிரம்லிங்கம் அடைவுடனேபூசைபண்ணி

கோயில்குளமுங் குடிபடையுந்தான்றழைக்க
தானதவமும் தன்மபரிபாலினமாய்
வானவர்க்குமெட்டாத மகாபூசைகுருபூசை
ஞானசிவயோகியென நற்குணமும்விற்பனமும்
ஈனமூரக்கம் இரப்போர்கலிதீர்த்து
இரப்போர்க்கொருநாளும் இல்லையென்றுசொல்லாமல்
பசியாமலுண்ணப் பாக்கியமுந்தானருளி
ரிஷிகள்தபோதனர்கள் நெறிமுறைமைதப்பாமல்
பாராளும்நாளில் பச்சைமால்சோதனைக்கு
சீரார்புவியில் திருமாலறியவென்று
வந்தார்புவியில் மாவெலிதன்சேதிகண்ட
சந்தோஷமாகத் தவத்தின்பெருமைகண்டு
ஒருவிளக்குத்தான் தூண்டி உலகமெல்லாந்தானுண்டு
இனவிளக்குலோகமெல்லாஞ் சிறப்பாயிருக்குதென்று
இவனுடையதர்மம் ஈரேழுலோகமெல்லாம்
சிவனுடையரூபமதாய்த் தீபச்சுடரொளியாய்
எங்கும்விளக்கொளியாய் இருக்குதுகாண்தானதவம்
பொங்குதுதான்பூலோகம் பொய்யாமல்யாவருக்கும்
இவன்செய்யுந்தானதவம் எள்ளளவுங்குற்றமில்லை
அவன்செய்தழிக்கவென்றால் ஆகாதெவராலும்
வள்ளல்கொடுத்தவரம் வளருதுகாண்மாவெலிக்கு
உள்ளக்கருத்தில் உபாயமென்னசெய்வமென்று
கள்ளத்திருடன் காயாம்புமேகவர்ணன்
மெள்ளமனதில் வேறேநினைவுகொண்டு
மாயோனுந்தான்கேட்க மாவெலியுமப்போது
நேயோனுந்தானதவம் நீணிலத்திலசெய்வதற்கு
உசந்தநதிமூழ்கி உற்றநதிக்கரையில்
புகழ்ந்துசிவபூசை பூரணமாய்த்தான்முடித்து
மாதானம்பூமி வஸ்திரதானமுதல்
கோதானமும்நதியில் கொடுத்தருளவேபலவும்
கன்னிகைதானங்கள் காவலனுந்தான்கொடுத்து
உன்னிமனதில் ஒருமித்துக்கையாலும்
கொடுக்கிறுனென்று கோபாலர்தான்கேட்டு
அடுக்கவேசென்று அந்தணர்போல்தானாக
நரைதிரையுமூப்பும் நடுக்கமுடன்வாதமுமாய்
புரையிருமலாகிப் புகைந்திருண்டகண்களுமாய்
நாசியொழுகியுடல் நாடிதளர்ந்திடவும்
பாசிபற்றிப்பல்லும் பழுவாய்ஒழுக்குமாய்
போற்றும்புடவையது வெள்ளலாய்க்காற்றாட
பீற்றப்புடவையது பிராமணனாய்த்தானிருந்து
அன்னத்தருமாவெலியே அட்சதையுந்தாவெனவே
பன்னவனேயுன்னிடத்தில் வந்தேனெனவேதான்

அட்சதையுந்தான்கொடுத்து அந்தணனுக்கீந்தியென்றான்
பட்சமுடன்றேகியென்ற பார்ப்பானை வாருமென்று
ஏதுனக்குவேணுமென்று இன்பமுடன்மாவெலியும்
சாதுவுடன்தான்கேட்கத் தள்ளாடிமாமறையோன்
இடறிவிழுவார்போல் எய்ப்புமிளைப்புடனே
வடதேசமேயிருந்து வந்தேனுனும்மிடத்தில
உன்னிடத்தில்வந்தேன் உத்தமனேயென்றனுக்கு
நன்னிலத்தில்நானிருக்க நாட்டமுடனிப்போது
இருக்கவிடந்தாரும் என்னுடையசாலாலே
சுருக்கமாய்மூன்றடிமண் சொல்லித்தத்தஞ்செய்யும்
போதுமெனக்குப் புண்ணியமேசெய்யுமென்றார்
வாருமையாநீர்தாமும் மற்றதொன்றுங்கேளாமல்
இவ்வளவோகேட்டீர் இப்போதுநான்தாரேன்
குவ்வுபுயமாவெலிதான் கொடுக்கவொருமனதாய்
கெண்டிதனையெடுத்துக் கெங்காசலமுவந்து
தெண்டிசையில்வேதியர்க்கு தத்தமதுசெய்கையில்
தக்கதொருசுக்கிரன்றான் தன்னுடையசிஷனென்று
மிக்கதொருகெண்டித் தாரையில்மீன்வண்டாக
சிக்கெனவேதானடைத்தான் தெரிந்துமறைவேதியனும்
தெர்ப்பையாற்குத்திடவே கிட்டியொன்றுகேட்டுவிட
நிற்பளவிலசுக்கிரனை நிந்தித்தாரெல்லோரும்
ஈவோர்தனைவிலக்கி இப்படியாய்க்கொற்றவரும்
தீவினையாய்த்தான்முடியுஞ் செய்வோனைத்தான்விலக்கில்
என்றுசபைசொல்ல இருந்தான்தலைகவிழ்ந்து
ஒன்றுமுரையாமல் ஊமையைப்போல்தானிருந்தான்
தாரையிலுல்தண்ணீர் தாராளமாய்விழ்க
பூரையென்னமாவெலியும் புகழ்ந்துதத்தஞ்செய்தனனே
தேற்றமதுவாங்கித் திருமாலும்பூவுலகில்
வைத்தாரொருபாத மண்ணில்வானிலொருபாதம்
மற்றுமொருபாதத்திற்கு வகையேதெனக்கேட்டார்
கர்த்தன்திருமால் கருணைக்கடவுள்தாம்
ஈரடிமண்தானு மிவ்வுலகுமவ்வுலகும்
ஓரடிமண்ணெனக்கு உன்மேல்நிலுவையென்று
மாவெலியைவன்சிறையில் வைத்தார்காண்வானகத்தில்
தேவலோகஞ்சிறந்து சிறையிருந்தான்மாவெலிதான்
வானவருந்தேவர்களும் மாயோனைத்தான்வணங்கி
தானவரும்வேதியருஞ் சதுர்வேதநான்முகனும்
மாயவனைவாழ்த்தி மகிழ்ந்திருந்தாரம்மானை
தூயதொருபஞ்சவருக் தூதுதாமேநடந்து
ஆயனிடசந்திக்கு ஆசையுடனவனுமாய்
வேகமுடனடந்து விதுரனகாலையென்று
தாகமுடன்வீமன் தன்மார்க்கனைத்தான்தொழுது

வைகுந்தஞ்சேர வழிநிலையவேணுமென்று
மெய்கண்டமூர்த்தியின்னம் விளம்புமொருகதைதான்
சொல்லுகிறேன்மூன்றாள் சுருதிமுதல்முக்கதைதான்
புல்லும்புவியும் புனல்முகடு ஆகாசம்
கல்லுங்கரடுஞ் சடலுந்திசைகளெட்டும்
அல்லும்பகலும் அட்டதிக்குமெண்டிசையும்
இல்லாதகாலம் இறையோனொருத்தனுமாய்
அல்லலறவேயெங்கும் அகண்டமெல்லாந்தானாகி
வெளியாகியெங்கும் விளக்குமொளியாகி
அழியாதவஸ்தொருவன் ஆதியாய்நின்றமுதல்
ஏகவெளியாகி எல்லாம்நிரந்தரமாய்
ஆகமவேதமன்றி அசைவுபலந்தானுமன்றி
தானாகிநின்ற சருவதயாபரனாய்
ஊனுயிராய் உடலுயிருலோகமுமாய்
வானாய்நிலனாய் மலைகள்சராசரமாய்
பானாய்மதியாய் பலவகையாய்தோற்றமுமாய்
அண்டமடுக்காய் அண்டபகிரண்டமுமாய
பிண்டமுதலண்டமுமாய்ப் பிரமாண்டகோளகையாய்
தட்டுநிலைதற்பரமாய் தராதலங்களுநேர்வனமாய்
எட்டுத்திசையும் எழிலானபகவானும்
ஆகட்டுமென்று அருளிநினைவுகொண்டு
வாசிட்டருஷியென்றார் வந்துமுன்னேநிற்கலுற்றார்
எல்லாமுண்டாக்குமென்று இறையோன்பணியிடத்தில்
சொல்லாமுடிந்ததுகாண் தோற்றமொடுக்கமெல்லாம்
தற்பரமாய்த்தோன்றிச் சராசரங்களுள்ளதெல்லாம்
பொற்பரத்திலேயிருக்கப் புண்ணியனார்தான்தோன்றி
பரந்தோன்றிலநின்று பரத்தில்சிவந்தோன்றி
சத்திதனிற்பூதனல்ல தத்துவத்தில்நாதமுமாய்த்
முத்தினொளிபோல மூலவிந்துதான்தோன்றி
விந்துதனில்நால்வேதம் வியனாறுசாஸ்திரமும்
தத்துவங்கள்தொண்ணூற்றாறுடனேதானமைந்து
சத்துமறுபத்துநாலுகலைக்கியானமுமாய்
ஆறுதாரமுதலாய் ஐம்பத்தோரட்சரமும்
ஏழுசதகோடி வேதமுதல்மந்திரமும்
மந்திரத்தில்வந்ததுவும் மாகவந்தசதாசிவமும்
அந்தசதாசிவத்தில அதியமயேசுரனும்
இந்தமயேசுரத்தில் ஈனறோருருத்திரனும்
அந்தோருருத்திரனில் வாசமுள்ளவிஷ்ணுவும்
விஷ்ணுவிலேயிருந்து விதிப்பிக்கவேதாவும்
சட்டமிடும்வேதாவில் தரித்தவொருஆத்துமத்தில்
ஆத்துமாவிலேயிருந்து ஆகாசந்தான்தோன்றி
சாற்றுமிவர்கள் தன்னிலேயாவுந்தான்

வாய்விலேதேயுவுந்தான் வந்திருந்துஇப்போது
தேய்விலேஅப்புவுந்தான் சிறப்பாகத்தான்தோன்றி
சிறப்பான அப்புவிலே சிறந்ததொருமண்தோன்றி
அறப்பெரியமண்ணிலேதான் அரூபிவித்தாயுண்டாக்கி
ஒன்றுபத்துநூறாய் கோடிநூறாயிரமாய்
அன்றுவிதிகையாலே அனந்தம்நூறாயிரமாய்
வானும்புவியும் வகைபலவுந்தானாகி
ஊனுமுயிரும் ஊர்வனமும்பட்சிகளும்
திக்குத்திசையும் திசைசூழ்ந்தவையகமும்
திக்குமோர்அஸ்தகிரி கோராக அஷ்டகெசம்
ஈரேழுலோகமுமாய் எண்பத்துநான்குயிரம்
பாரேழுந்தாங்கப் பணமுடிகளாயிரமாய்
யோனிபலவாகி உருவதுவுமெவ்வேறாய்
மாநிலமேற்புற்பூடாய் மரங்கள்விருட்சமுமாய்
நால்வகையுஞ்சாதியுமாய் நால்வேதசாஸ்திரமும்
நூல்வகைகளாகமுமாய் நோன்புவிரதமுமாய்
ஆண்பெண்ணிருவகையாய் ஆகாமியமுதலாய்
காண்பதுகண்காமங் கலைக்கியானமும்பெரிதாய்
ஆசையெல்லாங்கூட்டி அடக்கிவைத்தார்பொக்கிஷமாய்
ஓசைபஞ்சசுரூபம் உருவுசுவைநாற்றமுமாய்
வாசலோரொன்பதுமாய் மட்பாண்டம்வீடாக
பாசமெனுமைம்புலனும் பரும்பூதம்நாதகணம்
தத்துவங்கள்தொண்ணூற்றாறுடையசஞ்சலமும்
மத்துஞ்சராசரங்கள் மண்டலங்கள்மூன்றுடனே
சுத்தனண்டகூடஞ் சுவருமடங்கலுமாய்
பித்தகனார்ரட்சிக்கும் பெருஞ்சீவன்தாமுதலாய்
சந்திரனுஞ்சூரியனுந் தாரகைநட்சேத்திரமும்
இந்திரனும்வானவரும் இமையோர்முனிவர்களும்
தந்திரமாய்த்தான்வகுத்துச் சகமெல்லாமுண்டாக்கி
அந்திரத்தில்பேச்சு ஆர்பெரியோனென்றறியும்
நாமேபுவியில் நால்வகையுமேபடைத்து
தாமேநமக்குச் சரியில்லையென்றிருக்க
மாலவனந்தானெல்லாம் வகுப்பித்தோமென்றுசொல்லி
ஆலமரத்தேறி அவர்துயின்றாராமாகில்
வீரவிரதமுமாய் விபரிதங்கள்தான்வளர்ந்து
கார்முகில்மேனியனார் கண்ணர்தனையிப்போது
சென்றவனைநாமுஞ் சிலுக்கிட்டுப்போர்பிடித்து
வென்றவனைநாமும் வெகுபெரியோன்வேதனென
நினைந்துமனதிலெண்ணி நெருப்பிருகண்தீயெரிய
மனைந்ததெல்லாம்பொய்யாய் வகுத்ததெல்லாமிவனேதான்
நன்றாச்சொனவே நடந்தான்வைகுந்தமதில
அன்றிடைச்சிகையால் அடியுண்டமாலிடத்தில்

சென்றுனிருந்தான் சீராட்டுவார்த்தையதாய்
கன்றுற்கனியெறிந்த காயாம்புமேனியனே
உன்பேச்சுமென்பேச்சும் உலகறியவேணுமென்று
தன்பேச்சுமேலாகத் தானெண்ணிநீயிருந்தால்
என்பேச்சுங்கீழாய் இருப்பதுவுஞாயமதோ
முன்பேச்சுமூவருட முப்பத்துமுக்கோடி
தேவர்களுமற்ற சிவபலாசிகளும்
மூவர்களுக்காமறிய முழுதம்படைத்திருக்க
என்படைப்புக்குள்ளா யிருந்துபிழையாமல்
எம்பிரான்தானறியச் சத்தியமாய்த்தான்பொறுத்தேன்
எம்பிரான் தானறிய இனிமேல்பொறுக்கேன்
ஈரேழுலகும் இகபரமுந்தானறிய
பாரேழும்நான்படைத்தேன் பச்சைமால்நீயேது
இப்பாலென்னையால் ஈரேழுலகமெல்லாம்
மெய்ப்பானசத்த மேகமுடனேழ்கடலும்
அஷ்டகுலபர்வதமும் அஷ்டமாநாகமுதல்
அஷ்டகெசமெட்டும் அடங்கலுமேதானாக
மரிஷிமுதல்சத்தரிஷி மைந்தருமென்னுடைய
அரிதாசநானீன்ற அன்புடையமைந்தர்கள்தான்
குருக்களொடுதேவர் குலாவுசந்திரசூரியரும்
பெருக்கவெகாசிபரும் பெரியோர்முதலாக
அட்டவசுக்கள் அசுரரொடுராட்சதரும்
இட்டமுறுகாந்தவர் சித்தவித்தியாதரரும்
கிம்புருடர்கின்னரர்கள் கணநாதர்தன்னுடனே
தும்புருநாரதருந் தோற்றமெல்லாமென்னிடத்தில்
இந்திரனுமக்கினியும் எமனுடனிருதி
வந்தருணன்வாய்வு குபேரன்மாயீசானன்
இஷ்டமுடனெட்ட திக்குப் பாலகருமென்னாலே
திஷ்டமுடனகலச் சீவன்முதலென்னாலே
உண்டானதென்று உன்மனதிலெண்ணுமம்
விண்டோமிவனேயென்று மேதினியிலுன்னுடைய
உத்திக்கமலத் துதித்தானிவனெனவே
சித்தித்திருந்ததெல்லாந் தீர்க்கமுடன்விட்டுவிடு
எதிரிலென்றால் என்னுடையகைநினைவாய்
வாதினாலெவ்வுயிரும் வகுத்துவிடாதிருந்தால்
ஆரைநீரட்சிப்பாய் அச்சுருபமில்லாதால்
பேரையறியாதப் பேச்சதுதான்பேசுவரோ
சுவரில்லாச்சித்திரமுந் தொட்டெழுதவல்லாயோ
எவரைமயக்குகிறாய் இத்தொழிலைவிட்டுவிடு
காலவரையுநீதான் ரட்சிப்போமென்றதெல்லாம்
மால்பெருமைபேசாதே மறைந்துவிடுமிப்போது
உன்னைவிட்டுவேறே உனைப்போலொருவனுமாய்

பின்னையுண்டாக்கிப் பிரியமுடனாட்சியென்மேன்
ஆற்சமுடன்பாற்கடலில அங்கேபள்ளிகொண்டால்
ஏற்கவேயோடி இப்போதொளித்திருப்போம்
என்னுடையபேரன எல்லார்க்குமகாரிஷிகாம்
உன்னுடையசெய்வினையால உனனையேதான்சபித்தான்
பத்துச்செனனம் பாரில்பிறந்திருந்தும்
மூததுமந்தச்சாபம் முழுதுந்தொடர்ந்துவர
விட்டதறியாயோ விதித்தெழுதுமென்கையினால்
இஷ்டமுடனந்த எணபத்துநான குலட்சம்
எலலாவுயிர்க்கும் இன்னபடியெனறெழுதி
கல்லாயென்கையுங் கருத்ததுவுங்காணீரோ
உன்னுடையவுந்தியிலே உதித்துவந்தோமென்றுசொல்லி
என்னுடையபேரை இகழ்ச்சியாய்ச்சொன்னீரே
முந்தவொருதூணில் முளைத்தெழுந்தசிங்கமதாய்
வந்துஇரணியனை மார்பைப்பிளந்துவிட்டீர்
அந்தத்துணுந்தனக்கு அன்னையோதந்தையோதான்
தந்தையதுதானானல் தகப்பனுநீயெந்தனுக்கு
அக்கினிதான்மூங்கிலுக்குள் அவதரித்துவந்துபின்னும்
முக்கியமாய்மூங்கிலெல்லா முழுதும்வெந்துநீறுசி
போட்டதுபோலநானும் புந்திதனில்வந்துதித்தேன்
வாட்டமில்லாவுந்தனுக்கு மாறுனாய்வந்துதித்தேன்
என்றுமலரோன் இவையுரைக்கமாயோனும்
நின்றுமனதில் நினையாதெல்லாநினைந்து
வேதனிவைசொல்ல வெந்தணலில்நாராசம்
காதில்வெகுதுன்பங் கையாலசொருகினர்போல்
அகோரம்பிறந்து அனலாய்ப்புகையெழும்ப
விகாதமுடனகைத்து வேதனுக்குஇந்தமதம்
வந்ததென்னவென்று மனதிலெண்ணமாயோனும்
இந்தமகிமை இனியறியவேணுமென்று
வேதாவைப்பார்த்து விஷ்ணுவுங்கோபமதாய்
மாதாவுனக்கெந்தன் வயிறியென்றறியாமல்
தோயுரைத்தாய் சிறுபிள்ளையாகையினால்
வேதாவேநீதான விவரமறியாமல்
மீதாய்ச்சிறுபிள்ளாய் வெகுளியாய்த்தானுரைத்தாய்
தந்தையதுகுற்றமென்று தான்சினக்கலாகாது
எந்தவிதகம்மையுந்தான் இகழ்ச்சியாய்த்தானுரைத்தாய்
இப்படிநீசொல்ல எவர்பொறுப்பார்கண்டீரே
அப்படிக்கொத்தபிள்ளை அகங்கள்தான்செய்திட்டதில்
உன்னைப்போலெந்தனக்கு உற்றபிள்ளைதானிருவர்
பின்னைப்புயபலமும் பராக்கிரமமுள்ளவராய்
சதுவுடன்முன்னாள் என்வயிற்றிலேபிறந்து
தந்தையென்றுபாராமல் தாடாண்மைதன்னுடனே

வந்தெதிர்த்தநம்முடனே மற்பொருதுந்தானவனை
கொல்லமுடியாமலமனங் குழைந்துவெகுநாள்பொருதி
வெல்லவுபாயம் வேறேநினைவுகொண்டு
சற்பனையாய்க்கொன்று தாரணியிற்போட்டுவிட்டேன்
அப்படியேவந்தனக்கு அறிவுவரச்செய்தாக்கால்
உற்பனமென்றெண்ணாது உன்னகந்தையில்லாது
நற்புடையதேகமதில் நல்வினைகளாயிருந்த
பிணந்தனையுங்கீறிப் புறையறவேதானூற்றி
பண்புடனேதானிருந்தால் பதையாதேயாறிவிடும்
அத்தன்மைபோலே அகந்தைசெய்தபிள்ளைகளை
உந்தன்சிரசில் ஓர்சிரசைசூரனூர்
முந்தவேகிள்ளுகையில் முளைத்ததோவுன்சிரசு
அந்தமட்டுமுந்தனுக்கு ஆண்மையொன்றுமில்லாதான்
எந்தமட்டுமுன்செய்தான எவர்தனக்குந்தலைவன்
அனந்தம்பலமுடிகள் ஆயிரந்தன்னிலொரு
கனத்ததனங்கள் கனத்தசிரந்தோன்றனக்கு
பாதாளலோகம் படைத்தோமெனும்பெருமை
மீதாகப்பேசுவது வீரியமோவுந்தனுக்கு
செல்லுமுந்தன்வேதமெல்லாஞ் சோமுகாசூரனுந்தான்
நில்லுமெனவேபறித்து நெடுங்காலங்கொண்டேகி
மீன்வடிவுதானெடுத்து வேதமதைநான்பறித்து
நான்மிகவுந்தந்த நன்றிமறந்தாயே
நச்சுமரமானாலும் நட்டமரந்தன்னையிப்போ
அச்சமாநாமும் அழிப்பதுவும்போதாதே
என்பதினால்நாமும் இந்தமட்டுந்தான்பொறுத்தோம்
உன்பலத்துக்காற்றமல் ஒருத்திருந்தோமெண்ணாதே
உயுத்தம்பண்ணிநாமும் உன்னைமிகக்கொல்வதற்கு
சயித்தின்றென்குற்றமதைத் தள்ளியிங்கேமீறிவந்தாய்
இனிமேலுங்குற்றமில்லை என்றேநெடுமாலும்
கண்சிவந்தமாயன் கண்கள்பொறிபறக்க
ஒத்தெழுந்துவார்த்தைசொல்ல உந்திமலரோனும்
துரத்திவெகுண்டவர்போல் துணுக்கென்றெழுந்திருந்து
ஒருவர்க்கொருவர் ஒருபூசலாய்விளைந்து
இருவருமப்போ ரெதிர்த்துப்பொருவதற்கு
மட்டுமிஞ்சுவார்த்தைகளாய் வாதுபலதான்கூறி
கட்டுவிடப்பேசிக் காவலர்கள்தானடுங்க
குதித்தாரிருபேருங் கோடிமுடிகள்தானதிர
துதித்தார்பெருமாளும் துடைதட்டியேதுசொல்வார்
முன்னாளரக்கர்தன்னால் முறையிட்டாய்நம்மிடத்தில்
மன்னுவுனக்காக வந்துநான்ராட்சதரை
கொன்றுங்கள்தெய்வ பதவிகொடுத்தோமே
சென்றுங்கள்தெய்வப் பதவியதுசேர்ந்திருந்தும்

கன்றிமறந்தெல்லைப்போ னைபாண்டியன்னுமிருய்
மன்றில்பொருக வாதாடிவந்தெதிர்த்தாய்
இனியறிவோமென்று எதிர்த்தாரிருபேரும்
பனிவரைகள்ரெண்டும் பகைத்தெதிர்த்துநின்றாப்போல்
திக்கெட்டுந்தானதிரத் திசைகள்கிடுகிடென
தர்க்கமிட்டுயிந்தத் தரணியெல்லாந்தானடுங்க
இடசாரிமாயன் எடுத்தடியும்வைக்கவுந்தான்
அடைவுடனேவேதன் அடுத்துவலசாரி
கால்களொடுகால்மாறி கைகளொடுகைசேர்த்து
மேல்களொடுமேல்சேர்த்து வேகமுடன்தானிருவர்
ஒற்றமிகுத்து ஓங்காரங்கொண்டெழுந்து
ஆர்த்துச்சினந்து ஆங்காரங்கொண்டெழுந்து
கடுங்கிமலைகலங்கி ஒட்சேத்திரமுதிர
கடுங்கோபங்கொண்டு கதிரோனுந்தான்மறைய
பூமியதிரப் புவனம்பதினாலும்
சாமிதிருமாலயனார் தர்க்கமதுக்காற்றுமல்
ஆரவதலைமாற அண்டங்கிடுகிடென
இரவுபகலாக எம்பெருமாளன்னேரம்
இருபேருந்தான்பொருந்தார் இமையோருந்தானடுங்க
ஒருவற்கொருவ ரொத்துப்பொருகையினால்
குத்துகின்றசத்தமது கொண்டலிடிபோலாகி
எற்றுகின்றகால்களினால் எடுபட்டுமாமலைகள்
தூளாய்நொறுக்கித் தூளாய்ப்பறந்துவிடும்
ஆளாயிருபேரும் அடலாய்வெகுவுகொண்டு
வலசாரியாக மாயோனடிபணிந்து
மலரோனிடசாரி வருவதுவும்பூவுலகில்
இராவுவந்துமூடுகைபோல் எம்பெருமான்தன்பேனி
இப்படியொருகோடிக்குள் இரவுபகலாய்விடுமாம்
மற்பிடித்துச்சக்கரம்போல் வட்டமிட்டுச்சுற்றுகையால்
பூவிலகிலுள்ள புல்பூடுசிவசெந்து
தாவுமிடமில்லாமல தயங்குமாமந்தரத்தில்
ஆசையினாற்றேவர்கள்தான் அயிராபதத்தினிடம்
மாய்கைமருள்கொண்டு வந்துமுறையிடவே
அவர்கள்முறையிடுமுன் அயிராபதத்தோனும்
இவர்களுக்குமுன்னே எம்பிரான்தன்கலக்கம்
ஆனால்சிவனிடத்தில் அபையமிடவாருமென்று
போனார்கள்தேவரெல்லாம் பொன்மலையைத்தானோக்கி
ஆரனேயுனக்கபயம் அச்சுதனேமுக்கணனே
பரனேயுனக்கபயம் பாருலகிலிப்போது
மாலோனும்வேதாவும் மல்லுத்தமாகையினால்
நாலாவகைச்சீவன் நாங்கள்முதலிப்போது
நிற்கநிலையில்லாமல் நீந்திவந்தோமுன்பாதம்

தக்கதுணைவீரனவே தானுவேவகம்பிவந்தோம்
சூறாவளிகாற்றுச் சுவல்காற்றுப்போலாகி
நீறுகிலோகம் நெருப்பாயெரியுதையா
அந்திரமும்வானும் அச்சழிந்துபோகுதையா
இந்திரனும்அஷ்டதிக்கும் எல்லாமலையுதையா
சந்திரனுஞ்சூரியனுந் தானொழிந்துபோனார்கள்
மந்திரங்கள்வேதமெல்லாம் வரமழிந்துபோகுதையா
அடிக்குறிலேபோர்ந்து அலைகடலுந்தான்சுவறி
உடுக்களுதிர்ந்து உயர்முகடுந்தானிடிந்து
எல்லாந்தடுமாறி எங்குதுகாண்மூவுலகும்
நில்லாநிலையில் நிற்கும்பராபரமே
நாதனேயெங்கள் நடுக்கந்தவிர்த்தருளும்
வேதனிடபோரும் விஷ்ணுவின்தன்பேரும்
பார்க்கமுடியாது பரனேபராபரனே
கார்க்கவிதுசமயங் கடைக்கண்திருவையினல்
ஏறிட்டுப்பாருமையா இருவரிடந்தன்போனா
இறையவனேயெங்கள் இடுக்கந்தனைத்தீர்க்க
முறையோமுறையோகாண் முக்கணனேதஞ்சமென்று
இமையோர்முறையிடவே ஈஸ்வரனுந்தானிரங்கி
அமையுமமையுமுங்கள் ஆபத்துத்தீர்ப்போம்நாம்
என்றுசிவனார் இருவரிடபோர்விகை
குன்றுவடிவாய்க் கொழுங்கனலாயத்தான்வளர்ந்து
ஒன்றுசகலோகம் ஊடுருவித்தானளாந்து
இருவர்தனக்கு இதவாய்நடுவாகி
உருவன்றி அக்கினியாய ஓங்காரக்கம்பமதாய்
ஒருருவாய்நின்றா உருகிக்கனலாகி
ஆருமறியாத அகண்டவெளியாகி
அந்தமலைகண்டு அரியுமயனதானும்
சிந்தைகலங்கித் திகைத்துநெடுமூசசெறிந்து
அக்கினியைக்கண்டு அகண்டிருவர்தான்விலகி
நிற்கின்றார்கண்கள் நிலமதுதான்பறந்து
பக்கமெல்லமக்கினியும் பலமலையுமக்கினியும்
திக்கெல்லாமக்கினியாய்ச் சிவந்ததுகாண்லோகமெல்லாம்
எந்தவிதமென்று இருந்தானமதிமயங்கி
வந்தசிவசோதனையை வகுத்திபமாட்டாமல்
நொந்திடைந்துநின்றளவில நோக்கமுடனேசிவனும்
இந்தமகிமை இவரறியாரென்றுசொல்லி
ஞானக்கண்கொண்டறிவார் நல்லோர்பெரியோர்கள்
ஊனக்கண்கொண்டறிய ஒவ்வாதேவராலும்
பார்க்கமுடியாது பாவியேயென்றுசொல்லி
தீர்க்கமுடனிருவர் தெளிந்துவகைபேசி
இந்தமலைப்பெருமை யாமறியவேணுமென்று

அந்தமலையை அடிமுடியுந்தானறிய
தங்களிலேசம்மதித்துத் தானேயிருபேரும்
அங்கெழுந்துவேதன் அன்னவடிவாகி
முடிதேடியேபறந்தான் முகடுவெளியூடுருவி
அடிதேடிமாயன் ஆதிவராகமதாய்
மேலேழுலோகம் வேதனுமேபோயறிய
சீலமுடனேபறந்து தேடினன்விண்ணிடைந்து
கீழேழுலோகங் கேசவனுந்தானிடைந்து
நீளநுழைந்து நெடியோனுங்காணமல்
வாடிமனதிடைந்து வந்திருந்துமாயோனும்
தேடியுங்காணமல திரும்பினு மாயோனும்
வந்திருந்துமாயன் மனதிற்பலநினைவாய்
இந்தவுலகும் ஈரேழுலோகமெல்லாம்
ஆராய்ந்துதேடி அரைக்ஷணத்திலாயிரமாய்
பார்பிளந்துங்காதவழி பாராய்ந்துங்கண்டறியோம்
ஆதிவராகமெனும் அதிரூபங்கொண்டெழுந்து
சோதிதனைத்தேடி தொலவுலகூடுருவி
கொம்புகளுந்தேய்ந்து குளம்புகளுந்தான்தேய்ந்து
சம்புசிவனபாதந் தான்காணமாட்டாமல்
வருஷமொருநூறு மண்ணுலகுமோரேழும்
விரசுகொண்டுபாதாள மெல்லாம்போயூடுருவி
இன்னபடியென்றறியோம் ஈசுரின்தனபாதம்
அன்னமுயர்ந்தோன் அவன்காண்பதேதெனவே
எண்ணிமனதில் இறையோனுந்தானினைந்து
மண்ணிலிருந்து மனதிற்றியானமதாய்
ஞானக்கண்கொண்டு நாட்டத்திலநோக்கமதாய்
மாய்கைக்கருத்தாய் மவுனமாய்த்தானிருந்தார்
பூட்சிவடிவுகொண்டு பறந்தொருவேதாவும்
கட்சியொருகாதங் கணப்பொழுதிலாயிரமாம்
வெளிகடந்துசென்று மேலேழுலோகமெல்லாம்
தெளிவுசற்றுமில்லாமல் இளைத்துமனமிடைந்து
அப்பாலும்நூறு ஆயிரங்காதவழி
மெய்ப்பாய்வெளிதாண்டி மெய்யசந்துவேதாவும்
சிறகிரண்டுந்தான்தேய்ந்து செயல்முழுதுந்தான்குறைந்து
அண்டகடாகமட்டு மாராய்ந்துமின்னமுமாம்
கண்டதில்லைநாமுமினி கம்பத்துத்தன்முடியை
இத்தூரம்வந்து இப்படியேயல்லாது
சற்றுமலைகிட்டச் சமீபமதுகாணமல்
அளவற்றசோதனைக ளாராய்ந்துமுற்றுத
களபமணிமாயன் கண்டானோவெப்படியோ
ஆரறியப்போறார்காண் அளவளவாய்நின்றேனே
பேரறியாச்சோதியிது பேச்சுக்குமெட்டாது

அங்குமிங்குமொன்றா யடிமுடிகாணாதே
எங்கும்நிறைந்திருக்கும் ஈஸ்வரனேயல்லாது
வேறேயுபாயம் விடைவுசற்றுமில்லையிங்கே
கூறேனொருவசனங் கொண்டல்வண்ணன் தன்னுடனே
பகைமுடித்துக்கொண்டொரு பாவத்துலையாதெனவே
வகையாயுறவுசெய்து மாலுடனுங்காழும்
இணக்கமுடன்கூடி இருந்துவிடாமலிப்போ
பிணக்கமுற்றாலும் பிழைமோசம்போமே
என்றுமலரோன் எண்ணிமனம்புண்ணாகி
ஒன்றுமுறையாமல் உள்ளமெல்லாம்புண்ணாகி
இருக்குந்தருவாயி லீசர்முடிமேலிருந்து
வருக்கமுள்ளதாழை மலர்தான்வருகிறதை
கண்டுமலரோனுங் கற்பனையாய்த்தானினைந்து
உண்டுபண்ணிப்பொய்யை உரைக்கமனதிலெண்ணி
பொய்சொன்னோமானால் பொருந்தவேசொல்லவென்று
மெய்யாகச்சாட்சி விளம்புமந்தக்கேதகையே
வசப்படுத்திக்கொள்ள மனதிலினைந்துகொண்டு
இசைப்படுத்தவேதான் நேராகவாரதொரு
கேதகையேநீதான் கிருபையுடனெங்கிருந்து
மாதகையாய்வாரீர் வருத்தமென்னசொல்லுமென்றார்
அப்போதுகேதகைதான் ஐயனே இனிகேளும்
இப்போதுஈஸ்வரனார் ஏற்றசடைமுடிமேல
இருந்துதவறிவிழுந் தெடுப்பட்டுநான்வாரேன்
பொருந்தவேநான்பாவி பொல்லாதகாலமதாய்
தவறிவிழுந்து தங்குமிடமில்லாமல்
அவதிமிகப்பட்டு அந்தரத்திலேயலைந்து
வாடியிடைந்து வருகிறேனித்தூரம்
நாடியசைந்து நடைதளர்ந்துகால்கள்நொந்து
வருகிறேனையா மகாகோடிகாலயுகம்
ஒருத்தரையுங்காணேன் உன்னையெதிர்கண்டேனிப்போ
இன்னம்நிலத்தில்விழ எத்தனைநாட்செல்லுமதோ
தன்மையாய்ச்சென்று தகையாரநானிருக்க
எத்தனைநாட்செல்லுமதோ இன்னபடியென்றறியேன்
கர்த்தனுடசெயலைக் கணக்கிடவும்போகாது
எப்படியோவென்று இவ்வசனங்கேதகைதான்
செப்பமுடன்சொல்ல தீர்க்கமுடனான்முகனும்
நல்லதுதான்கேதகையே நான்சொல்லநீர்கேளும்
வல்லவொருமாயனுக்கு மாநிலத்திலெந்தனுக்கு
வாதுவந்துசண்டையிட்டு மற்போருதான்பொருதி
தீதுவந்துமண்டிருவர் செலுத்தமுடியாமல
நீபெரியோனான்பெரியோ னென்றுசிலகாலம்
வாய்பேசிக்கொண்டு வழக்குரைத்துப்போராடி

மற்பிடித்தொண்டும் வலுத்துச்சினமாகி
வெற்படியாலோக மேலேழுந்தானதிர
அடிக்குநிலைகுலைய அண்டபகிரண்டமெல்லாம்
ஒடுக்கங்கள்தானதிர ஒலிதிரையுந்தான்கலங்க
பருதிமதிசுழலப் பருவரையுந்தானதிர
கருதியலோகமெல்லாங் கடுகிபொடியாகி
தேவர்களும்வானவர்கள் திக்குதிசைசூழ
மூவர்களுமாமுனிவர் முப்பத்துமுக்கோடி
யாவர்களும்பாரில அந்திரமுந்தான்சுழல
போராடிநின்றோம் புவனந்தனிலிறங்கி
சீராடிப்படியாய்ச் சென்றுசிலகாலம்
ஒன்றையொன்றுமீறுமல் உருபூசலாய்விளைந்து
நின்றோஞ்சிலகாலம நீணிலத்தோர்காணவெனவே
அந்தமொழிகேட்டு அரனோபரனோதான்
வந்துவிலக்கவென்று மாய்கையாய்தான்தோன்றி
இருவருக்குமேநடுவே எழுந்துதீயக்கினியும்
ஒருவருக்குந்தோற்றுமல உடேசுடர்வடிவாய்
வந்ததுகாண்சோதி மலையாய்பருப்பதமாய்
அளந்ததுகண்காணுத ஆகாசமூடுருவி
நின்றதொருப்பேதெனவே நிலையறியமாட்டாமல்
ஒன்றையொன்றுபார்த்து உழன்றுமனம்புண்ணுகி
நின்றுமயங்கி நிமைகள்தெரியாமல்
நன்றுபுதுமையிது நாமறியவேணுமென்று
தங்களிலேதாங்கள் சம்மதித்துக்கொண்டேதான்
இங்குவந்தகாரணந்தான் என்னென்றறிவோமென
அடிதேடிமாயன் ஆதிவராகமதாய்
முடிதேடநாமும் மொழிந்துவகைபேசி
கண்டார்பெரியோன் காணுதவர்சிறுவன்
பண்டோரதியாப் பழம்பொருளைகண்டறிந்தால்
அன்றுபெரியோர் அவருந்தானென்றுசொல்லி
என்றுவகைபேசி இருவருமேசம்மதித்து
பாதாளஞ்சென்றூர் பச்சைமால்கண்டிலரோ
மீதானவிண்ணகத்தில் வேகமுடனன்தானும்
வந்தேதனிமைப்பாய் வலுவுமிகக்குறைந்து
உந்தனையேகண்டேன் உள்ளமெல்லாந்தான்குளிர்ந்தேன்
கண்டபோதிப்போ கவலையெலலாந்தான் தீர்ந்தேன்
அண்டினேனுன்னை ஆபத்துக்காத்தருளும்
நாரணனுந்தான்மகிழ நமக்கோர்சகாயமொன்று
ஆரணனுங்கேட்க அடைவுடனேகேதகையும்
ஏதுகாண்சொலலுமென்று இன்பமுடன்தான்கேட்க
சாதுவாய்நான்முகனுஞ் சாற்றினாநல்வசனம்
அந்தமொழிகேட்டு அரகராவென்றுசொல்லி

விந்தையுடன்கேதகையும் மெய்சோர்ந்தங்கேதுசொல்வார்
என்னவிதிப்பயனோ ஈசர்முடிமேலிருந்து
அன்னமேசேனு மலதிலந்துரைத்தாராம்
தவறினேன் சண்முகரே சரிக்கவிடமில்லாமல்
குவலயத்திற்சொலலக் கொம்பிழந்தமந்தியைப்போல்
ஆசாதபாவி அடியேனொருபொருட்டாய்
வாகாகயென்னுடனே வருத்தமாய்நீர்சொன்னீர்
எங்கும்நிரந்தரமாய் எள்ளுக்குளெண்ணையைப்போல்
அங்குமிங்குமொன்றாய் அடங்கலுமெவ்வுயிர்க்கும்
நிற்கும்பராபரனே நீக்கியென்னசொன்னாலும்
நிற்கவுடன்கேட்கத் தகுமோதாநான்முகனே
ஆனமுன்னாளில் அமரர்முதல்தேவர்களும்
வானோரமுர்தம் வாரிதனில்கடைய
ஆலவிஷம்பிறந்து அகிலமெல்லாந்தான்பறந்து
காலவிஷஞ்சீறிவரக் கண்டமரர்தானோடி
அரனுக்கபயமென்று அமரருக்காயோடிவந்து
பரனுக்கதுபொருட்டாய் பானமாயவ்விஷத்தை
கொள்ளலையோவீசர் குவலயத்தோர்தான்பிழைக்க
தள்ளவில்லையீசர் சற்பவிஷமீதனையே
பெரியோரிவையெல்லாம் பேதமென்றுசொல்லார்கள்
தெரியாதார்க்கெல்லாம் தெளிக்குமனந்தேறி
என்னபிழைவந்தாலும் ஏற்பார்பெரியோர்கள்
இன்னமொன்றுஞ்சொலலார்கள் மேலானநல்லோர்கள்
அடுத்தாரைக்காப்பார்கள் அடைக்கலமாய்வந்தவரை
விடுத்தேதுஞ்சொல்லார்கள் மேலானவேதியர்கள்
நமக்குமொருசெய்தி நாம்சொல்லநீர்கேளும்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒருசொல்லுரைத்தாலும்
ஈசர்முடிகண்டேனென் இயம்புவேன்மாவிடத்தில
ஓசையுடனீர்தாம் ஓமென்றுரையுமென்றார்
ஆபத்துவேளைதனில் அஞ்சாதேயென்றொருபொய்
பாவத்தைப்பாராமல் பயின்றோரைக்காக்கிலையோ
ஆர்க்குமொருசமயம் அவரவர்க்குமிப்படியே
பார்க்கவல்லோவேணும் பாவியோநாம்தாமும்
காக்கவல்லோவேணுமென்று கற்பித்தானான்முகனும்
தங்களுக்குத்தானே தங்கள்சளப்படவும்
பார்ப்பீரோநீரும் பாருங்காணவேதியரே
ஏற்போமுமக்காக இசைவோங்காண்வேதாவே
உங்களுக்குநானும் உதவேனோபூவுலகில
தங்களுக்குள்தானே சம்மதித்துத்தானுமப்போ
பொய்சொலலக்கேதகையும் பொருந்தியேசம்மதித்து
மெய்சொல்லவேமறந்து விதியோனுக்காகவேதான்
பொய்யென்றுசொல்லப் பூமிதனிலவந்திரங்கி

ஞாயமறக்கேதகையும் அன்னமூந்தானென்றுகி
மேதினியில்வந்து விஷ்ணுவைத்தான்பார்த்து
ஓதியபிர்மாவும் உயர்வானகம்புகுந்து
அனாதிமிஷந்தன்னில் ஆயிரங்காதவழி
வினையவேயிப்படியாய் வெட்டவெளிபூடேபோய்
கண்டேன்முடிநான் கண்டீரோசேவடியும்
கொண்டல்வண்ணாய்போ கொதித்துமனமிடைந்து
பன்றிவடிவெடுத்தும் பாதாளலோகமெல்லாம்
வென்றியுடன்தேடி மெலிந்துவந்தேனல்லாது
காணேன்சிவன்பாதம் காணவுந்தான்கிட்டாமல்
வீணேதிரிந்து வெளியேறிவந்தோங்காண்
முடிகண்டோமென்று மொழிந்தாயேநீபெரியோன்
அடிகண்டோமென்றால் அனலாயெரிந்திடுவேன்
கண்ணாரக்கண்ட காட்சிதனக்கொப்பினைதான்
விண்ணோரறிய விளம்புமென்றுதானுரைத்தார்
அப்போதுவேதன் அசத்தியமோஎன்வார்த்தை
இப்போதுதானும் ஈசர்முடிமேலிருந்து
நான்கண்டபோது நமக்குஇவர்சாட்சியென்றார்
ஆர்காணும்விஷ்ணுவே அப்போதுநான்கூட
என்றந்தக்கேதகையும் இவ்வார்த்தைதானுரைக்க
சென்றிந்தப்பொய்யைச் சிவனறிந்துகோபமதாய்
நெடுகவளர்ந்த நெருப்புமலைதான்கொதித்து
திடுதிடெனவேமுழங்கிச் செந்தீயகோரமதாய்
நெறுநெறெனவேகுமுறு நேரோபடிரெனவே
கிறுகிறெனச்சக்கரம்போல் கீழேழுமேலேழும்
லோகமெல்லாந்தானதிர நொறுங்கியிடியேறெனவே
சாகரமூந்தான்கலறி தரணியெல்லாஞ்செந்தூளாய்
வெடித்ததுகாணந்த வெந்தணல்போலநின்றமலை
பிடித்ததுகாணெங்கும் பெருந்தீயகோரமதாய்
விண்ணுலகிலுள்ளோரும் மெய்பதரியுள்ளொடுங்கி
மண்ணுலகிலுள்ளோரும் மதிமயங்கிமூர்ச்சையதாய்
இறையோனேயெங்கள் ஈசுரனேயென்குற்றம்
முறையோவுனக்கபயம் மூர்த்தியேகாருமென்று
சகலமெல்லாஞ்சீவ சராசரங்களுள்ளதெல்லாம்
அகலாதசோதி அரனேவுனக்கபயம்
பராபரமாய்நின்றோனே பரனேவுனக்கபயம்
தராதரமாய்நின்ற சர்வதயாபரனே
காருமிதுசமயம் காரணமாய்நின்றோனே
வாருமிதுசமயம் வள்ளலேயிப்போது
தீராவினைதீரச் சித்தம்பொருத்தருளும்
வாராதகுற்றம் வந்தாலுமெங்களுக்காய்
சிந்திப்போகாத்தருளும் வடிவேசரணமையா

சந்திப்பவர்க்குத் தரவேணுமீசரனே
அபையமென்றவெங்களுக்கா அஞ்சலென்றுவந்தருளும்
சபையதிரவேநடனத் தாண்டவமாய்நின்றோனே
தாங்கமுடியாது தாரதலங்களுள்ளதெல்லாம்
ஏங்கியிடைந்து இடுக்கம்படுகுதுகாண்
ஆங்காரமெல்லாம் அடியாற்குத்தானிறங்கி
ஓங்காரந்தானொடுங்கி உத்தமமாய்த்தானமர்ந்து
செஞ்சுடர்போல்நின்ற சிவனுந்தவபவுவந்து
அஞ்சலென்றுவந்து அரனுருமேதுசொல்வார்
ஏதுகாண்நான்முகனே எம்முடியைக்கண்டமென்று
வாதுசொல்லிமாயனுடன் வழக்குரைத்துநின்றாயே
காணுகநம்முடியைக் கண்டனென்றுசாட்சியதாய்
வீணுனவார்த்தை விளம்பினையேயிப்போது
காதாரக்கேளாமல் கண்ணாரக்காணுமல்
கேதகையைநீசொன்னக் கெருவமென்னச்சொல்லுமென்றார்
மூத்தொழில்போல்சற்றே முருவலதுசெய்தளவில்
அண்டகடாகம் அகண்டவெளிக்கப்புறமும்
கொண்டவிடிமின்போல் கொழுங்கனலுஞ்சோதியுமாய்
விண்டலங்களெங்கும் மின்வந்துதான்மூடி
கண்டுஅசுரரெல்லாம் காலோடுகால்கள்பின்ன
வீழ்ந்துகிடப்பாரும் மெய்சோர்ந்துநிற்பாரும்
தாழ்ந்துபணிவாரும் தர்மமோவென்பாரும்
சந்திரனுஞ்சூரியனும் தலைகெட்டநூலதுபோல்
இந்திரனும்வானோரும் இமையோர்முனிவோரும்
அந்திரமும்வானும் அடுக்குநிலைகுலைந்து
போனதுதான்கண்டேகிப் பொருமிமலரோனும்
ஆனசவுரியமும் ஆங்காரமுள்ளதெல்லாம்
நீங்கிவலுக்குறைந்து நிலைத்தில்தலைகவிழ்ந்து
தூங்கிமிகவேங்கித் துக்கித்தானான்முகனும்
அப்போதுகாண்சிவனும் அயனைமுகம்நோக்கி
இப்போதுபொய்புரைத்தாய் இந்தவுலகுதனில்
கோவில்குளம்பூசை குவலயத்திலில்லையென்று
சேவில்வருமீசர் செப்பினாரப்போது
செப்பியசொல்மாயன் திருச்செவியில்கேட்டவுடன்
மெய்ப்புடையாஈஸ்வரனை விழுந்துநமஸ்கரித்து
ஆடினார்மாயன் அரனைமிகக்கொண்டாடி
பாடினார்மெய்மகிழ்ந்து பணிந்துபணிந்தன்புருகி
ஆனந்தக்கூத்தாடி அருட்கண்ணுலநீர்சொரிய
தானந்தமாகிநின்ற சதாசிவமேயுன்மகிமை
ஆரறிவாருன்கோலம் அகண்டமெல்லாமொன்றாகி
பேரறியார்ஊரறியார் பெருமைதனையாரறிவார்
வேரறியார்நூரறியார் மேலறியார்கீழறியார்

ஞாயிவாயெங்கும் ஊடுருவிநின்றோனே
சீரறியாருந்தன் செயலறியார்யாவர்களும்
கூரறியார்வீறுசெய்வார் குணமறியமாட்டார்கள்
நாயேனறியத் தகுமோதானுன்பாதம்
பேயேன்சிறியன் பிழையேதுசெய்தாலும்
பொறுத்தருளவேணும் புரமூன்றெறிந்தோனே
சிறுத்தொண்டன்றன்மனையில் சென்றமுதுகொண்டோனே
ஐயாபொருத்தருளும் அடியேன்றனக்காரும்
மெய்யாசரணமென்று விஷ்ணுவுமப்போது
தோத்திரங்கள்செய்து தொழுததெல்லாங்கண்டுசிவன்
நேத்திரத்திலே நெடுமாலைக்கண்டழைத்து
ஏதுவரமுள்ளதெல்லாம் இப்போதேயுந்தனக்கு
சாதுவாய்த்தந்தோம் சந்தோஷமாச்சுதென்று
ஈசர்புகழ்ந்துரைக்க எம்பெருமான்தானினைந்து
நேசமுடனேயிருந்தார் நீணிலத்திலப்போது
பொய்சாட்சிசொன்னதொரு பூவேநீகேதகையே
இச்சாட்சிசொன்னதினால் இங்கேநம்மிடத்தில்
வேண்டாமினிமேல் விலகுமென்றுசாபமிட்டார்
தீண்டாமற்கேதகையுந் திருவுளமேயென்றுசொல்லி
ஈஸ்வரன்மேற்குற்றமில்லை இதுநம்மால்வந்தகுற்றம்
பேசக்கணக்கில்லை எம்பிரானேயெனப்போனாள்
வேதன்மனமிடைந்து வேகாமல்வெந்துருகி
நாதனேநாயடியேன் நடந்ததெல்லாங்குற்றமையா
பொல்லாதான்செய்தபிழை பொறுத்தருளவேணுமையா
வல்லோனேயென்றனுக்கு வந்ததுகாண்புத்திமதி
இனிமேலுமையா ஈடேறவேண்டியதாய்
தனியேதனிப்பொருளே தற்காக்கவேணுமையா
பாவிக்குச்சாபம் பலித்துவிட்டாற்பூவுலகில்
கேள்விக்குநாயடியேன் கிருபைசெய்வதெக்காலம்
சத்தசமுத்திரந்தான் தான்கொதித்துப்பொங்கிவந்தால்
மற்றுமொருதண்ணீர் மாநிலத்திலுண்டாமோ
கற்றுங்கருணைக் கடலேவெளியொளியே
சற்றுஞ்சரவண பவனேபராபரனே
முப்புரத்தைத்தானெரித்து மூவரையுங்காப்பாற்றி
அப்புரத்தைக்காக்கிலையோ அரனே அவர்க்கிரங்கி
காமனையுந்தானெரித்தீர் கடவுளரேயிப்போது
பூமனையேதிரும்பிப் போகமுடன்காக்கிலையோ
மார்க்கண்டனுக்காக மறலிதனையுதைத்தீரோ
தீர்க்கமார்க்கண்டனையுஞ் சிறப்பாகத்தான்காத்தீர்
மூன்றுமதமுள்ள மும்மதத்துயானைதன்னை
தோன்றுமொருதாருகா சூரனவனேவிவிட்ட
ஆனைதனையுரித்து அடைவுடனேதான்போர்த்தீர்

ஞானரிஷிவெருண்டு எக்கியத்தாலக்கினியை
கோபமுந்தாபமுமாய்க் கூடியெழுச்சுடராய்
தீபமுள்ளவக்கினியைச் சிவனென்றும்பாராமல்
ஞவினைப்போ எடுத்தீர்மழுவாலே
பாவிநான்செய்த பகைதானொளியாதோ
மூட்டுக்குள்தீயை மூகனையறியாமல்
காட்டும்பொல்லாக் கசுமால்வருஞானம்
யோவிருந்துநாயேன் பொசிங்கியேவெந்துவிட்டேன்
கோலியெங்கன்மீதிருந்து குறையெல்லாந்தான்பொருத்து
காத்தருளவேணுமையா கஞ்சன்படுந்துயரம்
பார்த்திருந்துநாதன் பண்பணியவேதனுக்கு
அஞ்சலென்றுசொல்லி அருளினார்காணம்மானை
வஞ்சமெனும்பூவுலகில் மாமறையோர்வேதியர்கள்
செய்யுஞ்சிவபூசையெல்லாஞ் சிந்தித்தோமுந்தனுக்கு
உய்யும்பலபடைப்பும் உலகுமுதலெல்வகைக்கும்
எப்போதும்போலே இருந்துபடையுமென்றார்
அப்போதுவேதனுக்கும் அச்சுதற்கும்வந்தபகை
ஒருவர்க்கொருவர் உறவாயிருங்களென்று
இருவர்க்குநல்ல சிவபதமுந்தான்கொடுத்து
லோகத்திலப்போது உலகத்திலுள்ளவர்கள்
மாலுக்கும்வேதனுக்கும் வஞ்சமினிவாராமல்
ரோகயிருமென்று நீதியுடன்தான்தீர்த்து
அவரவர்கள்செய்தொழிலே அவரவரோசெய்வதென்று
விவரமுடன்தானிரண்டு வித்தகனார்தாமுரைத்து
அந்தமொழிகேட்டு அயனுமேதானினைந்து
விந்தைமலர்ப்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
எங்கள்தனைக்காக்க இவ்வடிவங்காணெடுத்து
தங்கமயமாய்த் தணலவடிவாய்த்தான்தோன்றி
ரட்சித்துக்காக்கவந்த நாதாபராபரனே
பட்சிவடிவெடுத்தும் பன்றிவடிவெடுத்தும்
தேடியுங்காணாத சிவமேசிவக்கொழுந்தே
நாடியேநாங்கள் நாட்டமதிற்கண்டிருக்க
வேணும்பராபரனே மேதினியிற்கண்டிருக்க
அணுவுக்கணுவாய் அடியேங்கள்தான்பிழைக்க
பூசையனுதினமும் புஷ்பமலர்தான்சாத்தி
ஆசையறுத்து அரன்டியைச்சேர்வதற்கு
தற்சொரூபமாகத் தரிசிக்கவேணுமையா
தற்சொரூபங்காட்டித் தயவருளுமீசுரரோ
இந்தச்சொரூபம் இப்படியாய்த்தானிருந்தால்
அந்தச்சொரூபம் அறிந்தேதுபூசைசெய்வோம்
மேகசலமுமக்கு மேனியெல்லாம்நீர்சொரிய
தேகமெல்லாங்குளுங்கச் சிரசின்மேல்புஷ்பமலர்

பூசிக்கவீற்றிருக்கும் புண்ணியரோ உம்முடைய
ஆசித்தணலானதையும் அடக்குமையாஇப்போது
வேதனுமாலும் விரும்பியிவையுரைக்க
போதமுடனீசர் பூரித்தகமகிழ்ந்து
அக்கினியாய்நின்ற அனலைமிகவிறுக்கி
மெய்க்கவினிச்சாந்தகமாய் மேதினியிலெந்நாளும்
நிற்கவொருமலையாய் நேமித்தாரப்போது
தக்கவொருமலைக்குச் சாத்தினார்நாமமதை
அருணையொளிவானதினால் அருணாசலமெனவே
கருணாகடாட்சமதால் கற்பித்தாபொன்மலையை
அம்மலையிலீசர் அதிசயமாய்த்தானிருந்து
செம்மலையிலிங்கமதாய்ச் சிவசொரூபமாயிருந்து
அந்தமலையில் அயனுந்திருமாலும்
கந்தமலர்ச்சோலைகளும் கற்பகமுமுண்டுபண்ணி
தெய்வக்கண்ணாள்தனையுஞ் சீக்கிரமாய்வாவெனவே
சைவர்க்குகந்தத லமாமருணையென்று
கோவிற்றிருப்பணியுங் கோபுரமுந்தான்சமைந்து
ஆவலுடன்பட்டணமும் அலங்காரமாய்முடித்து
சிறப்பிவையுமென்றார் திருமாலும்நான்முகனும
அறப்பெரியதச்சனுக்கு அருளினாரிவ்வசனம
இந்தட்சணமே அரைநொடியிலெல்லாந்தான்
அந்தட்சணமேமுடித்து ஏகினான்கண்ணாளன்
வானுலகிலுள்ள மறையோர்முனிவரையும்
தானுலகிலந்த தலத்திற்குடியேற்றி
அரம்பையரைத்தானழைத்து ஆடல்செய்யகோவிலுக்குள்
உரம்பெறவேதானிருத்தி உகந்துசிவபூசைசெய்து
மாலுமயனு மகிழ்ந்தார்காணம்மானை
அருணாசலந்தனிலே அயனுந்திருமாலும்
ஒருநாளும்பேதமற உகந்திருந்தாரம்மானை
என்றுதன்மர்தம்பியர்க்கு எடுத்துரைத்தாரிக்கதையை
சென்றுசிலநாளுஞ் செழித்துவழிநாலைய
ராமர்கதையும் நானிலத்தில்முக்கதையும்
வீமனுக்குந்தம்பியர்க்கும் விபரமாய்த்தானுரைத்து
கஞ்சமலர்மாயவன்றான் கஞ்சன்றனைவதைத்து
வஞ்சமெனுங்கசட்டை வாகாயுதைத்ததுவும்
அலகைமுலையுண்டு அவ்வுயிரைக்கொண்டதுவும்
உலகுதனில்மாயன் உயர்ந்தவிளாமரத்தை
கன்றாலெறிந்து கனியதனையுண்டதுவும்
ஒருத்தரறியாமல் உபாயங்கள்செய்ததுவும்
நச்சரவினுச்சிதனில் நடித்தகதைகளையும
அச்சமறத்தம்பியர்க்கு அன்பாகத்தானுரைத்து
வாசமுடன்தன்மர் வருகிறானென்றுசொல்லி

நேசமுடன்மாயன் நினைவறியவேணுமென்று
ஆதிகெருடனையும் அருகேவரவழைத்து
நீதியுடன்தன்மர் நினைவறிந்துவாருமென்று
அன்னமெனும்வடிவாய் ஐவரெதிர்தானோடி
தன்மையாய்நின்று தர்க்கமிட்டுவார்த்தைசொல்லி
உண்மையென்னவென்று உட்புலனையாராய்ந்து
செம்மையறநன்றாய்த் திர்க்கமாய்ச்சோதியென்று
ஆமென்றுதான்கெருடன் அன்னவடிவெடுத்து
ஓமென்றுசம்மதித்து உசந்தாலவிருட்சமதில்
வந்திருந்துதன்மர் வரும்வழியிலன்பாக
இந்தக்கதைநீயவனை ஏதென்றுகேட்கவென்று
பேசாமலேயிருந்தார் பெரியாலவிருட்சமதில்
ஆசாரமுள்ளதன்மர் ஆலமரத்தடியில்
இருந்துகதையை இளையோர்க்குத்தானுரைக்க
இருந்தவேதம்பியர்கள் செவியிலுற்றத்தான்கேட்க
விசாரமெல்லாந்தீர்ந்து மெய்மகிழ்ந்துதானிருந்தார்
உயரவிருந்தொரு உற்றபுகழன்னமுந்தான்
மன்னவரேநீங்கள் வருந்தியுரைத்தகதை
இன்னவகையென்று எனக்குரையுமென்றுசொல்லி
சீரானதன்மர் சிறப்புடையஅன்னமதை
நேராகநோக்கி நினைந்தகதைதனையும்
சொல்லுகிறேன்அன்னமே சுகமாகநீர்கேளும்
சொல்லுங்குலதெய்வங்காண் செங்கண்மாலெங்களுக்கு
எம்பெருமான்தன்பெருமை எல்லாமென்தம்பியற்கு
நானுரைத்தேனிப்போது நடந்தகதைதாரணியில்
காரணங்களெல்லாங் கதையாகத்தான்முடித்து
பூரணமாய்த்தானுரைத்தேன் புண்ணியனார்தன்மாய்கை
எவ்வுயிர்க்குந்தானாய் இருந்துகலந்தமுதல்
அவ்வுயிர்க்குமீய்ந்து அறஞ்செலுத்திநின்றமுதல்
பாரதப்போர்செய்யப் படையெடுத்துநின்றமுதல்
சாரதியாயெங்களுக்குச் சாங்கமாய்நின்றமுதல்
மாயனுமாயன் வாயன்புவிராசன்
ஆயன்சகாயன் ஐவருக்குநாயகனாய்
மெச்சும்புவிராசன் விஷ்ணுபதந்தான்தேடி
நாயனெங்கேயென்று நடந்துதிசைநோக்கி
நேயமுடன்தேடி நெடிகவந்தோமித்தூரம்
செய்யதொருவைகுந்தஞ் சேரவென்றுவந்தோங்காண்
ஐயமில்லாநாங்கள் அண்ணன்தனைத்தேடி
வாறோம்வழிதுலைய வாய்த்தகதைதம்பியற்கு
போராகச்சொல்லிப் பெரியவனத்தூடேவந்தோம்
என்றுதன்மர்சொல்ல இன்பமுடன்அன்னமுந்தான்
ஒன்றுமுறையாமல உடைத்திரோமன்னவரே

மண்ணுலகிற்கிட்டாது மலைதனிலுங்காணாது
விண்ணுலகிற்காணாது வெளிதனிலுங்கிட்டாது
மெய்யுகந்துநீங்கள் விரைந்துதான்தேடுகிலும்
வைகுந்தங்காண வசமோதானுங்களுக்கு
மாயனைக்காண வலுவுண்டோஆராலும்
நேயனுடவஞ்சம் நிலைமதெரியாதாவருக்கும்
சிந்தைகலங்காமல் திரும்பியுஞ்சணேர்தனிலே
விந்தையுடன்போயிருந்தால் வேணுமென்றதுண்டாகும்
மாயனையுங்காணுகிலாம் வைகுந்தங்காணுகிலாம்
போயிருங்காணும்பதியில் புண்ணியரேநீர்தாமும்
உங்கள்தெய்வமாயனென்றீர் யோனிகழும்புபட்டு
இங்குலகுதன்னில் இறந்துபிறந்தேகிரிவார்
மானிடவர்தன்னை மாயனென்றுநீர்நினைந்து
தேனிடருஞ்சோலைதனில் தேடிவந்திரித்தூரம்
தேவனேயாமாகில் சிறந்தவைகுந்தமதில்
போவதினாலென்ன போயிருந்துமென்னபலன்
மண்ணிலுள்ளோர்தன்மரென்று வாழ்த்துவதும்பார்த்திருந்து
என்னறியவேந்தேநீர் இருந்துபதியாளாமல்
வந்தீரோசும்மா மறந்தீரோநற்றவங்கள்
தந்தீரோதன்மமெல்லாஞ் சகலமெல்லாம்விட்டீரோ
நாடுதனையாண்டிருந்தால் நற்றவங்கள்செய்திடலாம்
வீடுபெறலாமெனவே விளம்பியொருபுள்ளுரைக்க
கேளாய்நீயன்னவே கிருபையுடனோர்வசனம்
நாளாய்வெகுதூரம் நாடிழந்துவந்ததை
மண்ணாசைபொன்னாசை மற்றுமுள்ளபெண்ணாசை
பெண்ணாசைவிட்டுப் பிள்ளைமேலாசையற்று
தேடுந்திரவியமுஞ் சேனைமன்னராசையற்று
வீடுவிட்டுக்காடுறைந்து வித்தகனைத்தான்தேடி
வந்தவர்க்குஇன்னம் வறிவுண்டோவிப்போது
இந்தமட்டுமில்லை இனிமேலுமெப்படியோ
உடலிலுயிரிருந்து உணர்வுசெய்யுமோராசை
அடரும்பிணிதீர்க்க அபிதைகமோராசை
நடத்தலிருத்தல் நகைசுகியுமோராசை
கிடத்தலுறக்கங் கேள்விசெய்யுமோராசை
காலில்முள்ளுதைத்ததென்று கலங்குவதுமோராசை
மேலிலெறும்பூருதென்று விள்ளுவதுமோராசை
குளிருங்கனல்தேடி குளிர்காயுவதுமோராசை
துளிருமலொடுத்துத் தொழுவதுவுமோராசை
மேடுபள்ளங்கண்டு விலகுவதுமோராசை
காடுசெடியென்று கடிம்பயமுமோராசை
வெயிலுக்கொருநிழலை விரும்புவதுமோராசை
துயிலுதற்குநல்லநிலஞ் சூதானமோராசை

தாகத்துக்குண்ணுமொரு தண்ணீருமோராசை
நாகத்துக்கஞ்சி நடப்பதுவுமோராசை
அரித்தவிடஞ்சொரிதல் அறப்பசியுமோராசை
விரித்தபலசாஸ்திரங்கள் விளம்புவதுமோராசை
கரடிபுலியானை கண்டஞ்சுவதுமோராசை
குரடுதடிகொண்டுயிரை கொல்லுவதுமோராசை
இடறுவருமீதெனவே எண்ணுவதுமோராசை
படரும்பயிர்போகம் பண்ணுவதுமோராசை
எப்போதுமண்ணில் இருப்பதுவுமோராசை
ஒப்பாதபெண்களையும் உறவுசெய்யுமோராசை
கல்லல்சென்னலிட்டுக் கருதுவதுமோராசை
பொன்னும்வெள்ளிதேடிப் புதைப்பதுவுமோராசை
நாடாளுஞ்செங்கோல் நடத்துவதுமோராசை
மாடாடுதேடி மகிழ்ந்திருப்பதுவுமோராசை
புலைகொலைகள்செய்யப் பொருந்துவதுமோராசை
மலைகடல்களேறி மருவுவதுமோராசை
மெய்மறைந்துபொய்யுரைக்க விரும்புவதுமோராசை
நெய்பால்தயிரென்று நினைப்பதுவுமோராசை
வெளிதாண்டியேகவனம் விளையாடுமோராசை
அழியாமல்கற்பம் அருந்துவதுமோராசை
மனைதோறும்பிச்சை வாங்குவதுமோராசை
புன்லாடவென்று போவதுவுமோராசை
ஒடுக்கமதுகுகையில் ஒடுங்குவதுமோராசை
எடுக்கும்பலகோலம் எடுப்பதுவுமோராசை
இந்தமட்டுமாசை இருக்குதுகாணிவ்விடத்தில்
அந்தாசைதன்னில் அதிலுமிருபேராசை
தம்பியர்க்குமெந்தனுக்கும் தானேதெவிட்டாத
எம்பெருமானாசையென்றால் எங்கள்மனதிலுந்தான்
அளவற்றஆசையது அன்னமேஎங்களுக்கு
களபமணிமாயனையே கண்டால்துயர்தீரும்
ஆசையதுதீரும் அச்சுதனைக்கண்டாக்கால்
நேசமுடன்மகிழ்ந்து நெடுமால்தனைத்தொழுவோம்
என்றுதன்மார்சொல்ல இன்பமுடன் அன்னையுந்தான்
நன்றுதானென்று நன்மையுள்ளதன்மமொன்று
மனமகிழ்ந்துபட்சி மரத்தைவிட்டுக்கீழிறங்கி
வனங்கடந்துநல்ல வைகுந்தந்தானேகி
சென்றுதிருமாலுடனே தெண்டனிட்டங்கேதுசொல்வார்
ஒன்றுபத்துநூறு யுண்மையொருதன்மையுமாய
மாற்றறியப்பஞ்சவர்கள் மனதையெல்லாமாராய்ந்து
எத்துயரம்வந்தாலும் ஏதுபிழைவந்தாலும்
அத்துயரந்தன்னை அணுவளவுமெண்ணார்கள்
மாலேதுணையென்று வருகிறார்பஞ்சவர்கள்

ஆலேதுயிலுகின்ற அச்சுதனேதஞ்சமென்று
வாக்குமனமொன்றாய் வருகிறார்பஞ்சவர்கள்
தீர்க்கமுடன்காக்கச் சித்தமருளுமையா
சாத்தசிறையைக் கடைத்தேறப்பாருமையா
ஏத்தவரைமுற்றும் இங்கிருக்கப்பண்ணுமையா
செங்கருடன்சொல்லச் செங்கண்மாலப்போது
அங்கங்குளிர்ந்து ஐவர்மேலன்புவைத்து
செங்கைநெடுமாலும் திருவாய்மலர்ந்தருளி
தன்மருந்தம்பியரும் தடையறவேநம்மிடத்தில்
சென்மமதுகொண்டுவரத் தெய்வுலகுக்கேறுது
இன்மைதனில்சென்மம் இகத்திலேதான்போட்டு
நன்மைசெய்ததாலே நம்மருகில்தானிருக்க
நால்வருங்கூடவிட்டு நல்லவைகுந்தமதில்
பால்போலும்நம்மிடத்தில் பட்சமுடன்தானிருப்பார்
சடத்துடனேதன்மர் தருகாமல்நம்மிடத்தில
இடத்திலேவந்திருப்பார் இந்தவைகுந்தமதில்
என்றுதிருமால் இவ்வார்த்தைதானுரைக்க
அன்றலர்ந்தபுஷ்பமென ஆள்வார்மனமகிழ்ந்து
சிக்கெனவேதான்கருடன் திருமால்தன்பாதமதில்
முக்கியமாய்த்தோத்திரங்கள் விழுந்துநமஸ்கரித்து
சக்கரத்தைவாருமென்று தானழைத்துகோபாலர்
இக்கணமேசென்று எம்முடையபஞ்சவர்கள்
காணுமல்நீகலந்து காவலாய்வாருமென்று
ஊனுகளெட்டெழுத்தை உபதேசமேபுரிந்து
பஞ்சவர்கள்ஐவர்தனில் பகருகின்றநால்வருந்தான்
அஞ்சமுடன்போட்டுத் தோற்றமுடனம்மிடத்தில்
வருவார்சுகம்பெறுவார் வைகுந்தந்தான்சேர்வார்
மருவாருந்தன்மர் வருவார்தனியாகி
வாரவழிதனிலே மறுத்துமொருவிக்கினங்கள்
சேரவுயானையலி சிக்காமல்நீதானும்
பக்கமேவாருமென்று பட்சமாய்ப்புத்திசொல்லி
சக்கரத்தைப்போமெனவே சாற்றினார்மாயனுந்தான்
மிக்கதொருவனமும் வெகுமலையுந்தான்கடந்து
வண்டுளபமேனியனை வாகாகவேநினைத்து
கண்டுதொழவென்று கடுகிடக்கலுமே
சுத்தமுடநூறு யோசனைக்காதவழி
வித்தகனார்யாதம் விவரமாய்க்காணவென்று
யோயிருந்துசக்கரமும் புவிராசமன்னரிடம்
ஐவரையுங்கண்டு அரிநமாவென்றிருந்தார்
மாயோனைத்தஞ்சமென்று மகிழ்ந்தாளின்கீழிருந்த
இருக்கிறுனாவர் இயல்பாய்ச்சகாதேவன்
நெருக்கும்விதிவசத்தை நேராயறிந்துகொண்டு

தனக்குவருங்கருமம் தானறிந்துசகாதேவன்
எனக்குவருங்கருமம் இன்னபடியென்றுசொல்லி
தன்மார்தனக்குந் தமயன்மார்மூவருக்கும்
வன்னமுள்ளதெல்லாங் வகையாகஇன்னதென்று
தத்துவத்தைப்பார்ப்பளவில் சக்கரந்தானிந்தமட்டும்
முத்திலுமேளந்தனுக்கு முடிவுஞ்சரியாச்சு
தன்னையறிந்த சகாதேவனீதுரைக்க
நமக்குள்ளசாஸ்திரங்கள் நன்றாய்முடிப்பிவித்து
சுமக்குஞ்சுமையென்று துன்பமற்றோமென்றுசொல்லி
நாராயணர்பாதம் நாளுமறவாமல்
சீரானவைகுந்தம் சேருமென்றுதானுரைத்து
அண்ணமார்நால்வருக்கும் அருகிருந்துநல்வசனம்
எண்ணமறநிஷ்டைதன்னில் இருந்தான்சகாதேவன்
மாலேசரணமென்று மனதில்தியானமதாய்
சாலோகசாமீப சாரூபமுந்தெரிந்த
மூலத்தெழுந்தீயை மூட்டிச்சுழிமுனையை
ஞாலத்திருந்த நாரணனைப்போற்றிசெய்தான்

விருத்தம்.

ஏதுமறியேனெனவறியே னெல்லாவுயிர்க்குங்கடையாகி
வாதுசிறியவழக்கோர மன்றிலிருந்துவழக்குரைத்து
நீதுயிலும்நாயேனை சென்மமிழந்துவருகவென்று
தூதுவரவுமிருப்பேனே சுகந்தாமுகுந்தா துணையெனக்கே. (௬௰
வீமன்விசையனகுலனுடன் வேதனுனதன்மருமாய்
சேமமானவைகுந்தம் நெடியோனடியே துணையாக
ராமதாசனெனவேதான் நந்தாஉனதுபதிதேடி
ஏமதூதனனுகாம லிதமாயுதவிசெய்வாயே. (௬௧

கதை.

நாட்டமூட்டனிருந்து நாரணனை நெஞ்சில்வைத்து
வாட்டமறச்சிந்தை மயங்காமல்வாழ்துவதை
மூட்டியனலெழுப்பி மூச்சடையொன்றாக்கி
கூட்டித்திரட்டிக் கொழுந்துமுனையாக்கி
நான்முகனைக்கண்டு நமஸ்கரித்து அப்பாலும்
மாயன்பதந்தேடி மணிப்பூரகந்தனிலே
நின்றுவணங்கி நெடியோனைப்போற்றிசெய்து
அன்றுபுரமெரித்த ஆரணனார்தன்பதத்தை
வருந்திமனதில் வணங்கிபடிபணிந்து
இருந்திமயேசுரனைத் தியானமதாய்த்தான்றொழுது
கண்டிமயேசுரனைக் கருணைமிகவணங்கி
தொண்டுபண்ணியப்பால் தொழுதுசகாதேவன்
அக்கினியில்சென்று அடங்கியொடுங்குகையில்
தக்கசந்துசீவன் தடுமாறிமூலமிட்டு
பிருதிவியில்வந்தொடுங்கிப் பேசாமல்மேல்நோக்கி

அருகியென்னுமண்ணைவிட்டு அப்புவிலேவந்தொடுங்கி
வாய்வுசதாசிவத்தில் வந்தொடுங்கிமயேசுரனை
போயடைந்துதெண்டனிட்டு பூரணமாயுள்ளடக்கி
தேடிவைகுந்தமதில் சேர்ந்ததுகாணம்மானை
ஓடியொடுங்கியபின் உடலுமிகக்குழைந்து
கழுத்துவிழுந்துழன்று கனத்ததலைசாய்ந்து
அழுத்தமுடன்மண்ணில் அடித்துவிழுகுமுன்னே
எடுத்துச்சமதாக இறுத்தியேநால்வருந்தான்
அடுத்திருந்துசாஸ்திரங்கள் ஆகமாய்த்தான்முடித்து
நிலத்திலடங்கியபின் நீலவண்ணதஞ்சமென்று
அலத்திறோர்நால்வர் அச்சுதற்குத்தான்கேட்க
வந்தான்சகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
நந்தாமுகுந்தா நாரணேநீர்காரும்
மாயோனேயென்தம்பி வந்தடைந்தானுன்பாதம்
ஆயாவுனக்கபயம் அச்சுதரோகாத்தருளும்
தந்தைதாய்போலாகத் தற்காத்தோம்பெருமாள்
எந்தம்பிவந்தான்காண் இனிக்காருனக்கபயம்
கண்ணாரோகாத்தருளுங் காயாம்புமேனியரோ
வண்ணரோநாங்கள் வருகிறோங்கண்டீரோ
என்றுதன்மார்தானும் இயல்பானதம்பியரும்
நன்றுசகாதேவன் நடந்தான்நமக்குமுன்னே
என்றுமனந்தேறி எழுந்திருந்தார்நால்வருந்தான்
வாழ்த்திமனந்தேற்றி மாயனையேதான்போற்றி
ஏத்தித்தொழுது இருகையால்தான்குவித்து
அஞ்செழுத்தாய்த்தேகம் அஞ்சுபஞ்சபூதமதாய்
அஞ்சுமுகமாய் அகண்டமெல்லாந்தானுகி
அஞ்சுபஞ்சலோகமாய் அஞ்சுபஞ்சவர்ணமுமாய்
அஞ்சுதலமும் ஐம்பொன்மகாமேராய்,
அஞ்சுபுலனுகியுள்ளே அஞ்சுபொறியாகி
அஞ்சுமலர்வேள்தனக்கு அஞ்சுபூபாணமுமாய்
எங்குநிரந்தரமாய் இப்படியாய்த்தானிருக்க
ஐவரென்றும்பேராய் அன்றளவுமின்றளவும்
தெய்வமென்றுநாங்கள் சேர்ந்திருந்தோமிப்போது
ஐவர்தனிலொருவன் அங்குவந்தான்கண்டீரோ
மெய்வருந்திநால்வர் விட்டகுறைதீர
எத்தனைநாளோ இப்போதேபிக்கணமே
அத்தனேயுன்பெருமை ஆறியப்போறூர்காண்
சித்தமுடனெங்களையுஞ் சீக்கிரமாய்ச்சேருமையா
வித்தகரேவாரோம் விண்ண்டக்கேளுமையா

விருத்தம்.

கேசவாமுகுந்தாவாரோங் கிருஷ்ணதேவாவாரோம்
ராசகோபாலாவாரோம் நரசிங்கரூபாவாரோம்

தாசரில்தாசாவாரோந் தடைகளில்லாமல்நன்றாய்
நேசமாயுனதுபாதம் நெடியவாகாருங்காரும். (கூ
நாரணர்பாதந்தேடி நால்வரும்நம்பிவாரோம்
வாரணர்யாளிசிங்கம் வல்லியங்கரடிபன்றி
கோரணங்கோழிபன்றி கோவிந்தாவுனதுபாதங்
காரணமாகவந்து காக்கவேவேணுமையா. (கூ

கதை.

தோத்திரங்கள்சொல்லித் தொழுதுநமஸ்கரித்து
சாத்திரமுஞ்சொல்வேதச் சகாதேவனைநிறுத்தி
வழிதேடிசெல்லவே மாயன்றனைத்தேடி
தெளிவாகநால்வர் திசைநோக்கியேநடந்தார்
நடந்தார்வெகுதூரம் நலலதொருநால்வர்களும்
கடந்தார்மலைபலவுங் காடுவனாந்திரமும்
ஊடேநடந்து உகந்துவரும்வழியில்
கோடேறிவீமன் கும்பிட்டுவாய்புதைத்து
அண்ணாவேயிப்போது அடியேன்சொல்விண்ணப்பம்
கண்ணனதம்பி கருத்துடையசகாதேவன்
விட்டுப்பிரிந்ததென்ன மேதினியில்நம்மைவிட்டு
கட்டேனேயெந்தனுக்குக் காவலரோசொல்லுமென்று
வீமனுங்கேட்க விளம்புகிறார்தன்மருந்தான்
பூமானேமுன்னாள் பொருகின்றபாரதத்தில்
பேரிட்டுநாள்முகுர்த்தம் பேசினார்சாஸ்திரத்தில்
சீரிட்டுப்போர்முடியத் திருத்தமுடன் அரவானை
களப்பெலியென்றேயிவனுங் கணக்கிட்டதாகையினால்
அளப்பொன்றுமில்லை அதுக்காயிவன்சடத்தை
பழிதொடருமென்று பார்மீதிலேகிடத்தி
வழிநடையிற்போட்டான் வகைவேறுமில்லையென்றார்
அந்தமொழிகேட்டு ஆமென்றுவீமனுந்தான்
சித்தைதெளிந்துச் சேகரமாய்நால்பேரும்
வைகுந்தம்நோக்கி வனத்தூடேசெல்லுகையில்
மெய்கண்டதீர்த்தமென்று விளம்புவாரோர்வசனம்
சந்திரகாந்தமென்றுஞ் சாந்தமாம்ந்தமலை
இந்திரன்வந்தென்றாலும் இருந்துசிவபூசைசெய்யும்
அந்தமலைமீதிருந்து அந்தமுள்ளதீர்த்தமது
விந்தைமலமொங்கும் விபரிதமாய்ப்பூர்க்கிருக்கும்
கண்டார்கள்கங்கையது காசிநதிபோலெனவே
கொண்டார்கள்தீர்த்தமள்ளிக் கோபாலர்தன்னருளால்
அப்பெரியபொய்கைதனில் அரம்பையருந்தேவர்களும்
செப்பமுடன்வந்து தீர்த்தங்களாடுகையில்
கன்னியருந்தேவர்களுங் கண்டார்கள்நால்வரையும்
மன்னியசீர்கன்னியர்கள் வந்துகரையேறிநின்று
பார்த்தார்கள்நால்வரையும் பாதாதிகேசமுதல்

வாய்த்தார்களென்று மனமகிழ்ந்து கன்னியர்கள்
மாலுமயனு மன்மதனும்போலாகி
மேலுமிருந்து விளையாடும்பாவனைபோல்
காஸ்வரையுங்கண்டு நங்கையர்கள் தங்களிலே
மேல்விழுந்துகாணழுது விள்ளாமலுள்ளடைந்து
மெத்தமயலாகி மெல்லியாகள்காலவரிடம்
உத்தமர்போலநேராய் உகந்துகிட்டவந்திருந்து
மன்னவரோநீங்கள் வந்தீரோயித்தூரம்
தென்னவரோநீங்கள் தேசமெங்கேநீங்களெங்கே
எந்தநாடெத்தேசம் எங்குவந்தீர்சொல்லுமென்றார்
வித்தமுறுகன்னியர்கள் விளம்புமென்றுகேட்டார்கள்
அப்போதுதன்மர் அன்புடனேதானிருந்து
இப்போதுசொல்லுகிறோம் ஏந்திழையேகேளுமென்று
தீரர்குருநாடு தேசமெங்கள்தேசமென்று
தாரரும்பாண்டுமன்னன் தன்புதல்வர்நாங்களுந்தான்
ஏராளமாய்க்கலியன் இவ்வுலகில்வந்ததினால்
கோரகாங்கள் நிலைமைவிட்டுத்தானகன்றோம்
மாதுதிருலட்சுமிதன் வைகுந்தஞ்சேரவந்தோம்
சாதுவாயுங்களையுங் தான்கண்டோமிப்போது
ஏதுவாகத்தன்மர் இவ்வசனந்தானுரைக்க
ஓதுவார்கன்னியர்கள் உற்றதன்மாதனிடத்தில்
வாரீர்காண்முன்னாள் மாதாக்கள்சொற்கேட்டு
பாரீர்புருஷ மிருகமதுபாலவாங்கி
வீமன்றனையனுப்பி மெய்ப்புடையகானகத்தில்
கேமமுடன்வீமன் நிமிஷமேசென்றுபுக்கி
தந்திரத்தினாலே சமதமாய்ப்பால்வாங்கி
மந்திரத்தினாலே வலுவீமன்தான்வரவும்
தொடர்ந்துமிருகமது சொன்னபடிதப்பாமல்
அடர்ந்துவலுமிருகம் ஆவிபிடிக்கையிலே
சலுகிமொருகாலுந் தாரவனத்திலோர்காலும்
எதிர்வந்துபற்றி இழுக்கவேவீமனுந்தான்
தர்க்கமிட்டுக்கொண்டு சமராடிநின்றிருந்தான்
மிக்கபுகழ்தன்மரிடம் விளம்புவோம்ஞாயமென்று
சென்றுமிருகமுந்தான் தீர்க்கமுடன்வீமனுமாய்
அன்றுதன்மர்முன்போய் ஆகமுடனாயமதை
கேளுமென்றுவலமிருகங் கிருபையுடன்வீமனுடன்
வாழுவீர்ஞாயம் வகையாகச்சொல்லுமென்று
ஒருவருக்குச்சாங்க முண்மைசற்றுமில்லாமல்
தம்பியென்றுசற்றுந் தயவுவைத்துப்பாராமல
மெய்யுடமேனியிலே இகமாகப்பேர்பாதி
நிறையாகவுன்னுடலே நோகத்தான்பிளந்து
குறையாமலேகுறைமல கொடுத்துவிடுவீமனென்று

தச்சன்றனையழைத்துச் சதுராசிநாற்போட்டு
மெச்சவேதச்சன் உளியினுலவர்துணிக்க
மிருகமதுகண்டு வெகுவாய்மனமகிழ்ந்து
தருகாமல்நான்போறேன் தன்மரோயுந்தனுக்காய்
பொறுத்தேனிதுஞாயம் பூவுலகிற்கண்டதில்லை
ஒருத்தேனைமிருகம் உயர்கானகந்தனிலே
போனதுவுங்கேட்டிருப்போம் புண்ணியவான்தன்மரொன்று
ஆனதினுலுங்களைப்போல் அவனிதனிலில்லையென்றார்
பின்னையுமேவீமன் பிரபலமுங்கேட்டிருப்போம்
முன்னமேபாரதப்போர் மூண்டசமர்தனிலே
வல்லிடும்பன்தன்னுடனே வலியமகாசூரனையும்
சொல்லரியகிசகனுங் துஷ்டதிரியோதிரனும்
கல்லசராசந்தனையும் நாட்டிலுள்ளவேந்தரையும்
வீரமுடன்காலனுக்கு விருந்துதனையளித்து
பாரமுள்ளவீமனுட பராக்கிரமங்கேட்டிருப்போம்
ஈதல்லால்பார்த்தனுந்தான் ஈஸ்வரனைத்தானோக்கி
பேதமில்லாப்பாசுபதம் பெற்றதுவுமல்லாமல்
அசுரர்தனைவென்றதுவும் அமரர்சிறைமீட்டதுவும்
பசியுடைய அக்கினிக்குப் பரிந்தமிர்தமீய்ந்ததுவும்
யாலாலபிமனையும் பாராமற்றேத்தாசன்
சூலமதாற்கொன்ற துயரமதுவைத்திருந்து
தேற்றாசன்தன்னுடனே சேருரும்பாகனையும்
மாற்றாசர்சேனையையும் மன்னரையுங்கொன்றழக்கி
அர்ச்சுனனுமென்று அப்போதுங்கேட்டிருப்போம்
விரிவானமேதினியில் விரகுடையசூரனென்று
பரிகுலனென்று பாங்குடனேசேட்டிருப்போம்
மற்றும்நிகழ்காலம் வருங்காலஞ்செல்காலம்
முற்றுஞ்சகாதேவன் மொழிவதுங்கேட்டிருப்போம்
அப்படியேநாங்கள் ஐவருடசெய்தியெல்லாம்
இப்படியாக்கேட்டிருப்போம் இன்னமுருக்கண்டதில்லை
அவரவரைப்பார்க்க ஆச்சரியமெங்களுக்கு
இவரிவர்தாமென்று எங்களுக்குச்சொல்லுமென்றார்
மங்கையர்கள்தான்கேட்க மகிழ்ந்துதன்மராசனுந்தான்
சங்கையுள்ளபெண்கள் தன்மரென்பேர்கண்டீரோ
மெல்லியரோநல்ல வீமன்விசையனிவன்
சொல்லுங்குலனிவன் தோகையரேயின்னமுந்தான்
வேதன்சகாதேவனுடன் மின்னார்துரோபதையும்
போதருடன்வைகுந்தம் போய்ப்புகுந்தாரெந்தனைத்தான்
இருந்துமதிசன்னியருந் தேவேந்திரன்மகளும்
இருந்துதன்மர்சொன்ன இயல்பதனைக்கேட்டிருந்து
வாருமையாஎங்களுட வானவர்கோன்தன்னிடத்தில்
சேருமையாவுங்களுக்குத் தெய்வலோகந்தானளித்து

மன்னவரோநாங்கள் மருவிமனையாளாய்ச்
சொன்னபடிகேட்டுத் தொண்டுசெய்வோம்நாங்களுந்தான்
எங்கள்பொருட்டால் இனிக்கேளுமன்னவனே
தங்களிலேவேள்விசெய்து தவம்பண்ணிநிற்போரும்
அக்கினியிலூசியின்மேல் அணிவிரலைத்தானிருத்தி
சிக்கெனவேதவசு செய்துமுடிப்போரும்
கால்மேலுந்தலைகீழாய் கடுந்தவசுநிற்போரும்
பால்போலும்எக்கியங்கள் பண்ணிமுடிப்போரும்
தெய்வப்பெண்களென்று தெய்வப்பதவியென்று
மெய்வருடியாகம் விரும்பிவளர்ப்போரும்
வேண்டியல்லோவித்தவசு வேண்டுமென்றுசெய்தார்கள்
தூண்டிவினையாமல் சொற்பனத்திற்கேளாமல்
வலியவேநாங்கள் வரவழைத்தால்நீங்களுந்தான்
பொலிவாகுமென்று பூரணமாயெங்களுடன்
வந்துபுரந்தரனை வணங்கியனுதினமும்
நூந்துதெய்வலோகம் முழுதுக்கணலாகி
இருக்கலாமென்று ஏந்திழைமார்தானுரைக்க
வருக்கமுடனின்னம் வகையுமக்குச்சொல்லுகிறோம்
தீர்க்கமுடன்வைகுந்தம் சேரவேவேணுமென்றால்
ஆர்க்குமுடியாது அருந்தவத்தோர்க்கெட்டாது
இறந்தோர்க்குமேதினியில் இல்லவேயென்பதுதான்
சேளீரோபூவுலகில் கிருபையுடன்மன்னவரே
ஆளீரோதெய்வுலகம் அன்பாகஎங்களுடன்
ஈஸ்வரனும்பெண்கள் இருவர்தனையருகில்
வாசமுடன்வைத்து மருவியிருக்கிலையோ
பாவிக்கலைமகளைப் பண்ணுமறைவேதியனும்
நாவில்தரித்துமவர் நட்பாயிருக்கிலையோ
சீதைதனைநெஞ்சில் திருமாலும்வைத்திருந்து
கோதையுடன்கூடிக் குலாவியிருக்கிலையோ
தேவேந்திரனுஞ் சிறப்பாயிந்திராணியுடன்
கோவேந்தேகூடி குலாவியிருக்கிலையோ
மதனும்ரதியும் மருவியிருக்கிலையோ
அதனமுடன்தவசில் அறிவாயிருந்தோமே
கண்டாசைகொண்டு கலந்தாசைதீர்க்கிலையோ
விண்டாசையெல்லாம் வெறுத்துமுனிவர்களும்
நன்றுயதையறிந்து நாதாக்களெல்லோரும்
ஒன்றுகிக்கர்த்தாவை ஊடுருவக்கண்டோரும்
பூதமோரைந்து புலன்பொறிகள்தானடக்கி
நாதமொடுவிந்துசுழி நடுவணையுந்தானிருத்தி
நாடிதனையறிந்து நடுவானவட்டமதில்
தேடியமூர்த்தர் தெவிட்டாமலுண்டிருக்கும்
யோகிகளுமிப்போது உலகந்தனிலிறங்கி

போகமெனும்விந்துதனைப் புறம்போக்கிருக்கிலையோ
அறவேவெறுத்து அவனிதனிலாசைவிட்டு
துறவாகிவந்ததென்னச் சொல்லுமென்றார்கன்னியர்கள்
இன்பமுள்ளகன்னியர்கள் இவ்வசனந்தான்கூற
அன்புடனேதன்மர் அவர்களுடனேசொல்வார்
ஈதெல்லாம்நீங்கள் எடுத்துரைத்திரிப்போது
ஆதலாலந்த அற்பசுகவாழ்வைநம்பி
ஈடழிந்துநாங்கள் எடுத்ததவங்குலைய
கூடழிந்துபொல்லாக் கொடுநரகில்வீழ்வதற்கு
சொன்னீரோபெண்கள் சோதனையோயெந்தவிதம்
மின்னீர்பொழியும் முகில்வண்ணர்தன்னருளால்
இப்படியுஞ்சொல்லுவரோ ஏந்திழையேயெங்களுக்கு
கற்பனையுங்கேட்கக் கருமமோயெங்களுக்கு
ஞானவைகுந்தஞ் சேரவென்றுபோகையிலே
கோரகநின்று நில்லுமென்றுசொல்வீரோ
ஒன்றுமுரையாமல் ஒழியமேநீங்களுந்தான்
நின்றுவிடுமென்று நெடுமால்தனைநினைந்து
வாகுடையதன்மருமாம் வாய்த்ததம்பிமூவருமாம்
ஏகுவோமென்று இதமாய்வனத்தூடே
நடந்தார்வனவாசம் நால்வருமேதான்கூடி
கடந்தார்வெகுதூரங் காடுமலைதான்கடந்து
வானேரொணப்புவியும் வாளகிரிமாமலையும்
போனார்கள்நல்ல புதுமையெல்லாந்தானறிந்து
சேர்ந்தபலநதிகள் தீர்த்தமதுதானாடி
வாய்த்தநல்லருத்திராட்ச மரங்களுடசந்தனமும்
கற்பகக்காவுகளும் கண்டுமிகத்தோன்றி
நற்புடையசோலையென்றும் நடந்தனர்கள்நால்வோரும்
அந்தமலைக்கப்பால் ஆறைந்துயோசனைதான்
வந்தவர்கள்முன்னே வழியில்வெகுவானரங்கள்
கண்டுமனமகிழ்ந்து காவலரோநீர்கேளும்
புண்டரீகமாயனிட பூமிதனில்வந்தீர்காண்
இன்னானிலுங்களையும் இவ்வுலகில்நாம்காணோம்
என்னாடுயெத்தேசம் எங்கிருந்துயிங்குவந்தீர்
மன்னானீர்சொல்லுமென்று வானரங்கள்தான்கேட்க
பொன்னானுந்தன்மர் புனையுடையோரோதுசொல்வார்
மன்னார்குருகுலத்தில் பாண்டுமைந்தர்நாங்களுந்தான்
மண்ணாசைவிட்டு வந்தோங்கலியதனால்
அத்திபுரத்திருந்து அச்சுதனைத்தாம்நோக்கி
பத்தியுடன்கானகத்தில் பரிந்துவந்தோங்கண்டீரோ
நீதமதிவானரங்கள் செய்தியெல்லாந்தான்கேட்டு
ஆதலாலெங்கள் அனுமார்க்கிளையவன்காண்
வீமனல்லோவென்று விசையனிடதோர்தனக்கு

கோமானே வெற்றிக் கொடியல்லோ நாங்களுந்தான்
உம்மாணையெங்கட் குரியோர் காணீங்களுந்தான்
எம்மாணை யிங்கே இருந்தீரோ யாமாகில்
காடுபகைவந்துதெனாலும் நாங்களே வெற்றிகொண்டு
நாடுபண்ணியுங்களுக்கு ஏவல்செய்து தானிருப்போம்
இங்கிருநீரென்று எடுத்துரைக்க வானரங்கள்
தங்குபுகழ்மன்னன் தன்மருந்தானேது சொல்வார்
துங்கமுடியனுக்குத் தொண்டுசெய்யும் நீங்களல்லோ
கடலதனையே கல்லணையாய்க் கட்டினது நீங்களல்லோ
அடலம்புலியோர்க்கு ஆற்பரித்து நின்றவர்கள்
ஆனதிலே யென்னை அஞ்சாதே யென்று சொல்லி
மானமுடன் காக்க வானவர்தாம் நீரல்லவோ
உலகதனில் காக்க உங்கள்மேல் பாரமல்லோ
புகழ்ந்துதான் தன்மர் பூரித்து வார்த்தைசொல்ல
மகிழ்ந்துதான் வானரங்கள் வைகுந்த மாளிகைக்கு
போதமுடன் கேதாரம் போறவழிபாதெனவே
நீதமுடன் காட்டில் நெடுந்தூரங் கூடவந்து
சத்துபயில்வளர்ந்தான் தாவிவழிகாட்ட
மெத்தமனமகிழ்ந்து விரைந்துவழிகூடி
சுற்றவந்தான் வேண்டி நடந்தார் வனத்தூடே
இயக்கர்பதியும் இராட்சதர்கள் தன்பதியும்
மயக்கும்புலையர் வல்வேடர் தன்பதியும்
கொலையாபழிஞர் குறவரிட தன்பதியும்
மலையிற்பலசாதி வாழுகின்றோர் தன்பதியும்
கானல்வெகுதூரம் காவலர்கள் தன்பதியும்
கடந்துமலைகடந்து நாற்பத்தெண்காதவழி
மீதானகானகத்தில் வேகமுடன் தான்நடந்தார்
சதாகமுவற் கிளையகுலனுக்கு
மெய்கலங்கியுள்ளசந்து விதிப்பயனுந்தான் முடிந்து
கைமரந்துகாலசந்து கண்ணுமிகச்சுழன்று
வாக்குமொழி மதிமயங்கிவாய்குளறி
தாக்கத்துநின்று தள்ளாடும் வேளையிலே
வீமன் விசையன் மிக்கான தன்மருந்தான்
பூமனகுலனையும் போயணைத்தார் மார்புடனே
கார்மறலிதூதுவர்கள் கடுகவா வென்று சொல்லி
போரகுலன்றன்னுடனே போராடி வார்த்தைசொன்னார்
தூதுவர்கள்வந்த துடிக்குமிவனறிந்து
ஏதுவாக நெஞ்சில் எட்டெழுத்தைத் தானினைந்து
மாதுநிருமால்பதத்தை மனதிற்றியானமதாய்
ஓதுவான் போர்குலனை ஒதுங்கியே காலனுந்தான்
வாகாகவே கடந்து மயேந்திரமலை தன்னில்வந்து
ஏகாந்தமாக இருந்துசுனை நீராடி

வந்துசுகமென்று மலேமீதிற்றனேறி
புந்திமிகமகிழ்ந்து புயனென்னுமாமுனியை
பாதம்பணிந்து பரிவுடனேதானிருந்தார்
ஏதுநீரிங்குவந்தீர் இயம்புமென்றூர்மாமுனியும்
தாங்கள்வந்தவாறுதன்னைத் தன்மார்முனிக்குரைக்க
ஓங்குமுனிகேட்டு உகந்தேதுவார்த்தைசொல்வி
போரகயெந்தனுக்குப் பெண்களாயிரந்தான்
மாராமல்நீங்கள் மணமுடித்துயிங்கிருந்து
காடுதனைக்கண்டு காவலரோயிப்போது
நாடுதனையாண்டு நம்மிடத்திற்றனிருந்து
பெரியவரைச்சார்ந்தால் பிறைபோலநாள்தோறும்
வரிசையாய்த்தான்வளர்ந்து வாழ்வுமிகவுண்டாகும்
சீர்முனியைச்சேர்ந்தால் சிறுமைபெருமையதாம்
தார்முனிவன்சொல்லத் தருமருந்தானேர்வசனம்
பாரமுனியெங்களுக்குப் பாராசையொன்றுமில்லே
கார்முனியேயெங்களைநீர் கடைத்தேற்றவேணுமென்று
எங்களுக்குவைகுந்தம் இருப்பிடமேயல்லாது
தங்குவதுமில்லே தரிப்பதுதானில்லேகாண்
கஞ்சமலர்ப்பதத்தைக் காணவிடைதாருமென்று
தஞ்சமெனவேமுனியைத் தரணிதனிலேபணிந்தார்
பணிந்துவிடைவாங்கிப் பாங்காகமூவருந்தான்
துணிந்துநல்லமன்னர் துயாறவேதானடந்தார்
அப்பாலுங்கானகத்தில் ஆன்பதுயோசனைதூரம்
மெய்ப்பாகவேநடந்து மெல்லடிகள்கொப்பளமாய்
வருத்தமுடனடந்து வடலாலின்கீழிருந்தார்
சுருத்துடனேயங்கிரண்டு கன்னியர்களூசியின்மேல்
பாதமதையூன்றிப் பாரில்விழிநீள்சடையாள்
நீதமுடன்தவசு நின்றூர்கள்கன்னியர்கள்
கன்னியரைக்கண்டு காவலர்கள்தான்பணிந்தார்
மன்னரோநீர்தாமும் வந்ததுதானேதெனவே
கன்னியர்கள்தான்கேட்கக் கனத்தபுகழ்தன்மருந்தான்
பன்னியசீர்மாதே பத்தினியேயுத்தமியே
சீரார்குருநாட்டில் சோந்தொரு அத்திபுரம்
பாரார்புவிராசன் பாண்டுமன்னன்தன்புதல்வர்
மருவிணையதன்மனேன்பேர் வாய்த்தம்பிமாரிருவர்
திருவிணையேமாதேநீ செய்தவத்தாலிங்குவந்தோம்
கண்டபோதெங்கள் கர்மமெல்லாந்தான்தீர்ந்தோம்
தொண்டதவம்பெறவே சொல்லுமென்றூர்தன்மருமே
தர்மர்மொழிகேட்டு தயவுவந்துகன்னிகையும்
இம்மைதனில்வேணுமென்ற தெல்லாந்தானுந்தாரேன்
உங்களுக்குவேண்டியதை யுண்மையாய்க்கேளுமென்றூர்
எங்களுக்குவேண்டியதை இத்தவமேபோதுமென்றூர்

சொன்னவுடன்கன்னியர்கள் தோத்திரமாய்த்தான்வாழ்த்தி
மன்னர்பெருமான் வைகுந்தங்காண்பெறுவீர்
என்றுவிடைகொடுத்து ஏந்திழைமார்தானிருந்தார்
அன்றுவனங்கடந்து ஆழியநீர்ப்பொய்கையிலே
தீர்த்தங்களாடித் திருநாமந்தான்தரித்து
கார்க்கவேயிப்போது கடந்தார்வெகுதூரம்
மேகமுளவாயவளந்த வீரமயேந்திரத்தில்
மாகமுயர்மலைமேல் வந்தவர்கள்தானேறி
அங்குள்ளமாமுனிகள் அடிகள்பணிந்தேற்றி
பொங்குபுனலாடிப் புண்ணியர்களப்போது
அந்தமலைகடந்து அடவிகளுந்தான்கடந்து
நந்திவளர்கோசமலை நாட்டிலேதானேறி
பவளமணிமேனிப் பரஞ்சுடராமாமுனியே
துவளவணங்கித் தொழுதார்காணம்மானை
அம்மலையில்வாழும் அகஸ்தியர்புலஸ்தியனை
வெம்மைவிசுவா மித்திரர்வசிஷ்டரையும்
ஜனகன்சனற்குமாரன் சனகமுனிதனையும்
மனமருவுங்காளமுனி வாகானகோமுனியும்
சுகருடனேகாசிமுனி சொற்பெரியகிசமுனி
பகருமொருபேர்பெரிய பராசமாமுனியும்
சென்றுவணங்கித் திருத்தாள்சரணமென்று
நின்றுபலமலையும் நேசமுடன்கண்டுசென்று
நடந்தார்வனத்தூடே நாகமலைதான்கடந்தார்
அடர்ந்ததொருஆறும் அருவிகளுமாமலையும்
கடந்துவெகுதூரங் கடுகிநடக்கலுற்றார்
தொடர்ந்துவருமாளிசிங்கம் தொழுதுபணிந்திடவே
மகிழ்ந்துகெருடாழ்வார் மலையதுவுந்தான்கடந்து
புகழ்ந்தென்பதுகாதம் போனார்கள்மூவருமாய்
அவ்விடத்திலுள்ள அதிசயந்தான்பார்த்து
எவ்விடத்தில்கண்டதில்லை இந்தவதிசயந்தான்
கண்காட்சியெல்லாங் கண்டோங்களிகூர்ந்தோம்
விண்காட்சிகாணவென்று விரைவநடக்கலுற்றார்
நடக்கும்வழிதன்னில் நல்லமருத்துமலை
அடக்கமாய்நின்ற அதிசயமுந்தான்பார்த்து
தேவர்களும்வந்து திருக்கூட்டமாயிருக்கும
பாவமுந்தீர்க்குமந்தப் பன்னகசாலையிலே
இருந்துதவிப்பாறி எண்ணமெல்லாந்தான்தீர்ந்து
அருந்துபுனல்மூழ்கி அமுர்தமள்ளித்தானுணர்ந்து
சிறந்துவளர்ந்தோங்கிநின்ற தென்னவனந்தன்னில்வந்து
துறந்தோர்முனிவருக்குந் தொண்டுபண்ணியப்பாலும்
சிந்தைமிகமகிழ்ந்து திருமால்தனைநினைந்து
இந்திரசோபமென்னு மேகமலைமீதேறி

செல்லுகின்றபோதே சித்தாதிசித்தரெல்லாம்
நல்லவர்களென்றறிந்து நட்பாகவார்த்தைசொல்லி
எங்கிருந்துஇங்குவந்தீர் இம்மூவர்நீங்களுந்தான்
துங்கமுடிவேந்தர்களே சொல்லுமென்றார்சித்தர்களும்
சித்தர்களுந்தான்கேட்கச் சீரானதன்மருந்தான
அத்தரோநாங்கள் அத்திபுரநகரில
பாண்டுமன்னாதன்புதல்வர் பஞ்சவர்கள்நாங்களுந்தான்
வேண்டுமென்பேர்தன்மன் வீமன்விசையனிவன
ஆண்டதொருநகுலன் அரியபதந்தான்சேர்ந்தான்
மாண்டுசகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
அஞ்சுபேர்தன்னில் அடியேங்கள்மூவருந்தான்
மிஞ்சுமொருவைகுந்தம் வித்தகரோசேரவென்று
வந்தோம்வனத்தூடே மலைகடந்துயித்தூரம்
சந்தோஷமாச்சுதுங்கள் சந்நிதியைக்கண்டவுடன்
இனிமேலதுயரமது எத்தனைதானாலும்
பனியதுபோல்நீங்குமுந்தன் பாததெரிசனையாய்
இன்பவைகுந்தங்காணெத்தனைநாட்செல்லுமையா
அன்புடனேசொல்லுமையா அடியேங்கள்போய்ச்சேர
என்றுதன்மர்கேட்க இயல்பானசித்தர்கள்தான்
நன்றெனவேசொல்லுகிறேன் நன்மையுளபஞ்சவரே
அந்தரத்திலேதிரிந்து ஆகாசமூடுருவி
தந்திரத்தினல்குளிகை சாதகமாயண்டமெல்லாம்
கெவுனமாயோடியொரு கேசரியாக்கமதாம்
மவுனமாய்நாந்திரிந்து வைகுந்தங்கண்டதில்லை
வைகுந்தஞ்சுத்தி வருவோமடுத்தறியோம்
மெய்யென்றுகண்டு விளங்கினோம்வந்ததில்லை
அந்தமட்டுங்கண்டறியோம் அச்சுதனைநாம்தாமும்
இந்தமட்டும்நீங்கள் எல்லாந்தனைவெறுத்து
நாடுவிட்டுவந்து நவனுகிசித்தரையும்
காடுதனிற்கண்டீர்காண் கருத்துடனேயெங்களைதான்
நடுமகனைச்சோடு எதிருண்டோமன்னவனே
மாயனிடசீர்பாதம் மன்னவரோநீர்பெறுவீர்
தூயதொருதன்மனென்று சொல்லுவார்கேட்டிருப்போம்
கண்டோமநாமுங்களையுஞ் சகலமோயிப்போது
விண்டோமநாமுங்களுடன் மெய்விட்டுவாய்திறந்து
கேதாரந்தாமலல கிட்டச்சமீபமினி
பாதாரவிந்தமதில் பஞ்சவரோசேர்ந்திருப்பீர்
என்றுநவசித்தர்கள்தான் ஏகினார்காணம்மானை
அன்றுதன்மர்வீமன் அருச்சுனனுமன்னோரா
செங்கமலமாது சீதைமகாலட்சுமியாள்
பங்கரோதந்தமென்று பார்மீதிலேகிடந்தார்
எல்லைகடந்தப்பால எண்பதுயோசனைதாம்

முல்லைபிச்சிசெண்பகமு மம்மலர்கள்பூத்திருக்கும்
திலைவனங்கடந்து செந்நதிதான்மூழ்கி
வில்வவனங்கடந்து வெள்ளிமலையினூடேபோய்
குன்றுபருவதமுங் கொடுஞ்சுரமுந்தான்கடந்து
சென்றுதிருமலைமேல் தீர்த்தங்கள்தானாடி
புட்பமலரெடுத்துப் பூசைகளுந்தான்முடித்து
நிறபளவிமேலவிசையனை நீலவிழிநீர்சொரிய
நெஞ்சலர்ந்துகண்சுழன்று நெடுமால்தனைநினைந்து
தவமாகவூழியஞ்செய் தாசனென்றுதானிருந்து
பத்தவதாரம் பார்மீதிலேயெடுத்தீர்
வித்தகரோயும்மையுநான் விட்டுப்பிரிந்தேனோ
நாரணரோகேளும் நான்விருத்தம்பாடுகிறேன்
காரணரோகாகக் கடவுளரோகண்பாரும்

விருத்தம்

கண்ணுக்கருத்துமொன்றாகிக் கலனைப்பொறியிலுயிர்களைந்து
எண்ணுமெழுத்துமயாமமெட்டக்ஷரத்தைப்பிரியாமல்
நண்ணும்பாரிலநுதினமும் நாரணமோதஞ்சமென்றேன்
விண்ணும்புவியுமளந்துநின்ற விந்தைமலர்த்தாளதருவாயே. (௧௭)
கடியமறலிதானேது கமலக்கண்ணனிங்கிருக்க
முடியும்வினைகளணுகாது முகுந்தாநந்தாவெனத்துதிக்க
விடியவுதித்தகதிர்போலே விந்தைமலராம்வைகுந்தம்
நெடியபதவியுண்டாக்கி நீயேயருள்வாய்கோபாலா. (௧௮)

கதை.

இரண்டுவிருத்தம் இன்பமாய்த்தான்படித்து
தொண்டுதிருமால் தொழுதுமனமகிழ்ந்து
வாசமுள்ளதூதுவரும் வானவருமவ்வெதிரே
நேசமுடன்பார்த்தனையும் கோசத்தானழைத்து
புஷ்பகவிமானத்தி பூரணமாய்த்தானிருத்தி
செப்பமுடன்ரதத்தைச் சிங்காரமாய்நடத்தி
பொன்னுலகமெங்கும் பூப்பந்தல்தானிறைத்து
மின்னுலகத்தோரணங்கள் வீதியெங்குந்தானிறைந்து
தோரணங்கள்நீள்கமுகால் சோடித்தார்வாழையினால்
பூரணகும்பமெங்கும் பூரித்தாரம்பையர்கள்
ஆலத்திகர்ப்பூரம் அலங்கரித்தார்கன்னியர்கள்
தாலத்திருவிளக்குத் தானெடுத்தார்பூவையர்கள்
கர்ப்பூரவாசங் கமகமென்றுதான்மணக்க
பொற்புடையவானோர்கள் பூரித்துச்சூழ்ந்துவர
காரணனோர்தன்பதிக்கு நல்லவழிசேர்த்தனமே
பூரணமாய்வானோர்கள் போற்றிமிகத்தேற்றி
அசுரர்தனையறுத்து ஆயிரவர்பாங்கிருக்க
விசையனைவானவர்கோன் வெகுநடபுத்திரனே
குபேரமாமலையைக் குறிக்கேயருகிலவந்து

அந்தமலைசிறந்து அருள்முனிவரைப்பணிந்து
இந்துலவுயாமலையில் இருடிகளைத்தான்பணிந்து
சீருலவுமூவா சிகமெருபாமலைக்கு
பாருலகுதன்மருடன் பாங்காகவேகடந்து
நீண்டமலையருகே நெடியோனைத்தஞ்சமென்று
ஆண்டவனைப்போற்றி அனேகமெடுந்தூரம்
நந்தவனமும நலமலருஞ்சோலைகளும்
மந்தாரைப்பிச்சி மல்லிகைப்பூக்காவனமும்
அந்தமுள்ளபாரத்தனுக்கு அசலிவந்துதோன்றியதே
கொந்துலவுயிப்போது குணகிரிலகுசோதியமாம்
காலசைந்துகையசந்து கணேறுயிகச்சுழன்று
மேலசந்துபாசம மெய்யசந்துநாவுலர்ந்து
அங்கங்குளிர்ந்து அக்கினியுந்தானொடுங்கி
பொங்குஞ்சுவாசம் பொறிசலங்கிமேலநோக்கி
நாடிகளோர்ந்து நரம்புமிகப்பதறி
ஓடியொடுங்கும் உண்மைதனைத்தானறிந்து
பொறிகலங்கும்போது போர்வினையையனருளறிந்து
நெறிகலங்கும்நெஞ்சை நிறுத்தியசையாமல்
இருநாங்கெழுத்தை இருதயத்திலேயிருத்தி
ஒருநாங்கெழுத்தை உள்ளடக்கிமேலநோக்கி
நனெழுத்தைப்பார்த்து வினைவெழுத்திலறிந்து
குன்றெடுத்தமாலே கோவிந்தாவென்றுசொல்லி
அத்தனேயெங்கள் ஆதிநாராயணனே
நித்தனேபோற்றியெங்கள் நீலவண்ணாதான்போற்றி
மெய்யனேபோற்றிஐயா விண்ணோர்பெருமாளே
ஐயனேபோற்றியெங்கள் அடியார்க்கெளியோனே
வேதன்தனைப்படைத்த வித்தகனேமெய்ப்பொருளே
பாதந்தனைமறக்கேன் பச்சைமுகில்மேனியனே
பேய்முலைப்பாலுண்ட பிரானேயுனைமறக்கேன்
கண்ணனேயெந்தன் கருத்திலேதானிருந்து
அண்ணனேகாரும் அடியேன்சரணமையா
நேயனேயெந்தன் நெடுமால்சரணமையா
மாலையழகா வடிவழகாமாயவனே
சேலையழகா துணையெனக்குமுன்பாதம்
நம்பினேன்காத்தருளும் நாரணனேதஞ்சமென்று
வெம்பியுயிர்மாளாமல் விவரமறிவுடனே
அவதாரமபத்தும் அடியேன்பணிவிடைதான்
காண்டிபத்தாற்றலையும் கட்டுவதேவாறுத்து
வேண்டியவானவரை மெய்மகிழவைத்தோனே
வானவருந்தேவர்களும் வந்துமலர்சொரிய
தானவருந்தேவர்களுந் தர்மமசெயமென்றுவர
அந்தணர்கள்சூழ்ந்துவர அரம்பையர்களாடிவர

கெந்திருவர்கணநாதர் கிம்புருடராடிவர
தேவேந்திரன்புதல்வன் தேர்மீதிலேவரவே
கோவேந்திரனோ குபேரனோவென்பாரும்
திக்குவிசையன் செலுத்தினனென்பாரும்
மிக்கவிசையன் வீரன்காணென்பாரும்
தக்கபுகழ்செலுத்தும் தனஞ்சயன்காணென்பாரும்
மெய்க்கபுகழரம்பையர்கள் மெய்மலர்கள்தான்சொரிய
அந்திரத்தில்துந்துமிகள் ஆலாத்தியேந்திவர
தந்திரக்கின்னரங்கள் சங்கீதம்பாடிவர
சோபனங்கள்சொல்லித் தோகையர்களாடிவர
பூபனருச்சுனனும் புஷ்பகவிமானமதில்
தேவர்கள்கொண்டாட செயசோபனத்துடனே
மூவர்களுங்கண்டு முத்திபெற்றானென்றுசொல்லி
தர்மனருச்சுனனும் சந்திரன்போல்தானிருந்தான்
ராமவைகுந்தமதில் நாராயணனவனே
கொண்டுவந்துவானவர்கள் கோவிந்தாவென்றுசொல்லி
விண்டுவெட்டபதியில் வீற்றிவென்றுவைத்தார்கள்
வந்தானிருந்தான் வைகுந்தந்தான்சேர்ந்தான்
விந்தமகாலிங்கைபதம் விசையனுமேசேர்ந்தபின்பு
பார்த்தனுயிர்போகப் பார்த்திருந்தவன்மருமே
கேற்றிருந்தாரின்திருக்க நிச்சயமில்லாதவுடல்
காத்திருந்தகூற்று கழன்றோடிப்போனவழி
பார்த்திருந்ததேசம் பதறுமலுள்ளடங்கி
காத்திருந்துதானிருவர் கைகருமந்தான்முடித்து
வீத்திருந்துபார்த்தனுக்கு வேணுமென்றசாஸ்திரமும்
செய்துமுடித்துத் தீர்த்தங்கள்தானாடி
எய்துகருமமெல்லாம் இருபேருந்தான்முடித்து
சிவனேதிருமாலே சிவராமசாருமென்று
அவனேஅரிராமா அச்சுதனேகாருமென்று
தருமருடவீமனுமாய் தானிருந்துமாயனையும்
திருமாலேவுந்தன் சீர்பாதமெப்போது
மறவாமலேநடந்து வருவோம்பதிசேர்வோம்
திறவாகவும்முடைய சீர்பாதந்தாருமையா
இத்தரணிதன்னில் இருவோர்க்குந்தான்துணையாய்
வித்தகரேவந்து வீமனையுமெந்தனையும
மெய்கலங்கிலலாமல் விவரமுடனறிவும்
ஐயோகாருமென்று அச்சுதரேநீர்துணையாய்
மெய்புடையதன்மருமாய் வீமனுடன்தானெழுந்து
வைகுந்தஞ்சேர வழியேநடக்கலுற்றார்
ஒக்குமொருபட்சிக் கொருசிறகுவீழ்ந்தாப்போல் !
தாங்குமொருசிறகு தனிவீமன்றனுங்கி
இருசிறகுகொண்டு எதிரில்லையெனவிருந்தேன்

ஒருசிறகுகொண்டு உன்னிவழிநடந்து
திறலாநீள் தருமர் சென்றார்வனத்தூடே
ஓதரியவீமன் ஒருவனுமேதானாகி
அன்னவர்கள்நாலவர் அருங்கானிலேமடிந்து
மன்னவிருபேரும் வராகமலைதான்சேர்ந்து
சேர்ந்திருந்துதங்கள் இயக்கந்தகையாறி
வாய்ந்துபுகழ்வீமன் மனதுமிகவுழன்று
தாராருந்தன்மருட தாளிணையைத்தான்றொழுது
சீரானநல்விசையன் சீவிதகாணிவ்வனத்தில
ஏதையாசொல்லும் எனக்கறியவின்னமென்று
சீரானபாரதத்தில் தேர்ப்பாகன்தானாகி
மேகவண்ணர்தேர்நடத்த மிகையதனாலிவ்வனத்தில்
தேகமதைவிட்டெரிந்து திருமாலிடஞ்சேர்ந்தார்
விசாரமினிவேண்டாம் வீமனேயென்றுசொல்லி
உசாவதுணைநமக்கு உலகளந்தாருண்டெனவே
செடிழுந்தபட்சிகள்போல துயரமெல்லாமுள்ளடக்கி
கூவியேசென்று குமூர்தமலராறுதன்னில்
நாடியேபாதை நடந்தேவெகுதூரம்
தொடர்ந்துவனங்கடந்து தொண்ணூற்றுக்காதவழி
நடந்துமலைகடந்து நாற்பதுயோசனைதூரம்
உத்சகநமலையும் ஓமகிரியென்னுமந்த
அஸ்தகிரிமலையும் அவ்வனமுந்தான்கடந்து
சராசரமுமாமலையும் தாங்கள்மிகக்கடந்து
வாராகிமலைதன்னை வந்தடைந்தாரம்மானை
நன்றியுள்ளதன்மருமேல் நாடிச்சினந்தெழுந்து
பன்றியொன்றுவந்தெதிரே பகட்டியதட்டுகையில்
பரிந்துமிகவீமன் பன்றிதனைப்பிடித்து
தெரிந்துகழுத்தைத் திருகுமந்தவேளையிலே
வேதியன்போலநின்றான் மிக்கதொருபன்றியுந்தான்
நீதியுள்ளதன்மர் வினவேதெனக்கேட்டார்
ஓதுவான்வேதியனும் உள்ளபடிதப்பாமல்
சாதுவுள்ளதன்மருடன் தானுரைத்தான்வேதியனும்
இருநித்தவம்புரியும் சார்மேகமாமுனிவன
பருநித்தவச பருவதத்தில்மேவிருப்போம்
தக்கதொருவேள்விக்குச் சமிதைகொடுவாவெனவே
சிக்கெனவேவாவென்று செப்பினார்மாமுனிவன
சமிதெடுத்துப்போகத் தாமசமாயின்றுவிட்டேன்
குமுட்டிமனங்கோபங் கொண்டெழுந்துமாமுனியும்
அமட்டியெனைவெகுண்டு அகோரித்துச்சாபமிட்டார்
இச்சாபமிட்டார்காண் இவ்வடிவுமானேனான
அச்சாபந்தீருமெப்போ அருளுமெனவுரைத்தேன்
தன்மருடன்வீமன் தனித்துவருமவ்வழியில

மின்மருவுந்தன்மர்தன்னை வெகுண்டுசினந்தெதிப்பாய்
வலுவீமன்கண்டு வாரிப்பிடிக்குனையும்
தலையைத்திருகையிலே தான்றீருஞ்சாபமென்றார்
ஆனைநிலைசாப மகன்றதுகாணும்மாலே
வானவர்கள்வைகுந்தம் மன்னரோசேருமென்று
போனான்மறையோனும் புகழ்பெரியகானகத்தில்
தேனுறுந்தன்மர் சிவனேசிவாயமென்று
இந்திரகிரிசந்திரகிரி என்னுமொருமாமலையும்
அ[illegible]கிரிவானமலை யப்பாலுந்தான்கடந்து
ஓங்கிவளர்ந்தொரு ஓமகிரிதான்கடந்து
மூங்கில்வனங்கடந்து ஏப்பதிக்காதவழி
பாங்குடனேபாதாள மூடுருவியப்பாலும்
தாங்குநிலைத்துவாரந் தான்கடந்து அப்பாலும்
வெளியேறிவந்து வீமனுடன்தன்மருமாய்
வழிகடிபெடந்தார் மலைகள்வனங்கடந்தார்
இப்பாலிருபேரும் எண்பதுயோசனைதூரம்
மெய்ப்பானகாட்சிகளும் வேணதெல்லாந்தான்பார்த்து
சோமகிரிகண்டு தொழுது அடிபணிந்து
நேமவுடன்கானகத்தில நெடியோனையுள்நினைந்து
ஆரணமானதொரு அடவிதனிலேகடந்து
பூரணமானதொரு புட்பகீர்தாருடி
கீர்த்திபெருஞ்சக்கிரகிரி கிரவுஞ்சமாமலைதான்
கார்த்திகைமாமலையும் கடம்பவனந்தான்கடந்து
இப்பாலிருபேரும் எண்பதுயோசனைதூரம்
அப்பாலுந்தான்கடந்து அகண்டுவருகையிலே
அவ்வனத்திலேநிமித்தம் ஆற்பரித்துத்தான்கூற
இவ்வனத்திலேநிமித்தம் ஏதென்றுபார்ப்பளவில்
தாரருமவீமருக்குச் சக்கரமாச்சுதென்று
நோகமேவநிமித்தம் விசமாயுரைத்ததென்று
தன்மர்நினைந்து தனிபாரேமென்றுசொல்லி
இம்மைதனிலெல்லாம் இழந்தோமேயென்றுசொல்லி
விக்கைதயுள்ளதம்பியரோ வீமரோஉந்தனுக்கு
சக்கையமாய்க்கூத்துஞ் சரியென்றுதானுரைக்க
பாரியசொல்வீமன் பட்சமுடன்தன்மனையும்
ஆரியரோஅண்ணாவே அடியேன்தானோர்வசனம்
உம்மைத்தனியவிட்டு உடலிழந்துநானேபோக
கன்மமதுசொல்லக் கவலைதுலையாது
இறப்பதுவுமெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்புடையவைகுந்தஞ் சேர்வதேயுண்மையென்று
எமக்குப்பயமில்லை எம்முடைய அண்ணாவே
உமக்காகயென்மனது உழன்றதுவேயல்லாது
வேறேசுவனம் விடவுசற்றுமில்லைஐயா

கூறேனொருவார்த்தை கோவிந்தாநீயறிவாய்
தனியானேனென்று சலியாமல்நீர்தாமும்
இனியவைகுந்தம் இப்போதுசேருமென்று
கண்ணார்தனைநினைந்து கருத்திலதியானமதாய்
எண்ணமற அன்னேவே இருமென்றுதானுரைத்தான்
சொல்லுகின்றபோது சொத்தியமும்வந்ததுவே
மல்லுபுவிமனுக்கு மதிமயக்கம்வந்தவுடன்
ஐம்புலனையுள்ளடக்கி அறிவைமிகத்திருத்த
செம்பொன்திருநெடுமால் திருத்தாள்சரணமென்று
அரிநமோவென்று அஷ்டாக்ஷரந்தனையும்
பிரியாமல்நெஞ்சில் பிடித்தானிருபாதம்

விருத்தம்.

ஐவர்க்குஞ்சகாயமுன்னே ளடைக்கலங்காத்தமாலே
தெய்வற்குந்தெய்வமாகித் தேவனாயிருந்தமூர்த்தி
உய்வதற்கருளியென்று உள்ளத்திலன்புவைத்து
மெய்வர்க்கமாகின்ற வேதநாரணனேபோற்றி. (௯௯)
அருமறைப்பொருளேயுந்த னடைக்கலமைவொன்றே
திருமறையுடையார்நால்வர் திருவடிசரணஞ்சேர்ந்தோம்
தருமரும்பிறகேவாரார் தனிவழிதனியனாகி
வரும்வழிபயமில்லாமல் மாயனேவந்துகாரும். (௱)
இன்பமும்பொருளும்நீயே ஈஸ்பரசுகமும்நீயே
அன்பருக்கன்பனீயே அச்சுதாபச்சைமாலே
துன்பமுமிகழ்ந்துநாயேன் சுருதியேபொருளென்றெண்ணி
நின்பதிதேடிவாரேன் நெடியவாபோற்றிபோற்றி. (௱௧)
முன்னாள்முதல்வாமுகில்வண்ணா முகுந்தானந்தாகோபாலா
உன்றனாகியிருந்தடியே னுடலைக்கிடத்திஉயிர்பிரிந்து
இன்னாள்வந்தபடியதனா லிப்போவந்தேன்வைகுந்தம்
தன்னுளெனவேதற்காத்துச் சாமிசரணந்தருவாயே. (௱௨)
அங்குசகரனேபோற்றி அரிநமசிவாயாபோற்றி
எங்குமாய்நின்றாய்போற்றி ஏழைபங்காளாபோற்றி
சங்குசக்கரனேபோற்றிச் சாரங்கதரனேபோற்றி
பொங்கு[illegible]ரணனேபோற்றி பூமகள்கணவாபோற்றி. (௱௩)

கதை.

ஆயனேஅச்சுதனே அண்டர்பெருமானே
நேயனேபாண்டவர்க்கு நேத்திரமாய்நின்றோனே
விண்ணகத்துக்கெல்லா மெய்ப்பொருளாய்நின்றோனே
கண்ணனேயுன்பாதம் காக்கக்கடனுமக்கே
எனக்குமதிமயக்க மிறுதிமுடிவாகி
உனக்கபயமென்று ஓதினேன்யான்விருத்தம்
கடைக்கணிருளாகிக் காதோசைவேறாகி
உடைக்கலமுந்தானிழந்து உயிர்பிரிந்துவாறேனுக்கி
அடைக்கலமென்றுன்றனையே அடியேன்மிகநினைந்து

வந்தாலடியேற்கு வைகுந்தந்தானருளி
தந்தருளவேணும் சமையஞ்சமையமையா
மெய்கொண்ட நெஞ்சன் புலையனுமாயென்னையிப்போ
வைகுந்தஞ்சேர்த்து வைத்தருளுமாயோனே
பஞ்சாயுதத்துடனும் பசுந்துளபமாலையுடன்
கஞ்சமலர்மாதவையும் களத்ததிருமார்புடனும்
செம்பொன்மணிமாலையுடன் சிறந்தபசுமேனியுமாய்
அம்பொன்முடியிலங்கு மழகாவடியேன்முன்
ஆடுங்கெருடன் அரியதொருவாகனமேல்
நீடுந்திருக்கோலமுடன் நீரிங்கெழுந்தருளி
அடியேனுன்செய்தபிழை அடிமையெனவேநினைந்து
யடியாருமவைகுந்தம் பதிதனிலேவைத்தருளி
கட்டழகன்வீமன் கருணைக்கடலாகி
எட்டெழுத்தையுச்சரித்து இறைஞ்சினனம்மானை
மேகவண்ணார்தன்பதத்தை வீமனுங்காணுச்சரித்து
தாகமுடனிமையோர் தங்கவிமானமதில்
கொண்டுவந்துவீமனையுங் கூட்டிட்டதிலிருத்தி
விண்டுசங்குசின்னம் விமானந்தான்முழங்க
பைக்கொண்டநாகமிசை படத்தின்மேற்பள்ளிகொள்ளும்
வைகுந்தவாழ்பதியில் வைத்தனர்காணம்மானை
தாமன்தருமன் தனியாகியுள்ளயர்ந்து
வெம்பிமனமடைந்து வெதும்பிமனம்புண்ணாகி
தம்பியரைக்காணாத தனிமையதாயிருந்து
கண்ணார்தனைநினைந்து கவலையெல்லாந்தானொழிந்து
எண்ணமெல்லாம்விட்டு எம்பெருமானுண்டெனவே
இன்றைக்கிருப்பதும்பொய் என்னுடைமையென்பதுபொய்
அன்றைக்கிருந்தபடி அல்லாதுவேறுமுண்டோ
பூமிதனில்வந்து பிறந்தோம்புவியாண்டோம்
சாமிதிருமால் சகாயமதுபெற்றிருந்தோம்
ஐவரொன்றுபாரில் அரசாகத்தானிருந்தோம்
ஐவர்தனில்நால்வர் அகன்றார்களென்னைவிட்டு
ஏதுசெய்வோமென்று இடைந்துருகிநொந்தாலும்
வாதுமலரோன் வகுத்தபடியாமிதுவும்
விட்டுப்பிரியாத வீமனருச்சுனனும்
மட்டுபடாநகுலன் வாய்த்தசகாதேவனுந்தான்
மாண்டுவிட்டாரொன்று மயங்கியழுதாலும்
மீண்டுவருவர்களோ மிக்கானதம்பியர்கள்
என்றுதன்மர்தேறி இருந்துமனந்தேற்றி
அன்றுதம்பிவீமனுக்கு அருகாகத்தானிருந்து
செய்யுங்கருமமெல்லாஞ் சீக்கிரமாய்த்தான்முடித்து
உய்யும்பொருள்நமக்கு உலகளந்தானெனவே
சிந்தைதனிலெண்ணித் திருமாலைத்தானினைந்து

சந்தையமாம்வாழ்வீதென்று தானடந்தாரம்மானை
நடந்துவனத்தூடே ராமரோதஞ்சமென்று
கடந்துவெகுதூரங் கைவிட்டகுஸ்திரம்போல்
திகைத்துமருகித் திசையறியமாட்டாமல
வகைக்குவகையீதெனவே வகைசொல்லுந்தம்பியரோ
விட்டுப்பிரிந்து வெறிகொண்டபித்தனைப்போல்
தட்டுபட்டுநின்றலையும் தாயில்லாக்குஞ்சதுபோல்
முன்னேவல்செய்து முன்னேவழிகூவி
பின்னேவல்செய்யும் பிறவிகளைக்காணமல்
வானத்தைப்பார்த்து மயங்கிவழிதிகைத்து
கானகத்தைப்பார்த்துக் கவலைபெரிதாகி
இறகுதிர்ந்தஈசலைப்போல் ஏங்கிமனமுழன்று
பிறவிமயக்கம் பிர்மையதுதான்மூடித்து
வாசமுள்ளதன்மருக்கு மயக்கம்வந்துமூடியபின்
நேசமறந்து நினைவுதடுமாறியொரு
மெய்மறந்துசாலசந்து வேருபட்டமானதுபோல்
கைமறந்துவாய்மறந்து கண்ணிரண்டுமாசடைந்து
நாடிழந்துமிக்க நடுக்கம்பிடியாமல்
சோடிறந்துநின்ற துயரமேதான்பிடித்து
நல்லறிவுதன்றி ஞானமிருளடைந்து
புல்லறிவுமைந்து புலம்புவார்களருமே

கொச்சகம்.

அந்திரமேயேகவழியும்பரமேமைங்குரங்காள்
சந்திரனேசூரியனே தம்பிமாரலவருந்தான்
இந்திரனேயிறையவனே எந்தவழியந்தார்சொல்
செந்திருமால்வைகுந்தஞ் சேர்ந்தாரோசேர்கிலையோ. (௧)
பாரேபெருவனமேயே பனிமலர்கள்செண்பகஞ்சேர்
மேரோபரிமளமே மேதினியிற்கானகமே
சீரோசிறந்தபோங்குஞ் சிந்துநதிவாவிகளே
நேரோயெனக்கிளைய நெடுவிமன்காணீரோ. (௨)
காகமேநீள்சாராய் நற்கணங்குமாவிரியர்
பூதக்கமேவானரமே பொற்றுஞ்சிறுபுள்ளினமே
காகமேமேகவண்ணர் கண்ணனருடவைகுந்தத்தில்
தேகவெளிமனைய ரிங்குவரக்காணீரோ. (௩)
நாக்காசேபோராலே நாகவல்லிபூவல்லி
நோக்கரியமூங்கில்களே நூதனமாயிங்குமொரு
போர்க்குரியவில்லி புரந்தரனூர்தாமருளும்
மார்க்கமிகுந்தழகன் அருச்சுனனைக்காணீரோ. (௪)
காட்டுப்புலியே காடிபன்றியாளிகளே
கோட்டிகிரிமத குஞ்சரமேயிருபோது
காட்டுபபரிகுலன் காரணனாத்தான்கேடி
மேட்டிக்கரையேறி விரைந்துவரக்காணீரோ. (௫)

ஆடுமயிலினங்கா ளன்னங்காள்கிளிகாள்
நீடுகுயிலினங்காள் நீலவண்ணனாகாயிருக்கும்
வீடுவைகுந்தமெனும் வேதசகாதேவன்
ஓடுவதுமிங்கெனக்கு உண்மையாய்ச்சொல்லீரோ. (௬)
ஏதறியேன்யானும் இடமும்வலமறியேன்
தீதறியேன்பொய்புரையேன் திருவுளமேயல்லாது
சூதறியேன்வஞ்சத் துடுக்கறியேனீயறிவாய்
மாதுமைமார்பாவின் வைகுந்தங்காருமையா. (௭)

விருத்தம்.

வழியுந்திசையுந்திசையிதென்று வழிகாணறித்தெரியாமல்
விழிநீர்சொரியமெய்சோர விட்டாய்வெட்டவழிகளிலே
இளையோர்பிரிந்தநாள்முதலா யெளியேன்மனதுதெளியாமல்
அலைமுயரிருக்குமெளியோனை அடியேன்மலையாகநல்வாயே. ()
தாருமெனக்குச்சீர்பாதந் தனியேவனத்திலலையாமல்
வாருமெனக்குவழிதுணையாய் வந்தாலெனதுதுயர்தீரும்
ஆருமெனக்குத்துணையில்லை யடியேனொருத்தனுன்னிருல்
சாருமனதுபதஞ்சேரக் கண்டாய்நந்தகோபாலா. (௰)

கதை.

பொருள்மயக்கமில்லையிங்கே பூமிமயக்கமில்லை
அருள்மயக்கமானதில்லை அரியகலத்தாசையில்லை
இருள்மயக்கமாகியிப்போ ஏதுந்தெரியாமல்
மருள்மயக்கங்கொண்டு மனதுமிகவுழன்றேன்
பித்தனைப்போலாகிப் பிரமைபிடித்துழன்று
அந்தநெடுமால் அரியவைகுந்தமதில்
நோக்கிவரும்போது நொந்துமனம்புண்ணாகி
தாக்கிவரும்வினைக்குத் தம்பிமாரில்லாமல்
தனியேவழிநடந்து தானிங்கொருவனுமாய்
இனியாரெமக்கு எம்பெருமானுண்டெனவே
கங்குதனில்ஆலிலையிற் கையேதழுவணையாய்
தங்கியேகண்துயின்றார் தன்மருந்தாரம்மானை
சந்துலவுமன்னவனைத் தானிறையாமென்றுசொல்லி
ஐந்துதலைநாகமது அருந்தவேதான்விழுங்கி
ஆலிலையிற்றுயிலுகின்ற அச்சுதநாராயணர்தான்
தலைநாளுநாமொழி தப்பாமல்சக்கரமும்
மற்றமொருநாலவர் மடிந்தபின்புதன்மனையும்
பத்துடனேகாத்துவந்த பரிவானசக்கரமும்
வடவானிற்கண்துயிலும் மன்னனையேகாணாமல்
அடவாகநாகமதை அறுத்ததுவேசக்கரமும்
அரவுதனைப்பிளந்து அடிவயிற்றிலுள்ளிருந்து
தருமர்தனையெடுத்துச் சாந்தகமாயாலிலையில்
துலங்காமலேகிடத்தித் தூரநின்றதம்மானை
புத்தரவரூண்டதுவும் பூலோகசக்கரந்தான்

அத்தாவைவுண்டதுவும் அறுத்தெறிந்துபோட்டதுவும்
சற்றுமறியாமல் தன்மருந்தான்கண்ணுயின்றார்
நித்திரையுங்கொண்டு நேரமெழுந்திருந்து
ஆரிவர்போலே அண்ணர்தமைநோக்கி
ஊரியப்பாதை யொருவருமேதானடந்து
கல்லுங்கரடுங் கடியவனத்திரளும்
அல்லும்பகலும் அறவழிநடந்து
இளைத்துமலைத்துத் திசைகோட்டிமானதுபோல்
தளைத்துத்தனியே தவிப்புமிளைப்பாகி
பேச்சுத்துணையும் பின்துணையுமில்லாமல்
மூச்சுவிடச்சற்றும் முத்துணையுமில்லாமல்
பக்கத்துணையுமற்றுப் பரதேசிபோலாகி
துக்கஞ்சுகமிரண்டுமின்றித் துலைதூரந்தானடந்து
உன்னிடந்துதன்மர் ஒன்பதுயோசனைதூரம்
கன்னிமலைகடந்து கடியவனந்தான்கடந்து
வருணன்மலைகடந்து வாய்வுமலைகடந்து
தருணகிரிகடந்து தவளமலைதான்கடந்து
மிக்கதொருபொய்கை மிகுந்தபெருக்குடைய
புக்கரணிகண்டுப் புனலாடிபூசைபண்ணி
வீமன்விசையனுக்கு மிக்கநகுலனுக்கும்
தாமன்சகாதேவனுக்குத் தர்ப்பணமுந்தான்முடித்து
சொல்லிமுடித்துச் சூரியனைத்தெண்டனிட்டு
நல்லதம்பிமாருக்கு நாரணரோதஞ்சமென்று
தன்துயரந்தீராமல் தனியேயவனதுநாடே
என்துயரந்தீர எத்தனைநாட்செல்லுமென்று
சிந்தைதனிலெண்ணிச் சிவனேசிவாயமென்று
விந்தையிதுபாருலகில் மேகவண்ணர்தன்கூத்து
பார்க்குமபொழுது பலவிதமாமாய்கைகளாய்
தீர்க்கமுடன்தோன்றத் தெளிந்துதன்மர்பாலும்
மார்க்கமுடன்செல்லும் வழிதனிலேஓர்மலைதான்
ஆர்க்கும்புகலரிதாய் அண்டகடாகமட்டும்
ஓங்கிவளர்ந்துநின்ற உன்னிதத்தைகண்டவுடன்
ஏங்கிமலைத்துநின்று இதற்குவழியெங்கென்று
நாலுதிக்குமோடி நன்றாகஆராய்ந்து
காலுக்கெட்டுந்தூரமெல்லாங் கடவுசற்றுமில்லாமல்
வெம்பியுழன்று மெய்ம்மறந்துதன்மருந்தான்
தம்பியரில்லாதிபத்தே தாழ்வுவந்துதென்றுசொல்லி
என்செய்வேன்கோபால எவ்விடத்திலேயுறைப்பேன்
முன்செய்ததீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
ஏதுமயக்கமினி என்செய்வேனந்திரத்தில்
வாதுமயக்கம் மதிமயக்கமால்மயக்கம்
சூதுதிருமால் சோதனையாலிம்மயக்கம்

இப்படியோவென்னை இடறுபண்ணிப்பார்ப்பதுவும்
அப்படியுமானால் அடியேன்மலைப்பேனோ
கண்ணாவுனக்குப்பயங் கானகத்திலாருமில்லை
அண்ணாவுனக்கபயம் அருகிங்கொருத்தரில்லை
அனந்தசயனத்தோனே அபயமுனக்கபயம்
வனங்களிலேவந்து வழிமயக்கந்தானீர
அபயமென்றசத்தம் அச்சுதற்குக்கேட்கிலையோ
உபயசக்கரந்தான் ஒழிந்தோடிப்போனதுவே
சங்குதொனிபண்ணச் சமையமுனக்கிலையோ
மங்குமதிமயக்கம் மலர்ந்ததோமாயோனே
ஆசிரமம் அசந்ததோவென்றாலே
பாயிரமாயிலைதான்பள்ளிகொள்ளப்போனீரோ
உன்சித்தமென்று உன்னைநம்பிவந்திடத்தில்
என்சத்தங்கேளாமல் இருந்ததென்னமாயோனே
தம்பியருமாண்டு தட்டழிந்தானென்றனும்
தம்பிமுகம்வாடித் தாவிப்பதவித்து
நம்பினேனுன்னையென்று நான்வரவும்நீர்தாமும்
வம்புசெய்துமென்னை மயக்கிவைக்கலாமோதான்
மனதுதடுமாறி மதிமயங்கியிப்போது
தனக்குரிய சமர்த்தறியவேணுமென்று
சித்தமேயல்லாது செயல்வேறுயில்லையென்று
சுத்தமாய்த்தன்மர் தோத்திரங்கள்பண்ணியபின்
காத்திருந்தசக்கரமுங் கண்ணநடையேவலினால்
பேர்த்தெடுத்துமாமலையைப் பெருங்கடலிற்போட்டதுவே
ஏகவெளியாகி இடையூறுதானீங்கி
போகவழிகண்டுப் பூரித்தகமகிழ்ந்து
வேகமுடன்தன்மர் விரைந்துவழிகூடி
தாகமுடனற்காதந் தாண்டியேயப்பாலும்
அஞ்சனமாமலையும் அதிலுள்ளகூடுகளும்
சஞ்சமலர்வாவிகளுங் கண்டுபுனலாடி
மஞ்சுலவுசோலை வனமும்பலகடந்து
பஞ்சமலம்நீக்கும் பாரமலைதான்கடந்து
சென்றார்வழியூடே சீரானகானகத்தில்
நின்றார்திகைத்து நெடுமாலெனக்கூற
காட்டகத்தில்வாழுங் கரடிபுலிசாமிருகம்
கேட்டவுடனே கிருபையுடன்தன்மரையும்
ஆரெவர்தானென்று அறிவுடனேதான்கேட்க
நீரோயினிகேளும் நீதியுடன்சொல்லுகிறேன்
அத்திபுரநாட்டில் ஆனதொருபாண்டிமன்னர்
புத்திரனைத்தன்மர் புண்ணியரோநீர்கேளும்
காசினியிற்காலங் கலியுகமும்வந்ததினால்
தோஷிக்கலியன் தொடராமல்நாங்களுந்தான்

பாஞ்சாலிதானும் பஞ்சவர்களைவருமாய்
வந்தோம்வனந்தனிலே வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயிருந்த தம்பிமார்பாஞ்சாலி
மாண்டிறந்தாரன்னே வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஆண்டிபோலாகியிங்கே அரதேசியாகின்று
தனியாகநானுந் தாமரையிலத்தண்ணீர்போல்
இனியொருவர்காணாமல் இங்குவாஉன்னையுந்தான்
கண்டேனைநா கவலைதெளிந்ததென்று
விண்டேன்பருஷர் மிருகத்தனக்குரைக்க
கேட்டவ்வமிருகம் இசைமிகவுண்டாகி
காட்டிபுழுக்கமேயுந் ஞாயமதுக்கொப்பாக
இப்புவியிற்காணேன் இங்குவந்தீர்தனியே
அப்பெரியவீமன் உயிர்துணையாமெந்தனுக்கு
எப்பவிறந்ததொரு விசாரமெனக்காறுது
கேளமுடனீர்தான் நீதமாயெங்களுக்கு
நான்முன்வழக்கு மொழிந்ததுவும்நீர்தானே
இன்றதனைமறந்தால் ஈடேறமாட்டேனுன்
நீதியுள்ளதன்மரிங்கே நெடுகவந்தீர்த்தாரம்
செய்தியுடனுஞ் சினேகமறவாமல்
வருவேன்துணையாக வைகுந்தஞ்சேரமட்டும்
குருவேசரணமென்று கோரியேபின்னாக
வாறமிருகமதை வலகயுடனே தன்மருந்தான்
தேறவேசிக்கை தெளியவே ஆகரவாய்
எந்தன்மனந்தேற்றி இத்தூரம்வந்தீரோ
சந்தோஷமாச்சுதென்று தாயேநீபோவெனவே
தன்மரிவையுரைக்கத் தனிமிருகமேதுசொல்லும்
இன்மையுடன்வைகுந்தம் எவர்சேர்ந்தாரிப்புவியில்
நன்மைதுன்மையொண்டும் நாட்டிலனுபவித்து
சென்மங்கடைத்தேறச் செய்வார்கள்தான்தருமம்
வைகுந்தஞ்சேர்ந்து வாரியெடுப்பதென்ன
கைகண்டதோர்பலன்காண் காவலனேயான்தானேன்
அசுரபதிலோகம் அடங்கலுமேயுண்டாக்கி
விசுரமுடிசூடி வேந்தனைப்போலிங்கிருந்து
வைக்கிறேனும்மை மன்னவரேதானென்றார்
துச்சமிருகமது தன்மருடன்தான்கூற
நல்லதென்றுதன்மர் நகைத்தேதுசெப்பலுற்றார்
அல்லவேயெந்தனுக்கு அன்பாகவேயுரைத்தீர்
செல்லவேவைகுந்தஞ் சேரவென்றுதான்போக
இல்லென்றுசொல்லி நிறுத்துவதுஞாயமல்ல
தம்பியர்தாமாண்ட சலிப்பொன்றுபாராமல்
நம்பியெனையாக நாட்டுகிறேனென்றுசொன்னால்
நந்தகோபாலர் நரசிங்கருபனையே

எந்தவிதமானாலும் இதமாகவேநடந்து
விஷ்ணுபதஞ்சேர்ந்து மெய்ம்மகிழ்ந்துயான்தினமும்
கிருஷ்ணவதாரனுடன் கிலேசமெல்லாமங்குரைத்து
பாதம்பணிந்து பரிவுடனேபோற்றிசெய்து
நீதமுடனென்னை நீயனுப்பவேணுமென்று
புருஷாமிருகமுடன் போதனையாய்ச்சொன்னவுடன்
பிரியமுடன்மகிழ்ந்து பிரியமாய்த்தன்மனையும்
பாங்காகப்பின்தொடர்ந்து பாதைவழிதான்காட்டி
நீங்காமற்பாதை நெறியாய்வழிநடந்து
சீரானவைகுந்தஞ் சேர்ந்திருப்பீரென்றுசொல்லி
பேரானமாமிருகம் பிரியமுடனேதழுவி
போமென்றுசொல்லிப் போதமுடனதானனுப்பி
தாமேவும்வைகுந்தந் தானுமேதூரமில்லை
மெத்தசமீபமது விகாரமதுவேண்டாங்காண்
கர்த்தருடசீர்பாதம் காண்பீரெனவுரைத்து
அனுப்பியேவல்மிருகம் அநங்கானில்போனதுவே
சனுப்போலுந்தன்மர் தருகாமலேநடந்தார்
அரியதிருமாலே அருகாகவென்னுடனே
பிரியாமல்நேரே பின்னேதுணையாக
வரவேணுமையன் வைகுந்தவாசனே
தரவேணுஞ்சீர்பாதந் தானுமேயென்றுதன்மர்
நடந்தாரிசைநோக்கி நாரணரேதஞ்சமென்று
கடந்தார்வெகுதூரம் கண்ணனேதஞ்சமென்று
கங்காதரனார் காலகண்டனாதனையும்
சங்கரனார்தான்வாழுஞ் சத்திசித்திமாமலையும்
அன்புதிரிகோணமலை அருகாகவந்துநின்று
என்புருகிநின்று இறையோனைநெஞ்சில்வைத்து

விருத்தம்.

என்றுமழியாப்பொருளாகி ஏகாம்பரமுங்கானாகி
அன்றுமுதலாயின்றளவு மளவாயுகந்ததீர்க்கமதாய்
நின்றுநெடியபுவனமெல்லாம் நீயேயிருந்தபரஞ்சுடரே
ஒன்றுமறியேனுமைபாகா உடையாருடையபடிகாரும். (௩௬)

காசினிதனிலேவாழ்ந்து கருமமேமிகவுஞ்செய்து
பாசினீர்போலேயானும் பாறைவிட்டகன்றுசெவ்வே
தேசிகனாகியிந்தச் சடத்தையேசுமந்துகொண்டு
வாசனையுடனேயுந்தன் மலரடிபெறுகவாறேன். (௩௭)

மாயவன்வாழுகின்ற வைகுந்தந்தனிலென்னை
ஆயனோடருகிருக்க வருளியேகடாட்சந்தாரும்
தூயனேநமசிவாயா சோதியேஆதிமூலம்
நாயனேதுணையதாக நடத்துவாநமசிவாயா. (௩௮)

கவை.

தொழுதுவணங்கித் துதித்தவுடனேயரனார்
முழுதுமனமகிழ்ந்து முன்புநின்றாரம்மானை
சம்புசிவருத்திரனார் தன்மலையில்தீர்த்தமெல்லாம்
இன்பமுடன்தானாடி இருந்தங்கிளைப்பாறி
துன்றுமணிரத்தினகிரி சுனையிற்புனலாடி
வேருறுகயிலையெனும் வெள்ளிமலைக்கப்பாலும்
ஆரியனார்தன்மலையும் அண்டர்திருப்பதியும்
கூரியதோர்வாழ்கிரியும் கொடுமலையுந்தான்கடந்து
கால்கடியவேகங் கடுவேகமாய்நடந்து
பால்வடிவுமேனிப் பரஞ்சுடரைத்தானினைந்து
எண்பத்திருகாதம் எய்யாமலேநடந்து
பண்பற்றுநேசம் பசுந்துளபமேனியர்மேல்
ஆசைகொண்டுதன்மர் அனேகநெடுந்தூரம்
பாசைபலபேசிப் பலமிருகம்பட்சியொடும்
பேசிநடந்து பெருந்துயரந்தான்தீர்ந்து
தேசிகன்போல்வந்தவரைச் சிவலோகபட்சியுமே
இத்துயரங்கொண்டு இங்குவந்தீரோவெனவே
அத்துயரங்கேட்ட அரிபட்சிதன்னுடனே
இப்புவியிலத்திபுரம் இயல்பானதன்மனென்பேர்
மெய்ப்புடையதம்பியரை விட்டுப்பிரிந்தமையால்
வைகுந்தவாழ்பதிக்கு வழியறியமாட்டாமல்
மெய்தளர்ந்துயானும் வெகுதூரம்வந்தோங்காண்
தாழ்ந்துமனந்தேற்றிச் சலியாதிருவெனவே
வாழ்ந்தநெடுமால்பதத்தை மனதிலுன்னிச்செல்லுமென்று
புள்ளதுவுஞ்சொல்லப் பூரணமாயுளமகிழ்ந்து
வள்ளல்திருவைகுந்தம் மன்னவனேதூரமில்லை
கிட்டவதுதூரமல்லக் கேதாரஞ்சத்திடங்காண்
சட்டமுடன்தன்மரோநீர் சலியாமலேநடந்து
போமென்றுசொல்லப் பூரித்தகமகிழ்ந்து
நாமெங்கிருந்தாலும் நமக்குநீயுண்டெனவே
எண்ணியிருப்பேன்காண் என்னுடையபுள்ளரசே
புண்ணியரோபோவெனவே போமென்றார்தன்மருமே
தன்மருந்தான்புள்ளரசைத் தானனுப்பிப்போனபின்பு
மின்மருவுஞ்சோலை எவ்வனமுந்தான்கடந்து
இப்பால்வெகுதூரம் எய்யாமலேநடந்து
அப்பாலிருக்கின்ற அநந்தவனந்தனிலே
இதபட்சியென்னும் கிரணபிரகாசமதாய்
நீதமுடனங்கிருந்து ரோவெனக்கேட்க
சாதுமயில்தன்மர் சாற்றுவாருள்ளதெல்லாம்
ஓதும்மயனெல்லாம் உண்மையாய்க்கேட்டிருந்து
எல்லாங்களித்துமிக்கே இத்தூரம்வந்துவிட்டீர்

பொல்லாங்கினியுமக்குப் போச்சுதுகாணச்சமில்லை
அடுத்தீர்வைகுந்தம் அன்பானதன்மரோநீர்
தொடுத்தீர்பிடித்தீர் துயரமெல்லாந்தான்தீர்த்தீர்
எடுத்தீர்தவமுழுதும் ஏகுவதும்வைகுந்தம்
கொடுத்தீர்முதலழித்தீர் கோபாலருண்டெனவே
தன்மம்பலித்ததுகாண் தன்மரோயுந்தனுக்கு
கன்மமெல்லாம்போய்கண்டு கண்ணார்பதம்வந்ததுகாண்
சென்மமுடன்வைகுந்தம் சேர்வீர்தவம்பெறுவீர்
இம்மைதனிலுன்னைப்போல் இப்புவியிலாருமில்லை
என்றந்தப்பட்சி எடுத்துமிகத்தானுரைக்க
நின்றந்தத்தன்மர் நீரோணக்கேட்க
ஈசனடியார்தான் ஈஸ்புரியேதான்வளர்த்து
வாசமுள்ளகிள்ளைதனை வதைசெய்தேனாகையினால்
கோபமுடன்மாதாவும் கூறியபுள்ளாவையென்றார்
சோபமுடன்பட்சியுந்தான் சூழ்ந்ததுகாண்நல்லதென்று
அந்தக்கயிலைவிட்டு அகன்றுநானிப்போது
இந்தப்படிவைகுந்தம் இவ்வீதியேகிவந்தேன்
செங்கணெடுமாலுடைய திருக்கோலமுள்ளதெல்லாம்
பொங்கமுடன்சொல்லிப் பூங்காவனந்தனிலே
இங்கிருக்கும்பொய்கைகள்தான் என்னிதுகாண்மன்னவனே
இந்தத்தலத்தில் இனியதவமிருந்தால்
எந்தப்பலனும் எய்திடுங்காணிப்போது
தாகமுடனீயிருந்து தவமுடிப்பீரித்தவத்தால்
மேகவண்ணர்தம்மை விரைந்துநானிங்கழைத்து
மவுலிதரித்து மகுடமுடிசூடி
ஐவுரியமாயும்மைப் பாராளவைப்பேன்காண்
அரசர்மடந்தையரும் அரம்பையருமுந்தனக்கு
முரசுடையமன்னா முடிசூடுமென்றுரைக்க
மகருமொருபட்சியைத்தான் பார்த்துமிகத்தன்மருந்தான்
செகதலமுழுண்டான சேனைதனையிழந்து
தாரணிமேலாசைவிட்டுச் சற்றுமனமில்லாமல்
ஆரணனார்வைகுந்தம் அடையவென்றுயோகையிலே
பின்னாசைவைத்துப் பேசவரோபுள்ளரசே
என்னாசையானாலும் இனிமேலுமெள்ளளவும்
இல்லையிங்கேசற்றும் என்மனதுக்கேறாது
கல்லையருவாக்குவித்த காரணனாருண்டெனவே
புகலுமொழிகேட்டுப் புள்ளரசுமேதுசொல்லும்
இகலுடையவேந்தே என்மொழிதானீர்கேளும்
ஆதிதிருமாலுடைய அன்பர்தானீர்தாமும்
நீதியுடன்தம்பியரை நீநினைந்தால்காரியமோ
வேறுநினைவு விசாரமதுதானுமன்றி
கூறுமொருநினைவு கோவிந்தாவென்றுசொல்லி

பார்த்திபரோதம்பியர்மேல் பாசமதையகற்றி
ஏத்தியேமால்பதத்தை இறைஞ்சுமென்றாரம்மானை
ஓதரியமுன்னாளி லூழ்வினையுமம்மாலே
வேதர்விதியை விலக்குவரார்பாருலகில்
என்றுபுள்ளுஞ்சொல்ல இன்பமுடன்தன்மருமே
ஒன்றுமறியாமல் உரைத்திரோபாருலகில்
ஓங்குபஞ்சபூத மொன்றொன்றுகூடாமல்
தூங்குமயக்கமெனும் துயர்கடலிலேவிழுந்து
அழுந்துவினையகற்று அச்சுதனையல்லாது
தொழுந்தகமேயார்க்கும் தோற்றுமேபுள்ளரசே
என்றுதன்மர்சொல்ல இயலானபட்சியுந்தான்
நன்றுதான்தன்மவென்று நவின்றேகிப்போனதுவே
பட்சியுமப்பால் பறந்தேகிப்போனபின்பு
கட்சியுள்ளதன்மர் 'கதிக்கவேதானெழுந்து
அன்றவடம்விட்டு அநேகநெடுந்தூரம்
மன்றலநஞ்செண்பகம் வனமுமிகக்கடந்து
திரிகோணமாமலைமேல் சென்றங்கிதவாக
பார்த்துமனமகிழ்ந்து பாலாறுதன்னில்வந்து
சாற்றுமொருநாலு சதுர்வேதமாமலையும்
தாராருந்தன்மர் தயவாய்மனமகிழ்ந்து
சீராரும்பாறையின்மேல் சென்றிருந்தாரம்மானை
பரியமலைதன்னில் பன்றியொன்றுதான்வரவே
கரியதிருமாலைக் கண்டீரோபன்றியென்றார்
இவனுரெனவே ஏதொன்றுங்கேளாமல்
கவனமதுவேறாய் காட்டகத்திலோடியதாம்
ஓடியதோர்பன்றிதனை யுத்தமனேபோமெனவே
நாடியொருவினைவாய் நடந்தார்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் போரானைமற்றுமுள்ள
நலிவுகண்டுமண்மேல் நடக்கலுற்றாரம்மானை
சேனையுடைய செகவீரராஜனுந்தான்
தானையார்வந்து கண்டார்காணதன்மருந்தான்
ஆதவனுஞ்சென்று அடைந்தானேயவ்விருளில்
போதமுடன்தர்மர் பூமியேமெத்தையதாய்
சேமமுடன்கானகத்தில் நெடுமரத்தின்கீழாக
தாமசமாய்க்கண்துயின்றார் தன்மருமேதானசைந்து
அங்கேபரிதி அருணனுதயமதாய்
பங்கயம்போலாகிப் பருகிவந்துதோன்றியபின்
வெண்மையுடனெழுந்து வேதவதியாறுதனில்
செம்மையுடன்புட்கரணி தீர்த்தமேயாடுதற்கு
செந்திருவையொப்பான தெய்வமடந்தையர்கள்
அந்தநதிதீர்த்தம் ஆடலுற்றாரம்மானை
நீராடிக்கன்னியர்கள் நீள்கரையிற்றானேறி

சீராய்த்துகிலுடுத்திச் சிகையாற்றியே முடித்து
பூசைகளுந்தான்முடித்துப் புஷ்பமலர்தான்சாற்றி
ஓசையுடன்காவில உலாவிவருகையிலே
மோசமுடன்தன்மர் சோலைநிழல்தனிலே
தாபமுடனிருக்கத் தான்கண்டார்கன்னியர்கள்
காவுதனிலவந்திருந்தக் காரணந்தானேதெனவே
வந்தருகில்நின்று மாதரெல்லாருந்தான்கூடி
இந்தவனந்தனிலே இத்தூரம்வந்ததென்ன
என்றுசொல்லக்கன்னியர்கள் ஈதுரைக்கத்தன்மருந்தான்
மன்றுலகில்நாளும் வாசமுள்ள அத்திபுரம்
பாண்டுமன்னன்மைந்தர் பஞ்சவர்களைவருமாய்
மீண்டுகலியதனால் விரைந்தேகிக்கானகத்தில்
இருந்துசிலகாலம் எல்லாந்தான்விட்டிழந்து
திருந்துமொருவைகுந்தஞ் சேரவென்றுவந்திடத்தில்
மடிந்தார்கள்தம்பியர்கள் வனத்திலேநாலபேரும்
இடிந்துமனமுழன்று இங்குவந்தேனொருவன்
வழியறியேன்யானும் மற்றுந்திசையறியேன்
வெளியேதனியாக வேற்றுமுகமாகவந்து
களிகூறக்கண்டேன் கன்னியரேயுங்களைநான்
தெளிவாச்சுதெந்தனுக்குத் தெள்ளமுதேயிப்போது
உங்களைநான்கண்டவுடன் உற்றதுணையெனவே
திங்களொளியதுபோல் தெரிசித்தேன்கண்டீரோ
விந்தைமலர்வைகுந்த வீடுமேவெந்தனுக்கு
எந்தாரோளோவழியேன் எத்தனைநாட்செல்லுமென்று
மாதர்களேயெந்தனுக்கு வழிதானுங்கீங்களுமே
ஆதரவாய்ச்சொல்லி அனுப்புமெனறார்தன்மருமே
அந்தமொழிகேட்டு அரம்பையர்களன்னேரம்
விந்தமதுதேடி விரைந்துவந்தீர்தன்மரேநீர்
அதிலுமபதின்மடங்கும் அரசனேயுந்தனுக்கு
சதிரும்பதியுஞ் சம்பத்துமவானுலகில்
உம்மைமுடிசூட்டி உமக்கேவல்செய்திருப்போம்
நம்மையுடனெங்களோடீர் நம்பியேவாருமென்று
கன்னியர்கள்சொல்லக் கருத்துடனேதன்மருந்தான்
மன்னியதோர்பெண்ணரசே மண்ணாசையிலலையினி
உண்மையாய்ச்சொல்லுகிறேன் உறநகருமென்று
தன்மையாவெண்ணுநீர் தற்காத்துநின்றதொரு
அச்சுதனார்பாதமல்லால் ஆசைமேவறிலையென்று
நச்சுவிழிமாதே நடவுமெனறாரம்மானை
வேந்தனிதைசொல்ல விரைந்துதான்கன்னியர்கள்
சாகதமுடன்கானகத்தில் தாடேந்தாரம்மானை
தேவகன்னியருந் திசைநோக்கிப்போ.
[illegible]

மனோமனமேசாட்சியதாய் வள்ளல்திருமாலே
அறிபொருளான ஆதிமகாமூலம்
வஞ்சியென்னுமின்னாள் மாதுமகாலட்சுமியை
நெஞ்சிலனுதினமும் நீங்காமல்வைத்தருளும்
நீலவண்ணர்தம்மை நினைந்துவெகுதூரம்
நிலமுடன்மேருகிரிச் சிகரமதுதான்தெரிந்து
அங்குள்ளதீர்த்தமது ஆடிக்கரையேறி
துங்கமுடிவேந்தன் தொண்ணூற்றுக்காதவழி
கடந்தங்கொருவருமாய்க் கங்கைமலைத்தானேறி
அடர்ந்தமலைச்சாரில் அருகாகத்தன்மருந்தான்
சென்றுகங்கைநீராடிச் சிவபூசைதான்முடித்து
குன்றுமலைகடந்து கோவிந்தாவென்றுசொல்லி
கேசவனைத்தேடிக் கிருபையுள்ளதன்மருந்தான்
இராசகோபலர்திரு நாமமிடும்பூரணமே
ஆறுதன்னில்வந்துநின்று ஆழமிதுவென்றறிந்து
வேறுவெளியெங்கும் விசாரித்துங்காணமல்
நின்றுதிகைத்து நெடுமாலைத்தானினைந்து
ஒன்றுமுறையாமல் உழன்றுமனம்புண்ணாகி
சென்றிருந்தத்தன்மர் திருமாலைத்தானினைந்து

விருத்தம்.

ஆழியும்நதியுங்கண்டே னக்கரைகடக்கவென்றால்
நீழியவாறுதன்னை நீந்தவுமாட்டேனிப்போ
வாழியோர்வீமனில்லை மற்றுமென்றம்பியில்லை
சூழியதுணையுமில்லைச் சுந்தரானந்தகோபா. (௯௯)
அக்கமுநீயேயெந்த னற்றுமதேசனீயே
பக்கமுநீயேயல்லாற் பாவனைவேறுகாணேன்
இக்கமுந்திசையநீக்கித் திரவேபுனலைத்தானே
இக்கவோநிலத்தோடொன்றே னீயருள்நந்தகோபா. (௱)
எல்லாப்பாடுபட்டமிந்தே னிளையோர்பிரிந்தநாள்முதலாய்ப்
பொல்லாப்பொழியவேறில்லைப் பூதயவுமுனக்கிலையோ
சொல்லாப்பெரியவைகுந்தத் துவாரயேவுனையேநாடிவந்தால்
இல்லாப்பகைகளெதிர்விடித்தா லேழையெளியேன்கோபாலா. (௱௧)
வருந்தியுனையேயான்றேடி வரவேவெளியில்வெகுமாய்கை
பொருந்திமயக்கிமிசப்பகட்டிப் பொல்லாநின்றாள்வேறாகத்
திருந்தநினைவிற்றானினைந்தாற் சிறியேனதற்குயிடலவே
அருந்தியுனதுபதஞ்சேர வருள்வாய்நந்தகோபாலா. (௱௨)
கல்லோமரமோதுணையெனக்கு காடோசெடியோதுணையெனக்கு
அல்லோபகலோதுணையெனக்கு வகண்டமேதிருமால்நீயிருந்தாற்
புல்லோபுனலோதுணையெனக்குப் பூடோநிலமோதுணையெனக்கு
வல்லோர்புகழும்பெரியோனே மாயாதுணைவாகோபாலா (௱௩)
ஆறுகுளமுமலைசிலைபோ லடருங்காடிபுலிசிங்கம்
மேறுங்களிறும்பூதகண மிருண்டவரக்கர்தனைப்போல

தூறுங்கடியவிருப்போதத் தோன்றியெதிரேசோர்வுசெய்தால்
தேறுங்கரும்மெய்கவிதந் தெளிவுந்திறமுநீர்தானே. (௱௰௪)
நெருடாவுனதுவிளையாடல் நோயறியேன்கோலாறநற்
றிருடாவுனதுதிறமறியச் செய்வாயுனதுதொழிலறிவேன்
வருடாதவளையும்வருடாய்நீ மாயாமாயாவுபாயமும்நீ
நெருடாழ்வாரோயுன்செய்தி கேட்டேயிருப்பேன்கோபாலா. (௱௰௫)
தொடரும்வினைகளணுகாமற் றுன்பச்சாடத்திலழுந்தாமல்
அடரும்பகைகளெதிராம லருளாய்ப்பொருளாயடியேற்கு
இடருமகலத்துணைப்பதத்தை யெனதுசிரமேலனுதினமும்
படரும்படியாய்க்கிருபையது பாராய்நந்தகோபாலா. (௱௰௬)
சீரியதேவாபோற்றிச் செந்திருமாலேபோற்றி
ஆரியராமாபோற்றி லாழியிற்றுயில்வாய்போற்றி
பாரியவாறுதாண்டப் பரிவுடன்பாதைதோன்றக்
காரியமாகவந்து கண்ணினிற்றோன்றுவாயே. (௱௰௭)
மாமணிதுன்பமாலை மார்பினிலிங்கவெய்யோன்
பூமணிகளபமேனிப் புளகிதகனிணமாக
காமணிவயிரமுத்தும் நவமணியுந்துமெந்தன்
தாமணிசிரமேல்நிற்குஞ் சச்சிதானந்தகோபாலா. (௱௰௮)

கதை.

நல்லதிருவிருத்தம் நாரணனார்தான்கேட்டு
மெல்லச்சிரித்து மெய்மகிழ்ந்துபூரணமாய்
ஆறுதனைப்பார்த்து அமருமென்றார்கோபாலர்
மாறுபுனல்சுவரி வழியாகத்தோன்றியதால்
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
விந்தைமலர்தன்மார் மெய்யறியவேணுமென்று
நந்தகோபாலரப்போ நமனைவரவழைத்து
கந்தமருந்தன்மருட கருக்கதனைச்சோதியென்றார்
அந்தமொழிகேட்டு ஆனதொருமாமறலி
சிந்தைமகிழ்ந்துவருஞ் சீக்கிரமாய்த்தான்மறலி
இணங்குருடல்வாய்கண் டெங்கும்புழுச்சொரிய
சுணங்கனெனும்வடிவாய்த் தோன்றினாரம்மானை
வந்துதன்மார்முன்னே வாலதனைத்தான்குழைத்து
நொந்துமனமிடைந்து நோக்கிமுகமண்ணூர்ந்து
ஓலமெனஊளையிட்டு ஓடியோடியேதிரும்பி
காலடியில்வந்துநின்று காலனெனும்நாய்தானும்
ஆய்ந்துடலிற்புண்ணாய் அடர்ந்துபுழுச்சொரிய
சோர்ந்துவிட்டேன்மெத்தத் துன்பவினைக்கியாருமில்லை
சாருந்துணையில்லைச் சஞ்சலந்தீர்ப்பாருமில்லை
ஆருந்துணையில்லை ஆதரவுதானுமில்லை
என்துயரந்தீர்க்கஇனியாருமில்லாமல்
உந்தன்பிறகே ஓடிவந்தேன்காருமென்று
இந்தச்சுணங்கன் எடுத்துரைக்கத்தன்மருந்தான்

வாராய்சுணங்கே நான் வகையுனக்குச் செய்வதென்ன
சீராகச்சொல்லுமென்று செப்பினாரம்மானை
சாங்கமுள்ள தன்மமோநீர் தனியொருவனாகவந்தீர்
நான்தானுனையும் நம்பினேனுன்பிறகே
வருகிறேனென்னை மனதுவைத்துக்காப்பாற்றி
அருகேயெனையழைத்து ஆதரவாய்க்கொண்டுசென்று
நம்பினபேரை நட்டாற்றிற்றள்ளாமல்
தம்பிரானுனதொரு தன்மமோசட்சியென்று
தாழ்ந்துசுணங்கன் சஞ்சலமாய்வார்த்தைசொல்லி
ஆழ்ந்தசுணங்களுக்கு அஞ்சலென்றுசம்மதித்து
காக்கிறேனென்று கலக்காமல்வார்த்தைசொல்லி
மார்க்கமுடன்பிறகே வாவென்றுதானடந்து
போகையிலேபோராறு பூமிதனிற்பெருக்காய்
ஏகும்வகைகண்டு இவர்கள்மதிமயங்கி
நிற்குமளவில நீள்வாற்சுணங்களுந்தான்
அக்கரையிலென்னை ஐயாகொண்டுசென்று
விட்டுவிடுமுந்தனுக்கு வேண்டுஞ்சுகிர்தமுண்டு
கட்டிட்டேனேதர்மர் கருத்தில்மிகமகிழ்ந்து
போராறுதாண்டவென்று பெருமாள்தனைநினைந்து
தானேறுந்தன்மர் தானிறங்கியாறுதன்னில்
வாட்டமிகவேசுணங்கே வாருமெனவழைத்து
தேட்டமுடன்கையாலே சேர்த்தணைந்துவாரியொரு
மார்பிலணைத்து வயிற்றளவில்வெள்ளமது
சோர்வறிந்துபார்த்துச் சுணங்கனையுந்தானெடுத்து
வைத்தளவுதண்ணீர் மார்பளவுதான்வரவே
புயத்திலேதானேந்திப் போனார்சுணங்கனையும்
கழுத்தளவுதண்ணீர் கண்டவுடன்தன்மருமே
அழுத்தமுடன்சிரசில் அன்பாய்ச்சுணங்கனையும்
வைத்துச்சுமக்க வழிந்தொழுகவேகிருமி
மொத்துவழிந்து முகத்துவழியாக
மிகுத்துக்கிருமி வெகுதிரளாய்த்தானுதிர
முகத்துவழியாக முதுகுநெஞ்சுவாயுநடு
அள்ளியெறிவதுபோல் அங்கமெல்லாந்தானொளிய
தள்ளிவிடவென்று சற்றுமனமில்லாமல்
அல்லலறத்தன்மர் ஆற்றுநடுவாக
செல்லுமளவிற்சுணங்கன் செய்ததொருசேதிசொல்லும்
நான்செய்ததீவினையை நல்லவரோநீர்கேளும்
ஊன்சேருங்கோவதையை உண்ணவென்றுகொன்றுவிட்டேன்
வேதமறையோர்தம் விரதமழித்துவிட்டேன்
காதலுடன்மங்கையரைக் கற்பையழித்துவிட்டேன்
நேசமுள்ளசற்குருவை நிந்தனைகள்செய்துவிட்டேன்
வாசமுள்ளவேதியரை வசைபடுத்தியான்பிழைத்தேன்

தந்தைதாய்மாமன் தமையனுடமூத்தோரை
எந்தனுக்குள்ளாகி ஏவல்செய்யுமென்றுவிட்டேன்
சூதுசெய்வார்தன்னுடனும் துஷ்டருடன்கூடி
தீதுசெய்யும்பாதகங்கள் செய்துவிட்டேனிப்போது
அழிவழக்குத்தானுரைத்து அரியமனங்குலைந்து
பழிகுலைகளேவிரும்பிப் பாவங்கள்செய்துவிட்டேன்
செய்தநன்றிதான்மறந்து தீவினைகள்செய்துவிட்டேன்
ஏதுமெனைநம்பிவந்தோர் இடுக்கங்கள்செய்துவிட்டேன்
காசினியோர்தங்களுட கட்டையழித்துவிட்டேன்
வீரியத்திலுள்ள வேலிபறித்துவிட்டேன்
அணையிலிருந்தோரை அரவேவதைத்துவிட்டேன்
புணையுடையார்தங்களையும் பொல்லாங்குசெய்துவிட்டேன்
எண்ணியபாவம் எத்தனையோசெய்ததினால்
புண்ணியன்மேனியெல்லாம் புழுச்சொரியஉன்றலைமேல்
வைத்துச்சுமக்க வழிந்தொழுகவேசலமும்
உற்றுமனங்கோணமல் தான்சுமந்துபோனதினால்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒப்புடனேசொற்கமுண்டு
எமக்குநரகமுண்டு என்னையுந்தானீள்கிசத்தில்
போட்டுவிடுவுந்தனுக்குப் புண்ணியமேயுண்டாகும்
நாட்டுபுகழ்தன்மரோநீர் நாணமறப்போட்டுவிடும்
பாதகமேயான்செய்தேன் பார்நதியில்போட்டுவிடும்
சாதகமாய்வாசமுள்ள சவ்வாதுமிகப்பூசி
துற்கந்தம்போக்கிச் சுகந்தமருகேபூசி
நற்கந்தமாக நடவுமென்றாரம்மானை
தலைமேல்சுணங்கன் தானிருந்துசொன்னதெல்லாம்
அலைமேல்துரும்பதுபோல் அந்தமொழிகேளாமல்
பாதகமேசெய்தாலும் பழிகுலைகள்செய்தாலும்
ஆகாவாயுன்னை ஆறுகடக்கவிட்டு
போவென்றுசொல்லிப் புல்லறிவுகொண்டுனைநான்
சாவென்றுசொல்லித் தள்ளுவனோஆறுதன்னில்
வேறொன்றுஞ்சொல்லாமல் வெஞ்சுணங்காநீயொன்று
ஆறொன்றுநீந்தி அக்கரையில்தானேறி
வந்துநின்றுதன்மர் வருந்துசுணங்கனுக்கு
நொந்ததோஉன்னுடம்பு ரோமமெல்லாம்புண்ணாச்சோ
வெந்ததோவெந்தன் வேர்க்கைபட்டுமேனியெல்லாம்
நைந்ததோசிந்தை நடுங்குதேயுன்மேனி
என்றுசுணங்கனையும் இதமாயிறக்கிவிட்டு
சென்றுதிருகால்நாலும் செவ்வேபிடித்துருவி
ஆற்றிமிகப்போற்றி அன்பாய்வரவழைத்து
தேற்றியிளப்பாற்றித் தேகமெல்லாந்தான்றடவி
இன்பங்குளிர்ந்ததப்போ எமதன்மராசனுக்கு
அன்புடையமைந்தனுக்கு அழகாகத்தான்வடிவை

காட்டிமகிழ்ந்தணைத்துக் கன்னத்தைமுத்தமிட்டு
நாட்டிலெந்தன்புத்திரனே நன்மைசெய்தாய்தன்மமொன்று
கீர்த்தியின்றுபுத்திரனே கிடைத்ததுகாணுந்தனுக்கு
பார்த்திபனேவைகுந்தம் பதிதனக்குச்செல்லுமென்று
எமதன்மர்தானும் எமலோகம்போய்ப்புகுந்தார்
நேமமுள்ளதன்மர் நீதியொன்றுங்தப்பாமல்
விருட்டனையிப்பால் விரைந்துவெகுதூரம்
கூருஞ்சிகரங் கொடியென்னுமாமலையும்
பார்த்துமிந்திராணி பஞ்சமூர்தப்பாறையென்னும்
ஏத்துமொருசோடான இசலிமலைதான்கடந்து
மற்றுமுள்ளகேணிகளும் மலைபலவுந்தான்கடந்து
உற்றதலமெல்லாம் உண்மையாய்த்தான்பார்த்து
சந்திரகோசமென்னும் சத்திசிவமாமலைதான்
இந்திரவிமானம்போல் இருக்குமலங்காரம்
பார்த்துப்பரிந்து பரிவுடனேதானடந்தார்
சாத்துமொருமால்தான் தரணிதனில்முன்னாளில்
மண்டலத்தில்மாபெலியால் மண்ணும்விண்ணுமோரடியாய்
அண்டமுழுதளந்த அரியோன்மலர்ப்பதத்தை
தோத்திரங்கள்பண்ணித் துதித்துமிகப்பணிந்து
ஏத்திபிருதாளை இருதயத்திலேநினைந்து
நோக்கியேதன்மரிடம் நால்வேதசாஸ்திரமும்
ஆடலுடன்பாடலுமாய் அரம்பையர்களாடிவர
ஏடலருந்தன்மனையும் எதிராகக்காண்பதற்கு
ஓடிவருவாரும் உபசாரஞ்செய்வாரும்
நாடிவருவாரும் நல்லதன்மமென்பாரும்
பார்க்கவருவாரும் பரிமளங்கள்தூவியொரு
எதிர்க்கவருவாரும் இமையோர்கள்தான்முதலாய்
வானவர்கள்வந்து மார்க்கமுடன்தன்மனையும்
தானவர்கள்வந்தெதிரே தழுவியுறவணைந்து
வந்தமரர்தன்மருடன் மகிழ்ந்துமுகம்நோக்கி
முந்தியேபாரதப்போர் முடித்ததொருபாவமெல்லாம்
போகவேநீருமந்தப் பொய்கைதனில்முழுகும்
தேகமழிந்துதன்மர் திருக்குளத்தில்தான்முழுகி
பழையவுருவாகிப் பசும்பொன்னிறந்தானாகி
அழகானதன்மருக்கு அமரர்மலர்தூவ
இந்திரவிமானமதில் ஏற்றியேதன்மனையும்
அந்தரத்தேவதைகள் அமரருமங்கிருக்க
தேர்நடத்திவானவர்கள் சிரப்பாய்மலர்சொரிய
வார்பிடித்திரண்டருகில் மடந்தையர்களாடிவர
துயக்கமிகவான தன்மருமேதேரேறி
மற்றுந்தருமன் மலையுமலைசார்வுகளும்
நீடுயர்ந்தகாவும் நிறைந்தமலர்ப்பொய்கைகளும்

காடும்பலசெடியும் கடந்துவந்துயிப்பாலும்
மன்னன்திருகேதாரம் மாமலையில்வந்திருந்தார்
அன்னவனைக்காக்க அடைக்கலங்காணென்றுமொரு
சக்கரமுஞ்சொல்லிச் சார்வுமிகப்பண்ணியபின்
மிக்கதொருசக்கரத்தால் விசனமெல்லாந்தான்கேட்டு
செங்கண்மால்தான்மகிழ்ந்து சீர்தருமனுக்கெதிரே
இங்குள்ளவிந்திரன்போல் எதிர்கொண்டழையுமென்றார்
அந்தமால்தானனுப்ப அமரர்கோனிந்திரனும்
முந்தவேமுப்பத்து முக்கோடிதேவர்களும்
சித்தவித்தியாதரரும் தேடரியகந்திருவர்
சத்தரிஷிமாமுனிவர் தபோதனர்கணநாதர்
கின்னரர்கிம்புருடர் கெருடாதிசித்தருடன்
சொன்னமயமான துருவாசமாமுனியும்
தேவரிஷிமாதவரும் தெய்வகன்னிமாதருடன்
பாவகரும்பாடகரும் பாங்கானவேதியரும்
வாத்தியங்கள்தான்முழங்க வானவர்கள்தான்கூடி
சிதம்பயிலுமந்தச் சிதாரமாமலையும்
ஓதுமொருப்பத்து யோசனைதூரமென்ற
வளர்ந்திருக்குமந்த வடவாலவிருட்சமதில்
தளர்ந்துமிகத்தவித்து தன்மருமேவந்திருந்தார்
இருந்துதவப்பாரில் எழுந்திருந்துதான்பார்த்து
பொருந்துமிடமும் பொருப்பிமிகக்கடந்து
செவ்வையோர்கானகமும் சீர்மலையுந்தான்கடந்து
கொவ்வைபடர்ந்தமலை கோபுரமுந்தான்கடந்து
தோற்றுந்திருக்கேதாரம் சோதிமலைகண்டதின்பின்
போற்றியேயிப்பதியில் போய்ப்புகுந்தார்தன்மருமே
மேடைகளுமண்டபமும் வெற்றிச்சிகரமுடன்
மாடநெடுங்கூடமுமாய் மதில்கள்திருவீதிகளும்
நீதிசுனையும் நிறைந்ததொருவாவிகளும்
ஆதிமதவேழம் ஐபருடசந்நிதியும்
கூடுஞ்சிவாலயமுங் கொண்டல்வண்ணராலயமும்
நாடுந்திருக்கேதாரம் நாசரிகமாமெனவே
ஆடுங்கொடிவேந்தன் அங்கிருந்தாரம்மானை
மிக்கவைகுந்தமதில் மேவியேசக்கரமும்
திக்குள்ளோர்போற்றும் திருமால்தனைப்பணிந்து
பத்தியின்மேலாசையல்லால் பார்மீதிலாசையில்லை
இயக்கர்பதிதனிலே எய்தினாரம்மானை
மன்னவரோயின்னகரில் வந்திருப்பாய்வாருமென்ன
பொன்னகரஞ்செல்லப் போர்வேந்தன்மார்க்கமதாய்
என்னுடையதம்பியர்கள் இருக்குந்தலந்தனிலே
பண்ணுமறவேதியரோ பரிவுடனேகொண்டுசெல்லும்
பருதிபவாசமது பார்த்திபரோயுந்தனுக்கு

கருதிமுடி சூட்டுகிறோம் கருத்துடனே நீரிருங்காண்
அச்சுதனார் தான்வாழும் அரியவைகுந்தமதில்
அச்சுதனார் பாதமதில் தன்மருமே சேருமென்றார்
அப்பதியைத்தான் கடந்து அரிராமர் மன்னவரும்
செப்பரியருத்திரர்கள் சிறந்திருக்குமன்னகரில்
சென்றுதருமருக்குச் சீராயமரரெல்லாம்
அன்றுமுடி சூட்டவென்று அருள்பெற்றாரானவர்கள்
இராசனேயெம்பெருமாள் இருக்குமிடந்தனிலே
வேறேபதியொருநாள் விருமபோமெனவுரைத்தார்
உடுக்கர்பதிதன்னில் உறையுமென்றுதானுரைத்தார்
இடுக்கம்வருவேளைதன்னில் இமையோரேயுங்கள் தர்மம்
நடுக்கந்தவிர்த்து நயமாகவெந்தனையும்
அடுக்கவேகாத்தருளும் அச்சுதனார் தன்பதிக்கு
போகவென்றுசொல்லிப் பொன்னுலகந்தன்னில்வந்தார்
தோகைமடமாதினருள் துலங்குமுடிமன்னவரே
நீதில்லாமாநகரில் சிங்காசனத்திருந்து
மாதர்கள்ரம்பையர்கள் வயிரக்கவரியிட
அந்தமுடனிங்கிரொன்று அமரர்கோன்தான்கூடி
இந்தவுலகாகதெனவுரைத்தார் தன்மருமே
வானோர்களந்த மறலிதனைவந்துகண்டு
நீனோருடையதன்மர் தேசமெல்லாம்விட்டகன்று
கலிதானும்வந்தமையால் காடுமலைதான்கடந்து
வலியவிந்தமாநகரில் வந்தான்காண்மன்னவனும்
அழைத்தே அவன்றனக்கு அரியபதமீயுமென்று
தழைத்தோங்கவாழுமென்று சாற்றுமென்றாரப்போது
மறலியுந்தான்மகிழ்ந்து மைந்தனையுமன்னேரம்
விரைவுடனேயிங்கழையும் விண்ணவரோயென்றுரைத்தான்
அந்தகன்பால்தன்மரையும் அழைத்துமுன்னேவிட்டார்கள்
வந்துபணிந்ததொரு மைந்தனையுந்தான்தழுவி
சிந்தைமகிழ்ந்து செப்புவார்தன்மருக்கு
உத்தமனேயென்பதியை உனக்கருள்வேனிப்போது
எத்திசையும்போற்றி இருமென்றார்மாமறலி
அப்போதுதன்மர் அன்புடனேயேதுசொல்வார்
இப்போதுயிப்பதியில் இருக்குமனதாசையில்லை
அண்ணல்திருவைகுந்தம் அடைவதற்குயென்னையுமே
புண்ணியரேயந்தப் பொன்னகற்குயேவுமென்றார்
பாசமுடனீர்பொருதும் பாரதப்போர்தனிலே
நேசமுடன்துரோணர் நின்றுசமர்பொரவே
மாமுனிவன்கைச்சிலையில் வலுமைகண்டுமாயோனும்
ஆமுனியேயுந்தன் அசுவத்துமாயிறந்தான்
சொல்வாயெனமாயன் சொல்லவென்னீயும்
அல்லவெனுமாயன் அப்போவெகுண்டுரைக்க

கோவிக்கவேபயந்து கூறுகின்றபொய்மொழியால்
தாவிக்குப்பாவமென்று தானிருக்குதுன்பேரில்
அத்தோஷம்போக அருநரகங்காண்பதற்கு
வைத்தார்மணிமார்பா மன்னவனே சொல்லுமென்றார்
இன்றேதான்பாருமென்று ஏழுவாய்நரகங்களுமே
சென்றவருங்காட்டித் திரும்பியேபாருமென்று
தூதுவனைத்தானனுப்பச் சொற்பெரியதன்மருமாய்
போதமுடனேதானும் புண்ணியரேபாருமென்று
பார்த்துவரும்பாதையிலே பலவிதமாய்நாகரீகம்
தோற்றுதுகாணேதெனவே சொல்லுமென்றார்தன்மருமே
கற்பகப்பூங்காவில் கமலசிங்காசனத்தில்
விற்பனமாய்வந்துநின்று வேண்டியதெல்லாங்கொடுக்க
சொற்கந்தனிலிருந்து சூலங்குடைநிழலில்
பக்கந்தனில்கன்னியர்கள் பணிவிடைகள்செய்துநிற்க
களித்தேயிருப்பாரைக் கண்டேபிரியமுடன்
செழித்துமுகந்தன்மர் சிந்தைகுளிர்ந்திருப்பார
இவர்செய்ததன்மமேதோவெனக்கேட்க
தவமுடையகிங்கிலியர் சாற்றுவார்தன்மருக்கு
தக்கவாஞ்செய்து தருமந்தழைத்தோங்க
துக்கமெனும்பாவம் துலைத்தோரிவர்காணும்
ஓதுகின்றபல்லுயிரும் ஒன்றாகவேபாரில
நீதமுடனடத்தும் நிருபரிவர்காணும்
பாரிற்குருபூசை பண்ணினோரிவர்காணும்
சீரிலுயர்கீர்த்திச் செலுத்தினோரிவர்காணும்
விளங்கவேதன்மம் மேதினியிலெங்காணும்
களங்கமறச்செய்துக் கண்டோரிவர்காணும்
பூசைமயேசுர பூசைகளுந்தான்முடித்து
ஈசுதமிழ்வேதியற்கு ஈய்ந்தோர்முகம்பார்த்து
யார்பெரியபஞ்சத்தில் பசித்தோர்முகம்பாாத்து
ஏற்போர்தமக்கு ஈய்ந்தோரிவர்காணும்
அடைந்தோர்கள்தம்மை ஆதரித்தோர்காணுமிவர்
இடைந்தவரைத்தாங்கி இளப்பாற்றிவந்தவர்கள்
மிகுந்ததவமுனிவர் வேள்விகளைக்காத்தோர்காண்
பகுத்தறிவாய்நால்வரையும் பட்சம்வைத்துக்காத்தவர்காண்
மறையோற்குநல்ல மாதானஞ்செய்தார்காண்
குறையேதுசெய்தாலுங் குற்றம்பொறுத்தவர்காண்
பசித்துவந்தோர்தங்களுக்குப் பாலமிர்தமிட்டோர்காண்
கசிந்துத்துயர்தீர்த்துக் கனத்தவங்கள்செய்தோர்காண்
கோதானமாதானங் குருபூசைசிவபூசை
பூதானமீய்ந்து புண்ணியமேசெய்தோர்காண்
கன்னிகைதானமது காசினியில்செயதோர்காண்
மன்னியதானமெல்லாம் வாகாய்முடித்தோர்காண்

இத்தனையுஞ்செய்து இக்குலத்தார்கண்டீரோ
மூத்தரிவர்கர்மம் மூர்த்தியேயென்றார்கள்
தன்மமதுசெய்து தார்வேந்தர்சொற்கமது
இன்மைதனிலிப்போது இக்குலத்தார்காணுமிவர்
குன்றவலுபாழ்நரகம் கொற்றவனேபார்ப்பதற்கு
இன்றுநீர்வாருமென்று ஏகினார்தன்மருடன்
ஒன்றாநரகம் ஒருநூறுயோசனையாம்
இரண்டாநரகம இருநூறுயோசனையாம்
இந்தவகையிலொரு ஏழாநரகமுந்தான்
உந்தியகலமெனும் ஒருநூறுயோசனையாம்
பெருத்துக்கிரிமிகளாய்ப் பேருடலுமுள்ளதுவாய்
வருத்தமறியாமல் மாண்டாரைத்தான்பிடுங்கி
நெளியப்புழுவுகளும் நிறைந்தஉதிரங்களும்
உளையமுதலையுடன் ஊருகின்றஆட்டையுடன்
பாம்புடனேநீர்நாயும் பற்றியிழுத்திழுக்க
சோம்புவார்தம்மைத் துயரமுன்தன்மர்கண்டு
சிவசிவாவென்று செவியிலிருகையைவைத்து
தலமேதுசெய்கிலேயோ தம்பியிவர்தாமும்
பொய்யும்புரட்டும் பொருந்தாக்குலைகளவு
செய்யாதகாரியங்கள் செய்தோரிவர்காணும்
இந்நரகமதில் ஏழாநரகமதை
வந்துநீபாருமென்று மலைத்துசொன்னார்தர்மருக்கே
நாடியேயேழாம் நரகிலுள்ளபாவமதை
ஓடியேதன்மா உலாவியேபார்ப்பளவில்
ஏழாநரகமதில் கீழாகநின்றாரும்
பாழாநரகமது பாதாளபாதகமும்
தாழாமுடிமன்னவனைத் தான்கண்டுதன்மருமே
ஆழாநரகமதில் அலறிக்கிடப்பாரை
பாசமுடநரகில் பரதவிக்கும்நூற்றுவரை
வாசமுடன்தன்மர் வாகுடனேகண்டாராம்
பொல்லாதநூற்றுவரைப் புழுக்களரித்துடம்பை
இல்லாதகொட்டாலே இருசெவிகள்மூக்கதிலும்
ஊடுருவியேதுளைத்து உலாவித்திரிவதையும்
வாடுமுடல்கிடந்து மயங்கித்தவிப்பதையும்
கல்விழுகளை கடித்துப்பிடித்திழுக்க
குவ்வியநீர்நாய்கள் குருக்கேபிடித்திழுக்க
மதித்ததொருநூற்றுவர்கள் மயங்குமவருத்தமெல்லாம்
கதித்தபுகழ்தன்மர் கண்டார்காணம்மானை
கண்டவுடன்தன்மர் கலங்கியுடல்பதறி
அண்டமுறநின்று அரிநமோசிவாயமென்று
ஓதுமுலகம் ஒருகுடைக்கீழாண்டதொரு
மாதுபயில்மடவன் மாநரகிற்குள்ளானேன்

என்றுசொல்லித்தன்மர் ஏங்கிமனதிடைந்து
நின்றளவிலிந்த நெடியதிரியோதனனும்
விண்டுரைக்கமாட்டாமல் விசாரமாயுள்ளயர்ந்து
கண்டுதன்மர்தன்னைக் கலங்கியேயேதுசொல்வான்

விருத்தம்.

தம்பிதுணையேயான்செய்த சதிகேடனைத்தும்பொறுத்தருளி
வெம்பித்துயரிலழுந்தாமல் வேண்டியெனையேகரையேற
நம்பிக்கரத்தாலெடுத்தணைத்து நன்மைபெறவேதன்மரேநீர்
எம்பியெனையேவைகுந்தத் திருக்கதியைப்புகலுரைக்கே. (௩௰௯)
யான்செய்தவினையினாலே யழுந்தேனன்னரகில்வீழ்ந்து
தான்செய்ததவத்தினாலே தன்மரின்றங்குவந்தீர்
ஊன்செய்தபகையினாலே உடல்தனைகிடத்திப்போட்டு
வான்செய்தவுயிர்தான்வாடி மயக்கமுற்றிருப்பாய்தம்பி. (௩௨௰)
போரற்பெரியதன்மனைப் பெற்றாய்பெருமையதனாலே
நேராயானுங்கன்மமென நின்றேன்கொடுமையதனாலே
பாராய்புவியிலுன்னையென்னைப் பகர்வர்பெரியபாரதத்தில்
சீராய்தயவுமனதுடனே திரமாய்வந்துகைதாரும். (௩௨௧)
பஞ்சவாஞ்சுபேற்கும் பாஞ்சாலிதனக்குநானே
வஞ்சமாய்செய்தபாவ மட்டல்லசொல்லக்கேளும்
கொஞ்சமாய்நினைந்தபுத்தி கொடியதோர்நரகில்வீழ்ந்தேன்
தஞ்சமென்றுன்னைசொன்னேன் தன்மரேகையைத்தாரும். (௩௨௨)
சூதுநான்கபட்டுஞ்செய்து துரத்தினேன்வனத்தில்யானும்
ஏதினாற்குவலையத்தி லிப்படிநரகம்புக்க
வாதினாற்கொலையேசெய்து வங்கிஷமுழுதுமாண்டு
நீதினால்நரகஞ்சேர்ந்தேன் செய்தன்மாகையேதாரும். (௩௨௩)
மாயனார்தூதுவந்தார் மதித்துநான் துதித்தேனில்லை
ஆயனார்மனதுக்கேறு தாகவேவரசுதோற்றேன்
தூயவர்பாதம்போற்றித் தொழுதைவர்கெதியேபெற்றீர்
வேயனார்க்காகதன்மர் விரைந்துநின்கையைத்தாரும். (௩௨௪)
பொறுமையுடையதன்மரேநீர் போனாலெனக்குக்கெதியில்லை
இருமியுடலைத்துளைக்குதுபார் கெஞ்சியழுதுபாதவிக்க
உருமியதட்டிநீர்நாயு முறுக்கிமுதலைபிடிக்கிழுக்க
சிறுமைகெடுநாள்பட்டலுத்தேன் தெய்வப்பிறப்பேகைதாரும். ()
வேத்துமையுனக்கேதப்பா மெய்யுயிராச்சையெல்லாம்
யாத்திபனைமூர்த்தி பாரபரம்வந்தாய்சேர்ந்தாய்
நாத்திசைபுகழுங்கீர்த்தி நரகம்விட்டகலவென்னை
எத்தியேகரையில்விட்டு இருக்கவைகுந்தஞ்சேர்ப்பாய். (௩௨௬)
உந்தனைக்கண்டபோதே வுடலுயிர்மகிழ்ச்சிபெற்றேன்
எந்தனைவிட்டுப்போனா லெனக்கினிதுணைவேறில்லை
சிந்தனைதீர்த்துத்தம்பி திருவுளமறியுநீயும்
வந்தெனைத்தன்மரேநீர் வைகுந்தஞ்சேருமிப்போ. (௩௨௭)

கதை.

தேர்வேந்தனுனக்குச் செய்ததொருதீவினையால்
ஓர்கசடுதானும் உன்மனதிற்காணுமல்
தருமநெறிமுறையுந் தவமூந்தயிரியமும்
உரிமையுடனீயிருந்த உற்பனத்திலுன்பரிடம்
வந்தீர்வைகுந்தம் வாழ்ப்தியுந்தாண்பெருக
மூந்தநான்செய்த மோசமெல்லாம்விட்டுவிடு
மன்னவனேயான்செய்த வன்மமெல்லாம்விட்டுவிடு
என்னைநரகம்விட்டு ஈடேரத்தான்பாரும்
ஏராதபாவி இவையுரைக்கதான்கேட்டு
தாராருந்தன்மர் தயவுடனேதானோக்கி
பேதமறப்பார்த்துநின்ற பேர்பெரியதன்மருக்கு
ஓசரிபகிங்கிலியர் உகந்தேதுசொல்வார்கள்
பார்த்திபன்றான்செய்ததெல்லாம் பாவமேயல்லாது
எத்தியொருதன்ம மிவன்செயதானில்லையின்றுள்
இவன்தான்பரகெதிக்கு எய்துவதுமெப்படிகாண்
தவநடையதன்மரோநீர் சாற்றுகிறீரொன்றுரைத்தார்
திருந்தவேதான்தர்மஞ் செய்திலனேயாமாகில்
பொருந்தியிப்போநான்செய்த புண்ணியத்தில்பேர்பாதி
மன்னனுக்குநன்றாய மகிழ்ந்தேதானிப்போது
சொன்னேன்காண்தூதுவனே சுகமாகநீர்தானும்
பூலோகராயசனே புழுக்குழியைவிட்டேக
மேலாகத்தூக்கி விடுமென்றார்தன்மருமே
அந்தமொழிகேட்டு ஆனதொருதூதுவனும்
வந்ததொருகாந்தாரி மைந்தனையேகைதூக்கி
கூசாமல்தாவெடுத்து கூட்டினார்மன்னவனே
ஆசாரமாக அண்ணல்திரியோதனனை
காராருந்தன்மர் கழுத்தோடுறவணைத்து
சீராய்மகிழ்ந்து தீவினையெல்லாமகற்றி
தாராரியமன்முன்னே தான்சென்றாரம்மானை
பாரார்புகழேமன் பாண்டுமைந்தன்றான்வருக
இருவர்வரக்கண்டவுடன் இமராஜன்றான்கலங்கி
அறுவினைகள்மாபாவி அவன்வருவதேதெனவே
எமதன்மன்கேட்க என்றதொருதூதுவனும்
நேமமுடன்வாய்புதைத்து நின்றேதுசெப்பலுற்றார்
புசழ்சருமன்செய்துவந்த புண்ணியத்தில்பேர்பாதி
இகழாதிவேந்தனுக்கு ஈய்ந்தாரெனவுரைத்தார்
கேட்டுமகிழ்ந்தேமன கிட்டவேமுன்னிருத்தி
வாட்டமில்லாமன்னனுக்கு மகிழ்ந்துரைப்யானம்மானை
நடந்துதவம்செய்தவர்கள் நலலதவம்பெறுவார்
அடர்ந்துவினைசெய்தவர்கள் அவதிமிகப்படுவார்
இன்றேதான்கண்டோம்நாம் எமதன்மன்றான்மொழிந்து

முன்னை பெரியோர்தான் மொழியவுந்தான்கேட்டிருப்போம்
ஆபகெடுமாலிவற்கு ஐந்தூர்விடுகவென்று
ஈயிருக்கத்தாலும் இடமில்லையென்றார்காண்
தெரிந்தவன்றான்செய்ததீமைபொருத்ததொரு
பரிந்துதன்மர்புண்ணியத்தில் பாதிவற்றாய்ந்ததினால்
ராசரிஷிராணுயிவன் ரத்தினமுடிசூட்டுமென்றார்
பாசமுள்ளயெமதன்மர் பகுந்துரைத்தாரிவ்வசனம்
இமையோர்மகிழ்ந்து இராஜரிஷியென்றுபட்டம்
அமைப்புமுடிசூட்டி அங்கிருக்கவேதருமன்
தோற்றுமரகம்விட்டுச் சுற்றத்தாருள்ளோரை
ஏற்றுங்களையென்று எமதன்மர்தானுரைத்தார்
வையமகிழத்தன்மர் வங்கிஷத்திலுள்ளோரை
மெய்யதன்மர்சொற்படிக்குச் சொர்க்கத்திலேற்றினரோ
துதிக்குந்தருமனையே மகிழ்ந்துநல்லவானோர்கள்
சுற்றமெல்லாம்பூவுலகில் சூழ்ந்துநித்தம்வந்ததுபோல்
வற்கமுள்ளசொர்க்கமதில் வைத்தானெனவேதான்
தேனார்துடர்மார்பன் தெய்வத்தருமனையும்
வானோர்களெல்லாம் மகிழ்ந்தனர்காணம்மானை
அந்தச்சிறுமைந்தனையே அன்பாய்முகம்நோக்கி
உந்தனுக்கேயிந்த உலகமெல்லாம்நான்தருவேன்
துங்கமுடிசூட்டி சொர்க்கந்தனையாளுமென்றார்
அங்கேமறலி அருளினார்கள்மைந்தனுக்கு
தன்மாதுகேட்டுச் சரணமெனப்பணிந்து
சென்மமழிந்தாலும் செய்ததர்மம்போனாலும்
எம்பிரானெம்பெருமான் இறையோன்வைகுந்தமல்லால்
நம்பியேயோரிடத்தில் நான்தரியேனென்றுரைத்தார்
மகன்றனக்குமாமறலி வைகுந்தம்வாழ்பதிக்கு
உகந்துநீர்செல்லுமென்று உபசாரமாயுரைத்தார்
தந்தையிவைசொல்லத் தன்மரடிபணிந்து
சிந்தைமகிழ்ந்திப்போ செல்லும்வைகுந்தமென்றார்
இடந்தசுற்றமுள்ள திரியோதனன்றனையும்
அடைந்துசொர்க்கஞ்சேருமென்று அன்புடனேதானிருத்தி
வானோர்கள்தன்மரையும் மகிழ்ந்துரதமேற்றி
சேனபதிதன்மர் செல்லலுற்றாரம்மானை
அந்தரத்தில்துந்துபிகள் ஆர்ப்பரிக்கும்பேரொலியும்
முழங்கினபேரிகையும் முரசினிடபேரொலியும்
ஏழுகடல்போல்வானுலகில் எத்திசையுமேமுழங்க
வாழ்பிரமலோகம் வந்தடைந்தார்தன்மருடன்
அகத்தியனுங்கோச்சுராரும் அந்தவிலோசனரும்
மகத்தில்கௌதமரும் வசிஷ்டர்அரசருடன்
சொலலுஞ்சவுமியருந் துருவாசகாசிபரும்
மல்லும்புயமாதரும் வருணன்முதலுள்ளோரும்

எட்டுதிக்கும்பாலகரு மேற்றவர்க்களுடன்
கொட்டுச்சதலோகங் குமுறுமென்று கான்முழங்க
மாணிக்கத்தாற்சமைத்த வச்சிரமணிமண்டபமும்
ஆணிக்கனகம் அழுத்தியசிங்காதனத்தில்
ஓதுபதினாலும் உலகம்படைத்தோரும்
வேதரும்நன்றாக வீற்றிருக்கும்வேளையிலே
செறிந்தமுனிவர்களும் தேவர்களுஞ்சூழ்ந்துவர
பரிந்துவருந்தன்மா பணிந்தனர்காணம்மானை
இசைநான்முகத்தோன் இவராரெனக்கேட்க
கிசவான்குருகுலத்தில் சீர்ப்பாண்டுதன்புதல்வன்
தருமனிவனென்றானும் தரணிதனிற்கலியன்
பெருமையுடன்வந்ததினுல் பேருலகைத்தானிழந்து
ஆதிநெடுமால் அரிகேசவன்பாதம்
நீதிவைகுந்தம் நினைத்துவந்தாரென்றுரைத்தார்
தானவன்போய்த்தன்மர் தனக்கங்கெதிராக
வானவரோசெல்லுமென்று மாமறையோன்றான்கூற
அழைத்துவந்தமுன்னே அடிபணியவிட்டார்கள்
தழைத்தோங்குந்தன்மனென்று சாற்றினர்வானோர்கள்
செப்பரியநான்முகத்தோன் சிந்தைதனில்மகிழ்ந்து
ஒப்பரியதன்மருலகமதிலெப்போதும்
நன்றாகச்செங்கோல் நடத்தும்விசேஷமெல்லாம்
குன்றாதமாமுனிவன் கூறினன்கேட்டிருப்போம்
நண்ணிசெய்யக்காயமுடன் நன்றாகவிங்குவந்தேன்
புண்ணியவானென்றுமிகப் போதமனமகிழ்ந்து
இன்னமிந்தப்பூவுலகில் இவர்க்காசையுண்டோவென்று
அன்னத்தின்மீதில்வரும் அயனுமெடுத்துரைப்பார்
எவ்வுலகம்வேண்டியது இப்போமுடிசூட்டி
அவ்வுலகந்தன்னில் அரசாளவைப்பேனுன்
வேண்டியதுகேளனவே வேதர்மகிழ்ந்துரைக்க
ஆண்டவனேவைகுந்தம் அமையுமென்றார்தன்மருக்கு
ஏதுமிவற்காசையில்லை இறையவனேயிப்போது
தாதுரையும்வேதாவே தந்தைபதம்வேண்டி
வந்தாரிவரெனவே வானோருரைத்தபின்பு
அந்தாகுலம்படைக்குந் திசைமுகனுமேதுரைப்பார்
தருமன்றனக்கிப்போ தானவரோவானவரோ
அறத்திலுள்ளோர்வானோரும் அருள்முனிவர்நாதர்களும்
பிரமரிஷிதீர்த்தம் பிரமரிஷியென்றுரைத்தார்
மெய்கண்டவாழ்தருமன் விரும்பிவருவதற்கு
நன்மணிசேர்மண்டபமும் நற்கனகமண்டபமும்
பொன்மணிசேர்மண்டமும் பூமலர்சேர்மண்டமும்
மற்றும்வைடூரியஞ்சேர் மாணிக்கமண்டபமும்
கற்றூண்கடலமுத்துடனே கனகத்தூண்மண்டபமும்

பற்பாகம்பதித்த பவழத்தூண்மண்டபமும்
சற்பமிகுரத்தினமணி தான்சமைத்தமண்டபமும்
தூயகோமேதகத்தால தூண்சமைத்தமண்டபமும்
வையமகிழ்புட்பராகத்தூண்மண்டபமும்
சிங்காரமண்டபமுஞ் சிற்பளிங்குமண்டபமும்
வங்காரமண்டபமும் வச்சிரத்தூண்மண்டபமும்
விருணபட்டாடை மேற்கட்டுமண்டபமும்
மாருதகல்லுருடி மாளிகையின்மண்டபமும்
விளைந்தநல்லசந்தனத்தால் மெழுகியதோர்மண்டபமும்
விளைந்தநல்லசாந்தால நிலமெழுகுமண்டபமும்
மந்தாரம்பிச்சி மலர்தூக்குமண்டபமும்
கந்தபொடிவாசங் கமகமெனுமண்டபமும்
சாமாயக்கிறபூங் நன்மணக்குமண்டபமும்
ஆரவேகஸ்தூரி பரிமணக்குமண்டபமும்
ஆயிரண்டாழ்வார்கள் அமர்ந்திருக்குமண்டபமும்
கூறுமொருபாக்கியைன் குவித்திருக்குமண்டபமும்
நீண்டகெருடக் கொடியுடையசீர்மதிலும்
ஈண்டஅனுமக் கொடிநிறைந்தகோபுரமும்
உப்பரிகைமேடைகளும் உயர்ந்தசிகரமுமாய்
அப்பெரியதேவர் அலங்கரித்தமாளிகையும்
தூயதொருமாணிக்கத் தோரணமுந்தான்கட்டி
மாயனுடமாளிகைகள் வகையாயலங்கரித்து
போதவீதியெல்லாம் புதுநறுமணம்வீச
கிதப்பரிமளங்கள் கெந்தபொடிசந்தனமும்
வாசனைகளாக நல்லிசையுமுல்லைபிச்சி
பேசரியவெட்டிவேர் பெரியமருக்கொழுந்து
கமகமெனவாசங் களபமொகிதுளபம்
பொன்னெனவேவைகுந்தம் போதவலங்கரித்து
மாசில்லாத்தன்மருடன் வானவர்கள்தேரேறி
ராஜகோபாலருட நகர்தனிலேவந்துபுக்கார்
மண்ணுலகில்வாழ்தருமன் வைகுந்தம்வாழ்பதிக்கு
எண்ணரியதேவருடன் இங்குவந்தாரென்றுசொல்லி
கேசவனுந்தான்மகிழ்ந்து கெம்பீரமாகவேதானே
வாசமுனிவர் மற்றுமுள்ளதேவருடன்
சக்கரமுஞ்சங்குந் தரித்துமணிமாலையுடன்
திக்கெங்குங்கொண்டாடச் செங்கருடன்மீதேறி
மாலைதுளபமணி மாலையதுதானணிந்து
சேலைமலைபழகர் சொர்ணமயமாக
வாகனையதங்கமொதிர் வந்தனர்காணம்மானை
அண்டபகிரண்டம் அகண்டமெல்லாமொன்றாக
உண்டுமொருபாதமதில் ஓடிவந்துதன்மருமே

மண்டுகோன்செய்த பாக்கியமோயிப்போது
கண்டுனதுபாதங் கண்குளிரத்தெண்டனிட்டு

விருத்தம்.

கண்டபோதேசளிகூர்ந்தேன் கன்மவினையிற்கசடறுத்தேன்
அண்டர்புகழும்பொற்பாத மடியேன்பணியத்தவங்கள்பெற்றேன்
தொண்டனிவனென்றெண்ணிச் சொல்லும்பெரியவைகுந்தன்
குண்டந்தனிலேயெனையிறுத்துங் கோவேநந்தகோபாலா. (௱௨௮)
ஆதவாவுன்னைக்கண்டே னலவிருளகன்றுதிப்போ
மாதவாவென்றுசிந்தை மயக்கமுந்தீர்ந்துதிப்போ
சீதவாதுளபமார்பா தேவகிநந்தகோபா
கீதவாயிசையன்சேருங் கிஷ்ணவைகுந்தஞ்சேர்ந்தேன். (௱௨௯)
சானகிராமராமா சாரங்காராமராமா
மாநகரயோத்திராமா மாதவாவாசுதேவா
ஓமராமராமா வுலகினையளந்தமாயா
ஞானவாவுனதுபாதஞ் சரணமேகண்டேன்கண்டேன் (௱௩௰)
பட்டேன்புவியிலுள்ளாடிசேன் பாசங்களைத்துவருமளவும்
விட்டேனுணர்வுகளைமறந்து விரகமுனதுவைகுந்தம்
மட்டேயேறிகடந்துவந்தேன் மறவிமறையோனவானவருந்
தொட்டேயழைத்தார்சுகம்பெற்றேன் ஒருமூதேனுனைநான் செழு
[ச்சேன்.

கதை.

மாயாமுகுந்தமாபாரதந்தனிலே
ஆயர்குரிப்பழித்து ஆதவனைத்தான்மறைத்து
சிராயவிமனுக்காய் தேற்றாசன்றன்னைவென்று
தாரார்விசையனையுஞ் சாகாமற்காத்தனையே
ஆனைநின்றுமூலமென்ன அக்கரைக்கரையில்
கானில்வந்து அஞ்சலென்ற காருக்காவென்றுசொல்லி
தொழுதான்பணிந்தான் துயரமெல்லாம்தான்தீர்ந்தான்
சாற்றுபுகழ்கன்மருந்தான் சரணமென்றுமாயனையும்
போற்றிநித்தம்பூசைபண்ணிப் பொற்கோவில்தானிருந்தார்
ஏற்றதொருமாயன் இருமென்றுதானுரைத்தார்
வீற்றிருந்தார்கன்மர் விதாணித்துமாளிகையில்
பொய்யில்லாவாசவனே புவிராஜமன்னவனே
வைகுந்தலோகம் வளம்பார்க்கவாருமென்று
அய்யன்முகுந்தன் அரிகேசவனுடனே
செய்யும்புகழ்கன்மருந்தான் திருமாலுடனடந்தார்
கூரியமாபெலிதன் கோவிலுடவாசல்தன்னில்
வீறுடனேதாநடந்து மேகவண்ணர்தாமும்நின்றார்
மாயனுந்தன்மருமாய் வாசலில்வந்தானெனவே
தூயதொருமாவெலிக்குத் தூதுவர்தான்போயுரைத்தார்
விரைந்தங்கேமாவெலியும் வேகமாயோடிவந்து
கரைந்துகரைந்துருகிக் கண்ணுயிரத்தோனே
நானுமற்றேவர்களும் நான்முகனுந்தான்தேடி

காணுமபாதமதைக் கடையேன்பொருட்டாக
கொடியேன் சிரசில் கோபாலர் வைத்துநின்றார்
அடியேன்பொருட்டாக ஐயாநீரிப்பொழுது
இங்கேயெழுந்தருள என்னதவஞ்செய்தேனோ
சங்கேந்துமாலே சரணஞ்சரணமென்றார்
திருமாலேயிங்குவரச் செப்புமென்றார்மாவெலியும்
குருகுலத்துதனமரிவர் குணமும்பொறுமையுள்ளோன்
சாதகமாய்நாள்தோறுஞ் சத்தியவான்காணுமிவர்
நீதமுடையவன்காண் நீணிலத்திலன்னவாக்கும்
தக்கபுணைநெறியுந் தவமுமுடையவன்காண்
மிக்கவுனைக்காணவென்று வேண்டியேவந்தான்காண்
மாவெலியையென்றுரைக்க மாயோனையும்புடை...
ஏவலினாலேவருந்தான் இருந்தாரேருபம்போல
தாழ்ந்தோருபர்க்கோராய்த் தாழ்ந்திருப்பார்கண்டீரே
வாழ்ந்தாரியர்பெருமை மாதாவேசொன்னீரோ
தங்குசெம்பொன்மேரதனில் தற்காகஞ்சேர்ந்திருந்தால்
அங்குமந்தக்காகம் அம்பொனிறமாகிலையோ
அழுதான்கருணைவிழி ஆனந்தநீர்சொரிய
தொழுதுகாண்மாவெலியுந் தோத்திரங்கள்சொல்லியபின்
ஆடினான்மெய்மகிழ்ந்து அரிகரியென்றுசொல்லி
பாடினானுளமகிழ்ந்துப் பச்சைமால்பாதமதில்
செங்கைமலர்ப்பாதஞ் சேர்வைபண்ணிநித்தமுமே
இங்கிருக்கப்போறேனான் என்னதவஞ்செய்தேனோ
என்றுசொல்லித்தன்மர் ஏற்றுகின்றதோத்திரங்காண்
மன்றுலவுமாயோனே மனமகிழ்ந்துதன்மனையும்
வாருமென்றுதானழைக்க வானவர்களன்னேரம்
தானவரும்வானவருஞ் சதுர்முகனுமிந்திரனுந்
தேடரியபாதந் தெரிசிக்கப்பெற்றினையே
ஆடல்புரிதன்மரோநீர் அரிபாதஞ்சேர்ந்தனையே
என்றுசொல்லிவானத்தில் இமையோர்மகிழ்ச்சியுடன்
அன்றுதான்கட்டி அணைத்தனர்காணம்மானை
மன்றுமந்தமாயவனார் வானோர்தனைநோக்கி
கொற்றவனைக்கொண்டுசெம்பொற் கோவிலிலேவையுமென்றார்
பரிந்துதன்மர்கோவில்புக்கப் பச்சைமால்தான்மகிழ்ந்து
இருந்தங்கிமையோரை எம்பெருமாள்தானனுப்பி
என்றுதான்மாவெலியும் இவ்வசனந்தானுகந்து
நின்றதொருமாயோனும் நோராகயிப்போது
ஆகிலும்நானின்னமொன்று அருளக்கேள்மாமுனியே
தாகமுடன்கேளுமென்று சாற்றினாரம்மானை
பரிந்துநல்லவேதியர்கள் பதினாயிரம்பேர்க்கு
தெரிந்துமொருவேள்வி தினந்தோறும்பண்ணிவைத்தார்
மற்றுமோராயிரம்பேர் மாமறையோர்தங்களுக்கு

நிற்றமன்னதர்மம் நிறையக்கொடுத்தவன்காண்
நன்றாய்மநுநீதி நடத்துமுறைதனிலே
குன்றாமலாறிலொன்று கொண்டானிவன்காணிம்
இல்லோரிறப்போர் இளைத்தோர்கள்தங்களுக்கு
எல்லாருயிரும் இவனுயிர்போற்காத்தவன்காண்
சத்தியவாழ்வை தவறாமல்பூவுலகில்
நித்தியம்நீதி நிலைநிறுத்தும்புண்ணியர்காண்
திங்கள்மும்மாரி சிறந்துமிகப்பொழியும்
பொங்கும்புலியும் புல்வாயுமோர்துறையில்
உண்ணுமதுதண்ணீரில் உறவுங்கவுண்டாகும்
மண்ணுலகிலிந்த மகிமையிவனீதிது
வழக்காசவீமனுடன் வரும்புருஷாமிருகம்
பழகாருந்தன்மருடன் பக்கநிலைஞாயமினி
வந்திருவர்தானும் வழக்கென்றுதான்கூற
பிந்தினவன்வீமன் பிளந்துகொல்லென்றவன்காண்
தெரிந்துதுரோபதையைத் திரியோதனன்பிடித்து
பரிந்துதுயிலுரியப் பார்த்துநின்றதாலேயும்
வில்லம்புதீட்டி வெகுண்டுசினத்தெழுந்து
வில்லம்புதன்னை விலக்கியேநின்றவன்காண்
பாரின்மேலாசையற்றுப் பரிந்தேபரகெதியை
சேரவேதானினைந்து தீங்கொன்றும்பேசாமல்
ஆவலுடனிருந்தான் அன்பாகநம்மருகில்
மாவெலியேயென்று மகிழ்ந்துரைத்தார்மாயோனும்
என்றனவில்மாவெலியும் இருதயமுந்தான்மகிழ்ந்து
சென்றுதருமனையுஞ் சிந்தையுறத்தான்தழுவி
மன்னவனேநீர்காணே வருந்தியேசெய்தவத்தால்
இன்னகரில்வந்தாய்நீ என்றுமிகப்புகழ்ந்து
உற்றதொருதன்மருக்கு உபசாரமாயுரைத்து
மற்றுமந்தமாவெலியும் வணங்கினானம்மானை
மாவெலியைத்தானிருத்தி மாயோனுமன்பாக
காவலனுந்தன்மனையுங் கையுடனேகொண்டுசென்று
போராதபார்காணும் பிரகலாதேவருடன்
தாராருநாரதனுஞ் சதுர்வேதமாமுனியும்
பத்தியுள்ளஆள்வார்கள் பன்னிருபேர்தன்னுடனும்
வீற்றிருக்குஞ்சோலைதன்னில் மேகவண்ணர்தன்கோயில்
போற்றியேயானவர்கள் பொற்றாளடிபணிந்து
தங்குபுகழ்தன்மருக்குச் சக்கரமுந்தான்தரித்து
பொங்குதிருமால்பாதம் போற்றிநின்றுவாழ்ந்தார்கள்
அங்கவர்களதம்மை அச்சுதனார்தாமிருத்தி
திங்கள்நுதல்வேந்தருடன் திருமாலெழுந்தருளி
குளிர்ந்தமலைச்சோலைதன்னில் கோபாலர்தானடந்தார்
அழுந்தநவரத்தினத்தால் அலங்கரித்தார்மேடைதனில்

செல்லும்பொழுது திறல்வீமன்விசையனுடன்
சொல்லுமொருநகுலன் தோற்றமுள்ளசகாதேவன்
கோராதுரோபதையுங் கதிர்குலான்தன்மனையும்
இருவரையுங்கண்டு எதிரேயெழுந்திருந்து
அரியபெருநாள்கண்டவர்போல் அரியினிடபாதமதில்
வந்துபணிந்து மலர்கள்மிகச்சொரிந்து
சிந்தைபணிந்து சேவித்துநிற்பளவில்
தம்பிமார்களையுந் தன்மனொடுத்தணைத்து
எம்பிரான்சீர்பாதம் இறைஞ்சிமேனும்பாருமினி
நந்தகோபாலர் நடமிக்கருகுட
விந்தமதில்நடந்து மெய்த்தளர்ந்துவிட்டதோ
என்றுரைத்துத்தம்பியரோ டியல்பாண்டவருந்தான்
மன்னுலவுமாயோனை மகிழ்ந்துரைத்தாரம்மானை
இன்னகரிலெப்போதும் இருமென்றுதானுரைத்தார்
ஆனந்தப்பருதிகொண்டு ஐவரையுங்கூட்டி
தானந்தமானவள்ளல் சாகதிமுடிசூட்டி
மாயவனார்தாமும் மனமகிழ்ந்துதான்வாழ்த்தி
நேயமுடன்கொண்டுசென்று நித்திலஞ்சேர்மண்டபத்தில்
அன்பாகநம்மிடத்தில் அருகேயிருமெனவே
இன்பாகமாயன் இருமென்றாரம்மானை
நாரதனார்தாமுதலாய் நல்முனிவர்தான்கூடி
சீரானநால்வேதங் திருந்தவேயோதுமென்று
வீரசிங்காசனத்தில் மேவியிருமென்றுரைத்தான்
பாரதங்கொள்மாவேந்தர் பரிந்துமிகவீற்றிருந்தார்
வெங்கவுரிதான்வீச விருதுபலமுழங்க
தங்கமணிமண்டபத்தில் தம்பியருந்தன்மருந்தான்
ஏந்திழையோர்தம்மோடு இருந்துபணிமாற
ஆய்ந்தமடமாதர் அரம்பையர்களாடல்செய்ய
அச்சுதனார்நேசம் அகலாதபஞ்சவர்கள்
மெச்சும்புகழ்வைகுந்தம் வீற்றிருந்தாரம்மானை
பொய்யில்லாராகையினால் புண்ணியமேசெய்ததினால்
செய்யும்வெகுதன்மமெல்லாம் தேடியேசெய்தபலன்
பரிதிமதிகாணாத பச்சைமாலதன்பதத்தில்
விளிதராசுபஞ்சவர்கள் மேவினார்காணம்மானை
கவருற்றபஞ்சவர்தான் காணாதவிந்தநகர்
கண்டாரிவரெனவே கனகசபைதான்முழுதும்
அண்டர்முனிவோரும் அதிசயமாய்க்கொண்டாடி
மெய்கண்டார்கண்டார் வெளியிலொளியாயிருந்தார்
வைகுந்தங்கண்டார் வாசமுள்ளபஞ்சவர்கள்
என்றுகதைசொல்ல ஏற்றசெனமேசயன்றான்
சென்றுதிருச்செவியில் செவிடுமதுநன்றாக
ஓசையாய்க்கேட்டு உளமகிழ்ந்துதானிருக்க

பாசமுடன் போற்றுகின்ற பழையசாருப் பட்டதுவும்
வெண்பட்டுமோகி விருமையது தானிற்றி
பண்பட்டு வார்த்தை பழையபடி தான்பேசி
விருமைய கன்றுதென்று மேதினியோர் கொண்டாட
பொருமையுள்ள பஞ்சவர்கள் புவியாண்டு விந்தமதில்
போனதிசயந்தான் புதுமைபுதுமையென்று
ஞானசெனமேசயற்கு அறிவுமிகவந்ததினால்
சத்தியவான் விசனம் சத்திவிளங்குதென்று
பத்தியுடனப்போது பஞ்சவர்கள் கோவிலொன்று
கட்டிமுடித்துக் கைகுவித்துப் பூசைபண்ணி
கொட்டிசழித்துத் திருக்கோவிலாலயமாய்
பூமிதனிலந்தப் பூலோகங்கொண்டாட
ராமனோராமவென்று காதமணிதானுட
திருவிளக்குமின் விலங்கத் தீபமுடன் தூபமுமாய்
பரிமளங்கள்வீசப் பஞ்சவர்கள் கோவிலொன்று
வருவார் புண்ணிய வரும்வினைகள் தானகல
மெய்யதிகள்காட்டி விளங்கியே லோகமெல்லாம்
ஆவதிசயங்கள் அன்புடையோர் கொண்டாட
அன்மார்க்கதையென்று தாரணியிலே துதிக்க
ஏர்மாமகலக் கற்பனைகள் விட்டோட
நோய்கள்பலதீர நொந்தமனங்களிக்க
பேய்களகலப் பிரமத்திதான்தீரக்
குஷ்டங்குலைநோவு குலையுட்டிநீராமை
அட்டகுணவாய்வு அடங்காதபிணிசமும்
வெட்டைக்கரப்பன் வெடிகுலைமேகமுதல்
துட்டகிரந்திபல சோகைகாமாலையுடன்
அத்திரவாய்வு அண்டப்பவுத்திரமும்
முத்திபிடிப்புவலி முழங்கால்கரப்பனுடன்
கனலிகரப்பன் கடியகண்டமாயுடன்
அன்னக்கிருசி அழிநீரழிவுமுதல்
பல்குத்துப்பல்லரணை பாண்டுநீராம்பலுடன்
உலக்குத்துடன்பருதல் ஒடுங்காச்சயமுதலாம்
ஈளையிருமல் இளைப்புப்பெருவயிறும்
கோளமுகுவளைக் கொடியனீர்பிணிசமும்
வாதக்கரப்பன் மண்டைப்பொரிகரப்பன்
காதிளைச்சல்கண்புகைச்சல் கண்மாசடைவமுதல்
வைப்புவதைப்பு வலுதபிதல்விருணியமும்
வெப்புவெதுப்பு விரணம்பலபலவும்
மூகவாதசன்னி முடக்கல்தலைபசைம்பும்
பகாதபித்தம் பழுத்தாத்தக்காசமுதல்
கடுத்தலயிருளைள் கண்டிப்புக்கெண்டையுடன
அடித்துநடுக்கல் அசதிகந்துவாதமுதல்

வலிப்புலிசைப்பு வாதநோய்வாட்சியுடன்
சலிப்புபிளவை கண்ணேறுசைசவிப்புருதி
சண்டிவலிவிப்பிருமல் தாதுநஷ்டமானதுவும்
ஆண்டிவலுக்கோர்நோய் அத்தனூர்வாய்வுமுதல்
பருப்படுவன்சிலவிஷங்கள் பண்டிப்புத்தொண்டைவலி
கருப்பழிதலூர்கிருமி கனவுமிகச்சொற்பனமும்
உள்ளுருக்கிவாட்டு முடவிலெலும்புருக்கும்
வெள்ளுருளைவெள்ளுதடு வீங்கும்பெரும்பாண்டு
எரிபிளவைசரிபிளவை ஈடுமுனைப்பாடுமுதல்
அரிபிளவைசப்பாணி ஆறுந்தவாய்வுடனே
அழல்நோய்பெருமல் அடைப்புநீர்கல்லடைப்பு
வெள்ளைக்குறுந்தைகட்கு வங்கவியாதிகளும்
சீதஞ்சுபாணை சேட்டுமத்தின்கொட்டாலே
வாதசுரம்பித்தசுரம் வலுத்தசுரமானதுவும்
எழுநாயராசி எழுந்தவியாதிகளும்
பழுநாயரான பாரிசவாய்வுமுதல்
தீருமென்றுமாயன் திருவாய்மொழிந்தபடி
ஆருந்தவமுடையோர் ஆரிசரியென்றுசொல்ல
வாக்குமனமொன்றாய் மகிழ்ந்திருந்து தான்கேட்க
பார்க்கும்பழிபாவம் பறந்துவிடுஞ்சத்தியமே
என்னதவமானாலும் இச்சிந்துக்கேட்போர்க்கு
சொர்ணமயமாகச் சொரிவாள் துரோபதையும்
பிள்ளைத்தவமும் பொருந்தவுந்தான்கொடுத்து
கிள்ளைத்துரோபதையும் கேட்டவரந்தானீய்ந்து
நேமமுள்ளகாரியந்தான் நிமிஷத்தில்வேணுமென்று
விமனுதவிசெய்ய விசையன் அகமகிழ்ந்து
சென்றுசெலுத்திக் திசைகளெட்டுங்கீர்த்திபெற்று
வென்றநகுலன் வெகுவரங்கள்தானீய
மருத்துஞ்சகாதேவன் மற்றுமுள்ளநோய்பலவும்
பன்னுமொருஞானப் பார்வையால்தான்தீர்க்க
தன்மர்குருவாகத் தான்கொலுவிலேயிருக்க
கன்மம்பறந்தோடக் கசடுவினைதீர
சத்திவிலங்கச் சகலபிணிதீர
வெத்திகொண்டதன்மனொன்று விண்ணுலகும்மண்ணுலகும்
அங்குந்திருமாவிடத்தில் ஐவர்சிறந்திருக்க
இங்குமைவர்தானிருந்து ஏற்றவரங்கொடுக்க
பெற்றூர்பெருமையென்று பேருலகோர்கொண்டாட
உற்றுறுறவோர் உகந்துபணிமாற
பூங்காவில்வாசனைகள் போதவேதான்மணக்க
தாங்காமணிவிளக்குச் சந்நிதியில்நின்றிலங்க
சாம்பிராணிவாசம் சந்நிதியெல்லாமணக்க

தேம்பாமல்நாதமணி திருச்சங்குதான்முழங்க
தீராவினைதீர்க்கும் திரயம்சவுரியமும்
தாரணிசெனமேசன் தானிருந்துபோற்றிசெய்ய
பொருமையுள்ளபஞ்சவர்கள் பூலோகந்தனிலிப்போ
வெறுமைபிடித்திருந்த மெய்மறதிதான்தீர்ந்தோம்
விதிவசத்தையாராலும் விலக்கமுடியாதெனவே
அதிசயமாய்க்கொண்டாடி அத்திபுரநகரில்
வீற்றிருந்துசெங்கோல் விளங்கமுடிசூட்டி
பார்த்திபருஞ்சூழப் பார்மன்னர்தான்சூழ
சிங்காசனத்திருந்துச் செங்கோல்செலுத்துதற்கு
மங்காவுயிர்தருட வாக்கியமுந்தான்கேட்க
நினைத்துசெனமேசன் நெஞ்சுருகித்தான்தேட
அனைத்துயருமேவேத வியாசரிருந்து
பொன்னுலகம்விட்டுப் பூலோகந்தனில்வந்தார்
மின்னுலவுமந்த வேதவியாசரையும்
கண்டுசெனமேசன் கண்களிக்கத்தான்போற்றி
தொண்டனுக்குப்புத்தி தோற்றமுடனீருரைத்தீர்
அந்தவிவரமதை ஆராய்ந்துபாராமல்
வந்தபிர்ம்மகத்தி மாற்றிவிக்கவேண்டுமென்னை
பஞ்சவர்களைவர் பாராண்டுபெரிதிருந்து
வஞ்சமில்லாவைகுந்தம் வாழ்பதிக்குப்போனதை
சேனுமென்றுசொன்ன சிறுபைபடிகாணும்
நானுமொருமாசம் நன்றாகத்தான்கேட்டேன்
நானும்பிரமையாய் அகன்றதுகாண்மாமுனியே
சோனும்வினையும் கொடுமைகளுந்தான்விலகி
போனதினிலவர் புதுமைவதிசயத்தின்
தாலமுடன்கோவில் தான்சமைத்துபூசைபண்ணி
வானவரோயெப்போதும் வைத்துவணங்கிறேன்காண்
கானூருந்தன்பாதம் நாள்தோறும்நான்மறவேன்
என்றுசெனமேசன் இவ்வார்த்தைதான்கூற
அன்றுகுருவேத வியாசர்சவிகளந்து
சத்தியவாண்மை தவறுகாரிப்போது
நித்தியமாயெங்கும் நிக்கரமாநின்றவர்கள்
இங்குமிருப்பார் எவ்வுலகத்தானுள்வார்
அங்குமிருப்பார் அமரோடாசனத்தில்
நல்லவர்கள்பஞ்சவர்கள் நற்றவம்பெற்றுவானவே
வல்லவர்கள்மாமுனிவர் மகிழ்ந்துசெனமேசனுக்கு
ராசசிங்காசனத்தில் நன்றாயிருந்துசெங்கோல
வாசமுடன்பூவுலகில் மன்னாயிருமெனவே
வாழ்த்திவிடைகொடுக்க மகிழ்ந்துசெனமேசனுமே
யோற்றிநமஸ்கரித்துப் பொற்பாதம்பூண்டுகொண்டு
சாற்றியமாமுனியைச் சரணமென்றுகைதொழுது

விருத்தம்.

ஒருவர்க்காசுகாட்டிப் பூவுலகனைத்துங்கூட்டி
வேறுசொற்பகையுங்காட்டி யித்திரபேதமாக்கிக்
கூறுமுற்கதையுங்காட்டிக் குலத்தொழில்புரியவிட்டில்
பேர்பெற்றனவொன்று பெருமையையுமுடித்தாய்போற்றி. (௩௯௨)

அரிபோன் செய்தபிழைபொறுத்தீ ராகவிழுக்கிவினையறுத்தீர்
சிறியேனுனதுபயலாசச் சித்தமிதங்கியெனுதினமும்
வெறிபோய்க்கல்விவசைபுரிந்தீர் விட்டைகுறையும்நிறைவேற்றி
குறியாய்மருட்முடிசூட்டுக் கோவேயெனதுகுலக்கொழுந்தே. (௩௯௩)

இன்னஞ்சிறியேன்கலியுகத்தி லிருந்துமெலிந்துயிடையாமல்
முன்னஞ்சுபேற்குநாற்றுவற்கு மொழியும்விவரமறுபோக
வின்னஞ்சுமாறகெடுஞாயம் விரும்பியுரைத்துவடிபோனை
தன்னெஞ்சறிவித்தானதுபோற் றற்காத்தருளுஞ்சற்குருவே. (௩௯௪)

முன்னாள்நடந்தவழிவசமு முறையுமெனக்குத்தெரியாது
இன்னாள்நமக்குவிபரிதத்தா லென்னைமறந்துசடையாமல
அன்றாகலியன்வந்ததிறு லிவர்நடக்காரரியிடத்தில்
இன்றுநமக்குநானடியேன் பேசாதடிமைவாழ்வேனே. (௩௯௫)

குருகுலத்தரசர்க்கெல்லாங் கொற்றவாயுற்றபோது
வருகெனச்சமையமென்பேன் வந்தருள்புரிந்துநீருங்
இருவெனத்தடுத்தாட்கொண்டு யேற்றவாடியேன்மீதில்
தருவெனக்கனகமீயுஞ் சற்குருநாதாபோற்றி, (௩௯௬)

கதை

தோத்திரமுஞ்சொல்லித் தொழுதசெனமேசனையும்
வாழ்த்தியிடைகொடுத்து மகாமுனிவர்தான்போனார்
வேதவியாசர் விண்ணகத்துக்கேகியபின்
சாதுசெனமேசன் தாரணியோராசன்
இருந்தான்கொலுவில் ஏகசிங்காசனத்தில்
வருந்தார்சமக்கு வணங்காதகோடரியாம்
கலியுகத்திலேயிருந்த காரணமாங்கதையை
சலியாமல்கேட்டுத் தான்பிரமைதீர்ந்தமையால்
பலிதமுள்ளதன்கதையைப் பட்டமுடன்தான்கேட்டு
வலியவர்கள்தன்கதையை மனமகிழ்ந்துகேட்டோரும
எழுதிப்படித்தோரும் இன்பமுற்றுக்கேட்டோர்க்கும்
தொழுதுவைகுந்தகதைச் சொல்லிமுடித்தோர்க்கும்
வைகுந்தமென்றொருக்கால் வாயினாற்சொன்னோர்க்கும்
மெய்கண்டவாசன் விஷ்ணுபதமுண்டாகி
வந்தவினையும் வருவினையுந்தான்தீர்ந்து
செந்திருமால்பாதஞ் சேர்ந்திருப்பார்கண்டீரோ
இந்தவைகுந்தகதை இயல்பாகமுன்னாளில்

சிக்கைதமிழ்ந்து ஸ்ரீரங்கர் தன்சீடன்
வெங்கிட்டருள்வடவான் விளம்பினானிக்கதையை
பொங்கியசொற்றமிழைப் பூரித்துநன்றாக
முதலில்முதல்தெரிந்து முற்கதையையாய்ந்து
அதிலும்பொருள்விரித்து அத்தன்செயலாலே
ஒருசொல்பொருளை ஒன்றுபத்தாய்தான்விரித்து
கருவாகவேதெரிந்து கற்பித்தோன்விற்பனமாய்
இருக்குப்பற்றையைத் தென்விளையப்பதியான்
பொருக்குந்தமிழ்பெற்றோன் புகழேந்திதன்புதல்வன்
மன்னவனும்பொன்னெழுது மகிபனுடன் தன்மருகன்
அன்னதருவானவற்கும் அன்புடையோர்தங்களுக்கும்
இன்னுதமிழ்வாணருக்கும் வேந்தாசமைச்சருக்கும்
சொன்னபடிகேட்டுத் தொழுதுமிகவணங்கி
மெய்யடியார்க்குஞ் சீஷனுந்தானிருந்து
தாசனென்றுகூறித் தமிழிதனிக்கதையை
தேடிதமிழாராய்ந்து திருவிருத்தங்கலந்து
காடிப்பொருளாராய்ந்து கைஸ்சரித்துமற்கதையை
சித்திரம்போல்நன்றாய்த் திரட்டினானிக்கதையை
சோத்திரமுங்காண்வாழக் கூறினானிக்கதையை
வாழிமிகவாழி மங்காதநூல்வாழி
ஆழுந்செங்கோல்செலுத்தும அரசர்மிகவாழி
செழிப்பாய்ப்பார்படிப்போர் கிளைஞருடன்தான்வாழி
ஆழ்ந்தபெரியோர் அனைவோருந்தான்வாழி
அன்னைசுற்றம்வாழி அருந்தமிழோர்தான்வாழி
இன்னஞ்சிறுபிள்ளை செல்வமுடன்தான்வாழி
ஆல்போல்தழைத்து அருகதுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னை சுற்றம் முசியாமல்வாழியவே
பால்பசுவுமுண்டாகிப் பாரிலமிகவாழியவே
ஓங்கியகோல்வேதம் உயிர்பலவுந்தான்வாழி.

விருத்தம்.

அரிகரிராமாவென்றால் அனேகமாஞ்செல்வமாகும்
அரிகரிராமாவென்றால் அனேகமாம்பொருளுஞ்சேரும்
அரிகரிராமாவென்றால் அறங்களுமிகுந்துவாழும்
அரிகரிராமாவென்றால் அவர்கள்மெய்ஞ்ஞானியாமே.

மகாவிந்தமென்னும் வைகுந்த அம்மானை

முற்றிற்று.